# மிஸ் ஜானகி

தேவன்



## தேவனின் எழுத்தோவியங்கள் :

1932 முதல் ஆனந்த விகடன் மூலம் எழுதத் தொடங்கிய தேவன் இருபத்தைந்து ஆண்டுகளாக ஏராளமான கதைகள் கட்டுரைகளை எழுதி, தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தையே உருவாக்கினார். இப்படிப்பட்ட வாசகர்களின் கூட்டம் பரம்பரையாகத் தொடர்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை! ஏனெனில் அவருடைய எழுத்துக்கள் காலத்தால் அழியாதது. ஆனந்த விகடனின் வளர்ச்சிக்கு உதவியவர்களுள் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் எஸ். வி. வி. யும், தேவனும் ஆவார்கள். இவர்கள் ஆனந்த விகடனில் தொடர் கதைகளை எழுதும்போது, ஒவ்வொரு வீட்டிலும், 'யார் முதலில் படிப்பது?' என்று பெரிய யுத்தமே நடக்குமாம்; அப்படிப்பட்ட ஒரு குதூகலம்.

பிறர் மனதைப் புண்படுத்தாத ஹாஸ்யம், மாறாத தெய்வபக்தி, மனதை உருக்கும் எழுத்து இவைகளை இனி எவரிடம் காண்போம்? ஆங்கிலக் கதைகளையே படித்துப் பழக்கப்பட்டவர்கள்கூட எஸ். வி. வி., தேவன் எழுத்துக்களைப் படித்து ஆங்கில மோகத்தையே விட்டொழித்தனராம். தமிழை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, பல அபத்தங்களைச் செய்து வரும் இன்றைய மாமனிதர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

1940 வாக்கில் எங்கள் நிறுவனர் குப்புஸ்வாமி ஐயர் வெளியிட்ட 'கதைக் கோவை' என்ற நூலில் தேவனுடைய கதையும் இடம் பெற்றது. இதுதான் புத்தக உருவில் வெளிவந்த தேவனின் முதல் கதை. பிறகு பலமுறை தேவன் அவர்கள் எங்களது

நிறுவனரைச் சந்திப்பது வழக்கம். அந்தச் சமயத்தில் தேவன் அவர்கள் தன்னுடைய கதைகள் புத்தகமாக வெளிவரவேண்டும் என விரும்பினார். எங்கள் நிறுவனரும் இசைவு தந்தார். ஆனால் அவர் ஆனந்தவிகடன் ஆசிரியராக இருந்த காரணத்தால் அந் நிறுவனத்தின் ஆசிரியரை மீற முடியவில்லை. கடைசி வரையில் அவருடைய ஆசை நிறைவேற வில்லை. பிறகு அவருடைய நாவல்கள் மட்டும் ஒன்றன்பின் ஒன்றாக 1960க்குப்பிறகு வெளிவந்தது. அதன் பிறகு நெடுங்காலமாக தேவன் கதைகளைத் தேடி மக்கள் அலைந்தனர். 1990க்குப் பிறகு மறுபடியும் எங்கள் நிறுவனம் மூலம் தேவனுடைய எழுத்துக்கள் மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

தற்போது தேவனுடைய அனைத்து நூல்களும் எங்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. தேவனும் எங்கள் நிறுவனர் குப்புஸ்வாமி ஐயரும் 1940 வாக்கில் பேசிக்கொண்ட விஷயம் 1998ல் நிறைவேறியுள்ளது. இருவரும் மறைந்து, வருடங்களும் பல மறைந்தாலும், தேவனுடைய எழுத்துக்களும், அல்லயன்ஸும் இன்னும் சிரஞ்சீவியாகவே இருப்பதில்தான் ஆச்சரியமா!

படித்துத்தான் பாருங்களேன்.

# மிஸ் ஜானகி

## 1

"பார்வதி பரமேச்வரர்களுடைய புதல்வரான கணபதி விக்னங்களைப் போக்கும் தேவதையாகையால் சகல காரியங்களிலும் முதல் பூஜ்யராயிருக்கிறார், எழுத்தில் மிக வல்லவரான இவருக்குப் பெரிய தொந்தி, துதிக்கை, தந்தம், நான்கு கைகள், மூஷிக வாகனம் இவைகள் உண்டு.

—பார்க்கவ புராணமென்கின்ற விநாயக புராணம்

வெளியே வெயிலின் கடுமை அதிகமாக இருந்தது. பட்டணத்து நீர் நிலைகளுடன்கூட மனித வர்க்கத்தின் சுறுசுறுப்பையும் சிந்தனையையுங்கூட வற்றவைத்துவிட்டதென்று சொல்லும் அளவுக்கு அதன் உக்ரம் வியாபித்திருந்தது. கலாசாலை லைப்ரரியின் ஜன்னலைத் திறந்த 'லைப்ரேரியன்' கோவிந்தராவின் பசிக்களை மிகுந்த முகத்தில் அனல் காற்று வீசியது. அதன் சிடுசிடுப்பு இன்னும் சற்று முதிர்ந்தது. எதிரே மலைபாம்புபோல் வளைந்து கிடந்த ரஸ்தாவில், ஜலம் அசைவது போன்றதொரு பொய்த்தோற்றந்தான் தென்பட்டது. அவர் எதிர்பார்த்துக்கிடந்த ஆத்மாவைக் காணாதது பசியை மேலும் கிளறிவிட்டது.

ஒன்றரை மணிமுதல் இரண்டேகால் மணிவரை 'லைப்ரேரியன்' கோவிந்தராவின் சிற்றுண்டி வேளை. அவருடைய குணத்தை அறிந்தவர்கள் யாரும் அந்த ஒன்றேமுக்கால் நாழிகை காலம் அந்தப் பிராந்தியத்தில் கால் வைப்பது கிடையாது. எதைக் கேட்டாலும் 'இல்லை' தான் அப்போது; யார் கேட்டாலும் 'கிடையாது' தான்! பீரங்கி வாயிலே வெளிப்படும் குண்டின் உத்வேகம் இங்கே வெட்கிப் போகும்.

"இன்று வெள்ளிக்கிழமை; டிபனுக்கு பாதம் ஹல்வா போட்டிருப்பான் மூன்று மணியானால் பறந்து போய் விடும்... போன பயல் ஏன் இன்னும் வரவில்லை?... உம்.?" முகத்தைச் சுளித்துவிட்டு மெல்லத் திரும்பினார் ராவ்ஜி. சந்தடி செய்யாமல் வந்து அவர் மேஜையின் முன்னால் நின்று கொண்டிருந்தாள் ஒரு யுவதி.

இன்றைக்குச் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு அவர் அதே பெண்ணை ஒரு முறை பார்த்துவிட்டால் அப்புறம் இருபது முறைகளாவது பார்த்திருப்பார். இப்போது, நூற்றுப் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்குள் கிழத்தாயாரையும் வியாதிக்கார மனைவியையும் ஆறு பிள்ளைகளையும் காப்பாற்றும் பொறுப்பு வந்துவிட்டபடியால், பார்த்தும் பாராததுபோல் தலையைக் குனிந்து கொண்டார். ஆனால், சிந்தனை மட்டும் ஓடியது.

'நம்ம ருக்மிணியைவிட நாலு வயசு பெரியவளாக இருப்பாள். இவள் கொஞ்சம் சிவப்பு; படிப்பதனால் முகத்தில் சற்றுக் களையிட்டிருக்கிறது; நாகரிகமாக டிரெஸ் செய்து கொண்டிருக்கிறாள். உம் காசு பணம் என்று இருந்துவிட்டால் தானே ஒரு குதூகலமும் தென்பும் அழகும் வந்துவிடுகிறது. நம்ம ருக்மிணிக்கும் இப்படி ஒரு புடவையைக் கட்டி நாலு வைரத்தையும் மாட்டி விட்டால் இதற்குமேல் இருக்க மாட்டாளா?' என்று அடுக்கடுக்காக எண்ணங்கள் புரண்டு கொண்டுவந்தன.

இரண்டாவது தடவையாக அந்தப் பெண்ணை அவர் ஒரு பார்வை பார்த்து வைத்தார்.

'காலேஜில் புதிதாகச் சேர்ந்திருக்கிற பெண் போலிருக்கிறது! அடிக்கடி புஸ்தகம் வாங்க வருகிறது வாசிப்பில் பிடித்தம் இருக்கிறது. ஆனால், என்ன படிப்பு இதெல்லாம்? நாளைக்குக் கல்யாணமானால் அடங்கி விருக்குமா? உம்-ம்!' கோவிந்தராமின் வதனம் கறுத்தது. அது அந்த யுவதி வந்ததனால் அல்ல. 'டிபன்-டைம்' தாண்டுகிறதே என்று வயிறு கொடுத்த எச்சரிக்கை யினால்தான்!

"ஸார்! பிளீஸ்..." என்றது இனிமை ததும்பின குரல். அவன்தான் பேசினான்.

இருண்ட வானத்தில் பளிச்சிட்ட கொடி மின்னல் போல் ஒரு புன்சிரிப்பை வருவித்துக்கொண்டு, "என்ன?" என்றார் ராவ்ஜி. இந்த வேளையில் அவர் ஆயுளில் முதல் தடவையாக வாய் திறந்து அவர் பேசியது இதுவே. இந்த மகதாச்சரியத்தைக் காணும் பதம் பெற்ற ஆத்மா வேறொன்றும் இருந்தது, ஓர் இளைஞன் உருவில். உயரத்தில் ஏறி நின்று மௌனமாகப் புஸ்தகம் தேடிக் கொண்டிருந்தது அது! 'கரடி வெம்புலி வாயையும் கட்டலாம், கோவிந்தராவிடமிருந்து ஒரு வார்த்தையை வருவித்துவிட முடியாது' என்று திடமாக நம்பியிருந்த அவன், வெயில் கடுமையால் ஒருகால் அயர்ந்து விட்டோமோ என்று கண்ணைத் துடைத்துக்கொண்டு கவனித்தான். இல்லை நடந்தது உண்மையே! அந்தக் காரிகை தன் கையோடு கொணர்ந்திருந்த புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டு வேறு ஒன்று கேட்டுக்கொண்டிருந்தாள்!

"வேறே புஸ்தகமா?" என்று திடுக்கிட்ட ராவ்ஜி அவள் கொடுத்த சீட்டைப் பார்த்துவிட்டு "டிக்கின்ஸியா? உம்? நீ ஜூனியர் இண்டர்தானே?", என்று கேட்டார்.

"ஆமாம், ஸார்!"

"உனக்கு அது வாசிக்க வராது. 'டாயில்' வாங்கிக் கொள்."

"படித்தாகிவிட்டது, ஸார்!"

"என்ன! எல்லாமா?"

"ஓ! அவ்வளவும், ஸார்!"

"உம்... ஸ்டிவென்ஸன் எடுத்துக்கொள்! நன்றா யிருக்கும்."

"இதுதான் கடைசிப் புஸ்தகம்."

"ஒஹோ...... ஆனால், டி'க்கின்ஸ் வாசிக்க முடியுமா உன்னால்?"

"படித்துப் பார்த்த பிறகுதானே சொல்ல முடியும் ஸார்!"

ராவ்ஜி கையும் மெய்யுமாகக் கேட்ட புஸ்தகத்தைக் கொடுத்துவிடுவாரோ என்று ஏற்பட்ட வியப்பில், கீழே விழுந்துவிடாமல் ஏணியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நோக்கினான் இளைஞன்.

"உம்ம்-அப்படியானால் நாலரை மணிக்குமேல் வா, எடுத்து வைக்கிறேன்." என்று கோவிந்தராவ் நிதானமாக பதில் கொடுத்தார்.

"ஸார்! இன்றைக்கு மத்தியானம் எங்கள் புரொபஸர் வரவில்லை. நாங்கள் வீட்டுக்குப் போகிறோம்!"

"சரி, போயிட்டு நாளைக்கு வாயேன்!"

"வீட்டில் வாசிக்க வேறு ஒன்றுமில்லையே!"

['சபாஷ்! விடாதே! அப்படித்தான்!' என்று மனத்துக்குள் எண்ணிக்கொண்டான் ஏணிமீதிருந்த யுவன்.]



"என்னை இப்போ என்ன செய்யச் சொல்கிறாய்? இங்கே 20,000 புஸ்தகம் இருக்கு எது உச்சாணிக் கொப்பில் இருக்கோ, அதை உடனே கொண்டுவா என்கிறாய். அங்கே ஏறிப் பார்த்தால், அதை யாராவது வாங்கிக் கொண்டு போயிருப்பான்!"

யுவதி உதட்டைக் கடித்துக்கொண்டு தயங்கினாள். வேறு ஏதாவது கேட்போமா, பேசாமல் போய்விடுவோமா என்ற சஞ்சலம் சுருங்கிய நெற்றியில் எழுதியிருந்தது.

"ஸார்! நீங்கள் கேட்கிற புஸ்தகங்கள் இங்கே இருக்கின்றன. கொண்டுவரட்டுமா?" என்று கேட்டான் இளைஞன் உயரவிருந்தபடியே,

'அதிகப் பிரசங்கித்தனம்! உன்னை யார் கேட்டது? இங்கே லைப்ரேரியன் நானா, நீயா?' என்ற பாவனையில் உயரே நோக்கினார் கோவிந்தராவ். அவன் அப்போது ராவ்ஜியின் முகத்தைப் பார்த்திருந்தால், ருத்ர கோபத்தில் பஸ்மீகரமாகிய மன்மதனின் கதியை அடைந்திருப்பான். அவன் மன்மதனைப்போல் இருந்தாலுங்கூட; நல்ல வேளையாக கோவிந்தராவுக்கும் கைலாசநாதருக்கும் கிஞ்சித்து ஒற்றுமைகூடத் தென்படவில்லை. ஆகவே, தைரியமாக அவன் கைகளில் நான்கு பெரிய புஸ்தகங்களை அள்ளிக்கொண்டு கீழே நிதானமாக இறங்கி, அவர் முகத்தின் பக்கம் திருஷ்டியைத் திருப்பாமலேயே வந்து, மேஜையின்மீது அவைகளை அடுக்கினான். உதடுகளை இறுக்கிக் கொண்டு வெறுப்புடன் நோக்கினார் லைப்ரேரியன். அரிசிப் பற்கள் இலேசாகத் தெரியும் அளவு தன் அழகிய அதரங்களைச் சற்றே திறந்துகொண்டு புஸ்தகங்களிலொன்றைப் பொறுக்கி எடுப்பதில் முனைந்தாள் அவள்.

"ஸார்! நான் இதை எடுத்துக் கொள்கிறேன்."

"உம்..." கோவிந்தராவுக்குப் பேசவே பிடிக்கவில்லை.

"கொஞ்சம் ரிஜிஸ்டரில் எழுதிக்கொள்கிறீர்களா?"

"உம்..."

"நான் போகலாமா, ஸார்?"

"உம்..."

ஒரு கணத்தில் புஸ்தகத்துடன் புறப்பட்டுவிட்டான் அவன். கலாசாலை லைப்ரரியில் அதுவரை சோபிதமாக இருந்த ஒரு மதப்வீகக் களை அதைவிட்டு அகன்றுவிட்டது போன்ற பிரமை இளைஞனுக்கு உண்டாயிற்று.

"மிஸ்டர் நடராஜன்!"

"ஸார்!"

"இந்தக் காலேஜில் இதோடு நாலு வருஷம் படித்து விட்டாய், இல்லையா?"

"ஆமாம், ஸார். உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி இருக்கிறது."

"என் ஞாபகசக்தி கிடக்கிறது! உனக்கு உன் வேலை எது, என் வேலை எது என்கிற பாகுபாடு இன்னும் தெரிய வில்லை. பாஸ் செய்துவிட்டு என்னதான் செய்யப் போகிறாயோ!"

"வேறு ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் படிக்கிற பேருக்கு உபயோகமாக இருப்பேன், ஸார்!"

"எங்கேயோ பேசக் கற்றுக்கொண்டு வந்து விடுகிறீர்கள்; புஸ்தகம் எடுத்துக் கொடுத்தியே, நாளைக்கு அதையே ப்ரின்ஸிபல் கேட்டால் நான் என்ன சொல்கிறது?"

"எதையும் ப்ரின்ஸிபல் கேட்கலாம் என்று ஒன்றையுமே கொடுக்காமல் இருந்துவிட முடியுமா?"

"ஐ ஸே! கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல்... ஹும் ஐ ஸே..."



முன் ஒரு காலத்தில் உத்தமமான ஓர் உபாஸகர் நடராஜனிடம், "உன்னைப் பார்த்து ஒருவன் கல்லை வீசினால்கூட அது குறிதவறிப் போகும்" என்று சொல்லியிருந்ததன் உண்மையை அவன் அப்போது கண்ணெதிரே கண்டான். அவன்மீது எறியப்பட்ட அஸ்திரம், டிபன் பொட்டணத்துடன் வந்து வரதன்மீது விழுந்தது; "எய்! ஒன்னுக்கும் உபயோகமில்லாத கழுதை! மணியைப் பாரடா! ஒரு பர்லாங் போய்த் திரும்ப ஒரு மணியாடா! எருமைகூடச் சீக்கிரம் திரும்பிவிடுமேடா!"

கோவிந்தராவின் கோபம் உச்ச நிலையில் இருக்கும் சமயங்களிலே எது நடக்காது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாதாகையால், நடராஜன் சிறந்ததொரு யுத்த தந்திரத்தைக் கையாண்டான். எதிரி மிதமிஞ்சிய பலவான் என்று தெரிந்ததும், நஷ்டமின்றி வாபஸ் வாங்கிவிடுவதே புத்திசாலித்தனம் என்பதைப் பிரசித்தி பெற்ற ஜெனரல்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களே! ஆகவே, அவசரத்தில் மேஜைமீது கிடந்த புஸ்தகம் ஒன்றைப் பொறுக்கிக் கொண்டு, "மன்னிக்கணும், ஸார்! இன்னொரு சமயம் வருகிறேன்" என்று நடந்துவிட்டான்.

எந்த எண்ணமானது தீவிரமாக ஓங்கி நிற்கிறதோ, ஆக்ரமான தன்மையுடன் நிலைத்து வேலை செய்கிறதோ, அதற்கு அநுகுணமான காரியங்கள் நடைபெறும் என்று வேதங்கள் உள்பட அநுபவ சாஸ்திரங்களும் முறையிட்டு வருகின்றன. எதிரில் வருபவர்களையும் மறந்து, தன்னையும் மறந்து, தன் கையிலிருந்த புஸ்தகத்தையும் மறந்து மிதந்து கொண்டிருந்தான் நடராஜன். காலேஜின் நீண்ட தாழ்வாரம் மேலும் நீண்டு பலமைல்கள் வியாபித்திருந்தாலும் அவன் நடை தடைப்பட்டிராது.

"ஸார்"...காற்றிலே இனிய கீதம் போல மிதந்து வந்தது குரல். ஆனால், அது ஓர் இன்பக் கனவு என்று தான் எண்ணினான்.

"ஸார்! ஒரே நிமிஷம் நிற்க வேணுமே."

ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தாள் நங்கை. மேலுதடுகளுக்கு மேலே சிறு வேர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. விரைந்து வந்ததில் மூச்சு சற்று பலமாக வந்தது. அந்த வனப்பில் சொக்கி நடராஜன் நின்றுவிட்டான்.

"என்னையா அழைத்தீர்கள்?"

"உங்களையேதான். ஒரே நிமிஷம். ஒரு வார்த்தை சொல்லவேண்டும்..."

"அடடே! அவர் கிடக்கிறார் 'லைப்ரேரியன்' டிபன் வேளையில் காரமாக இருப்பார். இதற்கு என்ன மன்னிப்பு! அவசியமே இல்லை."

"மன்னிப்புக்காக உங்களிடம் நான் இப்போது வரவில்லை. உங்களை ஒன்று கேட்க வந்தேன்."

"அதற்கென்ன! எதைக் கேட்டாலும், தெரிந்தால் சொல்கிறேன். தெரியாவிட்டால் நாலு இடத்தில் விசாரித்து வந்தாவது சொல்கிறேன். கேளுங்களேன்."

"ஐய! நான் கேட்க வரவில்லை. ஒன்று பேச வேண்டும்."

"பேசிக்கொண்டே போகலாம். ஓ எஸ், வாருங்கள்!" நடராஜன் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

"இதென்ன கூத்து! நான் எங்கேயும் வருவதற் இல்லை."

"அப்படியானால் இங்கேயே நின்று பேசலாமா?"

"அட பாவமே! நான் ஒரு கவலையாக வந்திருக் கிறேன்."

"கவலையா? எதில் கவலை? அல்ஜிப்ராவா, ஜாமெட்ரியா, ட்ரிக்னாமெட்ரியா? மூன்றிலும் நான் புலி."



"சிங்கமாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போங்கள். எனக்குக் கவலை என் பாடத்தில் இல்லை. உங்கள் கையில் இருக்கிறதில்தான்! எனக்கு ஒரு சந்தேகம்."

"என் கையில் இருக்கிற ரிஸ்ட்வாட்ச் என்னுடையதுதான். அதில் என்ன சந்தேகம்?"

"வேண்டுமென்றே பேசினால் என்ன சொல்கிறது! நான் கேட்க வந்தது ரிஸ்ட்வாட்ச் இல்லை. அந்தப் புஸ்தகம்!"

"ஓ! புஸ்தகமா! ஆமாம். இதோ புஸ்தகம் இருக்கிறது; நீங்கள் வாங்கி வாசித்துவிட்டுப் போட்ட புஸ்தகம். ஸ்ரீராமசந்திரமூர்த்தி வாயு பகவானைப் பார்த்து, 'சீதைமேல் அடித்த காற்றாலும் என்மேல் படட்டுமே' என்று வேண்டினாராம்; அதே மாதிரி உங்க கண்ணில் பட்ட எழுத்தாகிலும்..."

"நான் கதை கேட்க வரவில்லை."

"நானும் இந்தக் கதை படித்ததில்லை படித்துச் சொன்னால் கேட்கிறேன் ஆவலோடு!"

"பேச்சை அநாவசியமாக வளர்த்துகிறீர்கள். தமாஷ் செய்கிறீர்கள். நான் கேட்பது புரியவில்லைபோல் பாசாங்கு செய்கிறீர்கள்."

"இல்லவே இல்லை. நான் பாசாங்கு செய்கிறதே வேறு. இதை வாசிக்கப் போகிறவன்போல் கொண்டு வந்தேனேயொழிய, நாளைக்கே திருப்பிவிடுவேன்."

"நீங்கள் என்ன செய்வீர்கள் என்கிற கவலை எனக்கு இல்லை. புஸ்தகமும் எனக்கு வேண்டாம். அதனுள் இருப்பதுதான் வேண்டும்."

"ஒஹோஹோஹோ! என்ன முட்டாள் நான்! இதனுள் உங்கள் பேனா, கடிகாரம், ரேடியோ செட் இப்படி ஏதாவது மறந்து வைத்துவிட்டீர்களோ? இது

மாதிரி புஸ்தகங்களில் உயில்கள்கூட ஒளித்து வைப்பார்களாம்; கதைகளில் படித்திருக்கிறேன். ஆனால், கதையின் கடைசி அத்தியாயத்தில்தான் அது அகப்படுவது வழக்கம்."

"நான் எதையும் ஒளிக்கவில்லை. எனக்கு வந்த கடுதாசி ஒன்று அதில் தங்கிப்போய்விட்டது."

"ரொம்ப முக்கியமான லெட்டர் அல்லவா? இல்லாவிட்டால், இந்த வெயிலில் இவ்வளவு சிரமப்பட்டு, ஓட்டம் ஓட்டமாக வந்து..."

"ஆமாம்! அவரவர்களுக்கு வந்த கடுதாசி முக்கியமாகத் தானே இருக்கும்! இதற்காக உங்களைக் கேட்பதா என்றுகூட யோசித்தேன். கொஞ்சம் புஸ்தகத்தைப் பார்த்துத் தந்துவிடுகிறீர்களா?"

"நிச்சயமாகக் கொடுத்துவிடுகிறேன். தபாலில் வந்த லெட்டர்தானே அது? நான் அங்கே வாங்கினதுதான், இன்னும் பிரிக்கவே இல்லை. இதில் இருக்குமானால் —"

"கட்டாயமாக இருக்கும். நான்தானே வைத்தேன்!"

மேலும் பேச்சை வளர்த்த சந்தர்ப்பம் இல்லாமல் நடராஜன் புஸ்தகத்தை நாலு முறை வேகமாகப் புரட்டினான். பிறகு அவள் கையிலே கொடுத்துப் பார்க்கச் சொன்னான். கடிதம் அங்கே இல்லை.

"ஒருகால் இதில் இருந்திராது."

"இராதா? நான் வைத்தேன் என்றால்!"

"நான் அதை எடுக்கவில்லை! நிச்சயமாக இல்லை."

"உங்களோடு வீண் அவஸ்தை!"

"தானே சொல்லிவிடலாமென்று இருந்தேன். வீட்டில் போய்ப் பாருங்கள். மேஜைமீது அது இருக்கும்."

"ஜோஸ்யர் மாதிரியும் பேசுகிறீர்கள்; துப்பறிகிறவர் போலும் சொல்கிறீர்கள்!"



"பி.ஏ. பட்டத்துக்கு இல்லாத 'மவுஸ்' இவர்களுக்கு இருக்கிறது இந்த நாளில். நான் வருகிறேன், மிஸ் ஜானகி!"

"ஓஹோ! என் பெயர் வேறு விசாரித்து வைத்திருக்கிறீர்களோ?"

"அது உங்கள் பெயர்தானா? அப்படியானால் இந்தக் கடிதமும் உங்களுடையதுதான்!" என்று ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான் நடராஜன்.

ஒரு க்ஷண காலம் மிஸ். ஜானகி என்று அழைக்கப் பட்ட அந்த மங்கை குரோதமாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு குபீரென்று சிரித்துவிட்டு, கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டு, திரும்பி ஓடிவிட்டாள்.

அதற்குப் பிறகு ஓராயிரம் தடவைகள் மிஸ். ஜானகி நடராஜனின் கண்களில் பட்டிருக்கிறாள். சமுத்திர மணலில், உறவினர்களுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறான். கடைத்தெருவிலும் பார்க்கிலும் சந்தித்திருக்கிறான். காலேஜ் நடைகளில் நின்று அவனைப் பார்த்துப் புன்னகை பூத்திருக்கிறாள். வகுப்பு அறையில் அவளது சிரிப்பின் வெண்கல நாதத்தைக் கேட்டு ரஸித்திருக்கிறான். சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் வார்த்தையாடியும் இருக்கிறான்.

மிஸ் ஜானகியுடன் சற்று ஸ்தூல தேஹியாக அடிக்கடி வருபவர் அவளுடைய மாமன் என்பதை அவளிடமிருந்தே கேட்டறிந்தான். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அட்வகேட்டின் மகள்தான் அவள் என்றும், மதுரையில் பிரபலமாக இருப்பவர் என்றும் தெரிந்துகொண்டான். மாமர் ஒரு பெரிய கம்பெனியை நடத்துகிறார்; அவர் வீட்டிலிருந்துகொண்டு இவள் படிக்கிறாள். குடிக்கை யானவள் என்பதுடன், ரேடியோவிலிருந்து அழைப்பு வரும் அளவுக்கு, சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவள். தமக்கையும் பெற்றோர்களும் காலேஜ் படிப்பு வேண்டா

மென்று எதிர்க்கும்போதே, மாமனின் யோசனைப்படி இங்கே 'இண்ட'ரில் சேர்த்துவிட்டான்.

ஹாஸ்டலில் ஏகாந்தமான வேளைகளில் மிஸ் ஜானகியைப் பற்றிய நினைவுகளில் நடராஜன் பொழுதுபோகும். யாரையும் நிமிர்ந்து பாராத ஜானகி, இவ்வளவு தூரம் தன்னுடன் பேசினான் என்பதில் கட்டுக் கடங்காத பெருமை அவனுக்கு. லயித்துப் போயிருக்கும் நடராஜனை மறுபடியும் பூலோகத்துக்கும், 'கால்குலஸ்' பாடங்களுக்கும் அழைத்து வருபவன், அவனுடைய சிநேகிதனும், அதே அறையில் இருந்துவருபவனுமான மணிதான்.

நடராஜனுக்கு வயது 22; மணிக்கு வயது 23 இரண்டு பேரும் பி.ஏ. பரீட்சைக்குப் படிக்கிறார்கள். இவர்களுக்குள் குணத்தில் பலமாறுபாடுகள் உண்டு. எனினும், ஒருவருக்கொருவர் அன்பில் வெகுகெட்டி.

மணி முழுக்க முழுக்கத் தஞ்சாவூர் ஆசாமி. இருபது வேலி நிலம் படைத்த மிராசுதார் கௌரிசங்கரய்யரின் ஒரே பிள்ளை. பட்டணம் வந்து நாலு வருஷமாகியும் குடுமியும் வைரக் கடுக்கன்களும் முன்போலவே தங்கி விட்டன. வெள்ளைவெளேரென்று கதர்ச்சட்டை வேஷ்டிகளும் மடித்த அங்கவஸ்திரமுமாக எப்போதும் ஒரே மாதிரியான காட்சிதருவான். 'டிரெஸ்' மூலமாக ஓர் 'இம்ப்ரெஷன்' ஏற்படுத்திக்கொண்டு அப்புறம் மாறாமலே இருக்கவேண்டுமென்கிற கொள்கையுள்ளவன். இவன் வாழ்க்கையில் எதற்காவது கவலைப்பட்டவன் என்று கண்டவர் யாரும் இல்லை. தலைமேல் இடி இடித்தாலும் லட்சியம் இல்லை. பெண்களைக் கண்டால் சங்கோசப் படும் சுபாவம்; ஆகையால், பயந்த மாதிரி என்று நினைக்கும்படியாக இருக்கும். பேச்சு ஒரு சமயம் சொற்பமாக இருக்கும்; குஷி பிறந்து விட்டாலோ அசாத்தியமாக இருக்கும். 'குரங்கு பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை



அறுத்தாலும் அறுக்கும்' என்கிறபடி, மணி உதவி செய்கிறான் என்றால் தாஸானுதாஸனாக இருப்பான். ஆளைக் கவிழ்ப்பதென்று சங்கல்பம் செய்துகொண்டால், மண்ணைப் போட்டு மூடிவிட்டுத்தான் உட்காருவான்.

நடராஜனிடம் மணி ஒரே மாதிரியாகப் பழகி விட்டான். நாலு வருஷமாக அண்ணன்-தம்பிகள் மாதிரி பழகினார்கள் என்பதில் ஒரே ஒரு குறைபாடுதான்! அண்ணன்-தம்பிகள் போல் அவர்கள் அடித்துக்கொண்ட தில்லை! இந்த டிசம்பர் லீவு நெருங்குகிறது; தவிர, கடைசி வருஷம் இது. மணியை நடராஜன் தேடிக்கொண்டு வந்தான்.

"என்னடா ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்! வடபழனிக்குப் போயிருப்பாயோ என்று நினைத்தேன்" என்றான்.

"ஏன், வடபழனியில் இன்று என்ன விசேஷம்?"

"அங்கே மிஸ் ஜானகி சுவாமி தரிசனத்துக்குப் போகிறதாகக் கேள்விப்பட்டேன்; கோபித்துக் கொள்ளாதே! லீவுக்கு என்ன செய்யப் போகிறாய்?"

"நீ என்ன செய்யப் போகிறாய்? ஊரில் அப்பா அறுப்பறுத்து நெல் வைத்திருப்பார். அதை அழிக்கப் போகிறாயாக்கும்."

"நெல்லை விற்றுத்தான் நாங்கள் பணத்தைக் காண வேண்டும். உனக்கு அப்பா பணமாகவே அனுப்பி விடுகிறார். நீ அதை வைத்துக்கொண்டு காதல் கொள்ளலாம்!"

"ஏய் பிசாத்! யாருக்கு இப்போ காதல்!"

"யௌவன வயது இளைஞனான நடராஜனுக்குத் தான்."

"போடா, முட்டாள்!"

"இருந்துவிட்டுப் போகிறேன். உன்னைப்பற்றியும் மிஸ் ஜானகி அப்படி நினைத்துவிடாமல் இருக்க வேண்டுமே!"

"அநாவசியமாக உத்தமமான பெண்ணின் பெயரைச் சொல்லாதே!"

"உனக்கு உத்தமமான பெண் கிடைக்கவேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லையா? பார், எனக்கு 23க்கு மேல் ஆகிவிட்டது. பத்து வருஷத்துக்கு முந்தியே அத்தை பெண்ணைக் கட்டிக்கொண்டு நிற்கிறேன். அதுவும் சர்வகிராம்யமாக, மடிசார் வைத்துக் கட்டிக்கொண்டு..."

"குடுமிக்கும் மடிசாருக்கும் நல்ல பொருத்தந்தான்!"

"பழங்கதை அது! புதுக்கதை எந்த மட்டில் இருக்கிறது? மிஸ் ஜானகி லீவுக்கு மதுரைக்குப் போகிறாளா?"

"என்னைக் கேட்பானேன்?"

"உன்னிடம் சொல்லாமல் வேறுயாரிடம் அதைச் சொல்லியிருப்பாள்?"

"எருமை மாதிரி பேசுகிறாய்!"

"நீதான் கழுதை மாதிரி பதில் சொல்கிறாய். முந்தா நாள்கூட லைப்ரரி வ்ராந்தாவில் பேசிக்கொண்டு நிற்கவில்லையா நீ?"

"பேசிவிட்டால் உடனே காதல்தானா?"

"என்னப்பா நீ! காதல் உண்டானால் பேச்சும் உண்டல்லவா?"

"நான் உன்கூடப் பேசத் தயாராக இல்லை."

"பேசவேண்டாம் இந்த லீவுக்காவது என்கூட நம்ம கிராமத்துக்கு வரப்போகிறாயா, இல்லையா?"

"யோசித்துச் சொல்கிறேன்."

இரண்டு பேராக யோசிக்கணுமா? அல்லது அவன் மட்டும்...?"



"அடச்சே!" என்று எழுந்து போனான் நடராஜன்.

இதற்குப் பிறகு மூன்று தினங்கள் ஓடி மறைந்தன. காலேஜ் மூடப்பட்டு ஹாஸ்டல் அறைகள் சடசடவென்று காலியாயின. அந்த மூன்று தினங்களும் நடராஜன் கண்களில் ஜானகி தென்படவே இல்லை. சைனா பஜார் ஹோட்டல் ஒன்றில் நடராஜன் மணியுடன் பிற்பகலில் டிபன் அருந்திக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபடி காப்பி டம்ளரை உயர்த்தியவன், சட்டென்று அதைக் கீழே வைத்துவிட்டு, "இங்கேயே இரு மணி! வருகிறேன்." என்று வாசற்புறம் விரைந்தான். அந்தத் திக்கில் நோக்கிய மணி, இரு ஸ்திரீகளைத் தொடர்ந்து நடராஜன் செல்வதை அறிந்தான். அவர்கள் இருவரில் இளமையாக இருந்தவள் ஜானகி. கூடச் சென்றவள் சற்று வயதில் முதிர்ந்தவளாக 'டம்பப் பை' வைத்திருந்தாள். ஜானகியின் கையில் ஒரு புஸ்தகம் மட்டுமே இருந்தது. நடராஜன் பின் தொடர்ந்ததை அவர்கள் கவனித்தவர்களே அல்ல.

நகைக் கடை ஒன்றன் முன் நின்று அவர்கள் உள்ளே பார்வையைச் செலுத்தினார்கள். இரு வார்த்தைகள் பேசிக்கொண்டுவிட்டுச் சரேலென்று உள்ளே நுழைந்தார்கள். வெளியிலிருந்த மேஜையில் டம்பப் பையையும் புஸ்தகத்தையும் வைத்துவிட்டுச் சென்றார்கள்.

நடராஜன் நெஞ்சு அடித்துக் கொண்டது. ஜானகியுடன் இப்போது வார்த்தையாடுவது இயலாத காரியம். ஆனால், அவளைப் பேசவாவது சொல்லலாமா? சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை இரண்டாக கிழித்து, சில வரிகளை அதில் கிறுக்கினான்.

"என் அன்புள்ள ஜானகிக்கு,

மூன்று நாளாக உன்னைக் காணாமல் துடிக்கிறேன். தவிக்கிறேன். உன்னோடு பேசியாக வேண்டும். இந்த லீவுக்கு மதுரையா, வேறெங்கே

யாவதா? தெரிந்தால் நானும் வருவேன். போன் பண்ணுவாயா ஹாஸ்டலுக்கு?

நடராஜன்."

துண்டுக் காகிதத்தை நாலாக மடித்தான். கடையின் தர்வான் புறங்காட்டின் சமயம் அதைப் புஸ்தகத்தினுள் நுழைத்தான்... எப்படியும் அவள் பார்த்துவிடுவாள் என்ற நிச்சயத்தோடு அங்கிருந்து புறப்பட்டு மணியிடம் வந்து சேர்ந்த நடராஜனுடைய ஆனந்தமும் திருப்தியும், முன்பு ராஜஸூய யாகத்தை முடித்த யுதிஷ்டிரனுக்கும் அச்வமேத யாகத்தை நடத்திய ராகவனுக்கும் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே.

ஹாஸ்டலில் டெலிபோன் மணி மாலை ஆறரை மணிக்கு அடித்தது. நடராஜன் காத்திருந்தான்.

"பேசுகிறது யார்? திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்யும் நடனராஜப் பெருமாளா? நர்த்தனத்தை நிறுத்திக் கொஞ்சம் பேச்சைக் கேட்கலாமா?"

முகமெல்லாம் மகிழ்ச்சி பரவுவதை மணி கேலியாகப் பார்த்தான். "சொல்லு கேட்கிறேன்" என்றான் நடராஜன்.

"நாங்கள் திருச்செந்தூருக்குப் போகிறோம். இன்று ராத்திரியே!... தெரியுமா?... எப்படி?"

"ரொம்ப சந்தோஷம் அருமையான க்ஷேத்திரம். அதைச் சொல்லுவாயென்று மூன்று நாளாகக் காத்திருக்கிறேன்.

"அக்காள் மங்களம் வந்திருக்கிறாள். அவள்தான் கூட வருகிறாள்."

"ஓஹோ! சைனாபஜாரில் உன்கூட வந்தது அக்காள் தானோ? நல்ல காலம் பேசாமல் வந்தேனே!"

"ஆபத்து! அக்காளுக்கு நான் காலேஜில் சேர்ந்ததிலேயே இஷ்டமில்லை. உங்களுடன் பேசினதைப் பார்த்துவிட்டால், கட்டுப் பொசுக்கிடுவாள்."



"உன் அத்திம்பேருக்கு என் அநுதாபம். மனுஷர் பயந்து கிடப்பாரே! ஆமாம், எங்கே என் லெட்டரைப் பாராமலே இருந்துவிடுவாயோ என்று பயந்துவிட்டேன்."

"எந்த லெட்டரைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்?"

"உன் புஸ்தகத்தில் வைத்ததுதான்!"

"என் புஸ்தகமா? ஏது புஸ்தகம்?"

"சைனா பஜாருக்குக் கொண்டுவந்திருந்தாயே, அதுவேதான்."

"அது என் புஸ்தகம் இல்லையே! சிவகீதையும் ஞான வாசிஷ்டமும் நான் வாசிப்பதாக உங்களுக்கு யார் சொன்னது.

"கஷ்டமே! அப்படியானால்."

"அது என் அக்காவின் புஸ்தகம்!"

"என் கடுதாசி?"

"போங்கள்! உங்களை யார் இந்த மாதிரி அசட்டுக் காரியம் செய்யச் சொன்னது? உம்!"

"நீயே முன் ஒரு தடவை செய்திருக்கிறாயே. இப்போ அதை நாம் எடுத்தாக வேண்டுமே!"

"இருங்கள், இங்கேதான் கிடக்கிறது, பார்த்துவிடுகிறேன்."

சிறிது நேரம் மௌனம்.

"அய்யய்யோ! அதில் உங்கள் கடுதாசியைக் காணோமே!"

"வழியில் கீழே விழுந்திருக்குமோ ஒருவேளை!"

"அல்லது அக்காளே பார்த்துவிட்டு எடுத்து வைத்திருப்பாளோ!"

"எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே!"

"எனக்கும் ஒன்றும் தோன்றவில்லையே! இதோ கிளம்ப வேண்டும்; கூப்பிடுகிறார்கள், வரட்டுமா?" என்று துடித்தாள் ஜானகி.

நடராஜன் பதில் சொல்லுமுன் 'டக்'கென்று டெலிபோன் வைக்கப்பட்டது.

## 2

"தனுர்லக்னத்தில் சத்ருஜயமும், விருஷபத்தில் சுபகரமும், கன்னியில் ஜ்வரமும், கடகத்தில் ஆட்சியும், ஸிம்மத்தில் சோபனமும், விருச்சிகத்தில் தேக உபாதியும், மேஷ-மிதுனங்களில் உபத்ரவமும், துலாமில் வெற்றியும், மகரத்தில் மழையினால் தொல்லையும், கும்பத்தில் அடிதடிகளும் என்று கொள்க."

—யாத்திரைக்கு லக்ன பலன் (ப்ராமண ச்லோகம்)

மதுரை மாநகரத்தை மனத்தில் நினைத்தவுடனே பிரம்மாண்டமான கோபுரங்களும், மலையத்வஜ பாண்டிய ராஜ கன்னிகையான தேவி மீனாக்ஷியின் தண்மையான அருள் தர்சனமும், மாதங்களின் பெயர்பூண்ட அகல வீதிகளும் 'மதி முட்டுவன' போன்ற உயர்ந்த கட்டடங்களும் தேர்த்திரு விழாக்களும் சீர்சிறப்புகளும், பழந்தமிழ்ப் பெருமைகளும், நாகரிக அலங்காரங்களும் ஞாபகம் வருவது சகஜம். இத்தனை விசேஷங்களுள்ள பாண்டியராஜதானிக்கு சில வருஷங்களுக்கு முன் யார் போனாலும் ஜகதீசன் வெகு ஆசையாக, "எனக்கு ஒரு காரியம் செய்வீர்களா?" என்று கேட்பான். ஜகதீசனைத் தெரியாதவர்கள், "பட்சணந் தானே? வாங்கிக் கொண்டு வருகிறேன்!" என்பார்கள். மதுரைக்கடைப் பட்சணத்தின்மீது அத்தியந்த பிரமை வைத்திருந்த ஜகதீசனுக்கு, அதே நகரின் பிரபல அட்வ



கேட்டான பட்டாபிராமய்யரின் சீமந்த புத்திரி ஸ்ரீமதி மங்களத்தின் கரம் பற்றி, அக்னி வலம் வந்து, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து மூத்த மாப்பிள்ளையாக அமரும் பாக்கியம் லபித்தது. 'அமரும்' என்கின்ற பதம் இங்கே வெகு அர்த்தபுஷ்டியுடன் உபயோகப்படுத்தப் படுகிறது. ஏனெனில், மாப்பிள்ளை ஜகதீசன் மேற்கு ஆவணி மூல வீதியில் மாமனார் வீட்டையே, மணமான ஐந்தாவது தினத்திலிருந்து தனது இருப்பிடமாக ஸ்வீகரித்துக் கொண்டுவிட்டான்.

பட்டாபிராமய்யர் பணம் தேடவில்லை; பணம் அவரைத் தேடி வந்தது. பரமயோக்கியர், பரமஸாத்வி என்பதுடன், இதற்கு நேர் எதிரிடையான காரியவாதி, சாமர்த்தியசாலி என்னும் பட்டங்களையும் சம்பாதித்து விட்டார். இந்தப் பட்டங்கள் எவ்வளவு தூரம் அவருக்குப் பொருந்துமோ, நாம் பரீட்சித்துப் பார்த்ததில்லை; அவரது எளிமையான சுபாவம் மட்டும் சற்று நேரம் பேசுவதற்குள் தெரிந்துவிடும். மங்களம் வந்து, "அப்பா! ஸ்நானத்திற்குத் தவலை நிறைய வெந்நீர் போதுமா?" என்றால், "ஆஹா! இதை வைத்துக் கொண்டு அச்வமேத யாகம் செய்யலாமே!" என்பார் அவர். கட்சிக்காரர், "ஸ்வாமி! நம்ம பக்கத்து லா-பாயின்டை வைத்துக் கொண்டு கேஸை ஜயிக்கலாம்?" என்றால், "ஜயமா! ஹு! இதை வைத்துக்கொண்டு அச்வமேதயாகம் செய்யலாமே!" என்றுதான் சொல்வார்.

"இரண்டு 'காலன்' பெட்ரோல் இருக்குதே வண்டியில் போதுமா?" என்று டிரைவர் நின்றால், "ரெண்டு காலன் எதேஷ்டம், அப்பா! அச்வமேத யாகம் செய்யலாம்!" என்பார். இதற்கு மங்களம் வேடிக்கையாக, "அப்பா தினம் ஒரு நூறு அச்வமேதயாகம் செய்கிறார். ஆனால், ரயிலுக்குப் போனாலும் வந்தாலும் ஒரு ஜட்கா வண்டி கூட வைத்துக்கொள்ள விடுகிறதில்லை!" என்பாள்.

பட்டாபிராமய்யர் சும்மா சிரித்துவிட்டு, "பாகீரதி! உன் பெண்களெல்லாம் உன்னைக் கொண்டுவிட்டார்கள் குணத்துக்கு!" என்று வெகுளியாகத் தம் மனைவியை அழைத்துச் சொல்வாரே தவிர, ஒரு போதும் கோபிக்க மாட்டார்.

மூத்த பெண் மங்களத்தின் கல்யாணம் திவ்யமாக நடந்தது. மாப்பிள்ளை வீட்டோடு இருக்கச்சௌகரியமாக உள்ளூர்க் கம்பெனி ஒன்றிலேயே ஓர் உத்தியோகமும் பார்த்துக் கொடுத்து விட்டார் பட்டாபிராமய்யர்.

மங்களம் நல்ல உயரமும், ஏற்ற பருமனும் உள்ள ஸ்திரீ ரத்னந்தான். குழந்தை முதலிலே நல்ல ஊட்டம் பெற்றவளாகையால், சற்றும் சளைக்காத தெம்பு திரட்சியான அவயங்களில் பிரதிபலித்தது. தலைச்சன் குழந்தை என்று 'இடம்' கொடுத்து வளர்க்கப்பட்டவளாகையால் குற்றம் கண்டுபிடிப்பதிலும் பிடிவாதம் செய்வதிலும் சளைக்காத சுபாவம் படிந்துவிட்டது. சண்டை என்று வந்தால் மங்களம் பின்வாங்கினது என்பது கிடையாது.

இவள் ஏன், எதற்காக, ஜகதீசனை மணந்துகொள்ள ஒப்புக்கொண்டாள் என்பது ஒரு மர்மம். ஏன், அவளுக்கே அது மர்மந்தான். ஜகதீசனும் இதைப்பற்றி அதிகம் சிந்திப்பதும் இல்லை; வருந்துவதுமில்லை. ஜோதிஷப்பித்தன் ஒருவன் தனது கஷ்ட காலத்தில், "நாம் என்ன செய்வது! சனி செய்த விஷமம்; கேது செய்யும் கேடு; ராகு பண்ணும் சூட்டி" என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொள்வதுபோல் இவனும் 'விதியின் விளையாட்டு' என்று சமத்காரமாக தெளிந்து கொடுத்துப் பணிந்து விட்டான்.

"சட்டை அழுக்காக இருக்கிறதே, மங்களம்; வேறு போட்டுக் கொள்கிறேனே!" என்பான் அவன்.

"ஒன்றும் வேண்டியதில்லை! நேற்றுக் காலையில் தானே கொடுத்தேன்!" என்ற பதில் வெடுக்கென்று கிடைக்கும்.



"மங்களம்! நாலைந்து சிநேகிதர்களாக அழகர் கோயிலுக்குப் போறதாக ஒரு திட்டம் போடுகிறார்கள். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையாயிருக்கிறதே! அதனால்..."

"நீங்கள் அவர்களோடு ஒன்றும் சேரவேண்டிய தில்லை. நன்றாகப் போனீர்களாம்! நாளைக்கு வீட்டில் எவ்வளவு வேலை இருக்கிறது, தெரியுமா?"

வீட்டில் வேலை இருக்கிறதை ஜகதீசனுக்கு ஞாபக மூட்ட வேண்டியதே இல்லை. மாமனார் வீட்டில் ஊறிப்போய், அங்கே எல்லாம் துப்புரவாக இருக்க வேண்டியது தன் பொறுப்புகளில் ஒன்று என்கிறவரையில் நினைத்துவிட்டான் அவன். அபூர்வமாகக் கனவில் மங்களத்தை எதிர்த்து வாயாடிவிட்டு, அவள் அதைத் தெரிந்துகொண்டுவிடுவாளோ என்று பகலெல்லாம் நடுங்கிக்கொண்டிருப்பான்!

எதையும் காதில் போட்டுக்கொண்டு வருத்திக் கொள்ளாத சுபாவம் வீட்டு எஜமானி பாகீரதியம்மாளுக்கு வயது ஐம்பத்திரண்டு ஆகிவிட்டது. அதிகம் நடமாடவோ ஓடியாடி வீட்டு வேலை செய்யவோ முடியாது. ஆனால், உட்கார்ந்த இடத்திலிருந்து அம்மாளின் நோக்கு எங்கும் வியாபித்திருந்தது. மனங்கோணாதிருக்கும் கணவன், வீட்டைக் கவனிக்கும் மூத்த பெண், காலேஜில் படிக்கும் பிள்ளை, அடங்கி நடக்கும் மாப்பிள்ளை இன்னும் என்ன வேண்டும், ஆகையினால், தைரியமாக பாகீரதி தேக அசௌக்கியத்தை வருவித்துக் கொண்டு, தினம் ஒரு புதிய வியாதியாகச் சொல்லிவந்தாள். திங்கள்கிழமை அஜீரணம், செவ்வாய்க்கிழமை ஒற்றைத்தலைவலி, புதன்கிழமை முதுகுவலி, வியாழக்கிழமை பூட்டுக்குப் பூட்டு குடைச்சல், வெள்ளிக்கிழமை கண்ணெரிச்சல், சனிக்கிழமை ஒரே ஓய்ச்சல்—இப்படியாக அந்த அம்மாளின் உடம்பைக் கொண்டு கிழமையைச் சொல்லி விடும் அளவுக்கு தேகநிலை இருந்து வந்தது. பட்டாபி ராமய்யர் பறந்து விழுந்துகொண்டு டாக்டரிடமும் ஓடி

விடுவதில்லை. "உனக்கென்ன தலைவலியா? பித்தத்தினால் இருக்கும்". "வயிற்று வலிதானே? ஜீரணம் போறாது", "குடைச்சலா? வெறும் வாயு சேஷ்டை" என்பார்.

இந்தக் குடும்பத்தின் கடைசிக் குழந்தைதான் சௌ. ஜானகி. சென்னையில் மாமன் வீட்டிலிருந்து காலேஜில் படிக்கும் மிஸ் ஜானகி-தற்கால மோஸ்தரில் நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தாளானால் குமாரி ஜானகி என்று அழைக்கப்பட்டிருக்கவும் வேண்டியவள்!

"காலேஜ் படிப்பு என்னத்திற்கு? எஸ்.எஸ்.எல்.ஸி. போதாதோ? நான் எல்லாம் என்ன படித்துவிட்டேன் இப்போ!" என்று கேட்டான் மங்களம்.

"படிப்பு போதும் என்றால் போதுமே! மெட்ரிகுலேஷன் படிப்பை வைத்துக்கொண்டு பேப்பர் படிக்க வராதே!" என்று பாகீரதி கேட்டாள் தலைவலியுடன். (அன்று செவ்வாய்க் கிழமை)

"பேஷாக! எஸ்.எஸ்.எல்.ஸியை வைத்துக்கொண்டு ஓர் அச்வமேதம் செய்துவிடமுடியாதா?" என்று சொன்னார் பட்டாபி.

சுவரிலிருந்து படத்தை மும்முரமாகத் துடைத்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை ஜகதீசன், "என்ன! நம்ம ஜானகியைப் பற்றித்தானே பேசுகிறேன், மாமா?" என்று விசாரித்தான்.

"இவருக்கு எல்லாம் முதலிலிருந்து ஸ்பெஷலாக இன்னொரு தடவை சொல்லணும்" என்று அலுத்துக் கொண்டாள் மங்களம்.

"ஜானகி படிக்கலாம், மாமா! அவளுக்குப் படிப்புதான் நன்றாக வருகிறதே!" என்றவன், மங்களத்திடமிருந்து ஓர் உஷ்ணஜ்வாலை தன்னை நோக்கி வருவதை அநுபவபூர்வமாக உணர்ந்துகொண்டு, "என்ன படிப்பு இதெல்லாம்! என்னைக் கேட்டால்,



எஸ்.எஸ்.எல்.ஸி.யே ஜாஸ்தி என்பேன்" என்று முடித்தான்.

சைக்கிளுக்குக் காற்றடித்துக்கொண்டிருந்த கோபாலன் "அப்பா. அத்திம்பேர் சொல்றது எதையும் முழுக்க நம்ப முடிகிறதில்லை. முன்னாடி சொல்கிறதற்கும் முடிக்கிறதற்கும் நேர் எதிராக இருக்கும்!" என்றான்.

"போடா உன் வேலையைப் பார்த்துக்கொண்டு! தலையை வலிக்கிறது!" என்றாள் பாகீரதி.

"அம்மா! நீ உடம்பு ஒன்றுமில்லை என்று சொல்லி ஒருநாள் எனக்குக் கேட்கணும்!" என்று சொன்னான் கோபாலன்.

"இந்த ஜானகிக்கும் ஒரு கல்யாணமாகி, உன் பெண்டாட்டியையும் வீட்டுக்கு அழைத்துவிட்டால் எனக்கு அப்புறம் ஒரு கவலையும் இல்லை!" என்று சொன்னாள் பாகீரதி.

"என் பெண்டாட்டி வந்ததும் உன் தலைவலி போய் எனக்குத் தலைவேதனை ஆரம்பித்துவிடும்" என்றான் கோபாலன் அசட்டுச் சிரிப்புடன், சற்று உள்ளே எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பிய மங்களம், "அதெல்லாம் வெறும் பேச்சு! தலைக்கு மூணு பக்கம் நாலு பக்கம் கடுதாசி எழுதிக் கொள்கிறார்கள்! என்னையும் உன் மாப்பிள்ளையையும் போலவா?" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

"ஏன், நான் பங்களூர் போனபோது போட வில்லையா, நன்றாக நினைத்துப் பார்!" என்றான் ஜகதீசன்.

"லட்சணமே! ஒரு கார்டு போட்டுவிட்டீர்கள்!"

"ஏன் கார்டு கடுதாசியில் சேர்த்தியில்லையோ? என்ன மாமா, கார்டு போட்டால் போதாதோ?"

"பேஷாகப் போதும்! ஒரு கார்டு சமாசாரத்தை வைத்துக்கொண்டு அச்வமேத யாகம் செய்யலாமே" என்று அங்கிருந்து எழுந்து சென்றார் பட்டாபிராமய்யர்.

மேற்கூறிய சம்பாஷணைகள் நடந்து சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் காலை இதே போன்ற ஒரு சபை கூடியது பட்டாபி ராமய்யர் வீட்டில்; வித்தியாசம் ஒன்றுதான்: மங்களம் சென்னைப் பட்டணத்துக்கு, நல்ல துணை வந்ததென்று போயிருந்தாள். அன்றுதான் திரும்பி வருகிறாள். டிசம்பர் லீவுக்கு ஜகதீசனுடன் திருச்செந்தூர் போய் முருகனைத் தரிசனம் செய்யவேண்டுமென்ற ஆசை வந்துவிட்டது அவளுக்கு. அதுவும், திருநெல்வேலி ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார் நாகநாதய்யர் வந்து, அந்த மகா க்ஷேத்திரத்திலே கார்த்திகேயன் பாலசுப்ரமணியனாகவும் ஷண்முக நாயனாராகவும் அளிக்கும் திவ்யமான தர்சனத்தைப் பற்றி வர்ணிக்கவே அவள் ஆவல் பன்மடங்கு பெருகியது.

நாகநாதய்யர் எப்படியோ அந்தக் குடும்பத்துக்குப் பந்துவாகவேண்டியவர் பழைய காலத்து மனுஷர்; உத்தியோகப் பெருமை உண்டு; தாம் ஆஸ்திகர் என்ற பட்டாடோபம் உண்டு. பெரிய வித்தகர் என்ற அகம்பாவமும் உண்டு. பலத்த தொண்டையும் உண்டு. ஆகையினால், அவர் பேசும்போது பிறர் யாரும் பேசக்கூடாது என்பது எழுதப்படாத சட்டம். மங்களம் எதிர்த்துப் பேசத் தயங்கும் மனிதர் ப்ருத்வியில் ஒருவர் உண்டென்றால், அவர் இந்த நாகநாத அய்யர்தான்!

நாகநாத அய்யருக்குச் 'சாஸ்திரிகள்' என்று அழைக்கப் படுவதில் ஒரு கௌரவம். ஏதேனும் ஒரு காரியம் ஆக வேண்டுமானால், "நாகநாத சாஸ்திரிகள் இருக்கிறாரோ?" என்று கேட்டுக்கொண்டு போனால் போதும், ஆகிவிடும், அது நிச்சயம் கெட்டுப் போகவேண்டும் என்றால், "ஸை



ரிஜிஸ்திரார் நாகநாதய்யர் வீடு இதுதானே?" என்று விசாரிக்க வேண்டியதுதான்!

"என்ன மாப்பிள்ளை! உம்மைத்தான் ஜகதீசய்யரே! வீட்டுக்கு ஒரு குழந்தை இல்லையென்று மங்களமானால் தாபப்படுகிறாள். கல்யாணமாகி வருஷம் ஒன்பதாகிறது. நீர் என்னடாவென்றால், ஆபீஸுக்குப் போகிறதும், வீட்டுக்கு வருகிறதுமாக இருக்கிறீரே ஒழிய" என்று ஆரம்பித்தார் நாகநாத அய்யர்.

"ஒரு ஸர்ப்ப சாந்திகூடச் செய்தோம். ஏகப்பட்ட செலவு!" என்றான் ஜகதீசன்.

"ஸர்ப்ப சாந்தி கிடக்கிறதுங்காணும்! நான் சொல்கிறபடி கேளும், என்ன?"

"கேளுங்கள்!" என்று மங்களமும் அதட்டினாள். ஜகதீசன் சிஷ்யனுடைய அவஸ்தையில் நின்றான்.

"ஒரு மூணு வாரம் வந்து நம்ம திருச்செந்தூரில் இரும், என்ன? மூணு வேளை சமுத்திர ஸ்நானம் பண்ணி என்ன? ஸ்வாமி தரிசனமும் பண்ணும்... என்ன?"

"என்ன?" என்றான் ஜகதீசன்.

"அவரிடம் சொல்கிறதை என்னிடம் சொல்லுங்கள். நான் போய் ஜானகியையும் அழைத்துக்கொண்டு வந்து விடுகிறேன். எனக்குக்கூடப் பட்டணத்தில் டாக்டரிடம் கையைக் காட்ட வேண்டும்" என்றாள் மங்களம்.

"போகிறதானால் நாளைக்கே போகலாம். நாராயண அய்யங்கார் குடும்பம் பட்டணம் போகிறதாம்" என்றான் தம்பி கோபாலன்.

"ரொம்ப சரி! நான் முன்னாடிப் போய்த் திருச்செந்தூரில் ஜாகையெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டுக் காத்திருக்கிறேன், என்ன? திருநெல்வேலி ஸ்டேஷனில் வந்து டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ரார் வீடு எது என்று கேளும். போதும். அவ்வளவு பேரும் சொல்லுவா!"

"ஓ!" என்று ஆச்சரியப்படுவதுபோல் பாசாங்கு செய்தான் ஜகதீசன்.

ஜகதீசன், பாவம்! இந்த 'உடும்பு' நாகநாதய்யரிடம் தப்பித்துக்கொள்ள முயன்று பார்த்தான். ஆனால், எப்படி எப்படியோ அவரிடமே அகப்பட்டுக்கொண்டு சங்கடமும் பட்டான். 'கஷ்டப்படும் ஆத்மா - கஷ்டப்பட்டே தீரவேண்டும்' என்கிற நியதியின்படி மங்களம் இல்லாத போதுங்கூட விச்ராந்தியாயிருக்க முடியாமல், இவர் பிடியில் திணறினான். கடைசியில் ஒரு மட்டாக இவர் திருச்செந்தூருக்குப் புறப்படும் தினம் வந்தது. அதே தினத்தில் அந்த வண்டியிலேயே மங்களமும் ஜானகியும் சென்னையிலிருந்து வருவதாகத் தந்தி வந்தது.

ஜகதீசனும் கோபாலனும் ஸ்டேஷனுக்குப் போனார்கள், நாகநாத அய்யரை ரயிலேற்றி விட்டுவிட்டு, வருபவர்களையும் அழைத்து வருவதற்காக. "குழந்தைகள் வரட்டும்; இரண்டு நாள் இங்கே வைத்துக்கொண்டிருந்து விட்டுப் பிறகு அனுப்புகிறேன். நீங்கள் சௌகரியமாக ஒரு ஜாகை ஏற்பாடு செய்துவையுங்கள்! அப்புறம், நான் சொன்னேனே, நம்ம ஜானகிக்கு ஒரு நல்ல வரனாகவும் பார்த்துச் சொல்லுங்கள்" என்றார் பட்டாபிராம அய்யர். இதைத் தம் ஆப்தர்கள் அவ்வளவு பேரிடமும் சில தினங்களாகச் சொல்வது அவர் வழக்கந்தான்.

"பட்டாயமா சொல்றேன்! என்ன? இன்னும் இரண்டு மாதத்திலே பார்த்துச் சொல்லலாமோல்லியோ? என்ன?"

"தாராளமாகச் சொல்லுங்கோ! அதுக்குள்ளே நான் அச்வமேதயாகம் பண்ணிவிடமாட்டேனா?" என்று உள்ளே போனார் பட்டாபி.

ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது, தையிறக்கி, தொலைவில் வரும் 'எக்ஸ்பிரஸ்' என்ஜின் உருவமும் ஒரு கரும்புள்ளி போல் தென்படத் தொடங்கியிருந்தது.



சென்னைப் பட்டணத்திலிருந்து தினம் ஒரு முறை 'திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்' கிளம்புகிறது. தினம் ஒரு முறை அதனுள் அடங்காத அளவுக்கு ஜனங்கள் சேர்கின்றார்கள். இடத்துக்கு முண்டி அடித்துச் சண்டை போட்டு, இறுதியில் எப்படியோ அதனுள் அடங்கியும் பிரயாணம் செய்துகொண்டுதான் வருகிறார்கள். குறிப்பிட்ட ஒரு தினத்தில் ரயில்வே பிளாட்பாரத்தில், இதே 'எக்ஸ்பிரஸ்' புறப்படும் சமயத்தில் சற்று ஸ்தூல தேகியான ஒருவர் ஒரு மோட்டாரிலிருந்து இறங்கினார். அவரைத் தொடர்ந்து ஒரு பொற்கொடியும், அவனைப் பின்பற்றி அவளுடைய தமக்கையும் இறங்கினார்கள்.

"இன்றைக்கும் நல்ல கூட்டந்தான்!" என்றார் அவர்.

"ரயில்வே ஸ்டேஷனைப்போல் கிட்டத்தட்ட கலகலப்பான இடம் ஒன்று உண்டென்றால், அது கடைசி மணி அடிக்கும்போது இருக்கும் பரீக்ஷை ஹால்தான், மாமா!" என்றாள் பொற்கொடி.

பெரியவன் தெறித்த புருவத்துடன், "நாம் வருகிற போதுகூட இப்படிக் கூட்டம் கூட என்ன தைரியம்!" என்றதோரணையில் பிளாட்பாரத்தை மேலும் கீழுமாகப் பார்த்தான். பிறகு திரும்பி, "மாமா! நம்ம கம்பார்ட்மெண்ட் 'ரிஸர்வ்' ஆகியிருக்கும் அல்லவா?" என்று கேட்டாள். அதற்குள் டிரைவர் அந்தப் 'பெட்டி'யைக் கண்டுபிடித்துச் சாமான்களையெல்லாம் ஏற்றினான். ஜானகியும் மங்களமும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

ஜானகி விரிந்த நயனங்களுடன் வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். ரயில்வே ஸ்டேஷனில்தான் எத்தனை வித ஆசாபாசங்கள், சிந்தனைகள்! புது மணாளனைக் காணப்போகும் இளம் நங்கைகள்; புருஷனுடன் சண்டை போட்டுக்கொண்டு வாழ்க்கையை வெறுத்துச் செல்லும் ஸ்திரீகள்; பிரசவத்துக்குப் போகும்

தாய்மார்கள்; வீட்டுக்குப் பெரியவருக்கு ஆபத்து என்று அலறிக்கொண்டு போகும் குடும்பத்தார்கள்; படிப்புக்காக வரும் மாணவர்கள்; வேலைக்காக அலையும் இளைஞர்கள்; ஷோக்குக்காகத் திரியும் காளைகள்; வயிற்றுப்பாட்டுக்கு அல்லல்படும் ஏழைகள்—ரெயிலே! உன் உடல் எல்லாம் வெறும் மரக்கட்டை; உன் நெஞ்சில் எல்லா உணர்ச்சியையும் பஸ்மீகரம் செய்யும் அக்னி ஜ்வாலை; உன் சதையும் நரம்பும் முழுக்க முழுக்க இரும்பு. அப்படி இருந்துங்கூட, நீ உஷ்ணப் பெருமூச்சை விடுகிறாய் என்றால், இந்தப் பாழாய்ப்போன உலகத்தின் சோகக்கதையைக் கேட்டுத்தான்? - இப்படி ஒருவித விரக்தியுடன் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள் ஜானகி. அவள் உள்ளக்கிடக்கையிலுங்கூட த்தான் ஓர் ஆழ்ந்த கவலை.

அந்த லெட்டர்! அது என்னவாயிற்று? நடராஜன்! அவன் இப்போது என்ன செய்கிறான்?

வெளிப்பார்வைக்கு அதை வாசித்தவளாக மங்களம் தோன்றவில்லை. ஆனாலும், அதை மட்டும் கொண்டு ஊகிக்கிறபேர், புலியின் தோல் வழுவழுப்பாயிருக்கிறதென்று அதைத் தடவிக்கொடுக்கப் போகிறவர் கதியைத்தான் அடைய வேண்டும். ஜானகி அதை நன்றாக அறிவாள். இம்மாதிரி குழம்பிக் கொண்டிருந்த போதுதான், ஜானகி திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். ஸ்டேஷனுக்குள் வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் அதிவேகமாக நுழைந்தான். அவன் கையில் ஒரு ஸூட்கேஸ் மட்டும் இருந்தது. அங்கவஸ்திரத்தை அவன் ஒரே தோளில் வீசியிருந்ததிலிருந்து அவசரமாக வந்திருக்கிறான் என்று ஊகிக்க முடிந்தது. உள்ளே நுழைந்ததும், ஆண் சிங்கம் பிடரியைச் சிலிர்த்துத் தலையைத் தூக்கிப் பார்ப்பது போல் இருபக்கமும் பார்த்தான். பிறகு ஜானகி இருக்கும்



திக்கை நோக்கி நடந்தான். 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது ஜானகியின் நெஞ்சம்.

விச்வநாதய்யர் வண்டியின் வெளியில் நின்று கொண்டிருந்தார்.

"ஸார், தயவு செய்து கொஞ்சம் நகர்ந்து கொள்கிறீர்களா?"

விச்வநாதய்யர் நகர்ந்து இளைஞனுக்கு இடம் விட்டார். மங்களம் அவனை வேல்விழிகள் கொண்டு, கண்ணகி தேவியானவள் பாண்டியனை விழித்தது போல் குரோதமாகப் பார்த்தாள். ஜானகியின் மார்பு படபடத்தது.

"நான் பேலே 'பர்த்' ரிஸர்வ் செய்திருக்கிறேன். நீங்கள் அலட்டிக்கொள்ள வேண்டாம்" என்றான் வந்தவன். பிறகு, நடராஜனுக்கே உரித்தானதொரு வசீகரப் புன்னகையும் செய்தான்.

மங்களம் பார்க்கப் பிடிக்காதவள் போல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"நீங்கள் எதுவரை போகிறீர்கள், மிஸ்டர்?" என்று விசாரித்தார் விச்வநாதய்யர்.

"நானா, ஸார்! நான் திருநெல்வேலி வரைக்கும் போகிறேன்!" மறுபடியும் போக்கிரிப் புன்னகை.

"நல்லதுதான்! இவர்களும் மதுரை வரையில் போகிறார்கள். துணைதான்!" என்று திருப்திபட்டுக் கொண்டார் விச்வநாதய்யர்.

'கண்டவர்களை இந்த மாமா பார்த்தவுடன் நம்புவதுதான் எனக்குப் பிடிப்பதில்லை' என்று எண்ணி முகத்தைச் சுளித்துக் கொண்டாள் மங்களம். ஜானகி தலையை நிமிர்த்தவே இல்லை. அக்காளுக்கு இவனைத் தெரியுமோ? மாமாவுக்கு லெட்டரைப்பற்றி இதற்குள்

தெரியுமோ? தெரிந்துதான், வயது வந்த பெண்ணை எப்படிக் கேட்பது என்று பேசாமல் இருக்கிறார்களோ?

"என்ன ஜானகி! ஒன்றுமே பேசாமல் ஒரே யோசனையில் இறங்கி விட்டாய்! ஹும்! திருச்செந்தூரில் நன்றாகத் தரிசனம் செய்துகொள். முருகன் கிருபையால் நல்ல புருஷனாக வந்து நீ சந்தோஷமாக இருக்க வேண்டும். அவ்வளவுதான் வேண்டியது" என்றார் மாமா, பிள்ளை இல்லாத மாமனுடைய வாத்ஸல்யம் கண்களில் இலேசாக நீர்த்திரையிட்டது.

ஜானகி வெட்கத்துடன் தலையைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

மாமா தொடர்ந்து, "எனக்குக்கூடத்தான் ஒரு முறை திருச்செந்தூருக்கு வரவேண்டுமென்று ஆசை. மங்களம் முன்னாலே சொல்லியிருந்தால் இப்போதுகூட வந்திருப்பேன். என்ன ஜானகி! அந்த ஊரிலே 'மடி நிறைய விபூதி, மார் நிறையச் சந்தனம்' என்று அள்ளிக் கொடுப்பார்கள்! அந்தத் தெய்வம் பிரத்யக்ஷம்! போனால் திரும்பிவர மனசாகாது, அம்மா! எத்தனை தரம் பார்த்தாலும் திருப்தி வராதே" என்றார். பிறகு அந்த ஆத்மானுபவத்தில் தம்மை மறந்து சொக்கி நின்றார் விச்வநாதய்யர்.

பக்கத்தில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. சில்க் ஜிப்பாவும் ஒரே ஸெண்ட் மணமுமாக ஒரு யுவன் இறங்கினான். உடனே போய் மோட்டாரின் பின் கதவைத் திறந்துவிட்டு, இரு பெரிய ஸூட்கேஸ்களை எடுத்தான். நெக்லெஸும் வளையல்களும் பதக்கமும் தோடுகளும் மூக்குத்தியும் ஒரே வர்ண ஜாலங்களாக வாரி இறைக்க, சுமார் முப்பது வயது மதிக்கக்கூடிய ஒரு ஸ்திரீ வெகு லாயக்காக இறங்கி, ஒரு ராணி போல் நான்கு மூலைகளையும் பார்த்துவிட்டு, தனது ஜரிகை மயமான புடவையைச் சரிசெய்து கொள்வதுபோல்



நாஸூக்காகப் பாசாங்கு செய்துவிட்டு அந்தப் பெட்டியில் ஏறினாள்.

"கூட்டம், கூட்டம்!" என்று முணுமுணுத்தாள் மங்களம்.

"நீங்களும் போறீங்களா ஸார், இந்த வண்டியில்?" என்று கேட்டான் அந்த ஸில்க் ஜிப்பா ஆசாமி விச்வநாதய்யரை.

"இல்லை; நம்ம மனிதர்கள்தான் போகிறார்கள்! ஏன்?"

"நம்ம தங்கை போவுது ஸார், திருநெல்வேலி வரைக்கும். நல்ல துணையாக இருக்குமென்னு பார்த்தேன். ஒன்றுமில்லை. திண்டுக்கல் வரைக்கும் போறவங்க இருந்தா போதும் அப்புறம் விடிஞ்சுடுது."

விச்வநாதய்யர் சொன்னார், அந்தப் பணியில் ஈடுபடத் தமது குடும்பம் பெரும்பாக்கியம் செய்திருக்க வேணுமென்று அதே விஷயத்தை மங்களத்துக்கும் கூறினார். ஜானகியும், உயரே நடராஜனும், இவளை இதற்குமுன் எங்கே பார்த்திருக்கிறோம் என்று மண்டையைத் துழாவிக்கொண்டிருந்தார்கள்.

ரயில் முப்பத்தாறு மைல் வேகத்தில் ஓடியது. காதலர்கள் நெஞ்சங்களோ முந்நூற்றறுபது மைல் வேகத்தில் அடித்துக்கொண்டன. பேசிக்கொள்ள முடியவில்லையே என்ற மட்டற்ற தாபம். ஆனால், ஏற்கனவேயுள்ள சம்சயங்களை ஊர்ஜிதம் செய்யலாகாது என்று வெகு ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டார்கள். வைரங்களை வைத்திழைத்த மாது மூன்று முறை நாகரிகமாகக் கொட்டாவி விட்டுவிட்டுப் படுத்துக்கொண்டு விட்டாள்.

திண்டுக்கல் ஸ்டேஷனில் வண்டி நின்றுகொண்டிருந்த போது, அதியற்புதமான கனவு ஒன்று கண்டு திடுக்கிட்டு

விழித்தான் நடராஜன். பல் தேய்த்து, ஒரு வாய் காப்பி சாப்பிடத் திண்டுக்கல்லை விட்டால் வேறு இடம் ஏது? அடுத்த நிமிஷம் வெளியே பிளாட்பாரத்தில் நின்றான். இட்டிலி விற்கும் இடத்தில் ஒரே ஜன நெருக்கடி; நாலு இட்டிலியாக வாங்கி, ஜானகியுடன் பகிர்ந்துகொள்ள எத்தனையோ ஆசை அவனுக்கு ஆனால், முடியுமா?

முண்டியடித்துக்கொண்டு முன்னேறினபோது, "ஊ ஊ.", என்று ரயில் கூவியது. இட்டிலிக் கடையில் குழுமிய கூட்டம் கலகலத்தது. காரியமே குறியாக இருந்த நடராஜன் ரயில் நகர்வதை உடனே கவனிக்கவில்லை. அவன் கவனத்தைத் திருப்பியபோது, பல வண்டிகள் நகர்ந்து இப்போது வேகமாகிக்கொண்டும் வந்தது. "சை, இட்டிலி!" என்று வெறுத்து ஓட்டமாய்ப்போய் ஏற முயன்றான். ஒரு நிஜார் போட்ட ஆபீஸர் அவனை வழி மறித்தார். "நில்லும்! ஆக்ஸிடண்ட் ஆயிப்போகும், ஸார்! அடுத்த வண்டியில் போ!" என்றார் கண்டிப்பாக.

"என் பெட்டி இருக்கிறது, ஸார்!" என்று கதறினான் நடராஜன் திமிறிக்கொண்டு.

"ஒரு பெட்டிக்காக மனிதன் காலைக் கையை இழந்து விடுவதா? நில்லும்!" என்று தீர்மானமாக நிறுத்திவிட்டார் அவர்.

வண்டியின் கடைசிப் பெட்டி அப்போது வேகமாக அவர்களைத் தாண்டிக்கொண்டிருந்தது.

கலங்கின மனத்தினளாக மதுரையில் இறங்கப் போன ஜானகிக்கு, அதே வண்டியில் நாகநாத அய்யர் ஏறிக் கொள்ள வந்தது பரம திருப்தியை அளித்தது. நடராஜன் ஸூட்கேஸைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்வது அவனை அறிந்ததாகக் காட்டி விடும்; பேசாமலே சென்று விடுவதும் துரோகமாகப் போய்விடும் அவள் செய்யக்கூடியது என்ன?



மங்களம் மதுரை ஜங்ஷனில் இறங்கி, ஜகதீசனுக்கு ஏக காலத்தில் மடமடவென்று பல உத்தரவுகளைப் போட்டு, தான் இல்லாத ஏழு தினங்களில் அவன் அநுபவித்த சுதந்தரத்துக்கு ஈடு காண்பித்துக் கொண்டிருந்தது, ஒரு நல்ல சந்தர்ப்பமாகப்பட்டது ஜானகிக்கு. நாகநாத அய்யரிடம், "மாமா, சௌக்கியமாயிருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

தன்னை எல்லாரும் 'தாத்தா' என்று அழைப்பதற்கு மாறாக, 'மாமா' என்று கூப்பிடும் இந்தப் பெண்ணைப் பரிவுடன் பார்த்து, "சீக்கிரம் வந்து சேரம்மா" என்றார் அவர்.

"வருகிறேன், மாமா! நீங்கள் இதோ இருக்கும் இந்த ஸூட்கேஸை உங்களுடன் கொண்டுபோக முடியுமா? திருச்செந்தூரில் நான் வந்து உங்களிடம் வாங்கிக் கொள்கிறேன்" என்றாள்.

"அதற்கென்ன குழந்தை!"

மன நிம்மதியுடன் கீழே இறங்கினாள் ஜானகி. ஒரு பெரிய பாரமும் அவள் நெஞ்சிலிருந்து கூடவே இறங்கினதுபோல் இருந்தது.

ஐயோ பாவம், அசட்டுப் பெண்ணே! நாகநாதய்யர் பிறர் பெட்டி பூட்டாமல் இருந்தால் கூசாமல் திறந்து பார்ப்பார் என்பதையும், பொழுதை எப்படிப் போக்குவது' என்ற பிரச்னையை அவர் இப்போது நடராஜன் பெட்டியைக் குடைவதில் தீர்த்துக்கொண்டு செல்கிறார் என்பதையும் அறிந்திருந்தாள், அவள் சாந்தி அடியோடு குலைந்து போயிருக்கும்!

"இனப்பய்யா அந்த ஆனை... திருமால் கணக்கா காலை நீட்டிப்பிட்டான். இம்மாம் பேருங்க தகிங்கிணத் தோம் போடறோம்!"

இம்மாதிரியான சம்பாஷணைகள் சகஜமாக நடக்கும் நெருக்கடியான ஒரு தினத்தில்தான் நடராஜன்

ரயில் புறப்பட ஒரு நிமிஷத்திற்கு முன் ஓடிவந்து ஒரு வண்டியின் கதவைத்திறந்தான். திண்டுக்கல் ஜங்ஷனில் தனியே விடப்பட்ட அவன் சிறிது நேரம் ஸ்தம்பித்துப் போய்விட்டான். தன் பெட்டியைப்பற்றி அவன் லட்சியம் செய்தவன் இல்லை. ஜானகி அதைப் பந்தோபஸ்து செய்வாள் என்று நம்பிவிட்டான். மணி-பர்ஸ் நல்ல வேளையாகச் சட்டைப் பையிலே தங்கிவிட்டது. ஆனால், அவளை மறுபடி எங்கே சந்திப்பது? முதலில் மதுரையில் தங்குகிறாள் என்பதை அறிந்துகொண்டிருந்தான். அது எவ்வளவு நாள் என்பது அவனுக்கு மர்மமாகவே இருந்தது: ஏன், அவளுக்கேகூட அது தெரிந்திராது!

வெகுநேரம் சிந்தனை செய்தபிறகு, திண்டுக்கல்லில் அன்று தங்கிவிட்டு, மறுநாள் திருச்செந்தூருக்கே போய் ஒரு 'ரூம்' பேசிக்கொண்டு காத்திருப்பதுதான் உசிதம் என்ற முடிவுக்கு வந்தான். அந்தத் திட்டத்தின்படிதான் இப்போது திருநெல்வேலியில் ரயில் மாறுகிறான். கதவைத் திறந்தானோ இல்லையோ உள்ளேயிருந்து கேட்ட கர்ஜனை ஒருமுறை அவனைத் தூக்கிப் போட்டது. சிங்கம், புலி, கரடி, ஓநாய், நரி, சிறுத்தை எல்லாம் சேர்ந்து க்ஷணகாலத்தில் பலமாக உறுமியிருந்தால் கிட்டத்தட்ட இம்மாதிரி ஒரு சப்தத்தைச் செய்திருக்க முடியுமோ என்னவோ! அதைச் செய்தவர் சட்டையணிந்த ஒரு கிழவர்.

"என்ன ஸார்! என்ன சமாசாரம்? திடீரென்று வயிற்றுவலியா, மார்வலியா? என்ன உபாதி உங்களுக்கு?" என்று பரிவுடன் விசாரித்தான் நடராஜன்.

"ஏ! ஏ! இறங்கிப்போ! போ! பார்த்துக்கொண்டே போ! இங்கே இடம் கிடையாது! என்ன?" என்று உடம்பைக் குலுக்கினார் அவர்.

# 3

"சட்டையிட்டு மணிதுலங்கும் சாத்திரச் சழக்கரே!
பொஸ்தகத்தை மெத்தவைத்துப் போதமோதும்
பொய்யரே,
திட்டையேது, ஞானமேது, நீரிருந்த வக்ஷரம்
பட்டையேது சொல்லிரே, பாதகக் கபடரே!"
—சிவவாக்கியர் பாடல்

திருநெல்வேலி ஜங்ஷனுக்கும் திருச்செந்தூருக்கும் இடையேயுள்ள மைல்கள் முப்பத்தெட்டுதான் என்றாலும், மொத்தம் பத்தொன்பது ஸ்டேஷன்களையும் அவைகளில் ஒன்று தவறாது நிற்கும் ரயில் வண்டிகளையும் இங்கே காணலாம். அடிக்கடி கதவுகளைத் திறப்பதும் அடைப்பதும் இறங்குவதும் ஏறுவதுமாயுள்ள மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளிடையே நடைபெறும் சச்சரவுகளுக்கும் சண்டைகளுக்கும் இங்கே குறைச்சல் ஒய்ச்சல் ஏதும் இல்லை.

"ஓய்! உமக்கு மூளை கொஞ்சமாவது இருக்கா? இவ்வளவு கொழந்தைகளும் பொம்பிளைகளும் இருக்கிற வண்டியிலே பார்த்து ஏற வந்துட்டீரே! மேலே வண்டி அம்பிட்டும் காலி!" என்று ஞான திருஷ்டியில் கண்டாற் போல் ஒருவர் புத்தி சொல்வார்.

"இருக்கட்டும், ஸார்! நான் என்ன, அடுத்த ஸ்டேஷனில் இறங்கப்போறவன். ஒரு மூலையில் ஓர் அங்குல இடத்தில் நின்றுவிட்டால் போச்சு!" என்று மார்பின் சுற்றளவு நாற்பத்திரண்டு அங்குலம் கொண்ட ஆசாமி மூண்டுவார்.

"காலை மிதித்துவிட்டீரே, கடன்கார மனுஷா!"

"என்னமோ, ரயிலையே வாங்கிவிட்டாற்போல் தான் வாய்வீச்சு!"

"மனுஷனுக்கு அறிவு வேணும், அது இல்லைபோ ரயில் வண்டியிலே வந்து ஏறப்படாது!"

"ஓஹோஹோ! நான் ஏறினதுதான் இப்ப சங்கடமோ? எங்கேயும் பார்த்துட்டேன், இடமில்லை. உங்க பக்கத்தில் நிற்கணும்னு ஆசையா, பிரார்த்தனையா! இரண்டுமில்லையே!" என்று ஏறிக்கொண்டான் அவன்.

"ஏறாதே என்கிறேன், என்ன? மேலே ஏறினா என்ன? நான் சொல்றவன் மனுஷனாப் படலியே? என்ன?" என்று எகிறினார் அவர்.

"மனுஷனாயிருந்தால் அப்படிச் சொல்மாட்டானே! ஒரு மாதிரி நகர்ந்து இடம் கொடுப்பானே" என்று நடராஜன் நன்றாக உள்ளே வந்து கதவையும் சார்த்திக்கொண்டான்.

"இப்ப நீ இறங்கப்போறியா என்ன? ஏய்!"

"இறங்கப்போறேன், தாத்தா! கட்டாயம் இறங்கத்தான் போறேன். நான் போகவேண்டிய ஸ்டேஷன் வந்துட்டா ஒரு விநாடி உட்காருவேனா? இல்லை, வேறு யார்தான் உட்காருவா? நீங்கதான் நிமிஷம் நிற்பேளா?"

"சுத்த அதிகப்பிரசங்கியான்னா இருக்கே! என்ன, இடம் இல்லை என்கிறேன், இறங்காம..." கிழவர் எழுந்து நின்று நடராஜனைப் பிடித்துத்தள்ள முயன்றார். உடனே வண்டி நகரத்தொடங்கிவிட்டது.

"பெரியவரே! நாம் குஸ்தி என்று ஆரம்பித்தால் கம்ஸனுக்கும் கிருஷ்ண பரமாத்மாவுக்கும் நடந்த யுத்தம் மாதிரி முடியும். அதில் நான் கிருஷ்ணனாக இருப்பேன் ஆகையினாலே கப்சிப்னு உட்காரும். தாத்தா! ஆத்திலே பாட்டி இருக்காளா?"

பெரியவர் முகம் சிவத்தது அதுவும் எல்லாரும் சிரிக்கவே, கோபம் வந்துவிட்டது "பரதைப் பயல்கள்!..



பெரியவான் சின்னவான் மரியாதை கிடையாது! நன்னா கட்டி உதைக்க ஆள் இல்லாமே; என்ன?" என்று கையை வீசினார். கைவீச்சில் பக்கத்து ஆசாமியின் மூக்கில் பலமாக ஒரு குத்துவிழவே அவன், "இந்த ஆளை முதல்லே இறக்குங்க ஸேமே! பைத்தியம் பிடிச்சவன்!" என்று உறுமினான்.

"யாருக்குப் பைத்தியம்? என்ன!"

"இங்கே இருக்கிற அத்தனை பேருக்குந்தான்! உங்களுக்கு இங்கே இடம் விட்டார்களே!" என்றான் நடராஜன்.

"ஓஹோ! என்னை நீ அவமானமாடா படுத்தறே! சின்னப்பையன்டா, நீ சின்னப்பையன்! நினைச்சேன்னா என் சுண்டுவிரல்லே உன்னைச் சுருட்டிப்பிடுவேன்... ஓஹோ...!ஹூம்!"

"ஏன் அவர்கூட வாய் கொடுக்கறேள், மிஸ்டர்! வயசானவங்களுக்கே கொஞ்சம் சீக்கிரத்திலே கோபம் வரும் விடுங்க!" என்றார் ஒரு சமாதானப்பிரியர்.

"யாருக்கய்யா வயசாகிவிட்டது! என்ன போக்கிரித்தனம்!"

வண்டியில் அவ்வளவு பேரும் சிரித்தார்கள். அவரை, "அதிபால்யம்... அறுபத்திரண்டு ஆகியிருக்காதே!" என்றார்கள். 'மாப்பிள்ளை' என்றார்கள். "தாத்தாவுக்குத் தெம்பு இல்லையென்கிற பேர் என்கூடச் சண்டைக்கு வாருங்கள்!" என்றான் ஒருவன்.

நாஸரத் ஸ்டேஷன் வந்தது-அந்தப் பெட்டியிலுள்ள ஜனங்களுக்கு அதற்கு மேலும் ஹாஸ்யானந்தத்தைக் கொடுக்கக் கூடாதென்ற உத்தேசத்துடன் பெரியவர் கீழே இறங்கி, முணுமுணுத்துக்கொண்டும் ஓயாது திட்டிக் கொண்டும் அடுத்த வண்டியில் போய் ஏறிக்கொண்டார்.

திருச்செந்தூர் ஸ்டேஷனில் இறங்கியதும் கிழவரையும் சண்டையையும் முற்றும் மறந்து, ஹோட்டலைத் தேடிக்கொண்டு நடராஜன் நடந்தான்.

ஊருக்கு ஊர் தவறாமல் 'புதுத்தெரு' என்பதாகப் பழைய வீடுகள் நிறைந்த ஒரு வீதி இருக்கும். உண்மையில் புதிய வீடுகள் இருக்கும் வீதி ஒன்று வேண்டுமானால், 'புத்தம் புதுத்தெரு' என்ற வீதியைத்தான் தேடிச்செல்ல வேண்டும். திருச்செந்தூர் இதற்கு விதிவிலக்கல்ல; ஒரு புதுத்தெருவல்ல; நான்கு புதுத்தெருக்கள் படைத்திருக்கிறது அது நான்கிலும் பழம் வீடுகளே மிகுந்து காண்கின்றன.

கிழப் புதுத்தெருவின் முனையில் நின்றுகொண்டு உயரப் பார்த்துக்கொண்டிருந்தான் முத்துச்சாமி. பகல் வேளையாதலால் அவன் விண்மீன்களை எண்ணும் கைங்கர்யத்தில் ஈடுபட்டவன் என்று சொல்லமுடியாது. கடவுளே அவன் பேரில் கருணைகொண்டு அவன் காதுகளைச் செவிடாக்கியிருந்தார். அவன் ஸம்ஸாரத்தின் நாமாவளிகள் பூராவும் காதில் கேட்டிருக்குமானால், அது முத்துச்சாமியாயிருந்தாலுங்கூட இத்தனை நாள் தற்கொலை செய்துகொண்டிருப்பான். வழக்கம்போல் அன்று காலை அவன் யார் செலவில் சூடாகக் காப்பி சாப்பிடலாம் என்று யோசித்துக்கொண்டு தெரு ஓரத்தில் நின்றிருந்தான்.

"ஏன் ஸார்! உங்களுக்கு இந்தத் தெருதானோ?" என்ற குரல் கேட்டுத் திரும்பினான் முத்துச்சாமி. அவன் முன் ஓர் இளைஞன் நின்றான். 'பட்டணத்துப் பேர்வழி; நாஸூக்குக்காரன்தான். என்னமோ கேட்கிறானே காதில் விழாதபடி!'

"ஆமா, என்ன சொன்னேள்?" என்றான் முத்துச்சாமி.

"நீங்கள் இருக்கிற தெரு இதுதானோ?"



"ஆமாம், ஆமாம்... அதோ இருக்கிறது நல்ல காப்பி கிளப்தான்!"

நடராஜனுக்கு விஷயம் புரிந்தது. சற்று உரக்க, "காப்பி கிளப் இருக்கட்டும். ஜாகை ஒன்று இருக்குமா?"

பேஷாக இருக்கும்: வாருங்களேன்; இட்லி, தோசை, உப்புமா, பொங்கல், எல்லாம் போடறார்கள், 'டிக்ரி' காப்பி எந்த வேளையிலும் கிடைக்கும். கப் மூணணா."

நடராஜன் அவனையும் அழைத்துக்கொண்டு ஹோட்டலை நோக்கிச் சென்றான். மேலும் சற்று பேசின போது, கடைசி வார்த்தை மட்டும் முத்துச்சாமியின் காதில் விழும் என்ற இரகசியத்தை அறிந்துகொண்டான். ஆகவே, கேள்வியை மாற்றி, "இங்கே இருக்குமா ஜாகை?" என்றான்.

"யாருக்கு?"

"எனக்குத்தான்,"

"உமக்குத்தானோ என்று பார்த்தேன்!"

"எனக்குத்தான், எனக்குத்தான், எனக்கேதான்!"

"ஏன் கத்தறீர்? ஜாகைதானே ஸார்! அதை அப்போதே சொல்கிறதற்கென்ன?" என்று முத்துச்சாமி கேட்டுவிட்டு, "இந்தத் தெருவிலேயே தீக்ஷிதர் வீடு மூணு இருக்கிறது விசாரியுங்கள்!" என்றான். முத்துச்சாமியுடன் மிகுந்த பிரயாசையோடு சம்பாஷணை நடத்தி, மேற்படி தீக்ஷிதர் தமது சுயசம்பாத்தியத்தால மூன்று வீடுகள் கட்டி, அவைகளை வாடகைக்குவிட்டுத் திருநெல்வேலியில் போய் உட்கார்ந்துகொண்டு வேதாந்த ஆராய்ச்சிகள் செய்வதையும், இப்போது அவை யார் யாரிடம் இருக்கின்றனவென்பது முத்துச்சாமிக்குத் தெரியாது என்பதையும், நடராஜன் போய் விசாரித்துக்கொள்வதில் அவனுக்கு ஆட்சேபம் துளிக்கூட இல்லையென்பதையும் கூறிவிட்டு, நடராஜன் செலவில் சாப்பிட்ட ஆகாரங்கள்

இதற்குள் ஜீரணமாகிவிட்டதற்கு அறிகுறியான ஒரு நீண்ட ஏப்பத்துடன் அங்கிருந்து அகன்றான்.

திருச்செந்தூர் சுந்தரராஜ தீக்ஷிதர் வீடுகள் மூன்றில் எப்போது 'ஸென்ஸஸ்' எடுத்தாலும் இரண்டாயிரம் எலிகள், ஒன்றரை லக்ஷம் கரப்பான் பூச்சிகள், நான்கு பெருச்சாளிகள், மூன்று நட்டுவாக்காலிகள் ஆகியவை வாடகையின்றி வாசம் செய்வதை அறியலாம். தீக்ஷிதர் இவ்வீடுகளை வாடகைக்கு விடும்போது, மேற்குறிப்பிட்ட சிருஷ்டிகளைப்பற்றி ஒரு வார்த்தைகூட வெளியிடாமல், சென்னை நகர வீட்டுக்காரர்கள் பேசும் பாணியிலே, "நம் வீட்டிலே இருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா! மத்தியான்ன வேளையிலே வெயில் தெரியுமா? ஜிலுஜிலு வென்று தென்னை மரத்திலிருந்து காற்று அடிக்காதா? கோடைக்கானலுக்கும் ஊட்டிக்கும் போகிறார்களே, சுத்த முட்டாள்கள்!" என்றுதான் சொல்லுவார். என்ன சொல்லியும் திடீரென்று மூன்று வீடுகளும் ஏககாலத்தில் காலியான சமயம், அவருக்கும் திருநெல்வேலியில் ஜோலிகள் அதிகமாகிவிடவே, குடிவைக்கும் பொறுப்பைத் தம் நண்பரான சுப்பரத்தின சாஸ்திரியிடம் ஒப்புவித்து விட்டுப் போயிருக்கிறார்.

சுப்பரத்தின சாஸ்திரிக்கு ஊர் ஜனங்கள் வைத்திருந்த பெயர் 'சுப்பாச்சாரியார்' என்பதுதான். அவசர சமயங்களுக்குப் புரோகிதம் செய்துவரும் சாஸ்திரியாருக்குத் தெரியாத வேலையே கிடையாது. கூரைமேலேறி ஓடு மாற்றுவார்; தச்சுவேலை நலை கிழாசத் தெரியும்; வீடு கட்டுவார்; வைரம் பரீக்ஷை பார்ப்பார்; கடிகார ரிப்பேர் செய்வார். கொஞ்சம் வைத்தியமும் தெரியும். கைவசம் மருந்துகள் குறைவாயுள்ள சமயம் 'மாந்திரிக'மும் வருமென்று சொல்லிக்கொள்வார். "ஜாதகம் பார்ப்பதில் நான் புலியாச்சே!" என்று மார்தட்டுவார். பல பாஷைகள் தெரியும் என்று கர்ஜித்து, "நான் ஹிந்தியில் சிங்கம் அல்லவா?" என்று அறைந்து கூறுவார். பேச்சில்



ஆங்கிலப் பதங்கள் தாராளமாக உபயோகிப்பார். இவ்வளவு மகா வியாபகரமான சுப்பரத்தின சாஸ்திரியின் வீட்டுப் பக்கம் அதிக ஜனநடமாட்டம் இராது என்றால், (இவர் வாக்குமூலப்படியே) புலியும் சிங்கமும் போலவே மிருகத்தனமாக அவர் நடந்து வந்ததுதான் காரணம். தவிர, சாஸ்திரியாரின் பிள்ளை சந்துரு ஊர்ப்பெண்களுக்கு ஒரு கிலியாக இருந்தான்.

மேற்குறிப்பிட்ட வீடுகளின் தற்போதைய நிலைமையை விசாரித்துக்கொண்டு போகலாம் என்று கீழ்ப் புதுத்தெருவிற்குள் நுழைந்த நடராஜன், ஒரே மாதிரியான அம்மூன்று வீடுகளைப் பார்த்துக்கொண்டான். முதல் வீடு பூட்டியிருந்தது; இரண்டாவது திறந்தபடியிருந்தது; மூன்றாவதில் மனிதர் புழக்கம் இருக்கும்போல் பட்டது. ஆகவே, கடைசி வீட்டுக்குள் நுழைந்து, காம்பவுண்டுச் சுவரையும் தாண்டியிருப்பான்.

"புர்ர்ர்ர்..." என்ற சத்தம் ஒன்று கிளம்புவதைக் கேட்டு, பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ என்று தயங்கினான். மறுகணம், "வள்! வள்!! வள்!!!" என்று மூன்று குரைப்புகள் கேட்டன.

அதே சுருதியில், "அக்கட எவரு ஐயா! வெள்ளு! வெள்ளு!" என்று உள்ளேயிருந்து ஒரு சத்தமும் தொடர்ந்தது.

"ஸார்!" என்றான் நடராஜன்.

"ஏமி ஸார், ஏமி மோர்! வெள்ளு போ!"

"ஒரு விஷயம் கேட்கவேண்டுமே உங்களிடம்!"

"புர்ர்ர்... வள்! வள்!! வள்!!!"

"நாகு தெலுஸுனு மீ விஷயம்! வெள்ளு போ! உம்!"

"இதேதடா சங்கடம், நாயைவிட மோசமான்னா இருக்கான் மனுஷன்!" என்று திகைத்தபோது, ஒரு பெண்ணின் நயமான குரல், அவன் நடந்து வருவது

போன்ற, 'ஜல் ஜல்' சத்தம். இரண்டும் அவன் காதுகளை எட்டின. அந்தத் திசையில் சட்டென்று நோக்கினான்.

கண்களில் தீப்பொறி பறக்க ஓர் ஆசாமி வந்தான்; நர்த்தனம் செய்வது போலவும், அபிநயம் பிடிப்பது போலவும் சேஷ்டைகளுடன் தளுக்காக ஒரு பதினாறு வயதுப்பெண் பின்தொடர்ந்தாள். அவள் அங்கங்களின் நெளிவையும், விரல்கள் சதா தாளம் போடுவதையும், விழிகள் உருளுவதையும் பார்த்து, பரத நாட்டியத்தில் மூழ்கிவிட்டு வந்திருக்கும் மங்கை இவள் என்று ஊகித்தான் நடராஜன்.

"பயிடவெள்ளு...! நட அப்பா!" என்று அதட்டினான் அந்த மனிதன்.

"மன்னிக்க வேணும். இங்கே ஜாகை ஏதாவது இருக்குமா என்று தெரியவேண்டும்."

"ஜாகையா! ஹூம்!"

"நான் ஊருக்குப் புதிசு. கொஞ்சம் தமிழிலே பேசினாப் புரியும்."

"எவுரு அய்யா நீ! ஏமி செபதாவனு? மாகு தெலுஸுனு!"

"நான் இந்த ஊருக்குப் புதிசு."

"இருந்துட்டுப் போயேன் ஓய்! இங்கே எங்கே வரே? புது ஆசாமினா நம்ம ஊட்டுக்குத்தான் வரணுமா? கெட் அவுட்!"

"நான் போயிடறேன். அதையே இந்த நாய் குரைத்து விட்ட அப்புறம் நீர் ஒரு தரம் குரைப்பானேன்! ஏதாவது ஒத்தாசையாக ஒரு வார்த்தை சொல்லுவீரோவென்று பார்த்தேன்."

"கெட் அவுட்! குக்கன விடு சேஸ்துனு!"

"இருங்க, ஸார்!"



"துஷ்ட குக்க!"

"ஒரே பேச்சு, ஸார்!"

"கடித்தால் வலிக்கும். பரிகெத்து! ஓடுடு நீ! அவிழ்த்து விட்டேனா!"

"நாயை அவிழ்த்துவிட்டாலும் ஒன்றுதான்! நீரே எழுந்து வந்தாலும் எனக்கு ஒன்றுதான்! அதற்கு ரெண்டு கால், ஒரு வால் அதிகப்படி; மற்றபடி உங்களுக்குள் வித்தியாசம் என்ன?" என்று கூறி நடராஜன் திரும்ப நினைத்தான்.

களுக்கென்று சிரித்தாள் நங்கை. "இந்த வீட்டில் ஜாகைக்கு இடம் இல்லை. கோடி வீட்டுக்கும் நேற்று ஒரு அம்மாள் வந்துவிட்டாங்க. நடு வீடு காலியிருக்கிறது. போங்க" என்றாள் அவள்.

"அதற்கு நான் யாரைக் கேட்கவேண்டும்?"

"புர்ர்ர்ர்...வள்! வள்! வள்!!" என்று குரைத்த நாயைப் பார்த்து அவள், "நீ குரைக்காதே டைகர்! உதைப்பேன்!!" என்று அடக்கிவிட்டு, "மேலத் தெருவிலே சுப்பரத்தின சாஸ்திரியைக் கேளுங்க!" என்றாள்.

"வெள்ளு வெள்ளு! வெள்ளு போ!" என்று முடித்தான் அவன்.

பொட்டைவெளியில் எரிக்கும் வெயிலில் நான்கு சொட்டு மழைத்துளிகள்போல் வந்த அந்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு வெளியே வந்தான் நடராஜன். அவனுக்கு 'ஆந்திரப் பிரபு' அவ்வளவு அவசரமாக விரட்டியதன் மர்மம் என்னவென்று புரியவில்லை. எதற்கும் பிற்பாடு இதுபற்றித் தீரவிசாரித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, சுப்பரத்தின சாஸ்திரி இருக்கும் மேலத் தெருவை விசாரித்துக் கொண்டு சென்றான். அங்கே சென்றதுமே சுப்பரத்தின சாஸ்திரியின் வீட்டையும் தெரிந்துகொண்டுவிட்டான்.

அதை அவரே கட்டினார் என்பதையும் பார்த்த மாத்திரத்தில் ஊகித்துக்கொள்ள முடிந்தது. ஒட்டகத்தின் முதுகைக ஞாபகமூட்டும் கூரையும், நம் கிராமத்து ரஸ்தாக்களை நினைவுபடுத்தும் திண்ணையும், நெளிந்த தூண்களும், சாய்ந்த சுவர்களும் எல்லாமாகச் சேர்ந்து நின்று ஒரு வீடுபோல் அளிக்கும் அற்புதக் காட்சியைச் சிறிது நேரம் நின்று வியந்துவிட்டு, உள்ளே போனால் தலைமேல் எதாவது விழுந்து வைக்குமோ என்ற அச்சத்தை மறைத்துக்கொண்டு வெளியே நின்றபடியே "ஸார்!" என்று இரு முறைகள் கூப்பிட்டான்.

"யார் அது?"

குரல் ஓர் அசரீரிபோல் கேட்டது. பட்டப்பகலில் பைசாசங்கள் பேசியிராதென்ற தைரியத்துடன் மறுபடி, "ஸார்! கொஞ்சம் வர முடியுமா?" என்றான்.

"யார் ஐயா நீ என்ன விசேஷம்?"

சுற்றிச்சுற்றிப் பார்த்தும் ஆள் தெரியாமல் போகவே "நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! சற்று என் முன் வரலாகாதா?" என்று கெஞ்சும் பாவனையில் அழைத்தான்.

"இதென்னடா ஓயாத தொந்தரையாகப் போயிற்று!" என்று அலுத்துக்கொண்டது மேற்படி குரல். பிறகு, "நகர்ந்துகொள்! வந்து தொலைக்கிறேன்!" என்று உத்தரவு போட்டது. இதுவரை கை வைத்து நின்று கொண்டிருந்த பன்னீர் மரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளவே, சரசரவென்று ஓர் உருவம் அதன் மேலிருந்து இறங்கி வந்தது.

"என்ன ஐயா கழுத்தறுப்பு! ஏன் இங்கே நிற்கிறீர்?"

"கழுத்தறுப்பு ஒன்றும் இல்லை. சாஸ்திரிகளைப் பார்க்க வந்தேன். உள்ளே போக பயமாயிருந்தது; இப்படியே நின்றேன்."



"என்ன பயம் உள்ளே! திருட வர்றவன்களுக்குன்னா ஐயா, பயம்?"

"இந்த வீட்டில் ஒருத்தன் திருட வந்துவிடுவானா? உள்ளே போய்விட்டால், திரும்பி வர வழி தெரிய வேண்டாமா?"

"என்னமோ எடக்காய்ப் பேசறீர்! வந்த காரியம் என்ன சீக்கிரம் சொல்லும்!"

"எனக்குச் சுப்பரத்தின சாஸ்திரிகளைப் பார்த்து விட்டுப் போகவேண்டும்."

"அவரைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர். விஷயம் என்ன? சீக்கிரம் ஆகட்டும்! எனக்குப் பட்டறையில் ஏகப்பட்ட வேலை கிடக்கு."

நடராஜன் சிந்தனை செய்தான். இவரை ஆத்திர மூட்டிக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ளாமல், 'காக்காய் பிடித்து' வெற்றி பெறுவதே சிலாக்கியமென்று மெள்ள, "நீங்கள் அபார வேலைகள் எல்லாம் செய்வீர்கள் என்று கேள்விப்பட்டேன். உங்களால் ஆகாத காரியம் ஒன்றுகூட இல்லையென்று எல்லாரும் சொல்கிறார்கள். அந்த மாதிரி பரோபகாரியாக இருக்கிறது எவ்வளவு உத்தமம் தெரியுமா?" என்றான்.

"ஹு! உத்தமமா! உனக்கென்ன தெரியும்! என் வேலையைப் பார்த்துவிட்டு கவர்மெண்ட்லே பெரிய என்ஜினீயர்களுக்கெல்லாம் பொறாமை! ஒரே வயித் தெரிச்சல்! உபயோக மத்தவன்கள் அத்தனை பேரும்!"

"ஆமா, ஸார், ஆமா! ஒரு மனுஷன் ஒரு புது விஷயத்தைச் சொன்னா, முன்னுக்குவர தாளா சிரமந்தான்!"

"யாருக்கு அய்யா முன்னுக்கு வரணும்! நான் வந்தா விடுத்து!"

"ஆமாம் ஆகிவிட்டது!"

"இந்த சிப்-இஞ்சினியர்கள், ஸர்கள், பூர்கள் எல்லாம் இருக்காங்களே, யாருக்காவது விவசாயத்தைப்பத்தி ஏதானும் தெரியுமா? நான் கேட்கிறேன்; இங்கே ஒருத்தன்; அவன் பேருகூட மறந்து போச்சு-பெரிய பட்டங்கள் வாங்கினவன்."

"பேர் கிடக்கிறது, சொல்லுங்கோ சேதியை!"

"என்னைப் பார்க்கவே மாட்டேன்னான். பயம்! பயம்! ஆணிமாதிரி கையிலே சரக்கு இருக்கே! நாலு கேள்வி கேட்டு மடக்கிவிடமாட்டேன்! முன்னடி அடிச்சுண்டு போயிட்டேன் உள்ளேயே!"

"பேஷ்! அப்படித்தான் பண்ணணும் நீங்கள் இந்த மரத்திலேருந்து இறங்கின வேகத்தைப் பார்த்தேன்! ஜன்னல் வழியாகக்கூடப் போயிடுவேளே!"

"பார்த்தான். உங்கள் பைல்களை வைச்சுட்டுப் போங்கோன்னான். மறுநாள் ஆசாமி ஊரைக் காலி பண்ணிண்டு போயிட்டான்."

"'பைல்'கள் என்ன ஆச்சு?"

"அதை வைச்சுண்டு உபயோகப்படுத்தி, பெரிய 'ஸ்கீம்'கள் ஆரம்பிக்கப் போறான். ஆனா, நம்ம 'ஸ்கீம்'னு ஒப்புக்க மாட்டான். சொன்னா அவன் 'ப்ரமோஷன்' வாயிலே மண் விழுமே! எப்படியோ பிழைச்சுப் போகட்டும், ஜனங்களுக்கு நன்மை ஏற்பட்டால் சரிதான்!"

"நீங்கள் பெருந்தன்மையாகப் போறவர்னு கேள்விப்பட்டேன்."

"நான் மட்டுமில்லை. என் குடும்பமே அப்படித்தான். என் பையன் இருக்கிறான், அவனும் அப்படித்தான்."

"பின்னே எப்படி இருக்க முடியும்? நான் வந்த காரியத்தைச் சொல்லட்டுமா? ஒரு ஜாகை வேணும் எனக்கு; விசாரிச்சேன்; மூணு வீட்டில் ரெண்டு வீடு



கொடுத்துவிட்டீர்களாம். ஒன்று பாக்கியிருக்கிறதாம். எனக்கு வேண்டியது ஒரே ஒரு 'ரூம்.'"

"உர்ம்ம்ம்."

"தெலுங்கர் கொடுக்கமாட்டார்; கொடுத்தாலும் வேண்டியதில்லை."

"இன்னொரு வீடு கிடைக்காது. அதிலே இங்கே வந்திருக்கானே, சினிமா 'ஸ்டார்' அவன் இருக்கிறான்; நேற்றைக்கே சாவியைக் கொடுத்துட்டேன்."

"பின் நடு வீடு?"

"அதைத்தான் யோசிக்கிறேன். மதுரையிலேருந்து ஒரு குடும்பம் ஸ்வாமி தரிசனத்துக்கு வருகிறாளாம். என் ஷெட்டகர் பேசியிருக்கிறார். அநேகமாக அவாள் நாளைக்கு வந்து விடுவார்கள் முடியுமானால்."

நடராஜன் மனதுக்குள் ஒரு புதிய உண்மை உதயமாகிக் கொண்டிருந்தது. 'மதுரையிலிருந்து வரும் குடும்பம் என்றால், ஜானகியின் குடும்பமாக இருக்கலாம். அநேகமாக அதுவேதான்! அவர்கள் வருமுன்பே இந்த வீட்டிற்குள் ஒருவாசல் அறையைப் பிடித்துக்கொண்டால் எவ்வளவு சௌகரியம்!

"'முடியுமானால்' என்று எனக்குச் சொல்லக்கூடாது. எப்படியாவது."

"நீ பார்த்தால் நல்ல பிள்ளையாக இருக்கிறாய். எனக்குக் கெட்டிக்காரப் பையன்கள் என்றாலே ரொம்பப் பிடிக்கும்!"

"நான் எந்தனை வாடகை வேண்டுமானாலும் தருகிறேன்."

"அதற்கென்ன இப்போ! சற்று இரு; ஷெட்டகர் வந்துவிடுவார். இப்போதே 'ஸெட்டில்' செய்துவிடுகிறேன்! ஏன், அதோ அவரே வந்துவிட்டார்!"

சுமார் ஐம்பது கஜ தூரத்துக்கப்பால் குறிப்பிட்ட மனிதர் ஒன்றை ஊன்றிக்கொண்டும், ஏதோ உச்சரித்துக் கொண்டும் வந்துகொண்டிருந்தார். அவர் நெருங்க நெருங்க பலத்த சந்தேகமும் திகிலும் நடராஜனுக்கு ஏற்பட்டன.

"அத்திம்பேர்! தரிசனம் ஆயிற்றா?" என்று கேட்டார் சாஸ்திரி.

"பேஷாக ஆச்சு; திவ்யமாக ஆச்சு! திருப்தியாக ஆச்சு; பிரபு பிரம்மானந்தமாயிருக்கிறான்!"

"நீங்கள் வர சமயம்னுதான் இவரைக்கூட இருக்கச் சொன்னேன்!"

"எவரை?" அவர் திரும்பி முதல் தடவையாக நடராஜனைப் பார்த்தார். அந்தப் பார்வை அவனை ஊடுருவிச் சித்திரவதை செய்தது.

"இவருக்கு ஒரு ஜாகை வேணுமாம்; வந்து கேட்டார். உடனே..."

"கிடையாது என்று சொல்லிப் போகச் சொல்லும்! என்ன?"

"நல்ல மனுஷர் ஆச்சே..."

"மண்ணாங்கட்டி மனுஷர்! இவனா நல்ல மனுஷன்! என்ன? பேத்தல்! சுத்த கயவாளிப் பயல்! என்ன?" கிழவருக்கு மேல்-மூச்சு கீழ்-மூச்சு வாங்கியது.

சாஸ்திரி விழித்தார். "இவரை உங்களுக்கு முன்னால் தெரியுமா?"

"ஹ! இவனைத் தெரிந்துகொண்டால் பாபம் என்கிறேன்! என்ன?" போகச் சொல்லு, ஸ்வாமி தரிசனம் பண்ணிவிட்டு! என்ன?"

இனியும் பேசாமல் இருக்கிறது சரி அல்லவென்று நடராஜன், "ஸார்! ரொம்பக் கோபிக்கிறீர்களே! நான் உங்களை என்ன சொல்லிவிட்டேன்?" என்றான்.



"ஹம்! என்னை அவமானப்படுத்தினாய்! ரொ-ம்-ப அவமானப்படுத்தினாய். நான் யார்? ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்திரார். ஒரு ஜில்லாவை 'கமாண்ட்' செய்தவன்! ஏய், என்ன?"

"நான் அதைத் தெரிந்து கொள்ளாமல் போனேன்; பிசகு, மாமா!"

"தாத்தா என்றாய்டா! தாத்தாவுக்குப் பைத்தியம் என்றாய்! என்ன! அத்தனை பேரும் சிரிச்சான்கள்டா!"

"அப்போ தெரியாது என்கிறேன். நம்ப சாஸ்திரியாருக்கு ஷட்டகர் என்றுகூடத் தெரியாது."

"இப்போ தெரிஞ்சுக்கோ!"

"தெரிஞ்சுண்டுட்டேன்!"

"தெரிஞ்சுண்டால், உடனே போயிடு வெளியே! என்ன?"

இவருடன் மேலும் பேசுவதில் உபயோகமில்லை என்று கண்ட நடராஜன் சாஸ்திரி பக்கம் திரும்பினான். அதற்குள் நாகநாதய்யரே, "அடே சுப்பரத்தினம்! இவனுக்கு அங்குலப் இடம் கொடுத்தாயோ, நான் போகிறேன்; என்ன?" என்றார்.

"நீ போயிரு, அப்பா!" என்றார் சாஸ்திரி நடராஜனைப் பார்த்து.

"இடம் தருவதாகச் சொன்னீங்களே!"

"சொன்னேன்; இப்பவும் இல்லை என்கவில்லை. என் ஷட்டகரை நீ ரயிலில் அவமானப்படுத்தினப்புறம் எப்படிக் கொடுக்கமுடியும்? நீ புத்திசாலி என்று நினைத்தேன்..."

"என்ன, இவன் போறானா என்ன?"—குதிக்கிறார் கிழவர்.

மறுபடி ரஸ்தாவை அடைந்தான் நடராஜன். உலகம் இருண்டு தென்பட்டது. முருகன் க்ஷேத்திரத்திற்கு

அவன் வந்துவிட்டான். ஆனால், எங்கே போனாலும் விரட்டுகிறார்களே!

திடீரெனப் புழுதியில் பளிச்சென்றது. கண்ணாடித் துண்டாக இருக்கும் என்று அசிரத்தையாக எடுத்தான். அது ஒரு வைரம் பதித்த மூக்குத்தி. அதுவரை அவன் அறியாத ஒரு விஷயத்தை அது விரைவில் வெட்ட வெளிச்சமாக்கும் என்று தெரியாமலே பையில் அதைப் போட்டுக் கொண்டான்.

## 4

"தன் காரியத்தை விட்டாயினும் பிறர் காரியத்தை ஸாதிப்பவன் ஸஜ்ஜனன்; தன் காரியத்துக்கும் விரோதமின்றி அயலார் காரியத்தைச் சாதிப்பவன் மத்யமன்; தன் காரியத்துக்காகப் பிறர் காரியத்தைக் கெடுப்பவன் மானுஷ ராக்ஷஸன்"—தனக்கும் பிரயோசனமின்றி அந்நியன் காரியத்தையும் வீணாக்குபவனை என்னவென்று சொல்ல!"

—உசனஸ் (நீதி வாக்கியம்)

திருச்செந்தூருக்குப் புதிதாகப் போய்வரும் ஆஸ்திகர்களுக்குத் தாங்கள் வீடு கட்டும்போது அதற்கு 'ஷண்முக விலாஸம்' என்று பெயர் வைக்க வேண்டும் என்ற ஓர் அவா ஏற்படுமானால் அதில் ஆச்சர்யப் படுவதற்கொன்றுமே இல்லை. அந்த க்ஷேத்திரத்தின் ஆலயத்தினுள் இருக்கும் 'ஷண்முக விலாஸம்' என்ற கல்யாண கூடத்தில் உட்கார்ந்து, குளிர்ச்சி மிகுந்த கடற்காற்றையும் தெய்வ அருளையும் ஏககாலத்தில் நுகரும்போது, உள்ளம் நிர்மலமாக நிஷ்கவலையாக, சாந்தம் நிரம்பியிருப்பது சகஜந்தான்.



நடராஜனுக்கு இந்த 'ஷண்முக விலாஸம்' விச்ராந்தியான இடமாக அமைந்தது; இது தவிர, தாற்காலிகமாக அவன் இருப்பிடம் கோவிலுக்கு வெளியே இருந்த 'ஸ்ரீ ஷண்முக விலாஸ் காப்பி அண்டு சாப்பாடு கிளப்'பாக விளங்கியது. அதில் மாடி அறை ஒன்றை வாடகை பேசி வைத்துக்கொண்டுதான் அவன் ஜானகியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சுப்பாசாரியினால் விரட்டப்பட்ட மறுதினம் காலை தன் அறையைவிட்டு வெளிப்பட்டுக் காப்பி சாப்பிட ஹாலுக்கு வந்தவன் ஒரு மேஜையைச் சுற்றி மூன்று பேர்கள் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு கொம்மாளம் அடித்துக்கொண்டும் இருப்பதைக் கவனித்தான். அவர்கள் யார் என்று கவனித்தபோது, அந்த மூவரில் ஒருவன் அவனுடைய காலேஜில் அவன் அடிக்கடி சந்தித்திருக்கும் சந்துரு என்பவன்தான் என்பதை உடனே தெரிந்து கொண்டான்.

சந்துருவைப் போன்ற பிரகிருதிகள் ஊர் தவறாமல் இருக்கிறது உண்டு. ஒரு கவலையும் இல்லாதவர்கள் போலும்; புகையிலை போட்டுத் துப்புவதும் கல்விப் பேசுவதும் ஊர் திரிவதுமே செய்துகொண்டிருந்தால் கௌரவம் வந்துவிடும் என்றும் நடந்துகொள்ளும் இனத்தைச் சேர்ந்தவன். காலேஜில் அவன் சாகக்களும் அவனுக்கேற்றாற்போல் கூடிவிடவே காலேஜில் 'சந்துரு சார் கம்பெனி' வருகிறதென்றால் 'கட்சிப்' என்று ஒதுங்குவார்கள் துஷ்டனைக் கண்டால் உலகம் ஒதுங்குகிறதும், 'அது பயப்படுகிறது' என்று துஷ்டன் எண்ணிக்கொண்டு கொக்கரிக்கிறதும் வழக்கமாக நடப்பதுதானே? காலேஜில் நடராஜன் ஒரு காலத்திலும் சந்துருவை நெருங்கினவன் இல்லை; அதற்கேற்ற சந்தர்ப்பமும் அவனுக்கு ஏற்பட்டதில்லை. இப்போது பக்கத்து பெஞ்சியில், ஒரு ஸ்கிரீன்' மறைவில்

உட்கார்ந்துகொண்டிருந்தவாறு அவர்கள் பேச்சை மட்டும் கவனித்தான்.

"ஐயா! இப்படி எனக்கு ரெண்டு இட்லி போடும்! மெட்ராஸிலே சாப்பிடணும் ரைஸ்-இட்லி வெங்காய கொத்ஸோடே! த்ஸொ! த்ஸொ! தரித்திரம் பிடித்த ஊர் ஐயா இது!" என்றான் சந்துரு.

"அங்கெல்லாம் பஸ்ட்கிளாஸ்! காசைக் கொடுத்தால் பண்டம் கிடைக்கிறது பாருங்கள்!" என்றான் சகா ஒருவன்.

"அங்கே என்னைக் கண்டாலே-ஸ்பெஷல்' மரியாதை! ஒரு நாள் ராத்திரி ஒரு மணி; நானும் நாலைஞ்சு 'பிரெண்ட்' ஸுமா 'வைகுண்டா கபே'க்குப் போனோம். நமக்காகப் போட்டுக் கொடுத்தார் பூரி-சட்னி, மெட்ராஸ் மெட்ராஸ்தான். அதை விட்டுவர மனசே இல்லையே"'

"புதுத் தெருவுக்குப் புதிசா ஒரு 'ஸைன்-ஸ்டார்' வந்திருக்காப்பிலேயிருக்கே, பார்த்திருப்பியே!"

"ஐய! ஜொலிப்பெல்லாம் போன 'ஸ்டார்' என்ன விஷயம் இந்த ஊர் பார்த்து வந்திருக்குன்னு தெரியல்லே! ஸ்வாமி தரிசனம், பிரார்த்தனை, வேண்டுதல் என்கிறாளாம்! சுத்த ஹம்பக்!"

"நேத்திக்கு மூக்குத்தியைக் காணோம்னு ஒரே அமர்க்களம் பண்ணியிருக்காள் கோவில் வாசலிலே, பார்க்கணும்!"

"அதுவும் ஒரு 'ஸ்டன்ட்' வேலை; நடிப்பு; நடிப்பு! விளம்பரம் கிடைக்கும்னு பார்க்கிறாள். நிஜமா மூக்குத்தி கெட்டுப்போயிருந்தால் இன்னும் என்னவெல்லாம் செய்திருக்க மாட்டாள்!"

நடராஜன் தன் சட்டைப்பையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அதனுள் மூக்குத்தி இருந்தது



பத்திரமாக அப்படியானால், அந்த நடிகையைக் கண்டு பண்டத்தைச் சேர்ப்பித்து விடவேண்டியதுதான். நடராஜன் மேலும் கவனித்தான் சம்பாஷணையை.

"அய்யர்! முறுகலா மூணு தோசை! ஜல்தி!" என்றான் சகா.

"அதுக்கு மூணாம் வீட்டிலே ஒரு புது ஆசாமி வந்திருக்கே, பார்த்தியா?" என்று கேட்டான் இன்னொரு சகா.

"ஆந்திரவாடுதானே! சதிர்க்காரப் பெண்ணோடே உம்!"

"அதுலேதான்! நம்ம கோவில்லே நடக்குமா அரங்கேற்றுபடி? எதிர்பார்க்கலாமா?"

"நீ நினைச்சுக்கிண்டிரு இரகசியம் நம்ம தகப்பனார் கண்டு பிடிச்சுட்டார். பெண் இருக்குதே, அதை நல்ல நாடகக் கம்பெனியிலே தள்ளலாம்னு அவன் பார்க்கிறான்; ஆனா, அந்தப் பெண் யார்கூடவோ பம்பாய் போகத் தயாராகிவிட்டது, இவனுக்குத் தெரியாமயே..."

"அதைத் தெரிஞ்சுகொண்டுவிட்டானாக்கும் இந்த ஆந்திரவாடு?"

"ஆமாம், அதனாலேதான் அந்த ஆள் கண்ணிலே படாமே, இங்கே வந்துட்டான் பெண்ணையும் அழைத்துக் கொண்டு. இதிலே வேடிக்கை என்னன்னா, அந்த ஆசாமியை ஆந்திரவாடு கண்ணாலே கண்டதில்லை. ஆகையினாலே அவன் வீட்டுக்குள்ளே யார் காலடி வைச்சாலும், சந்தேகத்தின் மேலே நாயை அவிழ்த்து விடுவேன்கிறான்! எப்படி?"

"தமாஷ்டா! ஹஹ்ஹா!"

"அந்த நாய் அவர்கள் வீட்டுப் பால்காரனைக் கடிச்சுட்டுது, தெரியுமா? அதுலேருந்து ஒருத்தன் நெருங்கியதில்லைன்னா!"

"வராங்க பாருங்களேன் ஊருக்கு! நடுவூட்டுக்கு எப்படி வரப்போறாங்களா?"

சந்துரு கையை மேஜைமீது ஒரு குத்துக் குத்தினான். அதிலிருந்த பீங்கான்கள் கலகலத்தன.

"அந்த வீட்டுக்கு வரவங்களை உத்தேசித்துத்தான் நானே இந்த லீவுக்கு இங்கே வந்திருக்கிறேன்! எங்க அப்பா கடுதாசி போட்டிருந்தார். வீடு கொஞ்சம் பழுதாயிருக்கு, ரிப்பேர் செய்யணும்னு. இப்ப முடியாதுன்னு சொல்லிட்டேனே! அப்புறம் பெரியப்பா தான் 'ஒரு பெண்ணு வரதுடா, உனக்காகப் பார்த் திருக்கிறேன்; கட்டாயம் வா' என்றார். நமக்குப் பிடிச்ச விஷயமாச்சே?"

"ஹஹ்ஹா! ரொம்ப பிடிச்ச விஷயம்!" என்றார்கள் இருவரும்.

"வர பெண் நான் பார்த்திருக்கிறதுதான் 11-45 வண்டியிலே வரதே! மெட்றாஸிலே படிக்கிற பெண். இனி கொஞ்சும் பேரு, ஜானகி! அநேகமாக 'மேரேஜ் ஸெட்டில்ட்'னு வைச்சுக்க! நம்ம பெரியப்பா எடுத்த காரியம் கடைசிவரை பார்த்துடுவார்."

"தெரியுமே! கடைசிவரை பார்த்துடுவார்."

சகாக்கள் இருவரும் சந்துருவின் கணக்கில் சாப்பிடுபவர்கள் என்று முடிவு கட்டிக்கொண்ட நடராஜனின் மனம் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தது. சென்னையில் படித்த இந்தப் போக்கிரிச் சந்துரு, திருநெல்வேலிப் பக்கம் என்று அவன் அறிந்திருந்தானேயொழிய, திருச்செந்தூரில் இவ்வளவு நெருக்கத்தில் வருவான் என்று எதிர்பார்த்தவன் இல்லை. அதுவும் சுப்பாச்சாரியின் பிள்ளையாகவா! அந்த மனுஷனின் கருமித்தனம் எங்கே, இவனுடைய படாடோபம் எங்கே? அப்படியானால், நடராஜனுடன் ரயிலில் சண்டை போட்டு, சுப்பாச்சாரியின் வீட்டிலிருந்து



அவனை விரட்டிய கிழவர் இவன் பெரியப்பாவா! அவரேதான் ஜானகிக்காக வீடும் பார்க்கிறார்; வரனும் பார்த்து விட்டார்! ஓஹோஹோ!

சந்துரு ஜானகிக்கு வரனா? காலாடியாகத் திரியும் ஒருவன் உத்தமமான ஸ்திரீ ரத்தினத்தின் கைபிடிப்பதா? எத்தனை அடாத செயல்! வந்த சுவடு தெரியாமல், மேற்கொண்டு அந்தப் பேச்சைக் கேட்கவும் இஷ்டப் படாமல் எழுந்து ரயிலடியைப் போயடைந்தான். "11-45 வண்டியிலே ஜானகி வருகிறாள்!"

பதினொன்று நாற்பத்தைந்துக்குத் திருச்செந்தூருக்கு வந்ததும் ஷட்டில் வண்டி, முக்கியமாக ஜானகியையும் அவள் தமக்கை, தமக்கை புருஷனையும், நாகநாதய்யரையும் ஏழெட்டு டிரங்குகளையும் பத்துப் பன்னிரண்டு இதர பிரயாணிகளையும் இறக்கிவிட்டுத் தன் முதுகை நிமிர்த்திக்கொண்டது. இரண்டு ஸ்டேஷன்கள் எதிர்கொண்டு போய் இருந்து நாகநாதய்யர் அவர்களோடு கூடவே திரும்பியிருக்கிறார். "ஜாகை யெல்லாம் பஸ்ட்கிளாஸ்! என்ன? யோசனையே வேண்டாம்! என்ன? அது என் கவலை இல்லையோ, என்ன?"

"நாங்களும் கவலைப்படவில்லை, மாமா!" என்றாள் மங்களம். பிறகு ஜகதீசனைப் பார்த்து, "நான் என்ன சொன்னேன் உங்கள் கிட்டே நேத்து? அதை இவர்கிட்டச் சொல்லுங்கோ!" என்று அதட்டினாள்.

சுவாரஸ்யமாக நகத்தைக் கடித்துக்கொண்டு ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த ஜகதீசனும், "ஆமாம்! நீ அதையேதான் சொன்னாய். அது சரியாக இருக்கிறது" என்று ஒப்புக்கொண்டான். இப்படி ஒருமிக்க ஆமோதிப்பதனால் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்திருந்தால் படு ஏமாற்றமே அடைந் திருப்பான்.

மங்களம் வெடுக்கென்று, "ஆமாம் இல்லாவிட்டால் உங்கள்கிட்டச் சொன்னால் உடனே நடந்துவிடுமாக்கும்!" என்று கேட்கவே, ஜகதீசன், 'மௌனமாக இருந்து விடுவதே நாலு பேர் நடுவில் கௌரவம்' என்ற பழைய அநுபவப்படி பேசாமல் ஒதுங்கிக் கொண்டான்.

"அத்திம்பேரை வெறுமே சண்டைக்கு இழுப்பதுதான் அக்காவுக்கு வேலை!" என்று ஜானகி கூறிவிட்டு, இறக்கி வைத்த சாமான்களை எண்ணிப் பார்த்தாள்.

"ஜகதீசா! இவர்களை நான் வெளியில் அழைத்துக் கொண்டுபோய் முன்னால் வண்டியில் ஏற்றிக்கொண்டிருக்கிறேன். பெட்டிகளையெல்லாம் ஒரு தனி வண்டி பேசி ஏற்றிக்கொண்டு வந்துவிடேன்!" என்றார் நாகநாதய்யர். இவர்கள் எப்படியாவது நம்மைவிட்டு நகர்ந்தால் போதும் என்ற உணர்ச்சி தோன்ற இடுப்பில் கை வைத்துக்கொண்டு நிமிர்ந்தான் ஜகதீசன்.

மூட்டைகளே இல்லாத சமயத்தில் ஆறு ஏழு பேர்களாக வந்து சூழ்ந்துகொண்டு, "சாமி, சாமி!" என்று கூச்சல் போடும் போர்ட்டர் வர்க்கம், இன்று ஏனோ பதுங்கிக்கொண்டிருந்தது. ஜகதீசன் தன்னந் தனியாக விடப்பட்டவன் சுற்றும் முற்றும் பார்த்தான். சுமார் ஏழு வயதுள்ள ஒரு பயல் மட்டும் ரயில்—வேலிக்கு அப்பால் நின்று, 'சாமி! மூட்டை தூக்கணுமா?" என்று விசாரித்தான்.

"என்னடா வேணும்?" என்றான் ஜகதீசன்.

"ஒரு ரூபா கொடுங்க!" என்றான் பயல்.

"ஒரு ரூபாயை உன்னால் தூக்கமுடியுமாடா?" என்று கேட்டுக்கொண்டே முன்னால் வந்தான் நடராஜன். இதுவரை அவன் மறைவில் நின்று கவனித்த விஷயங்களிலிருந்து, 'இந்த ஸாத்விகமான ஆத்மா மங்களத்தின் புருஷனாகத்தான் இருந்தாக வேண்டும்' என்று ஊகித்துக்கொண்டிருந்தான்.



"ஆமாம், ஸார்! இந்தப் பயலால் இதைத் தூக்க முடியுமா, கேளுங்கள்!" என்று இளித்தான் ஜகதீசன்.

"அவன் கிடக்கிறான்! நான் ஒத்தாசை செய்கிறேன், ஸார்! பெரிய பெட்டிகள் ஒன்றும் இல்லையே!" என்று நடராஜன் ஒரு பெட்டியை நகர்த்திப் பார்த்தான். ஒரு யானையின் கனம் இருக்குமென்று நிதானித்து, "ஏன் ஸார்! எங்கேயிருந்து வருகிறீர்கள் நீங்கள்?" என்று விசாரித்தான்

"மதுரை, ஸார்! இது மகாக்ஷேத்திரம் இல்லையா? ஒரு பதினைந்து நாள் 'ஹால்ட்' போடலாம்னு முன்னாலே போனவர்கள் என் 'ஒய்ப்', மச்சினி'."

"அந்தப் பெ-ரி-ய-வ-ர்?"

"அவர் தூரத்து பந்து ரொம்ப நல்ல மனுஷர்!"

"பார்த்தாலே தெரிகிறதே! உங்களிடம் மூட்டையைத் தள்ளிவிட்டார்! தூக்குங்கள், சொல்றேன்."

ஸ்டேஷன் தாழ்வாரத்தில் இருவருமாகச் சாமான்களை வைத்தபோது, நாகநாதய்யர் பெண்டுகளுடன் வண்டியில் போய்க்கொண்டிருந்தார். ஜகதீசனுக்கு ஒரு வண்டி அமர்த்திக் கொடுத்துவிட்டு, நடராஜன் விடை பெற்றுக்கொள்ளும் சமயம், "ரொம்ப தாங்ஸ், மிஸ்டர்! உங்களுக்கு இந்த ஊர்தானே?" என்று விசாரித்தான் ஜகதீசன்.

"இந்த ஊர் இல்லை. உங்கள் மாதிரியே எனக்கும் கொஞ்ச நாளைக்குத் தற்காலமாக இந்த ஊர்தான்...!"

"ஸ்வாமி தரிசனமோ?"

"ஆமாம்."

"ஏதானும் பிரார்த்தனையாக்கும்?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

"அப்படியானால் உங்களை அடிக்கடி சந்திக்கலாம் அல்லவா?"

"பேஷாக! ஆனந்தமாக!"

"நம் ஜாகை கிழப்புதுத்தெரு! அந்தப்பக்கம் வந்தால்..."

"கட்டாயம்! நானே ஒரு ஜாகை பார்த்துக்கொண்டிருக்கிறேன் அங்கேதான்!" வண்டி நகர்ந்தது. நடராஜன் ஹோட்டலை நோக்கித் திருஷ்டியைத் திருப்பினான்.

சாப்பாட்டுக்குப் பிறகு வெகுநேரம் நடராஜன் மனம் நிலை கொள்ளாமல் தத்தளித்தது. சந்துருவைப் பார்த்தது முதலே சிறு அச்சம் ஏற்பட்டிருந்தது. காலேஜில் நடராஜனுக்கும் ஜானகிக்கும் பரிச்சயம் உண்டென்பது அவனுக்குத் தெரியாமல் இருக்காது. அவர் பின்னால் இப்போது தான் வந்திருப்பதையும் ஊகிக்க அவனுக்கு வெகுநேரம் பிடிக்காது. ஒரு போதில்லா விட்டால் ஒரு போது அவனுடன் கட்டாயம் விரோதம் வந்தே தீரவேண்டும். ஆனால், அது எவ்வளவு அருகில் இருந்த தென்பதை நடராஜன் அப்போது காணவில்லை!

மாலை நான்கு மணிக்குச் சமுத்திரக் காற்று 'ஷண்முகவிலாஸ்'த்தின் குறுக்கே ஜிலுஜிலுவென்று அடிக்கிறது வழக்கம். அந்த வழக்கப்படியே அன்றும் அடித்தது. ஆனால், நடராஜன் மேல் அது பட்டுங்கூட அவனது உள்ளக்கொதிப்பைத் தணிக்க முடியவில்லை. நாகநாதய்யர் ஒரு விரோதி; மங்களம் கிட்டத்தட்ட அதே அளவுக்கு விரோதபாவம் கொண்டிருக்கவேண்டும் சுப்பாச்சாரிக்குக் கோபமேதுமில்லையென்றாலும், சிநேகம் இல்லை. இதோ சந்துரு வேறு முளைத்து விட்டான். அவன்பால் இனிய மனம் கொண்டவள் ஜானகி ஒருத்திதான். ஆனால், அவள் செய்யக்கூடியது என்ன?

ஆடி அசைந்துகொண்டு ஒரு ஸ்திரீயின் கனத்த உருவம் தென்பட்டது. வைரங்கள் உடலில் ஜ்வலிக்க அவனுடன் சென்னையிலிருந்து பிரயாணமான அதே ஸ்திரீதான் அவள். அர்ச்சனைக்குத்தேங்காய் பழத்



தட்டுடன் வந்தவள், நடராஜனைத் தாண்டும்போது எங்கேயோ பார்த்த ஞாபகத்துடன் தயங்கினாள். பிறகு தன் உதடுகளைத் திறந்து ஒரு புன்னகைகூடச் செய்தாள். நடராஜன் எழுந்து நிற்கவே, "எப்பவந்தீங்க, சாமி!" என்றாள்.

"நான் வந்து இரண்டு நாளாயிற்று. இடந்தான் அகப்படவில்லை. பார்த்துக்கொண்டிருக்கிறேன்"

"நமக்குக் கிளப் புதுத் தெருவிலே தனி வீடு கெடைச்சப் போச்சுங்க! ஏன ஐயா, உங்க மனுசங்களெல்லாந்தான் அடுத்த விட்டுக்கு வந்து இறங்கிவிட்டாங்களே!"

நடராஜன் சிரித்து, "அவங்கள் எங்க மனுஷங்கள் இல்லை. எனக்கு அவர்களை நன்றாகக்கூடத் தெரியாது. அப்படியானால், நீங்கள்தான் அந்தத்தனி வீடு எடுத்தவங்களா?"

"ஆமாம்!"

"அப்படியானால், உங்களுடைய மூக்குத்தி நேற்றுத் தான் காணாமல் போயிருக்கிறதா?"

"ஆமாமுங்க; உங்களுக்கெப்படித் தெரியும் அது?"

"அதுவா! அந்த மூக்குத்தி என் கையிலே அகப்பட்டதால் தெரியும்! மேலத் தெருவில் நேற்றுக்கிடந்து அகப்பட்டது" என்று தன் சட்டைப்பையிலிருந்து எடுத்து அதைக்கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டபோது அவள் முகத்தில் தென்பட்ட மலர்ச்சி அவன் மனத்தைக் குளிர வைத்தது. "நீங்க நல்லாயிருப்பீங்க. இந்தக் காலத்திலே யோக்கியமா எங்கே இருக்கிறாங்க! ஏதோ சிலபேரு இருக்கக்கொண்டுதானுங்க நிறைய மழை பெய்யுது. அதோ அந்த முருகனை நான் நம்பிட்டேன். இதோ கொண்ணாந்து கையிலே சேர்ப்பிச்சுட்டாரு" என்றாள் உணர்ச்சியுடன். பிறகு பேச்சை மாற்றி, "ஆமா! உங்களை ஒண்ணு கேட்கிறேன்: அவங்கதான்

உங்க மனுஷங்க இல்லைன்னு சொல்றீங்களே! அந்தப் பொண்ணு உங்க கைப்பெட்டியை எடுத்துக்கிட்டுதே! அது ஏன்?'' என்றான் அவன்.

''அதைக் கேட்கவேணுமென்று நானே நினைத்தேன். நான் திண்டுக்கல்லில் தவறவிட்டேன் ரயிலை. அந்தப் பெட்டி அப்புறம் என்ன ஆச்சு?''

''அந்தப் பெண்ணுதான் ஒரு கிளவர்கிட்டே கொடுத்து அனுப்பிச்சுதுங்களே. 'நீ கொண்டுபோ' நான் திருச்செந்தூரிலே வந்து எடுத்துக்கிறேன்! அப்படின்னு சொல்லிச்சுங்க. ஆனா அவரை நான் நம்ப மாட்டேன்: திருட்டுக் கிளவரு அவரு!''

நடராஜன் சிரித்து, ''ஏன், என்ன செய்தார் அவர்?'' என்று கேட்டான்.

''பிறத்தியார் பெட்டியைக் குடைஞ்சு தன்றதுன்னா கை கூசாதுங்களா? வழியெல்லாம் அதைத் திறக்கிறதும், 'என்ன! என்ன!' இங்கிறதும், மறுபடி திறக்கிறதும் பார்க்கிறதும் குதிக்கிறதுமாகவே வந்தாருங்க அந்தக் கிளவரு!''

''ஐயையோ! அந்தக்கிழவரா?''

''ஆமாமுங்க! நான்தான் பார்த்துக்கிட்டே வர்றேனே!''

''நீங்கள் யார் என்று இன்னம் தெரியவில்லையே!''

அவன் முகத்தில் இதுகாறும் இல்லாத நாண மெல்லாம் வந்துவிட்டது. ''நீங்கள் மிஸ் ஜகம்னு கேள்விப்பட்டிருக்கிங்களோ? நான் 'பிரளயம்'ங்கிற படத்திலே கடைசியில் நடிச்சிருக்கேன்:''

''ஓஹோ! தெரிந்துகொண்டேன்'' என்றான் நடராஜன்.

''அந்தப் பொண்ணு தங்கமான பொண்ணுங்க முகத்திலே அருள் இருக்குதே! அதே வார்த்தை, அந்தப்



பெண்கூட வந்தாங்களே தமக்கை, அவங்களைபத்தி நான் சொல்லமாட்டேன். ஆள் அகப்பிட்டா மூட்டைப் பூச்சி கணக்காகடிச்சுப்பிடுவா அவள்!''

எந்த க்ஷணத்தில் மங்களத்தைப்பற்றிப் பேச்சு நடந்ததோ, அப்போது அவளே கோயிலில் பிரஸன்ன மாகியிருந்தாள்! இவர்கள் பேசுவதைத் தூரவிருந்த படியே கவனித்துவிட்டு, தனக்குத்தானே ஏதோ தீர்மானம் செய்துகொண்டு அகன்றாள். தாங்கள் கவனிக்கப்பட்டதை அறியாமல் நடராஜனும் வைரவதி யும் பிரிந்து சென்றார்கள்.

செந்தில் ஆண்டவனுக்கு அன்புடன் மாலை போடும் அழகான கடற்கரையைக் கண்டு விட்டவர்களுக்கு எழுந்து வர மனம் வரவில்லையென்றால், அது எவருக்கும் ஏற்பட்ட புதிய அநுபவம் அல்ல. விரிந்த கடற்பரப்பின் மேல் குளுமையான காற்றடித்தது. பல்வரிசை காட்டிக் கைகொட்டிக் ஆர்ப்பரிப்பது போல் சமுத்திர அலைகள் ஓயாது எழும்புவதும் குனிவதுமாக இருந்தன. அந்த மனோகரமான வேளையில்தான் நடராஜன், வருத்தும் மனத்துடன் கடற்கரையில் உலாவினான். அவன் இவை எதையும் கவனிக்கவில்லை; இவ்வளவுக்கும் மேலாகக் கடற்கரையில் ஜனங்களின் குதூகலத்துக்குக் காரணமாக நடந்து கொண்டிருந்த ஒரு சம்பவத்தையும் கவனிக்க வில்லை. ஏககாலத்தில் பலபேர் ஓடியும் கூச்சலிட்டும் செய்யும் சப்தம் கேட்ட பின்புதான், தனது ஏகாந்த நிஷ்டை கலைந்து நோக்கினான்.

சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒருவர் காகிதக்கட்டை வைத்துக்கொண்டு படித்திருக்கிறார். ஏதோ ஒரு சமயத்தில் தம்மை மறந்து கையை அகற்றி யிருக்கவே, மேல்புறமாக இருந்த சில காகிதங்கள் காற்றினால் அடித்துக்கொண்டு செல்லப்பட்டன. அவர் பதறிப்போய், கையிலிருந்த கட்டை அவசரமாகக் கீழே வைத்துவிட்டு, பறந்து செல்லும் காகிதங்களைச் சேகரிக்க

முயன்றபோது, கீழே வைக்கப்பட்ட கட்டுக் காகிதங்கள் போக்கிரிக் காற்றின் சுழலில் சிக்குண்டு, மூலைக் கொன்றாக ஓடத் தொடங்கிவிட்டன.

கூடியிருந்த ஜனங்கள் இந்தத் தமாஷை ரஸிப்பதும், ஓடும் காகிதங்களைத் துரத்திப் பிடிப்பதுமாக ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் பெரியவர் மிகுந்த சிரமத்துடன் நின்று குத்திக் காளைபோல் பாய்வதும், பிடிப்பதும், நிமிர்வதும், பெருமூச்சு விடுவதுமாக இருந்தார். கடற்கரை 'சபை'யோர்களை இன்புற்றிருக்கச் செய்வதே நோக்கம்போல், வாயு பகவானும் குரங்குச் சேஷ்டைகளில் இறங்கி, காகிதங்களைப் புரட்டிச் சுருட்டி உருட்டி அவரை அதிகம் வாட்டிக்கொண்டிருந்தார்.

நடராஜன் ஒரே கணத்தில் நடந்ததை அறிந்து கொண்டதும், அத்தனை ஜனங்களுடைய தமாஷுக்கும் பங்கம் விளைவிக்கிறோம் என்பதை லட்சியம் செய்யாமல், அவருடன்கூட காகிதங்களைப் பொறுக்குவதில் முனைந்தான். அவர் ஒன்று பொறுக்குவதற்குள் ஒன்பதை எடுத்தான். ஐந்து நிமிஷத்தில் ஒரு காகிதங்கூட மிகுதியில்லை என்பதைத் திருப்தி செய்துகொண்டு நிமிர்ந்தான். 'இனி வேடிக்கை இல்லை' என்பதைக் கண்ட 'சபை'யோர்களும் மெல்ல நகரத் தொடங்கியிருந்தார்கள்.

"தாங்ஸ், மிஸ்டர்! இந்தப் பெரிய உடம்பை வைத்துக் கொண்டு ஓடுவது என்றால் சிரமமாக இருக்கிறது" என்று சிரித்தார் அவர்.

"ஒருமுறை காகிதங்களை அடுக்கிச்சரி பார்த்து விடுங்கள். ஒன்றிரண்டு குறைந்தாலும் வெளிச்சம் இருக்கிறபோதே பார்த்து விடலாம்" என்றான் நடராஜன். புன்னகையுடன் அவனை உற்றுப் பார்த்தார் அவர்: நடராஜனும் பார்த்தான். அவர் தலை பெரும்பாலும் வழுக்கையாகியிருந்தது. தீர்க்கமான மூக்கு; கண்களில் யோக்கியமானவர் என்பதற்கான ஜாடைகள். சிரிப்பிலேயும் ஒரு வசீகரம் அவரைப் பிடித்துவிட்டது



நடராஜனுக்கு; அவரும் நடராஜனை அன்பு கனியவே கவனித்தார்.

"உம்மை இதற்கு முன்னே எங்கே வைச்சுப் பார்த்தது?"

"நான் உங்களைப் பார்த்ததாக ஞாபகம் இல்லை. இந்த ஊருக்கே நான் புதிசு."

"இருக்கலாம். நீர் கிழப் புதுத்தெருவுக்கு வந்ததுண்டா?"

"உண்டு."

"மத்தியான்னமோ?"

"ஆமாம்."

"இங்கே எவடம் ஜாகை?"

"எங்கேயுமில்லை ஹோட்டலில்கூட 'ரூம்' இன்று மட்டுந்தான்."

"எங்கே எடம் கிடைக்கிறது? சங்கடந்தான்! நீர் யார்? சொல்லவில்லையே இன்னும்?" என்றார்.

சிலரைப் பார்க்கும்போது நம்மையும் மீறிய ஒரு நம்பிக்கை விழுந்துவிடுகிறது; 'நமது நன்மையைக் கோருபவர் இவர்' என்று எண்ணிவிடுகிறோம். நடராஜனுக்கு இவருடைய பேச்சிலும் பாவத்திலும் ஒரு பாசம் விழுந்துவிடவே, ஜானகியின் காதலைப்பற்றி ஸங்கிரகமாகக்கூறி, தன் கடிதம் மங்களத்திடம் அகப்பட்டதைச் சொல்லாமல் திருத்திக்கொண்டு, இதர விவரங்களைச் சொன்னான். பெரியவர் 'பேஷ்' பேஷ்' என்று தலையை அசைப்பதும் சில சமயம் முறுவலிப்பதுமாகக் கேட்டுக்கொண்டே வந்தார். நாகநாதய்யர் பேசியது போலவே நடராஜன் பேசிக் காட்டினபோது அவர் கையைக் கொட்டி, கடகடவென்று சிரித்துவிட்டு, "அந்த நாகநாதன் நல்லவனே இல்லை! என்ன சொல்கிறீர்?" என்றார்.

"என்வரைக்கும் அவர் அப்படித்தான் இருக்கிறார்,"

"நான் சொல்கிறபடி கேட்பீரா? பெட்டி உம்ம கைக்குத் திரும்பிவிடும்!"

"சொல்லுங்கள், பார்க்கலாம்!"

"இந்த வேளையில் நாகநாதன் கோயில்தான் இருப்பான்! சுப்புரத்தினமும் வீட்டலே இருக்கமாட்டான்; சீட்டுக்குப்போயிடுவான். தெரிஞ்சுதா?"

"அதனாலே?"

"நீர் 'மளமள'ன்னு போய்ப் பெட்டியைக் கொண்டு வந்துட வேண்டியது. சந்துருகூட எங்கேயாவது கிடப்பான். காரியத்தை முடிச்சுண்டு வரவேண்டியது!"

கொஞ்சம் தயங்கினான் நடராஜன்; "நின்று ஓர் உபயோகமுமில்லை. நாளைக்குக் காலம்பர நாகநாதன் சும்மா இருக்கமாட்டான். அதுக்குள்ளே பெட்டி நகர்ந்தாகணும்; ரொம்ப துஷ்டன் அவன். ருத்ராக்ஷமெல்லாம் வேஷம், ஓய்!"

நடராஜன் வேகமாக மேலத்தெருவில் சுப்புரத்தினத்தின் வீட்டை நோக்கி விரைந்துகொண்டிருந்தான் போகும் காரியம் பலிதமாகுமென்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை சமயோசிதமாக நடந்துகொண்டு, காகிதக் கட்டைமட்டுமாவது எடுத்துக் கொள்ளலாம் என்ற ஆசைமட்டும் இருந்தது.

பகலிலேயே இருள் கவிந்திருக்கும் சுப்புரத்தினத்தின் கிருஹம், இரவில் துஷ்ட மிருகத்தின் குகைபோல் காணப்பட்டது தலையில் முட்டிக்கொள்ளாமல் உள்ளே சென்று மூன்று முறை "ஸார்!" என்று அழைத்தான் நடராஜன். பேச்சு மூச்சில்லை.

"சந்துரு! சந்துரு!"

பதில் இல்லை ஒரு நோட்டம் விட்டான் நடராஜன். மினுக்மினுக்கென்று அரிக்கென் லைட் எரிந்தது. ஒரு



முக்காலிமீது ஒரு பெரிய டிரங்குப் பெட்டியும், அதன் மீது சிறு தோல் பெட்டியும் இருந்தன. சிறிய பெட்டி நடராஜனுடையது.

ஒரு சபலம் அவனைப் பிடித்துக்கொண்டது. அருமையான சந்தர்ப்பம் இது! அவன் சொந்தப் பெட்டி கண்ணெதிரில் இருக்கிறது. வீட்டில் யாரையும் காணோம் அதனுள்ளிலிருந்து தன் பண்டத்தை மட்டும் எடுத்துக் கொள்வதில் என்ன பிசகு? இதைப் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பதுதான் தவறு! அடுத்த கணம் நடராஜன் பெட்டியின் மூடியைத் திறந்து கொண்டிருந்தான்!

தோளில் ஒரு கரம் சற்று அழுத்தமாக வைக்கப்பட்டது திரும்பினால், சந்துரு நிற்கிறான்!" நண்பனே! இது தர்மமா? இது நியாயமா? நமது கௌரவத்துக்கு ஏற்றதா? ஹா! வெட்கம், வெட்கம்!" எல்லாம் நாடக பாணியிலே இருந்தது.

எப்படிப் பதில் சொல்வதென்று நடராஜனுக்குத் தெரியவில்லை, திகைத்துவிட்டான்; அவனையும் அறியாமல் நாக்குப்புரள மறந்தது.

"சொல்லப்பா, சொல்லு! உன் ஆப்தனிடம் எதையும் மறையாதே! யாரும் இல்லாத இல்லம் புகுந்து, கொள்ளை புரியும் அளவுக்கு உன் நிலை கேவலமாகிய காரணம் யாது? மூன்று சீட்டா? வேசியர் மாய்கையா? அச்வங்கள் விரித்த வலையா? வேறென்ன, நண்பா? உட்கார்ந்து எனக்குச் சொல்லிவிடப்பா!" என்றான் சந்துரு.

# 5

"மனிதர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணும் விஷயங்கள் உலகத்தில் பல ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். அவைகளை நாசம் செய்யவேண்டுமானால் ஸ்ரீராம நாமாவளியே விடாது ஜபித்து வரவேண்டும். பல அசுவமேதங்கள செய்

வதனால் ஏற்படும் பலன்கூட இதற்கு ஈடாக மாட்டாது."

—ஜனு யக்பத்தில் ப்ருகு மஹரிஷி

சென்னைப்பட்டணத்திலிருந்து மதுரையில் தகப்பனார் வீட்டுக்கு வந்த ஜானகி, முதல் காரியமாக எந்தெந்தச் சாமான்கள் தான் சென்னைக்கு வந்தபின் இடம் மாறியிருக்கின்றன என்ற ஆராய்ச்சியில் இறங்கியிருந்தாள்.

"அப்பா! நான் உங்களுக்குப் பேப்பர் வைத்துவிட்டுப் போயிருந்தேனே, போதுமானது இருந்ததோ?" என்று கேட்டாள்.

"பேப்பர்தானே, ஜானகி? ஓ! எதேஷ்டம்! ஓர் அச்வமேதயாகத்துக்கு வேண்டியது வைத்துவிட்டாயே!" என்றார் பட்டாபிராமய்யர். பிறகு, "ஏனம்மா, ரயிலில் ரொம்பக் கூட்டமோ?" என்று விசாரித்தார்.

"அப்பா பாஷையில் சொல்வதானால், ஓர் அச்வமேத யாகம் பண்ண வேண்டிய அளவு ஜனங்கள் வந்தார்கள்" என்று பதில் சொன்னாள் ஜானகி, சிரித்துக்கொண்டே.

"எல்லாம் மாமாகிட்டே கற்றுக்கொண்டு வருகிற குறும்பா! கடைசியில் அவன் பிடிவாதப்படியே காலேஜிலும் சேர்த்து விட்டான் அல்லவா?"

"ஆமாம்! காலேஜில் சேர்ந்ததற்கு என்ன வந்திருக்கிறது! இந்த அரட்டை வந்திருக்கிறது; பச்சைக்குழந்தை மாதிரி குதிக்க வந்திருக்கிறது. வேறொன்றையும் காணோம்!" என்றாள் மங்களம். இடுக்கிட்டு ஜானகி கவனித்தாள். எங்கே, "காதல் கடுதாசிகள் நன்றாக எழுதிக்கொள்ள வந்திருக்கிறது" என்று வெடுக்கென்று சொல்லிவைத்து அவள் ரகசியத்தைப் போட்டு உடைத்து விடுவாளோ என்றுதான் அவள் பயந்திருந்தாள். எந்த நிமிஷமும் அதைச் சொல்லிவிடலாமென்று பயந்திருந்



தாள். மூன்று நிமிஷங்கள் நிச்சப்தமாகக் கழிந்தன. தாயார்தான் கடைசியில், "ஆமாம்! இப்போ காலேஜில் சேர்ந்துவிட்டதால் என்ன! விச்வநாதனுக்குக் குழந்தை நன்றாகப்படிக்கிறாள் என்று ஆசை. நாளைக்கே கல்யாணம் நிச்சயமாகிவிட்டால் படிப்பை நிறுத்தி விடுகிறோம்" என்றாள்.

"அப்படி வரப்பட்ட மாப்பிள்ளை, பெண் படிக்கலாம் என்று சொன்னால், படிக்கட்டுமே! தாராளமாக பி.ஏ. இல்லை, எம்.ஏ. இல்லை, படிக்க வைக்கிறோம்!" என்றான் ஜகதீசன்.

"போறுமே, உங்கள் சமர்த்து! எனக்கு இங்கிலீஷ் சொல்லித் தருகிறேன் என்று ஆரம்பித்து மூணு நாள் படித்த அழகுக்குப் பேச வேறு வேணுமா!" என்று சிடுசிடுத்தாள் மங்களம்.

"இங்கிலீஷ் படிக்காவிட்டால் என்ன முழுகிப் போச்சு? அது இல்லாமே ஓர் அச்வமேதம் பண்ணலாமே!", என்றார் தகப்பனார்.

காலை நீட்டிப் பார்த்துக்கொண்ட பாகீரதி, "அம்மாடி! பூட்டுக்குப் பூட்டுவலி" என்றாள். ஜகதீசன் தன்னையுமறியாமல் காலண்டரைப் பார்த்துக்கொண்டு, "ஓஹோ, வியாழக்கிழமையோ இன்றைக்கு? நம்ம கோபாலன் மாமனார் இன்றைக்கு வரணுமே?" என்றான்.

கோபாலன் முகமெல்லாம் மகிழ்ச்சி தோன்ற நின்றுகொண்டிருந்தான். இளம் மனைவி வருகிறாள் என்றால் எந்த இளைஞனுக்குத்தான் ஆனந்தமாயிராது! எத்தனை விஷயங்களை அவன் அவளுடன் பேசித் தன்னியாக வேண்டும்.

"ஏண்டா கோபாலா! உன் மாமனார்கூட அவருக்குத் தெரிந்த இடத்தில் ஒரு வரன் இருக்கிறதாகச் சொன்னாரே, ஞாபகம் இருக்கா? வந்தால் ஞாபகமாய்க் கேட்கணும்; பார்த்து வைப்போமே?"

"ஏதோ, நாக்பூர்னு சொன்னார்; அப்பா பெரிய உத்தியோகம்னுகூடச் சொன்னார். இரண்டு பேரும் கூடவே படித்தவர்களாம்!"

"நாகநாத அய்யரிடங்கூட வரனுக்குச்சொல்லியிருக் கிறேன்..."

"அவர் பார்க்கிற 'டைப்' நம்ம ஜானகிக்குப் பிடிக்குமா?" என்று இளித்தான் ஜகதீசன், ஜானகியின் பக்கமாகத் திரும்பி.

"உங்களை யோசனை கேட்டாலன்றித் தயவுசெய்து சொல்லிக்கொண்டிருக்க வேண்டாமே!" என்று கடுத்தாள் மங்களம்.

"ஏன், ஜகதீசனுக்கு அக்கறை இல்லையா, என்ன! அவன் முனைஞ்சு மனசுவைச்சால் ஓர் அச்வமேதமே செய்துவிடமாட்டானா?" என்று மூத்த மாப் பிள்ளையை உத்ஸாகமூட்டும் தோரணையில் பேசிவிட்டு, பட்டாபிராமய்யர் நகர்ந்து கொண்டார்.

அன்று பிற்பகலில் கோபாலன் மாமனார் தம் குமாரி காயத்ரியைக் கொண்டுவந்து விட்டுவிட்டு, அவசர ஜோலிகள் இருப்பதாக விடை பெற்றுக்கொண்டு உடனே திரும்பினார். காயத்ரி பரிசுத்தமான அழகு படைத்தவள். அந்த மாதிரியான ஒரு செளந்தரியம் வாய்த்திருப் பவர்கள், உடனுக்குடன் காதில் ஒரு 'தொங்கட்டா'னை மாட்டிக்கொண்டு முகத்தை விகாரம் செய்து கொள்வது 'பாஷ'னாகக் கருதப்பட்டு வந்துங்கூட, காயத்ரி ஒரு மூக்கில் ஒரே பெரிய மூக்குத்தியும் காதில் வைரக் கம்மல்களும் மட்டுமே அணிந்துகொண்டிருந்தாள். அவளுடைய புன்னகை கோபாலனை மட்டும் வசீகரித்ததென்றல்ல; மங்களத்தின் படபடப்பை அடக்கி, ஜானகியின் அன்பைப் பெருக்கியது. பாகீரதி பெருமை யுடன் மருமகளைப் பார்த்தாள்; பட்டாபிராமய்யர் பல முறைகள் கனைத்துவிட்டுக்கொண்டு, தமது பரமானந்



தத்தைத் தெரிவித்ததோடு, அவள் முன்னிலையில் அச்வமேத யாகங்களைப்பற்றிக்கூட மிகுந்த சிரமத்துடன் பிரஸ்தாபிக்காமல் இருந்தார்.

காயத்ரி வந்த பிறகு வீடு கலகலப்பாயிருந்தது ஜானகியும் காயத்ரியும், சாவித்திரி சரஸ்வதிகள்போல் ஒன்றாக நின்றனர்; பேசினர். அடுத்த வீட்டு அலமேலு மாமி கண்ணில் பட்டு அவள் உறுத்துப் பார்த்ததற்காகப் பாகீரதி அம்மாள் 'இரண்டு மிளகாய்களைச் சுற்றிப் போட வருந்திவருந்தி அழைத்துங்கூட அவர்கள் வரவில்லை. கோபாலனுக்கு மனத்தாங்கல்தான். வந்த பெண்ணுடன் லக்ஷம் விஷயங்கள் அவசரமாகச் சொல்ல வேண்டியிருக்க இந்த ஜானகிக்கு என்ன இப்போ? மங்களமும் வெடுவெடுத்தாள்; "நாளைக்குத் திருச்செந் தூருக்குக் கிளம்பினால்தானே முழுசாகப் பத்து நாளாவது அங்கே தங்கலாம்? நாகநாத அய்யரை அவசரப்படுத்தி ஜாதகை பார்க்கச்சொல்லிவிட்டு, சாவகாசமாகப்போனால் என்ன ஆகிறது?"

இப்படியாக அன்று பொழுது போயிற்று. மறுதினம் ஜானகியும் மங்களமும் ஜகதீசனும் திருச்செந்தூருக்குக் கிளம்பினார்கள்.

"அம்மா! நீயுங்கூட வரலாம். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் உன்னை. இங்கே அப்பாவுக்குக் கோபாலன் துணை; கோபாலனுக்கு காயத்ரி துணை" என்றாள் ஜானகி.

"ரொம்ப அழகாய்ச் சொல்லிவிட்டாய்!" என்றான் ஜகதீசன். சொல்லிவிட்டு மங்களம் பாராதபடி ஒரு கதவிடுக்கில் நகர்ந்துகொண்டான்.

"நீ அங்கே வந்தாலே உன் வியாதிகள் போய்விடும். நான் போய்லெட்டர் போடுகிறேன்: நாலு நாளாவது இருக்கலாம்: வா, அம்மா!" என்று கூறிவிட்டுப் புறப் பட்டாள் மங்களம்.

ரயிலில் ஏறி உட்கார்ந்துகொண்ட பிறகுதான் ஜானகிக்குப்பழைய நினைவுகள் எல்லாம் வந்தன. பெட்டியை நாகநாத அய்யரிடம் ஒப்புவித்தது, நடராஜன் திண்டுக்கல்லில் தங்கியது ஆகிய எண்ணங்கள் அலை மோதின. நடராஜன் முன்கூட்டியே திருச்செந்தூருக்குப் போயிருப்பானா? போனால், அவளுக்காக எங்கே காத்திருப்பான்? சந்திக்கச்சந்தர்ப்பங்கள் இருக்குமா?

திருநெல்வேலி ஜங்ஷனில் நாகநாத அய்யருக்குப் பந்து ஒருவர் ஒரு ரயில் விடாது இவர்களை எதிர்பார்த்திருந்து அழைத்துப் போனார். குறுக்குத்துறை சுப்ரமணியனை முன்னால் தரிசனம் செய்தாக வேண்டுமென்ற சம்பிரதாயத்தைச்சொல்லி, தாம்பிரபரணி நதியின் நடுவே விளங்கும் அந்த முருகனின் சிறப்பையும் வர்ணித்தார்.

தாம்பிரபரணி ஆற்றின் ருசியும் குளுமையும் மிகுந்த நீரில் ஸ்நானம் செய்தவனுக்கு ரோகங்கள் தீருகின்றனவோ என்னவோ, நாம் பரீக்ஷித்துப் பார்த்தவர்கள் அல்ல. ஆனால், பன்முறை ஸ்நானம் செய்யவும் சாச்வதமாக அங்கேயே தங்கிவிடவும் ஆவல் தோன்றுவது மட்டும் நிச்சயம். நதியின் நடுவே நிற்கும் ஆலயத்தில் முருகன் ஸந்நிதி. பல ரோகங்களையும் பல பீதிகளையும் நிவர்த்திக்கும் அந்தப்பிரபு, ஆற்றுவெள்ளம் வரும் போதெல்லாம் நீரில் மூழ்கியிருப்பார் என்றும், இதர காலங்களில்தான் தரிசிக்க முடியுமென்றும் சொன்னார்கள் குமரக் கடவுள் பக்த பராதீனனாகையால், தன்னை அண்டின மக்களின் மாசுகளைத்தானே ஆகர்ஷித்துக் கொண்டு அவ்வப்போது தாம்பிரபரணியாற்றில் முழுகி அதை அகற்றிக் கொள்கிறானோ ஐயன் என்று எண்ணினாள் ஜானகி.

திருநெல்வேலி இட்டிலி நன்றாயிருந்ததென்று ஜகதீசன் அபிப்பிராயம் சொன்னான். "எப்போதும் தீனியில்தானா ஞாபகம்?அப்புறம் அஜீரணம், வயிற்றுவலி என்று சொல்லிக்கொண்டு வந்தால் நான் காதில் போட்டுக்கொள்ள மாட்டேன், நிச்சயம் சொல்லி விட்டேன்! இப்படிக்கொடுங்கள் மணிபர்ஸை!" என்று அதட்டி அதைவாங்கிக்கொண்டாள் மங்களம்.



காலை ஒன்பது மணி வண்டியில் திருச்செந்தூருக்கு ரயிலேறினார்கள். இரண்டு ஸ்டேஷன்களுக்கு முன்னதாக நாகநாதய்யர் தமது தடிக்கம்புடனும் இடி போன்ற கூச்சலுடனும் ஏறினார். ஏறிக்கொண்டதும் மேலும் கீழுமாக நான்கு முறை பார்த்துவிட்டு, "என்ன"? என்றார்.

"வாருங்கோ, மாமா!" என்று வரவேற்றாள் மங்களம்.

"எல்லாம் சௌகரியமா? பரவாயில்லை, இரண்டு ஸ்டேஷன்தானே? நான் நின்றுகொண்டே வரேன். நான் வரபோது அசாத்தியக் கூட்டம்; விழி பிதுங்கித்து, என்ன? ஜாகையெல்லாம் பார்த்து வைச்சுட்டேன்!" என்றார் கிழவர்.

"அப்பாவே சொல்லிவிட்டார், மாமாவிடம் ஒப்பு வித்து விட்டால் கவலையை மூட்டை கட்டிவிடலாம் என்று."

"அந்த வீட்டுக்கும் ஓர் அயோக்கியப்பயல் போட்டிக்கு வந்துவிட்டானே! என் ஷட்டகன்கூட அசட்டுத்தனமாக ஒப்புக்கொண்டு விட்டான். சரியான சமயத்தில் நான் போயாக்கும் நிறுத்தினேன்! அதே பயல் இந்த ரயிலில் என்னோடு வாதாடியிருக்கிறான், பார்! நான் மென்னியைப் பிடித்து வெளியிலே தள்ளியிருக்கிறேன்... என்ன?"

ஜானகியின் மனத்தில் ஒரு சந்தேகம் வந்தது ஒரு கால் அகஸ்மாத்தாக அது நடராஜனாகவே இருக்குமோ? ஆனால், அவருக்கு நடராஜனை முன்கூட்டி அறிந்து கொண்டிருக்க ஏது சந்தர்ப்பம்?

திருச்செந்தூர் ஸ்டேஷனில் அவன் கண்களில் நடராஜன் படவில்லை. அன்று மாலையில் ஷண்முகனைத் தரிசனம் செய்துவிட்டுப் பிராகாரத்தில் சூரஸம்ஹார மூர்த்தியின் சிற்பத்தைப் பார்த்துக்கொண்டு அவர்கள் உட்கார்ந்தபோதுதான் மறுபடி பழைய பேச்சுகள் ஆரம்பமாயின. கூடியவரை ஒதுங்கியிருப்பதே நன்மையென்று ஜகதீசன் அங்கிருந்த பெருமாள் ஸந்நிதிக்கு நகர்ந்துகொண்டான்.

"நாம் பட்டணத்தில் ரயில் ஏறுகிறப்போ ஒருத்தன் கூடவே வரவில்லை? அவனை இந்த ஊரில் பார்த்தேன் இப்போது!" என்று சொன்னாள் மங்களம்.

தூக்கி வாரிப்போட்டது ஜானகிக்கு 'ஓஹோ! ஆழம் பார்க்கிறாள் போலிருக்கிறது அக்காள்' என்று ஜாக்கிரதையாக இருந்தாள்.

"யாரது?...என்ன?" என்றார் நாகநாதய்யர்.

"யாரோ ஒருத்தன், எங்கள் கூடவே வந்தான். இங்கே நம் வீட்டுக்கு அடுத்த வீட்டில் 'தடிம்' மனாக வந்திருக்கிறாளே ஒருத்தி, அவளுந்தான் வந்தாள். இங்கே வந்து பார்த்தால்தான் தெரிகிறது, இரண்டு பேரும் சிநேகம் போலிருக்கிறது! பேசிக்கொண்டு மெய்மறந்து நிற்கிறார்கள்!" என்றாள் மங்களம்.

"எங்கே, எங்கே! நான் பார்த்துவிட்டு வருகிறேனே" என்று கிளம்பினார் நாகநாதய்யர்.

"இப்போ போனால் அவர்கள் இருப்பார்களா? நான் பார்த்து ஒன்றரை மணிக்குமேல் ஆகிறதே!" என்று அவரை நிறுத்தினாள் மங்களம்.

"ஒருகால் என்னோடு தகராறு பண்ணின அதே அயோக்கியப் பயலோ என்னவோ! அந்தத்தடிச்சி இவன் கூடச் சிநேகம் பண்ணினால் அவனையும் ஜாகையைக் காலிபண்ணச் சொல்லவேண்டியதுதான்!"



ஜானகியின் மனம் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தது. முக்கியமாக, நடராஜன் பெட்டியைக் கிழவரிடமிருந்து வாங்கியாக வேண்டுமே; என்ன சங்கடம் இது! முருகா, என்ன சங்கடம்!

உள்ளே ஷண்முகனுக்குப் புஷ்பப் பந்தல் போட்டு ஸஹஸ்ரநாம அர்ச்சனை நடந்துகொண்டிருந்தது. இந்தச் சமாசாரத்தை ஜகதீசன் வந்து சொல்லவும், மங்களம் சரேலென்று எழுந்தாள்.

"நான் இங்கேயே இருக்கிறேன், நீ பார்த்துவிட்டுவா, அக்கா" என்றாள் ஜானகி.

"ஏன்; அதற்குள் உனக்குக் காலை வலித்துவிட்டதோ?" என்று கேட்டாள் தமக்கை.

"குழந்தைதானே! நீங்கள் தம்பதிகள் போய்ப் பார்த்துக்கொண்டு வாருங்கள் நான் ஜானகியை நம் வீட்டுக்கும் அழைத்துக்கொண்டு போய்க் காண்பித்துவிட்டு வந்து சேருகிறேன், என்ன?" என்றார் நாகநாதய்யர்.

இந்த யோசனை உடனே ஒப்புக்கொள்ளப்படவே, மங்களமும் ஜகதீசனும் கோயிலுக்குள் சென்றார்கள்; கிழவரைப் பின்தொடர்ந்து ஜானகி மேலத்தெருவை நோக்கித் தன் திருஷ்டியைத் திருப்பினாள்.

மேற்கூறிய சம்பாஷணைகள் நடந்துகொண்டிருந்த போது, நடராஜன் மிகுந்த சங்கடமானதோர் அவஸ்தையில் சிக்கியவாறு தத்தளித்துக்கொண்டிருந்தான். பெட்டியைத் திறக்கும் நிலையில் தடுத்து நிறுத்தப்பட்ட அவனுக்குச் சிறிது நேரம் உலகமே சுழன்று வந்தது. செய்து அறியாத ஒரு காரியமாகையால் என்ன நடக்குமோ என்ற திகிலுடன் கூட, எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் அறியாமல் திகைத்தான். "உட்கார்ந்து சொல்லப்பா, நண்பா!" என்று நாடக பாணியில் மீண்டும் ஒருமுறை சந்துரு

சொன்னபிறகு, இயந்திரம் போல் ஒரு நாற்காலியில் போய் அமர்ந்தான்.

"நடராஜா! உனக்கு இந்த அபூர்வமான யோசனையைச் சொல்லிக்கொடுத்தவர் யார், அப்பா! உன் சொந்த மூளையிலே இவ்வளவு யோக்கியப் பொறுப்பான எண்ணங்களுக்கு இடம் கிடையாதே!" என்றான் ஏளனமாகச் சந்துரு.

"நான் செய்தது என்ன விதத்தில் பிசகு? என் பெட்டியை நான் எடுத்துக்கொள்வதில் தவறா என்ன?" என்று திருப்பிக்கேட்டான் நடராஜன்.

"தவறே கிடையாது. ஆனால், இப்போது பெட்டிக்குக் காவல்காரன் நான்; ஜவாப்தாரி என் தகப்பனார். பதில் சொல்ல வேண்டியவர் ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ரார். திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டியவள் மிஸ் ஜானகி என்ற ஒரு வனிதை இவ்வளவு பேரையும் ஒரே தாவலில் நீ அந்த ஸ்ரீராம தூதரைப்போல் தாண்டலாமா? முடியுமா? ஆனால், தாண்ட முயன்றது உன் பிசகே இல்லை எனக்குத் தெரியும். அந்தத் 'தலை தடவி சுந்தரம்' அனுப்பினான்; நீ வந்தாய்!"

"யார், 'தலை தடவி சுந்தரம்?"

"அவன்தானப்பா! சமுத்திரக்கரையில் பேசிக்கொண்டு நீ நிற்கவில்லை? அவனேதான்! அவன் யோசனையைக் கேட்க உனக்கு அவகாசம் இருந்ததேயொழிய, பெயரைக் கேட்கப் புத்தி இல்லை போலிருக்கிறது! போகட்டும், அவன் தலையை நான் தடவுவேன் என்று போய்ச் சொல்லு, உம்!"

"இதெல்லாம் என்ன பேச்சு, சந்துரு! பெட்டியை என்னிடம் கொடுக்கும்படி நான் உன்னைக் கேட்கிறேன். கொடுக்கப் போகிறாயா, இல்லையா?"

"ஏது, மிக நாணயமாகவும் உனக்கு நடந்துகொள்ளத் தெரியும் என்பதை ருசுப்படுத்துகிறாய்! காலேஜ் படிப்பு!



காலேஜ் படிப்பு! முதலில் செய்தது காதலுக்காக; தூய்மையான மாசற்ற காதலுக்காகச் செய்த தியாகம்! ஸா-பாஷ்!"

"இல்லையென்றால் எழுந்து போய்விடுகிறேன்."

"திரும்பிப்பார்! கதவைத் திறந்துதானே வைத்திருக்கிறேன்?"

"அப்படியானால் போகலாமா?"

"திருடர்களைப் போலீஸ் துணையுடன் அனுப்புவது பட்டணத்து வழக்கம். திருச்செந்தூருக்குப் பட்டணத்துப் பழக்கம் எதற்கு?"

"மறுபடியும், மறுபடியும் நீ..."

"இரு, தம்பி! ஒரே தடவையாக நான் சொல்லிவிடுகிறேன்; உன் சமாசாரம் பூராவும் எனக்குத் தெரியும். நீ எப்போது வரப்போகிறாய் என்று காத்துக்கொண்டிருந்து, வருகிற சமயத்தில் கூடத்தையும் காலியாக வைத்திருந்தேனே!" என்று சிரித்தான். பிறகு குரலை அழுத்தி, "நடராஜ்! கேட்டுக்கொள்! இதுவரையிலே நீ ஜானகியின்மீது ஆசை வைத்திருந்ததை நான் மன்னிக்கிறேன். ஆனால், இனிமேல் மாட்டேன் ஜானகி என் சொத்து!" என்றான்.

"நான் போகிறேன்."

"போகத்தான் போகிறாய்: என் எச்சரிக்கையைக் கேட்டுக்கொண்டு போ! தெரிந்ததா? இந்தத் திருச்செந்தூருக்குள் எத்தனை பேர் வந்தாலும் எங்களுக்குத் தடையில்லை. யாத்திரிகர்கள் வேண்டிய பேர் தங்கியிருக்கிற வீடுதான் இது ஆனால், உனக்கு நான் இந்த ஊரில் தங்கக்கொடுக்கிற அவகாசம் இருபத்துநாலு மணி அதற்குமேல் தங்கினால்..."

"தங்கினால் என்ன?"

"தங்கினால், என் சிநேகிதர்களுக்குக் "கோபம் வரும்.

"கோபித்துக்கொள்ளட்டும்!"

"உன் முதுகை உரித்து, உன்னைத் திருநெல்வேலி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவார்கள். பேசாமல் பிழைத்துப்போ! எனக்கும் வேறே வேலை இருக்கிறது."

"நடராஜன் எழுந்தான். "நான் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே வாசல்வரை பின் தொடர்ந்தான் சந்துரு.

வாசற்புறம் வந்ததும், "நடராஜன்! நண்பன் வார்த்தையைக்கேள்! அசட்டுக் காதலைக் கைவிடு! பெட்டியை மற! பெண்ணாசையை ஒழி நட!" என்றான். பிறகு 'ஹஹ்ஹா' என்று சிரித்துவிட்டு உள்ளே வரத் திரும்பியவன், யாரோ இருவர் எதிர்ப்புறத்தில் வருவதைக் கவனித்துச் சிறிது தயங்கினான். வந்தவர்கள் அதே வீட்டுப்பக்கம் திரும்பினார்கள். தடிக்கம்பை ஆட்டிக் கொண்டு நாகநாதய்யரும் அவரைப் பின் தொடர்ந்து ஜானகியுந்தான் வந்தார்கள்!

வீட்டின் வாசலை நெருங்கின உடனே ஜானகி அந்த வீட்டின் தோற்றத்தையும், கவிந்திருந்த இருளையும் கண்டு சிறிது அச்சம் கொண்டாள். நாகநாதய்யர் முன்னால் சென்றுகொண்டே அழைக்க, ரேழியைத் தாண்டிக் கூடத்தை அடைந்தாள். சந்துரு ஹரிக்கேன் லைட்டைத் தூண்டிவிட்டு, "மெட்ராஸ் மாதிரி இங்கே யெல்லாம் இராது" என்று அசட்டு நகை செய்தான்.

சந்துருவை ஜானகி பார்த்திருக்கிறாள். அவன் கைபாடிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் கவனித்து ஒதுங்கியிருக்கிறாள். நாகநாதய்யருக்கு உறவினன் இவன் என்பதை இன்றுதான் அறிந்துகொண்டாள். அதிக நேரம் தங்க உத்தேசம் இல்லாதவளாக, வந்த காரியத்துடன் திரும்ப நினைத்துச் சுற்றும் முற்றும் பார்த்தபோது நாகநாதய்யர், "என்ன ஜானகி! சந்துருவைத் தெரியுமா உனக்கு?" என்றார்.



"பார்த்திருக்கிறேன்" என்றாள் ஜானகி சுருக்கமாக.

"என் மச்சினி பிள்ளை கெட்டிக்காரன்! இங்கே இவன் உதடு அசக்கினால் நடக்காதது இல்லை. என்ன?"

"மெட்ராஸில்தான் என்ன, பெரியப்பா; ஒரு 'மாதமாடிக்ஸ்' புரொபஸரை அலற வைச்சுட்டேன்னா? ஜானகிக்குக்கூட அது தெரிந்திருக்குமே!"

"இல்லை... எனக்கு ஒன்றும் தெரியாது" என்று பேச்சை மாற்றி, "வீடுரொம்ப சௌகர்யமாக இருக்கும் போலே இருக்கே!" என்றாள்.

"இதை உன் வீடு மாதிரி நினைத்துக்கொள்! எப்போ வேணா வரலாம்; வேண்டியதைச் சந்துருவைச் செய்து தரச்சொல்லியிருக்கிறேன், என்ன!"

"பேஷா!" என்றான் சந்துரு.

"மாமா! ரயிலில் உங்களிடம் ஒரு பெட்டி கொடுத்தேனே, அதை இங்கேதானே வைத்திருக்கிறேன்?" என்று கேட்டு விட்டாள் ஜானகி.

"ஆமாம்; இப்போதே வேணுமா உனக்கு? உன்னிடம் ஒன்று சொல்லிவிட்டு..." என்று நாகநாதய்யர் முக்காலியைப் பார்த்தார். அதே சமயம் சந்துருவும் அந்தத் திசையில் பார்த்தான். சற்றுமுன் நடராஜனை வழி கொண்டுவிடப் போனபோது இருந்த அந்தச் சின்னப் பெட்டி இருந்த இடம் காலியாகி, அது மாயமாய் மறைந்து போயிருந்தது.

ஏக காலத்தில் இருவரும் திடுக்கிட்டார்கள்.

அகராதியைப் புரட்டி 'நாய்' என்ற பதத்திற்கு அர்த்தம் பார்க்கும்போது, "ஒரு விலங்கு; ஞமலி; குரைக்கும் தன்மையுடைய ஒரு மிருகம்" என்று பொருள் கொடுத்திருப்பது தெரியவரும். மூன்றாவதாகக் கொடுக்கப்பட்ட அர்த்தம், கீழப் புதுத்தெரு ஆந்திரவாடுவின் நாய்க்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. எனினுங்கூட

அது மேற்குறிப்பிட்ட குணத்தை அன்றைய தினம் ஒருபடி அதிகமாகவே வெளிப்படுத்திக்கொண்டிருந்தது மேலும், 'டைகர்' என்று பெயரை வைத்துக்கொண்டு பூனைபோல் இருக்கும் சுபாவம் அதனுடையதல்ல கூடவே, அன்று சிறிது விச்ராந்தியாக அவிழ்த்துவிடப் பட்டிருந்ததால் கிழப்புதுத் தெருவின் ஒரு கோடிமுதல் மற்றொரு கோடி வரை 'வாக்கிங்' செய்துவிட்டு, ஒரு முனையில் நின்று இந்த உலகத்தில் நாய் இனத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அப்போது தான் கவிழ்ந்த தலையுடன், எங்கே செல்கிறோம் என்கிற நிகாவின்றி வந்து கொண்டிருந்தான் நடராஜன்.

"மிஸ்டர்! மிஸ்டர்! என்ன அவசரம்? ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகலாமே! நான் இங்கே இருப்பது தெரியவில்லை?" என்பதைச் சுவான-பாஷையில் கமகங்கள் கார்வைகள் கொடுத்து ஸ்வர சுத்தமாக 'டைகர்' கேட்டது. ஏதோ தெரு நாய் என்று அலட்சிய மாக, "சீ! தூ!" என்று உமிழ்ந்துவிட்டு நடராஜன் தொடர்ந்து சென்றான்.

"ஏ மனிதனே! உனக்கென்ன அத்தனை கொழுப்பு! நான் ஒருவன் நின்றுகொண்டு கேட்கிறேன், என்னை மீறிக்கொண்டு போகிறாயா? இது என்ன ஊர் என்று நினைத்துக்கொண்டாய்?" என்று அதே பாஷையில் சற்று உக்கிரமாகக் கேட்டார் பைரவர். நடராஜனை நோக்கியும் இரண்டு அடி வைத்தார்.

ஒரு கல்லைப் பொறுக்கி எடுப்பதுபோல் போக்குக் காட்டிப் பிறகு அதை வீசுவது போலும் பாசாங்கு செய்தான் நடராஜன். அதைச் செய்த பிறகுதான் எவ்வளவு பிசகான காரியம் அது என்பதை உணர்ந்தான். ஏனெனில், நாய் ஓடுவதற்குப் பதில் அவனே ஓட வேண்டிய நிலைமையில் இருந்தான். தெருவே கிடுகிடுக் கும் முறையில், "வள் வள்" என்று குரைத்துக்கொண்டும்



உறுமிக்கொண்டும், சீறிக் குதித்துக்கொண்டும் டைகர் துரத்தியது; நடராஜன் உயிருக்காக ஓடினான்.

நாய்களின் ஸ்வான்தாரர்கள் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பார்க்க நேர்ந்திருந்தால் அவர்கள் "நாய் பரம சாது! நீங்கள் ஓடினதுதான் பிசகு! அதைக் கோபமூட்டிவிட்டது" என்று சத்தியம் செய்யத்தயாராக இருப்பார்கள். நின்றிருந்தால், கட்டாயம் பிடுங்கியே இருக்கும் என்று நடராஜன் அப்போது எதிர்ப்பிரமாணம் செய்யவும் தீவிரமாக இருந்திருப்பான் இதைப் பரீக்ஷை பார்க்க உகந்த சமயம் இதல்ல; எங்கேயாவது ஓடி, வீட்டினுள் புகுந்துகொண்டாலொழியத் தப்பமுடியா தென்று கண்ட அவன், பக்கத்திலிருந்த ஒரு வீட்டில் நுழைந்து படீரென்று கதவையும் சார்த்திக்கொண்டான்.

கூடவே துரத்தி வந்த 'டைகர்' கதவு சார்த்தப்படும் என்று எதிர்பார்க்காததால், 'சுளீர்' என்று மூக்கு நுனியில் ஓர் அடியை வாங்கிக்கொண்டு, "ஏ அற்ப மனுஷா! உன் கேவல புத்தியைக் காட்டினாயே!" என்று இருமுறை திட்டிவிட்டு, தன் கண்ணில் படும் அடுத்த நரனை இதற் காகத் தகுந்த படி சிக்ஷிப்பதென்ற வைராக்கியத்துடன் வெளியேறியது. தான் நுழைந்த வீடு யாருடையதென்று திரும்பிய நடராஜன் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனான். ஏனெனில், ஒரு கை அரிக்கன் லாந்தலைப் பற்றியிருக்க ஒரு கை இடுப்பில் இருக்க, புன்னகையுடன் நின்றார் கடற்கரை நண்பர், சாக்ஷாத் 'தலைதடவி சுந்தரம்!

"வரணும் வரணும், நம் வீட்டுக்கு வழி தெரிந்ததா?" என்றார்.

"வழி தெரியவில்லை... ஒரு நாய் இங்கே விரட்டித் துரத்தியது."

"சந்துருவைச் சொல்றீரா? அல்லது, வேறு ஏதானும் நிஜநாயைப்பற்றியா?"

"ஏது! உங்களுக்கு எல்லாம் முன்னாடியே தெரியும் போல்..."

"உம்ம பின்னால் வந்தால் தெரியாதா? நீர் போகிற காரியம் உம்மால் பலிதமாகாதென்றுதான் எனக்கு அப்பவே தெரியுமே?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"உம்ம பின்னால் நான் வந்தேன்; அங்கே நடந்ததை யெல்லாம் கேட்டுக்கொண்டு நின்றேன். உம்மைச் சந்துரு அனுப்பின பிறகு, அந்த வீட்டுக்கு நாகநாதனும் ஜானகியும் வந்த பிறகு ஆனால் உமக்கு ஐந்து நிமிஷம் முன்னால்-இங்கே வந்துவிட்டேன். இத்தனை நாழி சந்துருவும் நாகநாதனும் வைத்த இடத்தில் பெட்டியைக் காணாமல் தவிப்பார்களே!"

"ஏன் காணாமல் தவிப்பார்கள்?"

"ஏனென்றால் பெட்டி இங்கே வந்துவிட்டது! நீர் வந்த பிறகு திறக்கலாமென்றிருக்கிறேன்" என்று ஒரு மூலையைக் காண்பித்தார் அவர் உண்மையிலேயே அவன் பெட்டி அங்கே இருந்தது!

'இதெப்படி வந்தது இங்கே?' என்று திகைத்தான் நடராஜன்.

"செப்பிடு வித்தை இல்லை; மாயா ஜாலம் இல்லை. அங்கே நீர் உள்ளேயிருந்தபோது நான் ரேழியில் இருந்தேன். நீங்களும் சந்துருவும் வாசலில் இருந்தபோது உள்ளே போய்ப் பெட்டியுடன் ரேழிக்குத் திரும்ப வந்து விட்டேன். மறுபடி எல்லாரும் உள்ளே போன பிறகு, குறுக்கு வழியாக இங்கே வந்துவிட்டேன். எப்படி?"

நடராஜன் இரண்டு எட்டில் பெட்டியிடம் போய் அதைத் திறந்தான். வெகு ஆவலுடன் அதிலிருந்த துணிமணிகளைப் புரட்டினான்; ஒருமுறை இருமுறை ஆராய்ந்தான். ஏனோ முகத்தில் ஏமாறறக் குறி பரவியது.



"ஸார்!" என்றான் அழமாட்டாக் குறையாக.

"ஏன்! எல்லாம் சரியாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டார் அவர்.

"எது இருந்தென்ன, ஸார்! இதை நான் எதற்காக எடுக்கச் சென்றேனோ, அது இல்லையே!" என்றான், சோகம் ததும்ப.

"இல்லையா!... நிஜமாகவா? உண்மையாக இல்லையா?"

நடராஜன் பதில் சொல்லுமுன் மீண்டும் நாயின் பலத்த குரைப்பும் ஓடிவரும் காலடிச் சத்தமும் கேட்டன. வாசற்கதவு திறந்து படீரென்று சார்த்தப்பட்டது. உடல் நடுங்க, கைகள் பதற, நாக்குழற ஜகதீசன் உள்ளே வந்து விழுந்து மாடு போல் மூச்சு விட்டான்.

## 6

"அவசியமானபோது ஒரு தந்தி அடித்து வையுங்கள். 'அதில் அவசரமும் சேர்ந்து கொண்டால், எதற்கும் கூடவே ஒரு கடுதாசியும் போட்டு விடுங்கள்."

—தற்கால அனுபவ ஹாஸ்யம்.

இருபுறமும் இரு மனைவிமார்கள் இணைந்து நிற்க, சக்திவேலும் குக்குடத்வஜமும் கரத்தில் மின்ன, ஷண்முகநாயனார் என்ற பெயருடன் நிற்கும் செந்தில் முருகனுக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை யதோக்தமாக நடந்துகொண்டிருந்தது. கமகமவென்று சுகந்தம் வீசும் புஷ்பப்பந்தலில் அமர்ந்திருப்பதும், ஜிலுஜிலுவென்ற பன்னீரில் அபிஷேகம் செய்து கொள்வதும் முருகனுக்குப்

பழகிப்போன விஷயங்களே கூடியிருந்த பக்த கோடிகள் தான் அலுக்காமல் சலிக்காமல் பார்த்தார்கள், போய் விட்டுத்திரும்பி வந்தும் பார்த்தார்கள். கண்ணை மூடிக் கொண்டும், திறந்துகொண்டும் மனக்கோயிலில் அந்தச் சுந்தர விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்துகொள்ள முயன்றார்கள். அடுத்தடுத்து நடந்த ஐந்தடுக்கு தீபாராதனைகளின்போது வாய்விட்டுத் துதித்தார்கள். எங்கு நிற்கிறோம் என்பதை முற்றும் மறந்து போனார்கள்.

இந்தத் திருக்கூட்டத்திற்குள்தான் ஜகதீசனும் மங்களமுங்கூட நுழைந்தார்கள். ஜனங்களின் நெருக்கத்தைக்கண்டு மங்களம் புருஷன் கையைப்பற்றிக் கொண்டாள். அவர்கள் இருவரும் சந்நிதியை அடைந்த காலத்தில் ஒரு கற்பூர தீபாரதனை நடந்தது. ஸம்ஸார பயத்தை க்ஷண காலத்துக்கு உதறிவிட்டு, "பிரபோ!" என்று ஜகதீசன் உருகிப்போய் நின்றான். "நாம் அதட்டி நடத்த வேண்டிய பிராணி இது" என்பதை மங்களமும் மறந்து, "முருகனே, எங்களுக்கு ஒரு குழந்தை..." என்று தொண்டை அடைக்க, கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள். புருஷனைத் தனக்குச் சமதையாகச் சொல்கிறோமே என்ற காரணத்தினால் ஏற்பட்ட துக்கம் அல்ல அது; பிள்ளைப்பேறு இல்லையே என்கிற தாபந்தான் அதில் நிரம்பியிருந்தது.

ஜகதீசன்— மங்களம் தாம்பத்ய வாழ்க்கையில் சமத்வ பாவத்துடன் பரஸ்பர சிநேகத்துடன் சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் இருந்தது அந்த ஆண்டவன் ஸந்நிதியில் தான்! அர்ச்சனையும் முடிந்தது; கூட்டமும் நகரத் தொடங்கியது. ஜகதீசனும் மங்களமும் பிராகாரத்தை மறுபடி ஒரு முறை சுற்றி, நாகநாதய்யர் ஜானகியுடன் திரும்பிவிட்டார் என்பதையும் ஊர்ஜிதம் செய்துகொண்டு, வீட்டை நோக்கித் திரும்பினார்கள்.



"உங்களைத்தானே! இன்றைக்கு வீட்டுக்குப் போனதும் அம்மாவுக்கு ஒரு கடுதாசி எழுதப்போகிறேன். தனி ஜாகை கிடைத்திருக்கிறது; தரிசனம் திவ்யமா யிருக்கிறது. கிருத்திகை— ஷஷ்டி வந்துகொண் டிருக்கிறது...... நாலு நாள் அவள் வந்திருக்கட்டுமே!" என்றாள் மங்களம்.

"நான் ஆக்ஷேபம் சொல்லவில்லையே?" என்றான் அவன்.

"ஆக்ஷேபம் சொல்லணுமா? அவர்கள் வரணுமென்று உங்களுக்குத் தோணவில்லையே! உம்!"

"வேண்டியதுதான். நேரிலேயே அழைத்தோமே, மங்களம்!"

"நாலு பேருக்கு மெய்க்கச் செய்தாகிவிட்டது!"

"உன்னைத் திருப்தி பண்ண ஈசுவரனாலும் ஆகாது, அம்மா!"

"ஈசுவரனைவிட உசத்தியாக நீங்கள்தான் வந்திருக் கிறீர்களே!"

"இந்தா, ஷண்முகனைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். ஒரு குழந்தையை அருளமாட்டாரா என்று மனத்தை நான் உருக்கிக்கொண்டு வருகிறேன்."

"உங்கள் மனசு உருகாத வேளை ஏது?"

"சரி, விடு! ஜானகி எதிரில் என்னைத் தருக்கு வெட்டாதே! வெட்கமாக இருக்கு, மங்களம்! நாளைக்கு ஜானகிக்கு ஒரு புருஷன்னு வந்து அவன் எதிரிலேயும் நீ..."

"உங்களை என்ன சொல்லிவிட்டார்கள் இப்போ! என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை உங்களுக்கு! நான் ஒழிந்து போனால் அக்கடாவென்று திருப்தியாக இருக்கும்!"

"இந்த மாதிரியெல்லாம் நீ வாக்குவாதம் செய்யாதே!"

"ஆமாம், நான் வாக்குவாதம் செய்கிறவள்!"

"ஏது, எடுத்ததற்கெல்லாம் குற்றம் சொல்லி, சண்டை...."

"சண்டைக்காரி, ஆத்திரக்காரி, துராங்காரி, நான்."

"ஐயய்ய! சேச்சே."

"சேச்சேதான், தூத்தூதான். நாய்க்கும் கேடு கெட்டவள் நான்!"

"உன் கூட நான் பேசவில்லை."

"கூட வரவும் வெட்கமாக இருந்தால், நான் முன்னால் போகிறேன். நீங்கள் மதிப்பாக வாருங்கள்!" என்று மங்களம் சொல்லிவிட்டு விடுவிடென்று முன்னால் நடந்து சென்றாள். இந்தச் சமயத்தில், மனத்தில் ஏதோ ஒரு தாபம் புகுந்து அவன் மனத்தையும் துளைத்துக்கொண்டிருக்கும்போது வார்த்தையாடுவதால் பயன் இல்லை என்று, ஜகதீசன் பின்தங்கிச் சென்றான். அவன் கீழப் புதுத்தெரு முனையை அடைந்தபோது, "யாரய்யா நீர் புது ஆள்? வெகு வாயக்காக, தெருவை விலைக்கு வாங்கின மாதிரி வருகிறாயே! ஒரு பெண்பிள்ளை சற்று முன்னால் போனாள்; போய்விட்டுப் போகிறாள் என்றால், நீரும் வந்துவிடலாமென்று நினைத்தீரோ, அது நடக்காது!" என்று உறுமல் கேட்டது; 'டைகர்'தான் இப்படிக் கேட்டது; தொடர்ந்து அர்த்த புஷ்டியுள்ள பல உறுமல்களுடன் அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது.

ஜகதீசனை இரண்டு வயதில் பயமுறுத்த வேண்டுமானால் அவன் தாயார், "பேசாமல் இரு; இல்லாவிட்டால் 'தோத்தோ' வந்துடும்" என்பாள்; அவன் அடங்கிவிடுவான். இன்று ஒரு நிஜ 'தோத்தோ'வே அவனைப் பார்த்துப் பல்லைக் காட்டி, உறுமி, நாலு கால் பாய்ச்சலில் பின்தொடரவே, ஓட முயன்றான். பீதியினால் முழங்கால்கள் தொய்ந்துங்கூட, எப்படியோ



சமாளித்து, முதலில் எதிர்ப்பட்ட ஒரு வீட்டினுள் புகுந்து, கதவைத் திறந்துகொண்டு, உயிர் தப்பினால் போதுமென்று நடராஜனுக்கும் அவன் புதிய நண்பனுக்கும் முன்னால் போய் விழுந்தான். பத்து நிமிஷம் அவனை ஆசுவாசப்படுத்திய பிறகே ஜகதீசன் கண்ணை விழித்து நடராஜனைப் பார்த்து அடையாளமும் கண்டு கொண்டு, "அடடா! நீங்களா ஸார்! மிக வந்தனம், ஸார்;" என்றான்.

"உட்காருங்கள், ஸார்! நாய் ஓடிவிட்டது; பயமில்லை" என்று தைரியம் சொன்னான் நடராஜன்.

ஜகதீசன் ஒரு முறை உடல் நடுங்கி, "சனியன்! மேலே விழுந்து என்னைப் பிடுங்காமல்விட்டது ஒரு பெரிய ஆச்சரியந்தான்" என்றான்.

"கோவிலில் தரிசனம் எல்லாம் ஆயிற்றா? எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் சுந்தரம். ஜகதீசன் அவரைப் பார்த்து, 'இவர் யார்?' என்பதுபோல் விழித்தான்.

"நமக்கு வேண்டியவர்தான்! இவர் இந்த வீட்டுக்காரர்" என்று நடராஜன் அவரை அறிமுகப் படுத்தினான்.

"இனிமேல் இவருங்கூட இங்கேதான் இருக்கப் போகிறார். நீங்கள் நினைத்தபோது வரலாம்; பேசிக் கொண்டிருக்கலாம்" என்று இருவருக்குமே பொதுவாகச் சுந்தரம் பதில் சொன்னார். அப்புறம் சுந்தரம் அவனிடம் பேசிய தோரணையைக் கண்டு நடராஜன் அசந்து போனான். பல நாள் பழகியவர் போல் அனவிளாவினார்; தாம் தெரிந்துகொண்டிருந்த சிற்சில விஷயங்களை வைத்துக்கொண்டு வெகு லாகவமாக அவைகளைத் தம் சம்பாஷணையில் கலந்தமைத்து ஜகதீசனிடமிருந்து புதிய விஷயங்களைக் கறந்தார். ஜகதீசன் தன் மனத்தின் ஆழத்திலிருந்த தாபத்தையெல்லாங்கூடப் பச்சைக்

குழந்தை போல் அவரிடம் கொட்டினான். "மாமனார் வீட்டில் நான் தங்கிவிட்டது பெரிய பிசகு, ஸார்! இப்போது அது தெரிந்து கழன்று கொள்ள முடியவில்லை; தவிக்கிறேன், ஸார்!" என்றான்.

"ஒன்றும் பயப்படாதேயும். உம்ம மச்சினிக்குப் புருஷன் என்று ஏற்பட்டவுடன் ஒரு சந்தர்ப்பம் வரும்; அதைமட்டும் விட்டுவிடாதேயும்" என்றார் சுந்தரம். மேலும் தொடர்ந்து, "மிஸ்டர்! உங்கள் மாமனார் ஏதானும் வரன் பார்த்து 'ஸெட்டில்' செய்துவிட்டாரா?" என்று பேச்சுக் கொடுத்தார்.

"பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்; இதுவரை ஒன்றும் குதிர்ந்ததாகத் தெரியவில்லை. நாகநாத அய்யர் கூட வரன் ஒன்று பார்த்து வைத்திருக்கிறாராமே;"

"கிழவர் பார்க்கிற வரன் அவரைப்போல்தானே முசுடாக இருக்கும்! ஜானகிக்கு பிடிக்குமா?"

"அது ஒரு முக்கியமான 'பாயிண்ட்'தான், ஸார்! படித்த பெண்ணானதனாலே அவளுக்கு ஒரு 'வோட்' உண்டு"

"உம்ம எஜமானியின் 'வோட்' நாகநாதய்யர் பார்க்கிற ஆளுக்கு இருக்கும்."

"இருக்கலாம்."

"உம்ம வோட்?"

"நமக்கென்ன ஸார் இதில் இருக்கிறது?"

"சேச்சே! அப்படிச் சொல்லி நீர் ஒதுங்கிக்கொண்டு விட முடியுமா? நாளைக்கு மாப்பிள்ளையாக வருகிறவன் உம்ம ஷட்டகன் அல்லவா? உங்கள் இருவருக்கும் ஒத்துக் கொள்ளாமல் போய், குஸ்திக்கு நின்றால் நன்றாயிராதே!"

"எனக்கு எப்போதுமே ஒதுங்கிப் போகிற சுபாவம், ஸார்."



"அது தெரியும்! இருந்தாலும் உம்மை அநுசரித்துப் போகிற பையனாக அமைந்துவிட்டால், இரட்டிப்பு அநுகூலம் அல்லவா?"

"ஆக்ஷேபமென்ன! ஆனால்..."

"இதோ இந்த நண்பர் இருக்கிறாரே, உமக்கு ரயிலடியில் மூட்டை தூக்கி உபகாரம் செய்தவர்! இவருக்கு மெட்ராஸ்; நல்ல குணம்! இவரே உமக்கு ஷட்டராக வந்தால் எப்படி?"

"நம் கையில் எது இருக்கிறது? அது தவிர, எனக்கென்ன இந்த விஷயத்தில் தீர்மானம் செய்ய உரிமை இருக்கிறது?"

"நமக்குள் பேசிக்கொள்வோமே! அதில் என்ன பிசகு?"

"நானேகூட நேற்று நினைத்த விஷயந்தான் அது. ஆனால் அது... ஈசுவரன் சங்கல்பம் இந்தக் கல்யாண விஷயம் நான்கூட என் கல்யா..."

"ஈசுவரன் இருக்கிறார்; இருக்கட்டும்! அப்படி இவர் வரனாக வருவதாக இருந்தால், நீர் ஒத்தாசை செய்து நடத்திவைப்பீராக?"

"பேஷாக! என்னால் முடிந்தவரை செய்வேன். எனக்குத்தான் இவரை நன்றாக பிடித்திருக்கிறது என்கிறேனே!"

"அவ்வளவுதான் வேண்டியது, ஸார்! மிஸ்டர் ஜகதீசன்! இவரை நீர் அந்நியர் என்று இதுவரை நினைத்துக்கொண்டிருக்கிறீர். உம்ம குடும்பத்துக்கு மிக ஆப்தமானவர் என்று தெரிந்துகொண்டால் மிக ஆச்சரியப் படுவீர்!"

"இப்பவே ஆச்சரியமாயிருக்கே! உம்... அப்படியா?"

"அப்படித்தான்! அது விஷயமாகவே இவர், இவ்வளவு நல்ல மனுஷன் ஒரு சிறிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார். நான் எல்லாம் சொல்கிறேன்;

கேட்டுவிட்டு உம்மால் இவருக்கு உதவி செய்ய முடியுமா, சொல்லும்!"

"செய்கிறேன், ஸார்!"

"சரி செய்ய முடிந்தால் செய்யும்; முடியவில்லையோ, விஷயத்தை உம்மோடு மட்டும் வைத்துக்கொண்டு வெளியேவிடாமல் இருந்துவிட வேண்டும்.

ஜகதீசன் தலையைப் பலமாக ஆட்டி, பற்களையும் காட்டி ஒப்புக்கொள்ளவே, சுந்தரம் வெகு சாதுரியமாக ஜகதீசன் மனம் உருகும்படி நடராஜனின் வரலாற்றைச் சொன்னார். அதைக் கேட்ட நடராஜனுக்கே தான் இத்தனை உயர்குணம் படைத்த கதாநாயகனா என்ற ஆச்சரிய உணர்ச்சி மேலிட்டு வந்தது. கடைசியில் அவர், "மிஸ்டர் ஜகதீசன்! இவர் கடுதாசி ஒன்று உம்முடைய ஸம்ஸாரத்தினிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது இருக்கிறவரையில் இவருக்கு உபத்திரவம்; ஜானகிக்கும் சள்ளை நீர் செய்யவேண்டியது அவள் பெட்டியைக் குடைந்து..." என்று சொல்லும் போதே, ஜகதீசன் முகத்தில் பீதி பரவுவதைக் கவனித்து, "அவள் இல்லாத சமயத்தில் தேடுவதுகூட ஒரு சங்கடமா? இதற்குப்போய் பயப்படுகிறீரோ!" என்றார்.

"பயம் எதுவும் இல்லை. அவள் பார்க்காமல் செய்ய வேண்டுமே!"

"அது உம்ம சாமர்த்தியம்; தெரிந்ததா? அதைத்தவிர இவர் பெட்டியிலிருந்து ஒரு கடுதாசிக் கட்டு வேறு காணப் படவில்லை. அதுவும் ஒருகால் அங்கேயே வந்திருக்கும், தெரிந்ததா? இருந்தால், அதையும் சேர்த்துச் சுருட்டிக் கொண்டு வந்து இவரிடம் கொடுத்துவிடுங்கள்!"

"முடிந்தவரையில் பார்க்கிறேன், ஸார்!"

"முடிகிறவரையில் பார்த்துவிடும்; சொல்கிறேன்" என்று அனுப்பினார் ஜகதீசனை.



இதே வாக்கியத்தை — "முடிகிற வரையில் பார்க்கிறேன்!" என்ற சொற்றொடரைச் சந்துருவும் கிட்டத் தட்ட அதே சமயம் வேறோர் இடத்தில் சொல்லிக் கொண்டிருந்தான். கப்புரத்தினத்தின் வீட்டில் பெட்டி காணாமல் போனது அவர்களுக்கெல்லாம் ஒரு மந்திர சக்தியினால் நடந்துவிட்டது போலவே தாற்காலிகமாக தோன்றிற்று என்றால்கூட அது அப்போது யார் கையிலேயோ சிக்கிக்கொண்டுவிட்டதென பதில் சந்தேகம் இல்லை. நடராஜன் வந்துவிட்டுப் போனதைப்பற்றிச் சந்துரு நாகநாதய்யரிடம் பிரஸ்தாபிக்கவே இல்லை. அவ்வாறு செய்வதால் ஜானகி-நடராஜன் தொடர்பை அவன் முன்னதாக அறிந்துகொண்டிருப்பது வெளியாகும் என்பது ஒன்று; இரண்டாவதாக, குயுக்தி மூளை படைத்த கிழவர், சந்துருவே இப்போது பெட்டியை ஒளித்து வைத்துக்கொண்டு பாசாங்கு செய்கிறான் என்று சிருஷ்டித்துக் கொள்வதும் சகஜம்.

நாகநாதய்யருக்கோ, இது ஒரு பெரிய புதிராக இருந்தது. சந்துருவின்மீது அவருக்குச் சந்தேகமே இல்லை; தம்முடன் சண்டைபோட்டவன்தான் ஜானகியின் காதலனான நடராஜன் என்பதும் தெரியாது. ஆனால், ஜானகிக்கு வேண்டப்பட்டவர்கள் யாரோ செய்த வேலையாகத்தான் இருக்கும். இது, சாதாரணத் திருட்டல்ல என்ற சம்சயம் மட்டும் இருந்துகொண்டே யிருந்தது. பெட்டி களவாடப்பட்ட விஷயம் தெரிந்திருந்தால் ஜானகி இப்போது கேட்க வரமாட்டாளே! ஒருகால் போய்விட்டதா என்று பார்க்கவே வந்திருப்பாளோ? இடுப்பில் கையை வைத்துக்கொண்டு சுற்றிச் சுற்றிப் பார்த்து விழித்தார்; பிறகு திடீர் என்று ஏதோ நினைவு வந்தவர்போல், ஜானகியின் பக்கம் திரும்பி, "ஜானகி! அதுயார் பெட்டி? என்ன?" என்றார்.

ஜானகிக்கும் ஒரே திகைப்புதான். நடராஜன் ஒரு கடிதத்தைப் புஸ்தகத்திலுள் வைக்கிறான்; அதைச் சிறிது

நேரம் கழித்துப் பார்த்தால் அங்கே காணோம்! திண்டுக் கல்லில் ரயில் நின்றபோது இறங்குகிறான், அது புறப் பட்டபின் பார்த்தால் அவன் ஏறக் காணோம்! அவன் பெட்டியையேனும் பத்திரப்படுத்தலாமென்று ஒரு கிழவனாரிடம் ஒப்படைத்து வைத்தால் அதையும் காணோம்! இப்படி எடுத்ததெல்லாம் காணாமல் போகிறதென்றால் இதற்கு ஒரு முடிவு கிடையாதா? இந்த யோசனையில் திகைத்துநின்ற ஜானகியை இரு ஜோடி கண்கள் குரோதம் ததும்பும் சந்துருவின் கண்களும், சந்தேகம் நிறைந்த நாகநாதய்யர் கண்களும் உறுத்துப் பார்த்தன.

"அது யார் பெட்டி? என்ன?" என்றான் கிழவர் இரண்டாம் முறையாக.

"அந்தப் பெட்டியா?" என்றாள் ஜானகி திருப்பி.

"ஆமாம்; நீ என்னிடம் மதுரையில் கொடுத்தது தான்!"

"அது என் சிநேகிதியின் பெட்டி என்னிடம் அதைக் கொடுத்து வைத்திருந்தாள்" என்று ஜானகி அவர்களை நேரில் பாராமலே பதில் சொன்னாள்.

"ஓஹோ!" என்றார் நாகநாதய்யர் பொதுவில் சந்துரு புரிந்துகொள்ளாதபடி.

"ஓஹோ!" என்றான் சந்துரு, உதட்டைக் கடித்துக் கொண்டு, நாகநாதய்யர் ஊகித்துக்கொள்ள முடியாதபடி.

"அது எப்படி மாயமாய் மறைந்துவிட்டது? என்ன? இருக்கட்டும்! நாளைக்குக் காலையிலே, கான்ஸ்டபின் கன்னாயிரத்தைத் தருவிச்சு ஏற்பாடு பண்ணுகிறேன்; வர வரக் கெட்டுப்போச்சு! ஊரில் அஸ்தமிக்கிறதற்குள் திருட்டா! என்ன?" என்று உறுமினார் நாகநாதய்யர்.



"கன்னாயிரம் என்ன, பெரியப்பா, செய்துவிடுவான்? உங்கள் கணக்கில் நாலு நாளைக்கு டிபன் சாப்பிட்டு விட்டுப் போவான்; அவ்வளவுதான் நடக்கப்போகிறது!"

"உனக்குத் தெரியாது இதெல்லாம்! 'பந்தாப்'படி செய்துடணும். பின்னால் 'கம்ப்ளெயிண்ட்' செய்யலை என்கிற புகார் கூடாது. ஏன், போலீஸ் டிபார்ட்மெண்ட் ஒன்றுமே செய்யாமலா இருக்கிறது? என்ன?"

"அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், பெரியப்பா! இன்று ராத்திரி முதல் ஆரம்பித்து, இந்த ஸூட்கேஸ் விஷயம் முடிகிறவரையில் நான் பார்த்து விட்டுவிடப் போறேன். அப்பா வெளியிலிருந்து வந்த வுடன், அவருக்கு ஏதாவது தெரியுமா என்று விசாரித்துக் கொண்டு..." என்றான் சந்துரு.

நாகநாதய்யர் பதில் ஒன்றும் சொல்லாமல் உச்சி மோட்டைப் பார்த்தார். பிறகு ஜானகியின் விருப்பப்படி அவளுடன் புறப்பட்டுக் கீழப்புதுத்தெரு வீட்டைப் போய் அடைந்தார்.

சுப்புரத்தினம் சீட்டாட்டத்திலிருந்து விடுபட்டுத் திரும்பி வந்தவுடன் பெட்டி ஒன்று இருந்ததையும் அது காணாமல் போயிருப்பதையும் தெரிந்துகொண்டார். அவர் எவ்விதமான ஆச்சரியமோ அநுதாபமோ தெரிவிக்க வில்லை.

"சரிதாண்டா, சந்துரு! எவனாவது சோமாரி எடுத்துக்கொண்டு போயிருப்பான். போகட்டும், போ! பிரமாதமா ஒண்ணும் இல்லையே அதில்?" என்று விசாரித்தார்.

"அப்படி ஒன்றும் இல்லை..."

சுப்புரத்தினம் புழக்கடைப்பக்கம் கேணிக்கரைக்குச் சென்றார். போகும்போது, சந்துரு பின்தொடரவில்லை என்று ஊர்ஜிதம் செய்துகொண்டு நேற்றுதிருக்குப்

பக்கத்தில் தயங்கி நின்றார். அங்கே ஒரு மாடத்தில் கைவைத்து ஒரு கல்லை அப்புறப்படுத்தி அதனடியில் துழாவினார். அவர் எதிர்பார்த்த ஒரு பண்டம் அங்கே இருக்கவே, கல்லை யதா ஸ்தானத்தில் வைத்துவிட்டு விர்ரென்று மேலே சென்றார்.

நடராஜன் கைக்கடிகாரத்தில் பத்தாகியிருந்தது. கன்னத்தில் கை வைத்துக்கொண்டு சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டான். சென்னைப் பட்டணத்தில் பார்த்த அளவுகூட ஜானகியை இங்கே அசலூரில் வந்து அவனால்-சந்திக்க முடியவில்லை. இதுவும், மதுரையாக இருந்துவிட்டாலோ அது சாத்தியமே இல்லை. மங்களம் அந்த வீட்டிலேயே இருக்கும்வரை முடியவே முடியாது; கழுத்தைச் சீவிவிட மாட்டாளா? துணிச்சலை வருவித்துக் கொண்டு, நடந்தது நடக்கட்டுமென்று ஜானகியுடன் பேசிவிடுவோமென்றால், ஓர் அச்சமும் கூடவே வந்தது. ஜானகிக்கே அதனால் பெருந்தொந்தரவுகள் ஏற்பட்டு விட்டால்...! அவர்கள் மனோபீஷ்டம் ஒருமிக்க நிறைவேறாமல் போகும்படி ஏதாவது நேர்ந்து விட்டால்...!

'இத்தனை ஆபத்துகளையும் இனிச்சமாளிக்க முடியுமா? தினம் ஒரு சத்ருவாகவல்லவா விருத்தியாகிறார்கள்! இந்தச் சுந்தரம் ஒரு நண்பர்தான்; இவர் செய்யக்கூடியது அதிகம் இல்லை. இவர் கோஷ்டியில் ஜகதீசனைச் சேர்த்துக்கொண்டாலும், ஐயோ பாவம், அவனால் ஆகக் கூடியதுந்தான் எதுவும் இல்லை'... இப்படி எண்ணங்கள் ஓடி, 'நண்பன் மணியைத் தருவித்து வைத்துக்கொள்ளலாமா? நிச்சயமாக அவனால் ஒத்தாசை இருக்கும்!' என்ற முடிவுக்கு வந்தான்.

"யாரோ கதவை இடிக்கிறார்களே! மூழ்கிப் போயிருக்கிறீரே நடராஜ்!" என்றார் சுந்தரம் எழுந்து வந்து உட்கார்ந்து கொண்டு. அப்போதுதான் அவனுக்குச் சுய உணர்வு வந்தது. அவசரமாகப் போய்க் கதவைத்



திறந்தான். திறந்தவுடன், அவ்வளவு அவசரமாகத் திறந்திருக்க வேண்டியதில்லை என்றும் எண்ணினான். ஏனெனில், திருப்பிக்கூடப் பாராமல் உள்ள விறைப்பாகச் சந்துரு நுழைந்து ஹாலில் வந்து நின்றான்.

"ஹூம்! நீ இங்கேதான் இருப்பாய் என்று எதிர் பார்த்தேன். சரியாக இருக்கிறது!" என்றான்.

சுந்தரம் தலையைத் தடவி விட்டுக்கொண்டு, "நீங்கள் யார், ஸார்?" என்று கேட்டார், கடுமை மாறாத குரலில்.

"என்னை உங்களுக்கு நேரில் பரிச்சயம் இல்லை. நான் இந்த ஊர்க்காரன்தான் என்றாலும், இங்கே உங்கள் நண்பனாக இருந்து வரும் நடராஜனுக்கு ஒரு நண்பன் என்று அறிமுகம் செய்துகொள்கிறேன். நாங்கள் பழைய சிநேகிதர்கள், பள்ளி நேயர்கள். ரொம்ப விசுவாசம் எங்களுக்குள். வித்தியாசமில்லாமல் நடந்து கொள்பவர்கள்" என்றான் சந்துரு இடக்காக

"ரொம்ப சந்தோஷம்! ரொம்ப சந்தோஷம்! என் நண்பனுக்கு யார் நண்பரானாலும் அவரும் எனக்குங்கூட நண்பர்தான்! ஆமாம் காலையில் வரப்படாதோ? இந்த அகால வேளையிலா...?"

"அக்கிருத்தியங்கள் நடந்திருக்கிறபோது அகால வேளையில் வருவதில் ஒன்றும் பிசகில்லை! அதனால்தான் வந்தேன்."

"புதிர் போடுகிறீரே! ஓய்!"

"புதிருக்கு விடை முன்னாலேயே உங்களுக்குத் தெரியும். ஏய் நடராஜ்! என்னைப் பார்! ரொம்ப அற்புத வேலை நீ செய்திருக்கிறாய்! சபாஷ்! உனக்குப் பெட்டி அடிப்பதில் 'டிப்ளமா,' கொடுக்கச் சொல்கிறேன்!"

நடராஜன் அவன் கை வீச்சுக்கு அப்பால் நகர்ந்து கொண்டு, "நீ என்ன சொல்கிறாய்?" என்றான்.

"அடேய்! உன்னை முதலில் பார்த்தபோது நீ விபூதி யிட்டுக் கொண்டு குனத்தில் 'ஸந்தி' பண்ணிவிட்டுக் கோயிலுக்குப் போகும் ஆஸ்திகன் என்று நினைத்தேனடா! நீ தஸ்கரம் செய்கிறவனடா!"

"இருக்கட்டுமே! நீ கண்ணால் கண்டதை வைத்துக் கொண்டு மயங்கிப் போய்விட்டதாக ஒப்புக்கொள்கிறாய்; அவ்வளவுதானே!"

"அது சரி; இப்போது காணாமல் போய்விட்டதைப் பார்த்து விழித்துக்கொண்டேன்."

"இதென்ன பேச்சு! எனக்குத் தூக்கம் வருகிறதே! ஏதாவது காரியம் இருந்தால் பேசுங்கள்! இல்லாவிட்டால், விடுங்கள்!" என்றார் சுந்தரம்.

"ஸார், உங்களிடம் பெட்டி அகப்பட்டுவிட்டது; தூக்கம் பலமாக வருகிறது. நான் அதை இழந்து விட்டேன்; என் தூக்கம் போய்விட்டது" என்றான் சந்துரு.

"ரொம்ப ஆப்தர், வித்தியாசமில்லை எங்களுக்குள்ளே என்றீர்... என்னவோ பெட்டிக்காக ஓடிவருகிறேன் என்கிறீரே!"

"டேய், நடராஜன்! எனக்கு அந்தப் பெட்டிகூட இப்போது வேண்டாம்! அதை எப்படி என் வீட்டிலிருந்து நீ கிளப்பினாய் என்று மட்டும் சொல், போதும்!"

"வாயு-ஜபம் பண்ணி, காற்றோடு காற்றாக அடித்து விட்டார், இவர். போய் வாரும், முன்னாடி!" என்றார் சுந்தரம் குறுக்கே.

நடராஜன் பொதுவாக, "சந்துரு! நீ என்ன பேசு கிறாய் என்றே..." என்று ஆரம்பித்தான்.

அவர்கள் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளாம லேயே, "நடராஜ்! உன்னை வாசல்வரை கொண்டுவந்து விட்டேன். வெறுங்கையுடனே வெளியே அனுப்பினேன்.



திரும்பி உள்ளே போனால் காணோம் அப்பா பெட்டியை! இது எந்த ஊர் வேலை?" என்றான்.

"திருச்செந்தூர் வேலை! போம்!" என்றார் சுந்தரம் பளிச்சென்று.

"சொல்லப்பா! எப்படிச் செய்தாய்? இன்றிரவு நான் தூங்கமாட்டேனே, அது தெரிந்துகொள்ளாமல்!"-சந்துரு வின் கண்கள் நாற்புறமும் சுழன்றன. ஸூட்கேஸின் மீது தயங்கின. "ஆ! அதோ இருக்கிறதே பெட்டி! பயப் படாதே, அதை நான் இனிக் கையால் தொடமாட்டேன். அதில் இருந்த முக்கியமான பண்டத்தை இதற்குள்தான் நீ பத்திரம் செய்திருப்பாயே! இப்போ நான் சொல்ல வந்ததே வேறு."

"அதை வாசலில் போய்ச் சொல்லும்...நடராஜன்! இவரை மெள்ளியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போ. நான் படுக்கவேண்டும் இப்போ!" என்றார் சுந்தரம்.

ஒருகணம் சந்துருவின் கண்களில் கனல் வீசியது; மறுகணம் அது அடங்கி, "மிஸ்டர் நடராஜ்! இதுவரை என் நண்பன் என்ற ஹோதாவில், நாளது ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி காலேஜில் சந்திக்கப் போகிறோம் என்ற முறையில் பேசினேன். இப்போது மறுபடி சொல்கிறேன்; அதைச் சொல்லவே வந்தேன். மறுபடி 24 மணி அவகாசம் தருகிறேன். இந்தத் திருச்செந்தூர் எல்லையிலிருந்து நீ அதற்குள் போகாவிட்டால்..."

"நீர் முன்னால் போய்விடுவீராக்கும்!" என்று சுந்தரம் சொன்னார்.

"உமக்கும் சேர்த்துத்தான் இது திருநெல்வேலி ஆஸ்பத்திரி வாசம் செய்ய வேண்டியிருக்கும்; ஆமாம்! நான் பொல்லாதவன்!"

"ஹு! உம்மை நல்லவன் என்று யார் எப்போது நினைத்தான், முட்டாள் பயல்!"

"நான் போகலாமா?"

"உம்மைப் போகச் சொல்லிப் பதினைந்து நிமிஷம் ஆச்சே!" என்றார் சுந்தரம்.

சந்துரு வெளியே சென்ற பிறகு நிம்மதியாகத் தூங்கினார் சுந்தரம். அவர் விட்ட நீண்ட நீண்ட குறட்டைகளில் அவரது மனச்சாந்தி பிரதிபலித்தது. ஆனால், நடராஜன் இரண்டு மணிவரை விழித்தபடி பலவாறு யோசனை செய்தான். காலையில் எழுந்ததும் முதல் காரியமாக நண்பன் மணிக்கு ஒரு தந்தி அடிப்ப தென்ற பழைய முடிவை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

அன்று வெகுநேரம் தூங்காத ஆத்மாக்கள் வேறு பலவும் இருந்தன. ஜானகி வெறும் திகைப்பில் இருந்தாள்; நடராஜன் எங்கே, அவன் பெட்டி எங்கே என்று திரும்பத் திரும்ப அலட்டிக் கொண்டாள்.

ஜகதீசன் புரண்டு படுப்பதும் விழித்துத் தவிப்பதுமாக இருந்தான். மங்களத்தின் பெட்டியைத் திறந்ததற்காக அவன் கழுவேற்றப்பட்டு விட்டால் என்ன செய்வதென்று நடுங்கினான். மங்களம் விளக்கடியில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீண்ட கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். சற்றைக்கொரு தரம் நிறுத்தி, "எழுந்திருந்துதான் கூட நாலு வரி எழுதி வைக்கிறதுதானே) எப்ப பார்த்தாலும் தூக்கந்தானா?" என்று கணவனை அதட்டிக்கொண் டிருந்தாள்.

ஆந்திரவாடு வீட்டில் நாட்டியப் பெண்ணுங்கூட ஒரு கடிதம் எழுதினாள். கண்ணில் வரும் நீரைத் துடைப் பதும், காண்டாமிருகம் போல் படுத்திருக்கும் ஆந்திரவாடுவை எரிக்கிறாப்போல் பார்ப்பதும், மறுபடி இரண்டு வரி எழுதுவதுமாக இருந்தாள்.

காலை ஒன்பதாவது மணிக்குத் தபாலாபீஸுக்குப் போன நடராஜன், குமாஸ்தாவுடன் ஒரு தந்தி பாரத்தை வைத்துக்கொண்டு மிஸ் ஜகம் பேசுவதைக் கவனித்தான்.



அவனுடன் அங்கே பேச விரும்பாதவனாகச் சற்றே ஒதுங்கினபோது, அவள் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்து கிடந்த ஒரு காகிதம் அவன் கண்ணில் பட்டு விட்டது. மணி மணியாக எழுத்துகள், வரிவரியாக முத்துக் கோத்தாற்போல் இருந்தன. நின்றபடியே இரண்டு வரி வாசித்தவன், தொடர்ந்து ஏழெட்டு வரி களைப் படித்துவிட்டான். படிக்கப் படிக்க நெஞ்சு படபடத்தது: "இதுவே சரியான சமயம்; பக்கத்து வீட்டில், என்கூட வந்தவர்கள் வைர நகைக்காரிகள் இரண்டு பேரும் இருக்கிறார்கள், அதற்கடுத்த வீட்டிலும் அதிக ஆள் இல்லை. நம் ஏற்பாட்டின்படி தனி வீடாகவே பிடித்துவிட்டேன். உன்கூட வேறு ஆள் தேவை இல்லை. நாமே காரியத்தை நடத்திக்கொண்டுவிடலாம். இன்றே புறப்பட்டு..."

இதற்குமேல் வாசிக்க முடியாதபடி, பேச்சை முடித்துக் கொண்டு மிஸ் ஜகம் திரும்பிவிடவே, நடராஜன் நன்றாக ஒதுங்கிக்கொண்டு தன் தந்தியை எக்ஸ்பிரஸாக எழுதினான்:

"உடனே வருக, உதவி தேவை.

—நடராஜன்",

இந்த மிஸ் ஜகம் யாரைக் கொள்ளையடிக்கப் போகிறாள்? வரப்போகும் கொள்ளையர்கள் யார்? மணியை வரும்படி எழுதுவது எத்தனை புத்திசாலித்தனம்?

## 7

"சிவமன்றி வேறே வேண்டாதே - யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத் தாண்டாதே - நல்ல
சன்மார்க்க மில்லாத நூலை வேண்டாதே!"

—கடுவெளிச் சித்தர் பாடல்

இருபத்தாறு வருஷங்களுக்கு முன் திருவையாற்றி லிருந்து ஹரிஹரன் என்கிற யுவன் மிகுந்த தயக்கத்துடன்

ஒரு மூன்றாம் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு உத்தியோகம் தேடிக்கொண்டு சென்னைப் பட்டணத்துக்குக் கிளம்பினான். அப்போது அவனைப் பார்த்தவர்கள் எல்லாம், "இந்தக் கட்டுப்பெட்டி பட்டணத்திற்குப் போய் என்ன செய்யப் போகிறது! இதன் முகத்தைப் பார்த்தவுடனேயே 'வேலை காலி இல்லை' என்று சொல்லிவிடப் போகிறார்கள். இதுவும் பயந்துகொண்டு ஓடிவிடும்!" என்று பரிகாசம் செய்தார்கள். "பார்த்துக்கொண்டே இரும்; திரும்பி வராவிட்டால் என்பேர் சேஷன் இல்லை" என்று மார் தட்டினார்கள் திருவையாற்றுச் 'சேஷன்'கள். அதற்காக அவர்கள் பேரில் நாம் குறை சொல்லிப் பயன் இல்லை. ஹரிஹரன் வாயில்லாப் பூச்சியாக, பரம சங்கோசியாக வளர்ந்துவிட்டான். அந்த நாளில் நடந்து செல்லும்போது கை வீசி நடக்கக்கூட அவனுக்கு அச்சம்! யாராவது அதட்டிப் பேசினால், அழுதே விடுவான். அப்பேர்ப்பட்ட ஹரிஹரன் பட்டணம் வந்தவேளை திருவையாறு சேஷனுக்கும் தஞ்சாவூர்ச் சுப்பனுக்கும் எட்டாத மகோந்நதமான ஒரு சுபவேளையாக இருக்கவே, ஹரிஹரனை அது 'குப்' 'குப்'பென்று தூக்கி, டெல்லி வரையில் கொண்டுபோய் ஒரு வேலையில் அமர்த்தியது. அது எந்த வேலையானாலும் ஒரே தெய்வத்தை ஆராதிப்பது போன்று உறுதியுடனும் அந்தரங்க விசுவாசத்துடனும் செய்ததால் நல்ல ஸ்திதிக்கு ஏற்றிவிடும் என்ற உண்மைக்கு ஓர் அத்தாட்சிபோல் ஹரிஹரன் ஏற்ற உத்தியோகமும் அவனை மேலே மேலே தூக்கிக்கொண்டு போயிற்று.

ஹரிஹரன் மூத்த மனைவியாக ஜயம் வாய்த்த வேளைதான், இந்த அதிர்ஷ்டத்துக்கெல்லாம் காரணம் என்று சிலர் சொன்னார்கள். பிள்ளை பிறந்த ராசி அப்படி அப்பனை அமோகமாகப் போட்டுப் புரட்டுகிறது என்று எத்தனையோ வயிற்றெரிச்சல்காரர்கள் பொருமி,



அதனால் சிறிது மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள்.

"ஹரிஹரன் அவனுடைய முதலாளியைக் 'காக்காய்' பிடிக்கிறான். அவன் மாதிரி நம்மால் ஒருகாலும் கேவலமாக நடந்துகொள்ள முடியாது. சேச்சே!" என்று வெறுத்து ஒதுங்கிக்கொண்ட பேர்களும் அநேகம். எது எப்படியானால் என்ன, யார் குறை கூறினால் என்ன, ஹரிஹரன் சக்கரம் சுழன்றது; பணம் வந்து குவிந்தது. ஜயத்தின் கைகளில் வைர வளையல்கள் ஆடின. ஆனால், ஆனால் கடவுளும் சேர்ந்துகொண்டு ஹரிஹரனை நல்ல சமயத்தில் ஓர் ஆட்டு ஆட்டி வைத்தார். இரண்டாம் தடவையாகக் கர்ப்பம் தரித்த ஜயம், ஆஸ்த்மா டயபீட்டினால் இளைத்துப் போயிருந்தவள், திடீரென்று ஒருமிக்க இளைத்துப் போனாள். வைத்தியர்கள் பார்த்துவிட்டு, "இது 'ட்யூபர்க்குலோஸிஸ்'" என்று தலையை ஆட்டினார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம் என்று புரிந்துகொள்ளுமுன்பு ஒரு நாள் ஹரிஹரன் முகத்தை என்னவோபோல் பார்த்து மிரள மிரள விழித்துவிட்டுப் போய்விட்டாள் ஜயம். "என் பிள்ளை உன் கையில் இருக்கிறது. அவனை நீ இனிமேல் எப்படிப் பார்த்துக்கொள்ளப் போகிறாய்?" என்ற கேள்வி அந்தப் பேதையின் கண்களில் கடைசி கடைசியாக ஊசலாடினதாக ஹரிஹரன் எண்ணி எண்ணிக் கரைந்து போனான்.

ஜயத்தை விட்ட வாழ்க்கை வாழ்ந்தென்ன என்ற சர்வ சகஜமான விரக்தியுடன் ஆறு மாதங்கள் தள்ளினான் ஹரிஹரன். குழந்தை நடராஜனுக்கு இரண்டாவது வயது நடந்துகொண்டிருந்தது. அவன் சிறு முகத்தைப் பார்க்குந்தோறும் பின்னால் ஜயத்தின் அன்பு — முகம் ஒரு சுடர் போல் ஹரிஹரன் கண்ணின் முன்னே ஜொலித்தது. ஜயத்தின் முகத்திலிருந்த களை, வேறு எந்தப் பெண் முகத்தில் வரும் என்று எண்ணி நொந்துகொண்டான்.

ஹரிஹரன் வைராக்கியம் உறுதியானதுதான். ஆனால், அவன் நிலையிலுள்ளவர்கள் எல்லோரின் வைராக்கியத்தைப் போலவே, தாக்குதலுக்கு நிற்கவில்லை. பெண்ணைப் பெற்றவர்களின் இடி பொறுக்காமல் அது ஒரு நாள் வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து ஹரிஹரன் விசாலத்தை மணந்து கொண்டது பற்றித் தங்கள் சந்தோஷத்தைப் பல ஆசிரியர்கள் தங்கள் பத்திரிகைகளின் மூலம் தெரிவித்துக்கொண்டார்கள். 'விசாலத்தின் அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறது, பார்க்கலாம்' என்று ஆசைப்பட்ட பல தாயாதிகளுக்குச் சோர்வு உண்டாக்கும் வகையில் ஹரிஹரன் நிலைமை மேலும் உன்னதமாக ஓங்கியது. 'ஹரிஹரன்' என்ற பெயர், 'ஹரன்' என்பதாகச் சுருங்கியது; அந்தப் பெயரால் கூப்பிட்டால் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய வகையில் பிராபல்யமும் பெருகிற்று. மணமாகி ஏழுவருஷம் வரையில் விசாலத்துக்குக் குழந்தைகள் ஏதும் இல்லை. குழந்தை நடராஜன் ஒன்பதாவது வயது வரையில் விசாலத்தின் கண்மணியாக, கண்ணின் கருமணியாக இருந்தான். "என் பிள்ளை சொன்னான், என் பிள்ளை கேட்கிறான்" என்று எடுத்ததற்கெல்லாம் அவன் சீராட்டப்பட்டான். 'சிறிய தாயார் என்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும்! எந்த முட்டாள்கள், நாவல்களில் சிறிய தாயாரின் கொடுமையைப்பற்றி வர்ணிக்கிறது! என்று ஹரன் எண்ணிக்கொண்டான். குழந்தை நடராஜனுக்குப் பத்தாவது வயதில் கேது தசை ஆரம்பமாயிற்று; அதே சமயம் அவனுக்குப் பிடிவாதமும் வாய்த்துடுக்கும் எங்கிருந்தோ வந்து விருத்தியாயின. தெய்வ சங்கல்பத்தால் விசாலமும் கர்ப்பவதியாகி ஒரு பெண் குழந்தைக்குத் தாயாரானாள். நடராஜன் இனித் தன்கூட டெல்லியில் இருப்பது தனது உடம்புக்கும் அவனுடைய உடம்புக்கும் ஒத்துக்கொள்ளாது. இதை முற்றவிட்டால் விசாலம் மனநிலைக்கும் சரிப்பட்டு வராது என்பதை ஊகித்த ஹரன், விசாலத்தின் இஷ்டத்திற்கு விரோதமாக,



நடராஜனைத் திருவையாற்றில் தனது ஒன்றுவிட்ட தமக்கையின் வீட்டில்விட்டு, அவன் வளர்ப்புக்கும் படிப்புக்கும் மாதாமாதம் பணம் அனுப்பிக்கொண்டிருந்தான். இப்படி வளர்ந்த நடராஜன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்வதற்குள் தகப்பனை இருமுறைதானே பார்த்திருக்கிறான். அப்புறம் சென்னையில் ஹாஸ்டலில் சேர்ந்து காலேஜில் படிக்க ஆரம்பித்தான். அப்போதும் ஒரு முறையே பார்த்திருக்கிறான். எனினும், பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை கடிதம் போடத் தவறியதில்லை. திருவையாறு அத்தைக்காரிக்கு நடராஜன் சென்னைப் பட்டணம் வந்த இரண்டு மாதத்திற்கெல்லாம் கிணற்றங் கரையில் சறுக்கி விழுந்ததில் கால் சுளுக்கிக்கொள்ளவே ஜாகையைக் காலி செய்துகொண்டு புதுக்கோட்டையில் தன் தமக்கை வீட்டோடு போய்விட்டாள். ஆகவே, நடராஜன் பட்டணமே பட்டணம் என்று தங்கிவிட்டான். தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஹாஸ்டல் நண்பன் மணியுடன் ஒரு முறை கிராமத்துக்கு வருவதாக அவன் வாக்களித்திருந்துங்கூட ஒத்திப்போட்டுக் கொண்டே வந்து, இப்போது எதிர்பாராத விதமாகத் திருச்செந்தூர் போயிருக்கிறான்.

டெல்லியில் நடராஜனின் சின்னம்மா விசாலம் அவன் வீட்டைவிட்டுப் போன பின்பு எவ்வித விச்ராந்தியையும் காணவில்லை. அண்டை அயலாருடைய தூஷணைகள் அவள் காதை எட்டின. அவளும் அவைகளுக்குத் தயாரான கட்டைதான். ஆனால், தலைச்சன் தங்கம் பிறந்தபின் அடுத்தடுத்து ஐந்து பசங்கள் பிறந்ததில் உடல் வலிவு குறைந்து போனாள். தன் குழந்தைகளையும் மூத்தாள் பிள்ளையையும் பிரிக்காமல் இருந்தால் ஒருகால் அவன் இவர்களுக்கு ஆதரவாக இருப்பானோ என்று மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. நடராஜனைப்பற்றிக் கேள்விப் படுவதிலிருந்தும் சரி, அவன் கடிதங்களைப் படிப்பதிலிருந்தும் சரி, அவளுக்கு அவன்மீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. ஹரனிடம் அடிக்கடி நடராஜனுக்கு

டெல்லியிலேயே ஓர் உத்தியோகம் பார்த்துத் தங்கள்கூடக் கொண்டு வைத்துக்கொள்ளலாமென்று நச்சரிக்கலானாள்.

ஹரனுடைய போக்கில் சில வருஷங்களாகவே ஒரு விசேஷமான மாறுதல் ஏற்பட்டிருந்ததை இந்த இடத்தில் சொல்லாமல் இருக்கலாகாது. ஒரு காலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு தெய்வ பக்தியும் ஆசார அநுஷ்டானங்களும் நிரம்பியிருந்தாரோ, இன்று அவ்வளவுக்கும் நேர் எதிரிடையாக இருந்தார். டெல்லி வாசமும் தொழில் முறையில் ஏற்பட்ட சகவாசங்களும் ஓரளவு காரணம் என்றாலும், ஜயத்தின் பிரிவுக்குப் பிறகு இந்தக் குணங்கள் அதிகம் தென்பட்டன. "எத்தனை தெய்வங்களை வேண்டிக் கொண்டேன்! என்ன உபயோகம்! தெய்வம் உண்டானால் அவன் பிழைத்திருக்கிறது தானே!" என்று விதண்டாவாதம் செய்தார். "பழைய நம்பிக்கைகளுக்கு ஒரு முழுக்குப் போட்டாகிவிட்டது" என்று அடித்துப் பேசத் தொடங்கினார்.

விசாலம் ஒரு நாள் தன் புருஷரிடம், "ஏன், நம்ம நடராஜன் கல்யாணத்தைப்பற்றி யோசனையே செய்யாமல் இருக்கிறீர்களே! என் தமையனானால் அவன் பெண்ணுக்குக் கொடுக்கலாமென்று மூன்று லெட்டர் போட்டுவிட்டான். அவனுக்கு ஏதானும் பதில் எழுத வேண்டாமா?" என்று கேட்டாள்.

"போகிறது! நடராஜன் பிறந்ததில் ஓர் உபயோகமாவது இருக்கிறதென்று இப்போது ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?" என்றார் ஹரன்.

"என்ன அர்த்தம் உங்கள் பேச்சுக்கு?"

"உன் தமையன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறது ஓர் உபயோகம் இல்லையா?"

"நான் உங்கள் பிள்ளை இங்கே இருக்கவேண்டாம் என்று சொன்னேனா? உங்க ஒன்றுவிட்ட தமக்கை சாதித்துவிடப் போகிறாள் என்று நீங்கள்தான் கொண்டு



விட்டீர்கள்; அப்புறம் காலேஜ் படிப்பு முடியட்டும் என்று அவன் அங்கே தங்கிவிட்டான். ஆச்சு; நாளைக்கே ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டு இங்கே நம்முடன் அவனைக்கொண்டு வைத்துக்கொண்டால்..."

"அதெல்லாம் இல்லை. கல்யாணத்தைச் செய்து வைத்தவுடன் நான்தான் அங்கே போய்விடப் போகிறேன். டெல்லி எனக்குக் கசித்துவிட்டது சுத்த 'பாஷ்!' என் பிள்ளையுடன்கூட நான் இருக்கப் போகிறேன்!"

"பேஷாக இருப்போமே! யார் குறுக்கே நிற்கிறார்களாம்! இப்போ அண்ணாவுக்கு என்ன லெட்டர் போடுகிறது?"

"உன் அண்ணாவைவிட ஆப்தர் ஒருத்தர் எனக்கு இருக்கிறார். திருச்சிராப்பள்ளியில் பாங்கி வைத்து நடத்துகிறார்."

"எனக்குத் தெரியாதாக்கும் அவரை? கணபதி சுப்பிரமணிய அய்யர்தானே?— பெரிசாகக் குங்குமத்தை இட்டுக்கொண்டு முன்னெல்லாம் வருவாரே!"

"அவரேதான்! அவர் நம்ம நடராஜனுக்கு ஒரு பெண் பார்த்திருப்பதாக எழுதியிருக்கிறார். உங்கண்ணா மூன்று லெட்டர்தானே போட்டார்? இவரிடமிருந்து எனக்கு வந்தது நாலு!"

"நன்றாயிருக்கிறதே! கடுதாசி கணக்கை வைத்துக் கொண்டுதான் கல்யாணம் நிச்சயம் செய்யப் போகிறீர்களாக்கும்! இது தெரிந்தால் எங்கண்ணா தினம் ஒரு கார்டு போடுவானே!"

"சுத்த 'பாஷ்'! இப்போ நடராஜனோடு தேவலை. அவன் பேர் போட்டா போட்டியில் இருக்கிறது! ஆமாம், அந்தப் பயலிடமிருந்து லெட்டர் வந்து ரொம்ப நாளாகி விட்டது போலிருக்கிறதே! ஏலே, கிட்டு, எப்படா வந்தது?"

கிட்டு என்கிற எட்டு வயதுப் பயல் நடராஜனைப் பார்த்ததே இல்லை என்றாலும் அவனிடம் அத்யந்த பாசம் வைத்துவிட்டவன். அண்ணா எப்படியிருப்பான் என்று மனத்தில் நினைத்துத் தன் அன்பைச் சொரிந்து கொண்டிருந்தான். "நடராஜண்ணா கடுதாசி வந்து இருபத்து நாலுநாளாகிறது. அப்பா!" என்றான் கன்னத்தில் அறைந்தாற்போல்.

"ஏன் போடவில்லை? தவறாமல் வருமே... உம்! விசாலம் எனக்கு ஆபீஸ் விஷயம் ஒன்று மெட்றாஸில் இருக்கிறது. 'பிளேன்'லே ஒரு 'டிரிப்' அடிச்சு, நடராஜனையும் பார்த்துக்கொண்டு வரலாம்னு இருக்கிறேன்."

"நானும் வருகிறேனே!"

"சுத்த 'பாஷ்'! நான் நாலே நாளில் திரும்பப் போகிறேன். கல்யாணம் ஏதாவும் நிச்சயமானால் எல்லாரும் போய்த்தானே ஆகணும்?"

"அப்படியானால் அண்ணா விஷயம்?"

"அட ஆகட்டுமே, அம்மா! நடராஜன் என்ன சொல்கிறான் என்று கேட்போமே ஆச்சு, நாலு மாசமானால் காலேஜ் மூடி விடுகிறார்கள். எங்கே ஓடிவிட்டான் அவன்?"

இப்படியாக எதிர்பாராத விதமாக ஹரன் சென்னைக்கு விஜயம் செய்தபோது நடராஜன் ஓடித்தான் போயிருந்தான்! ஹரன் காலேஜ் ஹாஸ்டலில் நடராஜனைப்பற்றி ஸப்-வார்டனிடம் விசாரித்தார். அவர் அதட்டலையும் பேசிய தோரணையையும் நடுநடுவே பேசிய ஹிந்தியையும் கவனித்து ஸப்-வார்டன் திகைத்துப் போனார். "எனக்கு நிச்சயமாகத் தெரியாதே! இங்கே அவனுடைய சிநேகிதர்களில் மணி என்பவன் அவனுக்கு ரொம்ப வேண்டியவன். அவனுடன் ஒருகால்



போயிருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்று ஒதுங்கினபடி தணிவாகக் கூறினார்.

ஹரனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "க்யா ஸாப்! அவன் யார் அய்யா மணி? மணி கோன் ஹை! அவன் அட்ரஸ் என்ன? ஐ டை போல்னே ஸக்தே!" என்று தடியைத் தட்டினார்.

வார்டன் ரிஜிஸ்டரைத் திறந்து, மணியின் பெயருக்கெதிரில் இருந்த அவன் தகப்பனார் பெயர், விலாஸம் எல்லாம் படித்துச் சொன்னார், "மாயவத்தில் வீடு இருக்கிறது. பக்கத்தில் ஒன்பது மைலில் கிராமம்" என்றார்.

"என்னய்யா 'பாஷ்!' ஒரு ஹாஸ்டல் ஸ்டூடண்ட் ஊருக்குப் போகிறான் என்றால் எங்கே போகிறான் என்று கேட்கிறது கிடையாதா?"

"அது 'ஸ்ட்ரைக்' ஆகல்லே..."

"நோ நோ! டில்லியிலே பக்கத்து வீட்டுக்காரன் போனால்கூட நாங்கள் கேட்போம். ரொம்ப 'ராட்டன்' ஸைத் இந்தியா!" என்று ஹரன். வெறுத்துக்கொண்டு, அன்றிரவே 'போட்' மெயிலில் ஏறிவார். நடராஜனைக் கண்டதும், என்னடா பிள்ளை நீ, சுத்த 'பாஷ்'! எங்கே போகிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருவதில்லை? கத்தா ஹை!" என்று அதட்ட வேணுமென்று துடிதுடித்துக்கொண்டே சென்றார்.

சூரியன் மாயவரம் வள்ளலார் கோயில் வீதியில் தினம் தினம் உதயமாகும்போது முதல் முதலாகப் பட்டுப் புடைவையை மடிசார் வைத்துக் கட்டிக்கொண்டு முன் வாசலில் அழகாக மாக்கோலம் போடும் ஒரு பெண்மணியைத்தான் பார்ப்பது வழக்கம். பார்த்தவுடன் உள்ளம் பூரித்துத் தன் கதிர்களைத் தெருவெல்லாம் வாரி இறைப்பான். அந்தப் பெண்ணும் அவனைப் பார்த்துப் பல்வரிசையைக் காட்டிவிட்டு, தனது வேலையில்

முனைவாள். நீண்ட ஜடை போட்ட கேசம்; மாநிறந்தான்; காதுகளில் வைரக்கம்மல்கள்; ஆனால், பழைய நாளைய 'கட்'; எனவே, இந்தக் காலத்தில் போல் 'பப்பள பள பள' என்று வர்ணங்களைக் கொட்டாது. நீண்ட நீண்ட வர்ணச் சுடரொளிகளே அதனுள் தெரியும். இரண்டு மூக்கும் குத்திக்கொண்டு மூக்குத்தி முத்து-பேஸரி அணிந்திருப்பாள். கால்களில் பாதஸரம்; விரல்களில் மெட்டி, பழுத்த கர்நாடகம். ஆனால், திவ்யமான ஒரு களை வீசும்; ஸாத்விகமும் லக்ஷ்மீகரமும் தவழும் வதனம். சிரித்தாலோ, விவரிக்க முடியாத ஒரு வசீகரம். மூன்றாம் மனிதர் உறுத்துப் பார்த்துவிட முடியாதபடி நாணம் மிகுந்த பார்வை.

கோலம் போட்டு முடித்துவிட்டு நிமிர்ந்து, இழைகள் நன்றாக விழுந்திருக்கின்றனவா என்று சரி பார்த்தவள், பின்னால் பூட்ஸ் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். சுமார் ஐம்பது வயதுள்ள ஒருவர், மேல் நாட்டுப் பாணியில் உடை உடுத்திக் கைத்தடியை ஊன்றி நின்றார்.

"குழந்தை, இந்த வீடுதானே மிஸ்டர் மணியின்? உம்?"

பெண்ணின் நெஞ்சு திக்திக்கென்று அடித்தது. கீழே கிடந்த கோலப்பொடிக் கிண்ணியை அள்ளி எடுத்துக்கொண்டு, மருண்ட மான்போல் தாவி, ரேழி வாசற்படி வரை ஓடிப்போய் நின்றாள்.

"இதென்ன, வாஜ்ஹே!" என்று சொல்லிவிட்டு அந்த மனிதர், வாசலில் நின்று, "உன்னைத்தான் குழந்தை! இது தானே மணியின் வீடு?" என்று கேட்டார்.

இதற்குப் பதிலாக அந்தப் பெண் கூடம் வரையில் பின் வாங்கினாள். "ஆம்" என்றும் சொல்லவில்லை; "இல்லை" என்றும் சொல்லவில்லை. ஹரன் பின் தொடர்ந்தார். "ஐயே! இதென்ன சுத்த 'பாஷ்'! வாஜ்ஹே" என்று இரண்டாங்கட்டு வரை சென்று விட்டார். அந்தப்



பெண் வெகு சாமர்த்தியமாக இடையிலிருந்து ஒரு வாசற்படிக்குள் நுழைந்து, கதவையும் ஒருக்களித்து வைத்து அங்கிருந்தபடி கவனித்தது.

பஞ்சகச்சத்தை வரிந்து கட்டிக்கொண்டு தலையில் மேல்துண்டை முண்டாசுபோல் சுற்றிவிட்டு ஒருவர் எதிரே பசு மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தார். காதில் சிவப்புக் கடுக்கன்கள் ஊசலாடின. அவர் கழுத்தில் மின்னிய சங்கிலியிலிருந்தும் தொந்தியின் உருவிலிருந்தும் உயர் ஸ்திதியில் உள்ளவர் என்பது வெளியாயிற்று. ஹரன் போய் நின்றதும் அவர் வெகு லாயக்காகத் தலையை நிமிர்த்தி, "யார் நீங்கள்? கூடத்துக்குப் போய் இருங்கள்!" என்றார். அன்னியர் ஒருவர் தமது மாட்டைப் பார்த்துவிட்டால் கண்படும் என்று சம்சயித்தவர் போல் தோன்றினார் அவர்.

"சுத்த 'பாஷ்!'" என்று ஹரன் வாயோடு முணுமுணுத்துவிட்டு, "இங்கேதானே மணி என்கிற பையன் இருக்கிறது?" என்று திருப்பவும் கேட்டார்.

"நீங்கள் கூடத்தில் போய் இருங்கள்; நான் வரச் சொல்கிறேன்" என்று அந்த மனிதர் சொன்னதையே திருப்பிச் சொன்னார்.

அதற்குள் அந்தப் பெண் சமையற்கட்டுக்குள் ஓடி, காப்பி சாப்பிட உட்கார்ந்திருந்த சாக்ஷாத் மணியிடம் நடந்ததையெல்லாம் சொல்லி, "யாரோ தெரியல்லே! உங்கள் பேரை வெறும்மனே சொல்லிக் கூப்பிடறார். பார்த்தால் பொல்லாதவராயிருக்கிறார்" என்று பயமும் வியப்பும் தோன்றச் சொல்லவும், அவன் அவசரமாகக் கூடத்துக்கு விரைந்தான். வந்தவர் முகத்தில் நண்பன் நடராஜனின் ஜாடை இருப்பதைக் கவனித்ததுமே யார் என்று ஊகித்துக் கொண்டான்.

"மன்னிக்கணும், ஸார்! உட்காருங்கள், ஸார்! அது என் 'ஒய்ப்'. விஷயம் தெரியாதவள். ரொம்ப பயந்த

மாதிரி, மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தவர் என் தகப்பனார். உங்களைத் தெரியாது. தெரிந்து கொண்டிருந்தால் உங்களை விட்டிருக்கவே மாட்டார்" என்றான் பரபரப்பாக.

"எனக்கும் தொட்டித் தண்ணீர் காட்டியிருப்பார், சுத்த 'பாஷ்'!" என்று முணுமுணுத்துவிட்டு, "ஐ ஸே! நடராஜன் இங்கே வந்தானே, இப்போ எங்கே இருக்கிறான்? கொஞ்சம் கூப்பிடுங்கள்! எனக்குப் போக வேண்டும்!" என்றார் ஹரன்.

ஹரனுடைய படபடப்பைக் கவனித்ததுமே, மணிக்கு அதன் காரணம் தெரிந்துவிட்டது. "சற்று உட்கார வேண்டும், ஸார்! நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளாமல் என் 'ஓய்'பும் பதில் சொல்லவில்லை" என்று சொன்னான்.

"உம்ம 'ஒய்பு'தானா அது! சுத்த 'பாஷ்'! என் பெண் செல்விக்கு ஒன்பது வயசாகிறது. வேற்று மனுஷர் வந்தாரானால், 'யார்? என்ன காரணமாக வந்தீர்? மறுபடியும் எப்போ வருவீர்? என்ன கொண்டு வந்தீர்?' என்று கேட்டுக் குடைத்துவிட்டுத்தான் அனுப்புவாள்."

"நம் ஊரில் இன்னும் அந்த வழக்கம் வரவில்லை. தவிர, இவள் கிராமாந்தரம் என்னைத் தவிர இங்கே வீட்டில்கூட யார் கூடவும் பேசுவதற்குச் சங்கோசப் படுவாள். இதுஒரு 'டைப்...'

"சுத்த 'பாஷ்;' ரொம்பச் சிறு வயசிலே கல்யாணம் செய்து கொண்டிருப்பீர் எனக்கு அது பிடிக்கிறதில்லை!"

"ஆமாம் அப்பா இஷ்டப்படி நடந்தது. அத்தை பெண்தான் இவள் சங்கோசம் உண்டேயொழிய, தங்கத்தைப் போல் புத்திசாலியான மனமொத்து நடக்கிற பெண், உங்கள் டெல்லி பூராவும் சல்லடைபோல் சலித்தாலும் கிடைக்காது" என்று ஹரனுக்கும் ஒரு போடு போட்ட மாதிரி போட்டுவிட்டு, "நல்ல வேளை! நீங்கள் இன்று வந்தீர்கள்! நாளைக்குக் காலையிலே நாங்கள் கிராமத்துக்கு போகிறதாக இருந்தோம். இங்கேயிருந்து ஒன்பது மைல் எங்கள் கிராமம்! என்றான். பிறகு, சமையல்கட்டுக் கதவோரமாக காப்பியுடன் நின்று ஜாடை செய்த தங்கத்திடமிருந்து காப்பியை வாங்கிக்கொண்டு வந்து ஹரனிடம் கொடுத்தான்.



புழக்கடையிலிருந்து திரும்பிய கௌரிசங்கரய்யர், இப்போது சமுகமாக இருந்தார். ஒரு முறை புகையிலை போட்டுத் துப்பி, காப்பியையும் குடித்த பிறகுதான் அவருக்கு முகத்தில் தெளிவு ஏற்படும்.

"அப்பாவுக்குத் தம் கையாலேயே மாடுகளுக்குத் தண்ணீர் காட்ட வேண்டுமென்பது. வேறு யார் செய்தாலும், எவ்வளவு பக்தியுடன் செய்தாலும் திருப்தி உண்டாகாது" என்றான் மணி.

'பெரிய சோம்பேறி; நாட்டுபுறத்துப் பெருச்சாளி' என்கிற நினைப்புடன் ஹரன் அவரைப் பார்த்தார். அவர் ஹரனை, 'ஒன்றுக்கும் உதவாத உதியமரம், டெல்லியில் வளர்ந்ததனால் விறைக்கிறது' என்ற பாவத்தில் பார்த்தார். ஆப்த நண்பர்களின் பெற்றோர்களானாலும் அதிகமாக வார்த்தையாடவில்லை. வார்த்தையாடவும் விரும்பவில்லை. மணிதான் ஹரனை அங்கிருந்து உடனே புறப்படாமல் இருக்கும்படி வற்புறுத்தினான்.

"நீங்கள் இப்போதே போகப்படாது. தங்கி, 'ரெஸ்ட்' செய்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்றான்.

"அது சரிதான் மிஸ்டர்! உபசாரம் எதுவும் வேண்டிய தில்லை. சுத்த பாஷ்! நம்ம பையன் எங்கே என்று உம்மால் சொல்ல முடியவில்லையே!"

"திருச்செந்தூர்தான் போயிருக்கிறான். முக்கியமாக சுவாமி தரிசனம் செய்துவிட்டு...ச

"சுவாமி தரிசனமா! எப்பலேருந்து இந்தப் பைத்தியம்! ஐ டோண்ட் வாண்ட் மை ஸன் டு பி எ கூல்! சுவாமி தரிசனமா' வேஸ்ட் ஆப் டைம்!"

தமது பூஜைப் பெட்டியிலிருந்து அபிஷேகத்திற்காக ஸ்படிகப் பிள்ளையாரையும் சிவலிங்கத்தையும் எடுத்து வெளியே அடுக்கிக்கொண்டிருந்த கௌரிசங்கரய்யர் கடைக்கண்ணால் ஹரனைப் பார்த்து, 'இந்த விராத்தியனைக் கூடம் வரையில் அழைத்ததே பிசகு இவன்போன பிறகு வீட்டை ஒருமுறை அலம்பியாக வேண்டும். போலிருக்கிறதே!" என்று எண்ணிக்கொண்டு உதட்டைப் பிதுக்கினார். மணியின் மனத்துக்குள் உள்ளூர ஒரு பயம் மட்டும் இருந்தது.

"சுவாமி தரிசனம் மட்டும் இல்லை. சில சிநேகிதர்கள் போகிறார்கள்; ஸ்தலத்தையும் பார்த்ததாக இருக்கட்டுமென்று..."

கணகணவென்று மணியை அடித்துப் பூஜை தொடங்கின மணியின் தகப்பனார். "என்னடா வளைத்து வளைத்துப் பேச்சு! அவரிடம் உள்ளதைச் சொல்லேண்டா! ஐயா! பசங்களுக்கெல்லாம் காலாகாலத்தில் கல்யாணம் செய்துவிட வேண்டும். பெண்ணானால் என்ன, பிள்ளையானால் என்ன! அது தவறினால் இப்படித்தான் தகராறு" என்றார். பதிலுக்குக் காத்திராமல், மேலே தமது காரியத்தை முனைந்து கவனித்தார்.

தன்னால் இனி மறைக்க முடியாதென்று கண்ட மணி, வெகு நாஸூக்காக ஜானகி நடராஜன் காதலைப்பற்றிச் சொன்னான். "பெண் பேஷான பெண். மகா புத்திசாலி அவள் மாதிரி இனிமேல் கிடையாது! ஒன்று யோசனை செய்ய வேண்டாம். அவள்கூட அவளுடைய தமக்கை, அத்திம்பேர் இரண்டு பேரும் போயிருக்கிறார்கள்."

ஹரன் திருப்தி அடையவில்லை. "என்ன ஐயா கதைக்கிறீர்! சுத்த பாஷ்!" என்றார்.



"இல்லை. நான் தருவித்துவிடுகிறேன் அவளை, நீங்கள் அங்கே போகவேண்டாம்! இன்றைக்கு அவனிடமிருந்து நானே தபாலை எதிர்பார்க்கிறேன்..."

தபாலுக்குப் பதிலாகத் தந்தி ஒன்று வந்து நின்றது! "உடனே வருக. உதவி தேவை—நடராஜன்."

"என்னை அங்கே வரச்சொல்லியிருக்கிறான், ஸார் நடராஜன்!" என்றான் மணி.

"அவனை வரச்சொல்லிப் பதில் தந்தி அடியும். சுத்தா ஹேர்!"

"அடிக்கலாம். ஆனால், அவன் விலாஸம் இதில் இல்லை. நான்தான் போய் நீங்கள் வந்திருக்கிறதைச் சொல்லி..."

"என்னய்யா பைத்தியக்காரக் காரியம்! திருநெல்வேலி எங்கேயிருக்கு! உம்? அவன் ஒரு முட்டாள். தந்தி அடித்தான்; நீர் ஒரு முட்,-ஒரு மனிதர் போகிறதா? சுத்த 'பாஷ்'!" என்றார் ஹரன்.

ஸ்நானத்திற்கு ஏற்பாடு செய்யப்போன மணியைக் கிணற்றடியில் தங்கம் ஆசையுடன் பார்த்து, முகம் நிறைந்த புன்னகை ஒன்று செய்தாள். "ஏன்னா, உங்களை நான் ஒண்ணு கேட்கட்டுமா?"

"கேள், கேள், என் பத்தரைமாத்துத் தங்கமே, கேள்!" என்றான் மணி கன்றுக்குட்டிப் போல் துள்ளி.

"வந்திருக்கிறாரே நிஜார் போட்டுண்டு; அவர் உங்கள் சிநேகிதனின் அப்பா தானே?"

"தப்பறியும் தங்கமே நீ சொன்னது சரியே சரி!" என்றான் ஜலத்தை இழுத்துக் கொட்டிக்கொண்டு.

"உங்கள் உசத்தி சிநேகிதனும் இப்படித்தான் காட்டுமிராண்டியாயிருப்பாரோ?"

மணி வாய்விட்டுச் சிரித்து, "உன் யோசனையும் சமர்த்தும் என் பாக்கியமடி, தங்கம்; சந்தேகமில்லை" என்று அவள் முகத்தின் மேல் முட்டலவத்தான்.

"அது கிடக்கட்டும், சொல்லுங்கோ அத்தான்! 'சுத்த பாஷ்' என்றால் என்ன அர்த்தம்? வெறுமனே அவர் சொல்றாரே!"

"உபயோகம் இல்லைனு அர்த்தம்; உன்னைகூடச் 'சுத்த பாஷ்' என்று சொல்லியிருக்கிறார், ஆமாம்!"

"போங்கன்னா! அவர்தான் 'சுத்த பாஷ்' நான் சொன்னதாக சொல்லி அனுப்புங்கள்!" என்று உள்ளே போனாள் மணியின் மனைவி.

கூடத்துக்கு வந்தபோது இன்னொரு முறை தந்தி பியூன் வந்துவிட்டான்.

"என்னடா இது மணி, இன்னிக்குத் தந்தி மழை பெய்யறது. உம்?" என்றார் அவன் தந்தை.

மணி தந்தியை வாயோடு படித்துக்கொண்டான், "உதவினென்றால் ஒத்தாசை, சகாயம், துணை, உபகாரம் என்று அர்த்தம். உடனே புறப்படு-நடராஜன்." பிறகு ஹரனிடம், "நடராஜன்தான் மறுபடி அடித்திருக்கிறான். நான் போய் அவனைப் பார்த்து அழைத்து வந்துவிடுகிறேன். அதுதான் சரி!" என்றான் முடிவாக.

* * * *

திருச்செந்தூரிலிருந்து காலை பத்து மணிக்கு மணியை வரும்படி தந்தியடித்த நடராஜனுக்குப் பிற்பகல் மூன்று மணியாவதற்குள் மேலும் கவலை உண்டுபண்ணும் செய்திகள் எட்டிவிட்டன. ஆகையினாலேயே எங்கே மணி அசிரத்தையாக வராமல் இருந்துவிடுவானோ என்று பயந்து அடுத்தபடி ஒரு தந்தியும் அடித்து வைத்தான்.

தந்தியை அடித்துவிட்டுச் சித்தாக்கிராந்தனாகத் தன் தலைக்கு மேல் முழங்கும் பேரிடிகளைப் பற்றிக் கலங்கிய



வாறு வரும்போது இடிகளுக்கிடையே தோன்றிப் பாதை மீது ஒளி வீசி வழிகாட்டும் மின் வெட்டுகளைப் போன்றதொரு சந்தர்ப்பமும் அவனுக்கு ஏற்பட்டது.

## 8

"பிறரிடம் சொல்லாது வைத்துக்கொள்ள வேண்டிய இரகசியங்கள் ஒன்பது. அவைகளில் தன் குடும்ப ஊழல் என்பது ஒன்று."

—தக்ஷர் வாக்கியம்

காலையில் எழுந்ததுமுதலே மங்களம் மிதமிஞ்சின சுறுசுறுப்புடன் காணப்பட்டாள். யாரையாவது அதிகாரம் செய்துகொண்டோ, முக்கிய சமாசாரங்களைப் பற்றித் தீவிர சர்ச்சை செய்துகொண்டோ இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றியதால், ஸ்நானத்தைச் சீக்கிரமாகவே முடித்துக்கொண்டு, படுக்கையில் திரும்பித் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்த ஜகதீசனுக்கு இரண்டு கஜத்துக்கு அப்பால் நின்றபடி, உங்களைத்தானே! மணி ஏழடித்துவிட்டதே! அசனூருக்கு வந்துங்கூட பழைய தூக்கம் விடவில்லையா?" என்று அதட்டினாள்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த ஜகதீசன், "நான் ஒன்றையும் எடுக்கவில்லையே!" என்று உளறினான். பாவம், அவன் கடைசியாகக் கண்டுகொண்டிருந்த சொப்பனத்தில் மங்களத்தின் பெட்டியை அவன் திறந்து பார்ப்பது போலவும், அப்போது மங்களமே ஒரு குண்டாந்தடியுடன் அங்கு வந்துவிடுவது போலவும் இருந்தது.

"என்ன பேத்தல்! கும்பகர்ணன் அவதாரந்தான்! சீக்கிரம் எழுந்து போனால், விசுவரூபதரிசனம் கிடைக்கும் என்று சொன்னார்கள். உங்களை நம்பிக்கொண்டு

ளெம்பினால் அர்த்தஜாமம் கிடைக்கிறதே சந்தேகந் தான்!" என்றான்.

ஜகதீசன் படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டுப் புழக்கடையில் இருந்த கிணற்றுப்பக்கம் போகப் புறப்பட்டபோது கட்டுக்கட்டாக விபூதி அணிந்து, ருத்திராக்ஷமாலையைக் கையில் ஏந்திக்கொண்டு, "என்ன?" என்று கேட்டபடி உள்ளே வந்தார் நாகநாதய்யர்.

"வாருங்கள், மாமா! காலையிலே ஸ்வாமி தரிசனத்துக்குக் கிளம்பலாமென்றால் நம் வீட்டு மனுஷாளைப் படுக்கையைவிட்டு எழுப்ப இந்தப்பாடு ஆச்சு!" என்று வரவேற்றான் மங்களம்.

"சிறு பையன்தானே; உனக்கு இருக்கிற சிரத்தையும் ஆசாரமும் அதிகந்தான். அவனிடம் அவ்வளவு எதிர்பார்க்க முடியாது; என்ன?" என்றார் கிழவர்.

மங்களம் புன்னகை செய்துகொண்டாள். இந்தத் தாத்தாவுக்குத் தெரிகிறது வேறு யாருக்குத் தெரிகிறது? "கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறீர்களா, மாமா?" என்று கேட்டாள்.

"காப்பியா? விஷம், விஷம்! நல்லவேளை கேட்டாயே! எனக்கு இப்போ ஒரு பெரிய கவலை; ஜானகி எங்கே? உள்ளேதான் இருக்கிறாளா?"

"அவள்தான் இன்றைக்குக் காப்பி போடுகிறாள். கூப்பிடட்டுமா?"

"வேண்டியதில்லை. உன்னிடம் நான் சொல்லவந்த விஷயங்கள் அவளுக்குத் தெரியவேண்டாமென்றுதான் கேட்டேன். நான் இப்போது சொல்லப் போகிறதை வைத்துக்கொண்டு, புத்திசாலித்தனமாக நீ கவனித்துக் கொள்ள வேண்டியது. என்ன, நான் சொல்றது, மனசிலே ஆச்சா?"



"சொல்லுங்கள், மாமா!"

"ஜானகியைக் காலேஜில் சேர்த்ததிலேயே எனக்கு இஷ்டம் இல்லை."

"எனக்குந்தான் இஷ்டம் இல்லை. மாமாதான் பிடிவாதவாகக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்."

"மாமா என்ன, மாமா! என்ன தெரியும் அவனுக்கு? உலக அநுபவம் இல்லாத முட்டாள்! ரெண்டுங் கெட்டான்!" என்று வெறுத்துக் கொண்டார் நாகநாதய்யர்.

"ஏன், மாமா! என்ன விஷயம்?"

"ஜானகி தங்கமான பெண். இருந்தாலும், பெரியவாளுடைய கண்டிப்பு, கட்டாயம் இல்லாத போனா, பைசா பிரயோசனம் இல்லை."

"ஏன், மாமா! என்ன விஷயம்?"

"சேச் சேச் சே! நான் எதிர்பார்க்கல்லே இவ்வளவு தூரத்துக்கு ஆகிவிடுமென்று!"

"ஏன், மாமா! என்ன விஷயம்?"

"விஷயமா! விஷயம் இருக்கு! நான் மதுரையில் அன்று ரயில் ஏறினேனா இல்லையா? அப்போ ஜானகி என் கையிலே ஒரு ஸூட்கேஸைக் கொடுத்து இங்கே கொண்டுவரச் சொன்னாள். என்ன?"

"ஸூட்கேஸா?"

"ஆமான்னா, ஆமாம்! ஸூட்கேஸேதான்!"

"உங்கள் கையிலேயா?"

"என் கையிலேதான்!"

"நான் பார்க்கவே இல்லையே?"

"நீ பார்த்திருந்தால் அது இவ்வளவு தூரம் ஆகி யிருக்குமா? ஆகத்தான் விட்டிருப்பாயா?"

"என்ன ஆகிவிட்டது இப்போ?"

"நான் அந்தப் பெட்டியை திறந்து பார்த்தேன். பார்த்தால் விஷயம் வருகிறது ஒண்ணொண்ணாக ஜானகிக்குப் பட்டணத்தில் காதலன் இருக்கிறான் ஒருத்தன்!"

"யாரு?"

"காதலன், அம்மா, காதலன்! அவன் வந்துவிடப் போகிறான், உள்ளே பார்!"

மங்களம் எட்டிப் பார்த்தாள். சற்று முன்பாக அவள் பார்த்திருந்தால், கதவின் பின்னால் மறைந்துகொண்டிருந்த ஜகதீசனைக் கண்டுபிடித்துக் காதைப் பிடித்து வெளியிலிழுத்திருப்பாள். ஆனால், அவனுடைய அதிர்ஷ்ட சக்கரமும் சுற்றிக் கொண்டிருந்ததே! யார் என்ன செய்ய முடியும்?

"யாரும் இல்லை, சொல்லுங்கள்!" என்றாள் மங்களம் பரபரப்புடன்.

"அந்தப் பெட்டியை நான் திறந்து பார்த்தேன். அப்புறம் தெரிந்தது. ஜானகிக்கும் காலேஜில் படிக்கிற ஒரு பையனுக்கும் சிநேகம் உண்டென்று."

"எப்படித் தெரிந்தது?"

"அதெல்லாம் ஒண்ணொண்ணாக் கேட்காதே! தெரிந்து கொண்டேன். நேற்று ராத்திரி ஜானகி என்கூட வந்தாளா? நான் சந்துருவை அவளுக்குக் காண்பித்து வைக்கலாம் என்று உத்தேசம் வைத்திருந்தேனா? வீட்டிலே சந்துரு இருந்தான்; ஆனால், அவன் கொடுத்த பெட்டி தான் இல்லை!"

"இல்லையா?"

"ஆமாம்னா ஆமாம்! அது மாயமாக மறைந்து விட்டது. எவனோ கொண்டுபோயிருக்கிறான்."



"கொண்டு போயிருக்கிறானா?"

"ஆமாம்னா ஆமாம்! அந்தப் பெட்டிக்கு உடையவனே அடித்துக்கொண்டு போருக்கிறானோ என்று சந்தேகம். ஜானகியிடம் நான் ரொம்ப ஜாக்கிரதையாகப் பேசினேன். என்ன? வயசு வந்த பெண், பார்! சொல்கிறதை நாஸூக்காகச் சொல்ல வேண்டுமே?"

"அது சரி! அந்தப் பெட்டியை ஜானகி இங்கே எதற்காக உங்களிடம் கொடுத்தனுப்புகிறாள்?"

"அவனும் வருவான் இங்கே என்கிறதாக இருக்கலாம்!"

"ஒருகால் நமக்கு முன்னாடியே அவன் இங்கே வந்திருப்பானோ?"

"அப்படியுங்கூட இருக்கலாம்."

"நான் ஜானகியைக் கூப்பிட்டுக் கேட்டுவிடுகிறேனே!"

"அதுதானே பிசகு! நமக்குத் தெரிந்ததாக இருந்தால் பிடிவாதம் வளரும். ஒன்றுமே தெரியாதது போல் இனிமேல் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியது உன் பொறுப்பு; என் பொறுப்பு. யாரோ ஒரு துஷ்டப் பயலுக்கு என் வீட்டில் இடம் கொடுக்கக்கூடாதென்று நான் கண்டிப்பாக இருந்தபோதே என் மனத்தில் இந்த எண்ணம் உண்டு."

"நீங்கள் எப்பவும் எங்களுக்கு நன்மை செய்கிறவர், மாமா!"

"நான் விடப்போகிறவன் இல்லை. பெட்டி காணாமல் போயிருக்கிறதா? கான்ஸ்டபிள் கண்ணாயிரத்துடன் நான் இந்தப் பயலைப்பற்றிக்கூட ராத்திரியே ஒரு வார்த்தை போட்டுவிட்டேன். கண்ணாயிரம் சும்மா இருக்கவே மாட்டான்!"

"அப்படியானால் ஜானகிக்கு ஒரு சிநேகிதன் உண்டு என்கிறீர்கள்?"

"நிச்சயமாக! அந்தப்பெட்டி இப்போ என் கையில் இருந்தால், கொண்டு வந்து காண்பிக்கமாட்டேனா? ஊம்! படிப்பு, படிப்பு! எல்லாம் அது பண்ணுகிற சேஷ்டைதான்!"

ஒரு நிமிஷம் மங்களம் யோசித்தான். அவனுக்குத் தெரியாமல் ஜானகி ஒரு பெட்டியும் கொண்டுவரவில்லை; கிழவரும் பொய் சொல்கிறவர் இல்லை. பின் ஏது பெட்டி? ஒரு வேளை திண்டுக்கல்லில் இறங்கின இளைஞனின் பெட்டியாக இருக்குமோ அது? அதைத்தான் இவள் கிழவரிடம் ஒப்புவித்திருப்பாளோ? மறுபடி அதே ஆசாமியைச் சினிமாக்காரியுடன் கோவிலிலேயே மங்களம் பார்த்திருக்கிறானே! அவன் இவளைத் தொடர்ந்து கொண்டு வந்தவன்தானோ? சந்தேகங்கள் வலுத்தன.

"என்ன யோசிக்கிறாய், மங்களம்? ஒன்றும் நம்மை மீறிப்போகாது. போனால் ஜானகியை நான் கொண்டு போய் மதுரையில் சேர்த்துவிடுகிறேன், என்ன?"

தன் சந்தேகங்களை மேலும் கிழவர் காதில் போடலாகாதென்று எண்ணியவனாக, "ஒன்றுமில்லை, மாமா! நீங்கள் இவ்வளவு அக்கறையாக இருப்பது ஒரு அதிர்ஷ்டந்தான். ஒரு அரை டம்ளர் காப்பி சாப்பிடுங்கள் பரவாயில்லை! 'மாப்பிள்ளை' வந்தாலும் வராவிட்டாலும் நாம் முன்னாடி கோயிலுக்குப் போகலாம்" என்று மங்களம் உள்ளே சென்றான்.

பதினைந்து நிமிஷத்துக்குப் பிறகும் ஜகதீசன் தயாராகாமல் நிற்கவே, அவனைச் சீக்கிரம் வரும்படி எச்சரித்துவிட்டு ஜானகியும் நாகநாதய்யரும் கூடவர, காலை தரிசனத்துக்குக் கிளப்பினான் மங்களம்.

ஜகதீசன் வீட்டில் தனியாக இருந்தான். இதைப் போன்றதொரு சந்தர்ப்பத்தை இனி அடையமுடியா



தென்றும் தெரிந்து கொண்டிருந்தான். ஒரே நொடியில் ஸ்நானம் செய்துவிட்டு வந்து, மங்களத்தின் பெட்டியைத் திறந்தான். 'எத்தனை பட்டுப் புடவைகள், பதினைந்து நாள் தங்குவதற்கு!' என்று முணுமுணுத்துவிட்டு, ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைத்தான். எடுத்த சுவடு தெரியாமல் மறுபடி உள்ளே வைக்க வேண்டுமாகையால் வெகு நிதானமாகக் காரியத்தைச் செய்தான். கடிதம்–கடிதம்–கடிதம்! பெட்டியின் அடிவரையில் பார்த்தாகிவிட்டது! அதில் ஒரு கடிதங்கூட இல்லை! பின் எங்கே வைத்திருப்பாள்? தலை சுற்ற நிமிர்ந்தான் ஜகதீசன். பகீர் என்றது.

"என்ன, மாப்பிள்ளை! என்ன தேடுகிறீர்? என்ன?" என்று கேட்டுக்கொண்டு நாகநாதய்யர் நின்றார்.

ஏன் மூர்ச்சை அடையாமலிருக்கிறோம் என்று ஜகதீசன் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தபோதே, "என்ன தேடுகிறீர் என்கிறேன்! கொள்ளைக்காரன்போல் விழிக்கிறீர், எதையோ பறிகொடுத்தவன் போல் பெருமூச்சு விடுகிறீரே! என்ன!?" என்று உறுமினார் அவர்.

"ஹ்ஹ்ஹ... ஒண்ணுமில்லேன்னா... வெறும்மனே தான் பார்த்தேன்."

"அவாளெல்லாம் கோயில் போய்ச் சேர்ந்திருப்பா... ஜானகி முன்னாடி திரும்பணும் என்கிறான். நீரானால் இங்கே பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு."

"இல்லை, இதோ போகிறேன். போயிண்டேயிருக்கேன். அதுக்காகத்தானே பெட்டியைக்கூடத் திறந்து பார்த்தேன்."

"பெட்டியிலே என்னய்யா இருக்கு? என்ன?"

"ஒண்ணுமில்லே, அதுதான் மூடிண்டேயிருக்கேனே?" என்று மூடிவிட்டு ஜகதீசன் புறப்பட்டான்.

நாகநாதய்யர் தலை மறைந்ததும், வீட்டைப் பூட்டிக் கொண்டு ஒரே ஓட்டமாகச் சுந்தரத்தின் வீட்டுக்கு ஓடினான்.

"மிஸ்டர்! மிஸ்டர்! உள்ளே இருக்கிறீர்களா, நடராஜ்!"

"வாருங்கள் ஸார் உள்ளே! உட்காருங்கள்!" என்று அழைத்துக்கொண்டு சுந்தரமே வெளியில் வந்தார்.

"நான் உள்ளே வருவதற்குமில்லை; உட்காருவதற்குமில்லை. நான் கொடுத்த வாக்குப்படி செய்துவிட்டேன். லெட்டர் ஒன்றும் இல்லை!"

"சரி; அதனால் பரவாயில்லை. வாருமே இப்படி உள்ளே!"

"வரமுடியாது என்னால்! முன்னால் நாகநாதய்யர் போகிறார். திரும்பிவிட்டால் வந்தது மோசம்!"

"அப்படியானால் இன்னொரு சமயம் வாருங்கள்."

"நான் சொல்ல வந்தது முக்கியம். நடராஜன்மேல் நாகநாதய்யரும் என் 'ஒய்பு'ம் ரொம்ப சந்தேகப்படு கிறார்கள்."

"சரி!"

"நாகநாதய்யர் ஒரு கான்ஸ்டபிளிடம்கூட ஏற்பாடு செய்துவிட்டாராம். நடராஜனுக்கு உபத்திரவம் இருக்கும் என்று தோன்றுகிறது."

"சரி!"

"அவசியமானால் ஜானகியையே மதுரைக்குக் கூட்டிக் கொண்டு போய்விடுவார்போல் இருக்கிறது."

"என்ன? என்ன?" என்று கேட்டுக்கொண்டு வந்தான் நடராஜன். மணிக்குத் தந்தி அடித்துவிட்டுப் போஸ்டா பீஸிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்துகொண்டிருந் தான் அவன்.



"எல்லாம் இவரைக் கேட்டுக்கொள்ளுங்கள். எனக்கு நேரமாகிவிட்டது. என் 'ஒய்பு'க்குத் துணை போய் நான் ஜானகியை வீட்டுக்கு அனுப்பவேண்டும்" என்று ஜகதீசன் ஓடினான்.

சுந்தரத்திடமிருந்து சமாசாரங்களைக் கேள்வி யுற்றதும் நடராஜனின் கவலை அதிகமாயிற்று. போலீஸ் தொல்லை ஒன்று; ஜானகி மதுரைக்கு மாற்றம் இரண்டு ஆஹா! மணியைப்போன்ற ஒருவன் இப்போது இருந்தால் எத்தனை யோசனை சொல்வான்! தந்தி போய்க் கிடைத்ததும் அவன் புறப்படவேண்டுமே! ஒருகால் அசிரத்தையாக இருந்து விட்டால்? இரண்டாவது தந்தி ஒன்று கொடுத்தால் உபயோகமாயிருக்குமே! நினைத்தது தான் தாமதம்; இரண்டாவது தந்தி ஒன்று பறந்தது அதன் வாசகத்தைக் கண்டு, அதிசயித்த தந்திக் குமாஸ்தா கூட நடராஜனை நிமிர்ந்து பார்த்து உதட்டை நக்கிக் கொண்டான்.

"உதவி என்றால் ஒத்தாசை, சகாயம், துணை, உபகாரம்' என்று அர்த்தம் உடனே புறப்படு நடராஜன்."

காரியத்தை முடித்துக்கொண்டு தந்தி ஆபீஸிலிருந்து கிழப்புதுத்தெருவை நோக்கித் திரும்பி வந்துகொண் டிருந்த நடராஜனின் கண்களில் முதல் முதலாகத் தென்பட்டவன் செவிட்டு முத்துச்சாமிதான். 'உப்பிட்ட வரை உள்ளளவும் நினை' என்ற பழமொழியை அவன் அறிவானோ என்னவோ; 'இட்டிலி கொடுத்தவரை இருகாலும் அவன் நினைக்க'த் தவறியதில்லை. நடராஜனைக் கண்டதுமே அவன் மனக்கண் முன் ஆவி விடும் இட்டிலியும் மணம் கமழும் வெங்காய கொத்ஸும் எழும்பின.

"சௌக்கியமாயிருக்கிறீர்களா?" என்று தலையை ஆட்டினான்.

"செனக்கியத்தான்" என்றான் நடராஜன் சமிக்ஞையுடன்.

"எங்கே ஜாகை?" என்று முத்துச்சாமி கேட்டு, அது நடராஜனுக்குக் காதில் விழுந்திராதோ என்ற சந்தேகம் நீங்கத்தான் கையையும் கூடவே அசைத்தான்.

"அதோ கோடி வீடு."

"அடுத்த தெருவா?"

"இல்லை; இதே தெருவுதான்!"

"இதே தெருவாக்கும் என்று நினைத்தேன்! அதோ கோடி வீட்டில்கூட இடம் இருக்கிறதாகச் சொல்லிக் கொண்டார்கள்."

"அங்கேதான் ஐயா நான் இப்போ இருக்கிறேன்."

"இப்போ பார்க்கலாமா என்கிறீர்களா? இப்போ வேண்டாம். யாரோ போலீஸ்காரன் நிற்கிறான்: அங்கே ஏதோ தகராறு போலேயிருக்கு மத்தியான்னமா பார்க்கலாம். நான் வரட்டுமா?"

"போலீஸ்காரனா!" என்று திகைத்தான் நடராஜன். அப்படியானால் ஜகதீசன் எச்சரித்தது சரியாகப் போய் விட்டது போல் அல்லவா இருக்கிறது? இப்போது போவதா, அல்லது போகாமல் இருப்பதா? சுந்தரம் எப்படிச் சமாளிக்கப் போகிறார் சந்தர்ப்பத்தை? அவன் திடுதிப்பென்று போய் நின்றால் அவருக்குச் சங்கடம் அதிகமானால் என்ன செய்வது?

ஜானகி வீட்டில் இப்போது தனியாக இருக்கிறாள் என்பதையும் அவன் மறக்கவில்லை. அவளைக் கண்டு பேசுவதானால் சரியான வேளை இதை விட்டால் வேறு அகப்படுமென்றும் சொல்வதற்கில்லை. இப்போது அங்கே போய்த் தங்கிவிட்டுப் போலீஸ்காரன் போன பிறகு தன் ஜாகைக்குப் போவதுதான் உசிதம். இந்த



முத்துச்சாமியையே சுந்தரத்திடம் முன்னதாக அனுப்பி, தான் ஒதுங்கியிருப்பதை அறிவித்துவிட்டால் எப்படி?

"ஒரு இரண்டே முக்காலணா கொடுமேன், ரெண்டு இட்டிலி ஒரு அரை காப்பிக்கு!" என்றான் முத்துச்சாமி அங்கிருந்து நகராமலே.

நடராஜன் காசைக் கொடுத்தான். முத்துச்சாமியின் கையைப்பிடித்து, "மிஸ்டர்! எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டுமே!" என்றான்.

முத்துச்சாமிக்குக் காது கேட்கவில்லை. தலையை ஆட்டினான்.

"நீர்சுற்றுவழியாகப் போய், கோடி வீட்டுக்காரரிடம் நான் இந்தத் தெருவில் அதோ அந்தவீட்டில் இருப்பதாகச் சொல்லிவிடும்!"

"சொல்லிவிடுகிறேன். அந்த அம்மாளிடந்தானே?"

"யார் வீட்டைச் சொல்கிறீர்? நான் கோடி வீட்டைச் சொன்னேன்."

"ஓ! கோவில்தானே!"

"கோடி வீட்டில், ஐயா கோடி வீட்டில்...கோடி வீட்டில்!"

"சரிதான் ஐயா! சரிதான்! காது கேட்டுவிட்டது! எத்தனை தரம் சொல்லுவது!" என்று சுட்டுவிடுவது போல் நடராஜனைப் பார்த்தான் முத்துச்சாமி.

"நீர் யாரிடமும் சொல்லவேண்டாம். பேசாமல் போம்!" என்றான் நடராஜன்.

"இதோ போகிறேன்!" என்று முத்துச்சாமி நகர்ந்தான்.

ஆகவே, நடராஜன் கிழப் புதுத்தெருவுக்குள் நுழைந்தான். ஜகதீசன் வார்த்தையில் முழு நம்பிக்கையுடன் ஜானகியின் வீட்டு வாசலில் போய் நின்று, "ஸார்!"

என்று துணிவாகக் கூப்பிட்டான். மறு நிமிஷம் உள் வாசற்படியில் சந்திரபிம்பம் போன்ற முகத்தில் ஆச்சரியக் குறி எழுதியிருக்கச் சாக்ஷாத் ஜானகி நின்றாள்.

இந்த அழகிக்காகத் தான் பட்ட சிரமங்கள் ஒன்றும் பிரமாதம் இல்லை என்று நடராஜன் எண்ணி, "நான் காண்கிறது கனவுதானே?" என்றான்.

"இல்லவே இல்லை. உங்களை இங்கே காணலாம் என்று நான் கண்டுகொண்டிருந்த கனவுதான் பலித்திருக்கிறது உள்ளே பயப்படாமல் வரலாமே!" என்றாள்.

கூடத்துத் தாழ்வாரம்வரை சென்று நடராஜன் ஒரு முக்காலியில் உட்கார்ந்துகொண்டு ஜானகியின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தான். அவளும் கடைக்கண்ணால் நடராஜனை நோக்கினாள்.

"எத்தனை நேரம் நான் இங்கே இருக்கலாம், ஜானகி? இப்படியே ஓர் ஆயுள் பூராவும் இருக்கச் சொன்னாலும் நான் சந்தோஷமாக இருப்பேன்."

"விருந்தாளிகளாக வருபவர்கள் மூன்று நாள்வரை இருக்கலாம்."

"உன் அக்காவும் நாகநாதய்யரும் என்னை விருந்தாளி என்று ஒப்புக்கொள்ளவேண்டுமே! ஆகையினால் அவர்கள் வருகிறவரையில் பேசிக்கொண்டிருக்கலாம். நீ மட்டும் வீட்டில் இருக்கிறாய் என்று உன் அத்திம்பேர் சொன்னார்; வந்தேன் நான் மேற்கொண்டு திருச்செந்தூரில் தங்கலாமா என்றுகூட யோசனை செய்யும் நிலைமையில் இருக்கிறேன்."

"ஏன், உங்களை ஷண்முகன் போய்விடுங்கள் என்றாரா?"

"ஷண்முகன் சொப்பனத்தில்கூட ஒன்றும் சொல்லவில்லை. நாகநாதய்யர் தடிகொண்டு அடிப்பேன் என்கிறார்; சுப்பரத்தினத்தின் பிள்ளை சந்துரு ஆள் வைத்து உதைப்பேன் என்கிறான். உன் அக்காள் கண்ணாலேயே சுட்டெரித்து விடுவாள் போலிருக்கிறது."



ஜானகி சிரித்தாள். ரொம்பச் சிரமப்பட்டுவிட்டீர்கள்! ஆமாம், ஆமாம், ரயிலிலிருந்து தாத்தாவை விரட்டினது நீங்கள் தானே?"

"அந்தக் கிழவர் என் பெட்டியைக் குடைந்திருக்கிறாரே! என்ன செய்தால் என்ன அவரை?"

"பெட்டி போய்விட்டது நீங்கள் அதில் முக்கியமாக ஒன்றும் வைக்கவில்லையே!"

"முக்கியமாகவா! எனக்கு நீ போட்டிருந்த கடுதாசிகள் நாலைந்தையும் உன் படம் ஒன்றையும் வைத்திருந்தேன். நம்மைப்பற்றி மணி தமஷாக எழுதியிருந்த கடிதம் ஒன்றும் இருந்தது. அதுதானே நான் கவலைப்படுகிறேன்!"

"ஐயையோ! அதை அவர் வாசிக்காமல் இருக்க வேண்டுமே!"

"உடனேயே வாசித்துவிட்டார் என்று அப்போதே அடுத்த வீட்டுக்கார மிஸ் ஜகம் எனக்குச் சொல்லி விட்டாளே!"

திகைத்துப்போனாள் ஜானகி. நடராஜன் ஆரம்ப முதல் தன் சிரமங்களைச் சொல்லி, பெட்டியை மீட்டது வரையில் கொண்டு நிறுத்தி, "அந்தக் கடிதக்கட்டு மட்டும் பெட்டியில் காணோம்?" என்றான்.

"அப்படியானால் அதை யார் எடுத்திருப்பார்களோ?"

"சந்துரு கையில் அது இல்லை; நாகநாதய்யர் எடுத்திருக்க நியாயம் இல்லை. பின், எனக்குந்தான் தெரியவில்லை!" என்று கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான் நடராஜன். "உன் அத்திம்பேர் நன்மை செய்கிறவராக இருக்கிறபடியால்,

அவர்மூலம் உன் அக்கா பெட்டியைக் குடையச் சொன்னோம்'' என்று முடித்தான்.

''பாவம், அத்திம்பேர்!'' என்றாள் ஜானகி.

''ஆமாம்; அவர் சமாசாரம் இருக்கட்டும்! கிழவர் உன்னை மதுரையில் கொண்டுபோய் விட்டுவிட்டால் என்ன செய்யப் போகிறாய், ஜானகி?''

''உங்களைத் திருநெல்வேலி ஆஸ்பத்திரிக்குச் சந்துரு அனுப்பிவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்களாம்? முருகனை நம்பி வந்திருக்கிற பேர், அவனையேவிடாது நம்புவதைத் தவிர வேறு வழி இல்லை. அதுவும் தவிர, நானும் நீங்களும் பச்சைக் குழந்தைகள் அல்லவே!''

''உன்னைக் காண்பதே துர்லபமாயிருக்கிறது. நமக்குத் தெரியாமலே சந்துருவை 'ஸெட்டில்' செய்துவிடுவார்கள் போலிருக்கிறதே உனக்கு உன் தமக்கையும் அந்த ரிஜிஸ்ட்ராரும்.''

''என் கவலை இப்போது வேறு. உங்கள் கடுதாசியைப் பார்த்துவிட்ட— மங்களம் என்னிடம் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. என் கடுதாசிகளைப் பார்த்துவிட்ட நாகநாதய்யரும் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை; அது ஏன்?''

''அவர்களைத்தான் கேட்க வேண்டும்!''

''நீங்கள் இருக்கிற ஜாகை சௌக்கியமாக இருக்கிறதா?''

''நீ இருக்கிற தெரு என்கிறவரையில் சௌக்கியந்தான். எத்தனை ஆபத்துகள் வந்தாலும் சமாளிக்கலாம் என்று திடமாயிருக்கிறேன். எதற்கும் மணியை வரச்சொல்லி தந்தி அடித்திருக்கிறேன்.''

''அவர் எதற்கு, பாவம்! லீவு நாள் வராதா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஆம்படையாளை விட்டுவிட்டு இங்கே வருவதா?''



''அடடே! அந்த ஞாபகமே இல்லையே எனக்கு!'' என்று சிந்தனையில் ஆழ்ந்தான் நடராஜன். ''ஏதோ அவசரத்தில் அடித்துவிட்டேன். நான் இன்னும் உட்கார்ந்திருக்கக்கூடாது. கோவிலுக்குப் போன பேர்களும் வரலாம்; சுந்தரம் போலீஸ்காரனை எப்படி அனுப்பினார் என்று வேறு தெரிந்து கொள்ளவேண்டும். அப்புறம் உன்னை எப்போ எங்கே எப்படிப் பார்ப்பது, சொல்லு!''

ஜானகி பதில் சொல்ல வாயெடுத்தாள். வாசலில், ''என்ன மாப்பிள்ளை, அப்புறம் உம்மை எப்போ பார்ப்பது? வாருமேன் சாப்பாட்டுக்கு அப்புறம்;'' என்று நாகநாதய்யர் குரல் உரத்துக் கேட்டது.

''வாசற்படியின் குறுக்கே நிற்காதங்கோ! உங்களைத் தானே! நான் உள்ளே போகணும்'' என்று மங்களம் ஜகதீசனை அதட்டியதும் தொடர்ந்து காதில் விழுந்தது.

நடராஜன் திடுக்கிட்டு எழுந்தான். என்ன பேராபத்து இது! ஜானகியின் முகங்கூடப் பயத்தினால் வெளிறிப் போயிற்று. இத்தனை சீக்கிரம் அவர்கள் திரும்புவார்கள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. நடராஜனும் தன் தமக்கையும் நேருக்கு நேர் சந்திப்பதை அவள் விரும்பவில்லை. தைரியத்தை வருவித்துக்கொண்டு நடராஜனை, ''இப்படி வாருங்கள்!'' என்றாள்.

நடராஜன் பின்தொடர இருவரும் அடுக்களை வழியாக இரண்டாங்கட்டை அடைந்தார்கள். புழக்கடையின் வழியே இறங்கும் ஏற்றமும் அதன் பக்கத்திலே ஒரு தென்னை மரம் பக்கத்து வீட்டு மதில் சுவர்மேல் சாய்ந்து வளர்ந்திருந்தது. ''அப்படியே போய் விடுங்கள், சீக்கிரம்!''

ஜானகியின் உடல் படபடத்தது. காலேஜில் கூடப் படித்த ஒரு யுவனோடு சிநேகபாவத்துடன் பேசுவது பட்டணத்திற்குப் புதிய விஷயமல்ல; பிசகான விஷயமும் அல்ல. ஆனால், அசலூரில் வந்து, கர்நாடக கொள்கை

களில் ஊறிப்போன தமக்கையின் முன்பு அதைச் செய்ய அவன் மனம் இடங்கொடுக்கவில்லை.

நடராஜனின் ஒரே நினைப்பு, தன்னால் ஜானகிக்குச் சிரமம் ஏற்படலாகாதென்பதே; ஆகவே, நாகநாதய்யரை எதிர்க்கும் திறமை இருந்துங்கூட, ஜானகி காட்டின வழியைப் பின்பற்றினான். இப்படி இவர்கள் திடீரென்று திரும்பும் இக்கட்டான ஒரு நிலைமையை வருவித்துக் கொண்டதும் தானேதான் என்பதை அவன் அப்போது அறிய நியாயமில்லை. கோடி வீட்டில் சுந்தரத்திடம் தெரிவிக்கச் சொன்ன ஒரு செய்தியைப் பிடிவாதமாகக் கோயிலில் போய்ச் சொல்லியிருக்கிறான் செவிட்டு முத்துச்சாமி. அதை அவன் வேண்டுமென்றே செய்தவன் இல்லை; அவன் காதைச் செவிடாக்கிய விதிவிளைத்த சதிதான் அது!

"யாரய்யா நீ?" என்று கேட்டான் ஜகதீசன்.

"உங்களைத்தான், ஸார்! உங்களிடந்தான் சொல்லச் சொன்னார். அவர் உங்கள் வீட்டிலே பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்."

"யாரது அவர்?" என்று விசாரித்தாள் மங்களம்.

"இவன் பேத்துகிறான்; பேசாமல் வா!" என்றான் ஜகதீசன்.

"இல்லை, ஸார்! போகிறார், நான் பார்த்தேன். ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறாரே ஸார், ஒருவர், அவரேதான்! கோவிலில் கண்டு சொல்லு என்று சில்லறைகூடக் கொடுத்தார்."

"அடே போ, "அய்யா!" என்றான் ஜகதீசன். "வா போகலாம்" என்று மங்களத்தை அழைத்தான்.

"நான் வீட்டுக்குத் திரும்பி விடுகிறேன். நீங்கள் வந்தால் வாருங்கள்; வராவிட்டால் போங்கள். அங்கே ஏதோ இருக்கக் கொண்டுதான் இவன் நம்மைத் தேடிக்



கொண்டு இங்கே வந்திருக்கிறான்" என்று திரும்பி விட்டான். மங்களம் இப்போது உள்ளேயும் வந்துகொண்டிருக்கிறாள்.

அடுத்த வீடு ஆந்திரவாடுவின் வீடு; புழக்கடை காலியாகத் தென்பட்டது. நடராஜனுக்கு ஒரே தாவலில் சுவர்மீது ஏறி, அப்பால் குதிக்க வேண்டியதுதான். அங்கிருந்த முள் வேலியைத் திறந்துகொண்டு சென்றால் ஒற்றையடிப்பாதை; அப்பால் தென்னந்தோப்பு; அதற்கும் அப்பால் ரஸ்தா வந்த சுவடு தெரியாமல் போய்விட முடியும். ஆனால், ஈசுவரன் அந்த வழியை இவ்வளவு லகுவாக வைத்துவிடவில்லை.

அடுத்த வீட்டுக்குள் இறங்கின நடராஜன் கீழே சுருண்டு படுத்துக் கனாக் கண்டுகொண்டிருந்த 'டைகர்'ன் புது காலை வைத்துவிட்டுத் துள்ளி அப்பால் குதித்தான். நாய் பளிச்சென்று கண் விழித்துக்கொண்டு "வள் வள்!" என்று ஊரே கிடுகிடுக்கும்படி பலத்துக் குரைக்கத் தொடங்கியது.

ஜானகியைக் கூப்பிட்டுக்கொண்டே வந்த மங்களம் சமையற்கட்டு வாசற்படியண்டை தயங்கி, கீழே கிடந்த ஒரு பண்டத்தை எடுத்தாள். அதைப் பிரித்துப் பார்த்தாள். அவர்கள் வீட்டைச் சேர்ந்ததே அல்ல அது... நடராஜன் அவசரத்தில் நழுவவிட்டுப்போன அவனுடைய கைக்குட்டைதான்!

# 9

"எப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் அஞ்சாமல் ஷண்முகனை நினையுங்கள். பிரபுவின் நாமத்தை விடாது பஜனை செய்யுங்கள் முருகா, முருகா! வேல் முருகா! முருகா, முருகா, மால் மருகா!' எங்கே, இப்போது கொஞ்சம் சொல்லிப் பாருங்கள்!"

— **திருச்செந்தூரில் ஒரு முருகதாஸர்**

திருச்செந்தூரில் பொதுஜன மரியாதைக்கு உகந்த ஆத்மாக்களில் தானும் ஒன்று என்று நினைத்திருந்தவர்களில் கான்ஸ்டபிள் கண்ணாயிரம் ஒருவன். கண்ணாயிரம் என்ற பெயர் வைத்த முகூர்த்தம் எப்படியோ, அவன் கண்களில் ஒன்று மங்கிவிட்டது. எனினும் மிகுதியிருந்த கண் ஆயிரத்தில் ஒன்றாக, போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு இரட்டிப்பு உழைப்பு செய்யத் துடித்துக்கொண்டுதான் இருந்தது. இருபத்திரண்டு வருஷங்களாகப் போலீஸ் உடை தரித்ததன் காரணமாகவோ என்னவோ, வேறு உடை தரித்தால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனாக இருந்தான் அவன். அவனுக்கு யாரிடமும் பயம் இல்லை; உள்ளூரில் பெயர்போன போக்கிரிகளான சோமாரிச் சோமுவும், கேடி காளிமுத்துவுங்கூட அவனைக் கண்டால் மேலே மடித்துக்கட்டிய வேஷ்டியைத் தொங்கவிட்டுக்கொண்டு வீதி ஓரமாக ஒதுங்கிச் சென்றார்கள்.

கண்ணாயிரம் தன் உயிரை இரண்டு விஷயங்களில் வைத்திருந்தான். ஒன்று, பொதுவாக உலகத்து ஆடவர்களில் பெரும்பாலோரைப் பின்பற்றி, அவன் கஷ்டசுகங்களைச் சரி பாதி பகிர்ந்துகொண்டு அதன் பொருட்டு 'அவனில் மேலான பாதி' என்று சாசுவதமான பெயர் பெற்றவளும், அவன் சந்ததி செழித்தோங்கி வாழ்விக்க வந்தவளுமான இல்லாள். ஊர்ஜனங்கள் கண்ணாயிரத்தின் மனைவி அஞ்சலையைப் பார்த்துக் கண்ணைப்பொத்தி, வாயைக் கேட்டுக் காதை மூடிக்கொண்டார்கள் என்றாலும், அவன்வரை அவள் 'எழில்' உருவம் நெஞ்சை அள்ளிக் குளிர்வித்தது. இரண்டாவதாக அவனுக்கு மிகப் பிடித்ததும் சகஜமானதுதான். "ஜிஹ்வா" என்ற அரக்கன் மனித வர்க்கத்தின் வாயினுள் உட்கார்ந்து கொண்டு, "மைசூர்ப்பாக்கைப் போடுகிறாயா? காஞ்சிவரம் இட்டிலியை என்மீது அர்ச்சனை செய்கிறாயா? அல்லது, தயிர் வடையுடன் எனக்கு நட்புச்



செய்து வைக்கிறாயா?" என்று நீரைப் பெருக்கி மூழ்க அடிக்கிறதல்லவா? கண்ணாயிரத்தின் நாக்கும் மோர்க்களியின் மீது மோகம்கொண்டது. அஞ்சலை கையினால் செய்த மோர்க்களி என்றுவிட்டால் அயம் விசேஷம்!

இந்த இரண்டும் சேர்ந்ததொரு நள்ளிரவிலே கண்ணாயிரம், ஸாயுஜ்யத்தைக் கண்ணுறப்போகும் சாத்விபோல் துள்ளிக்குதித்து, உவகை மிகுதியால் பேச்சை மறந்து நாலு கால் மிருகங்கள் செய்யும் சப்தங்களைச் செய்துகொண்டு அடுக்களையையும் அஞ்சலையையும் சுற்றிச் சுற்றி ஓடி வந்துகொண்டிருந்த காலத்திலே, யாரிட்ட சாபமோ வாசற்கதவு தடதடவென்று இடிக்கப்பட்டது. "கண்ணாயிரம் இருக்கிறானா வீட்டிலே?" என்ற குரல் கேட்டது.

"யாரு எளவு கொடுக்கிறது ராச்சேவளையிலே?" என்று கண்ணாயிரம் சீறினான்.

"அந்த மேலத்தெரு இளவனாரு நீ வரத்துக்கு முன்னே ஒருவாட்டி வந்துட்டுப் போனாரு. அவருதான் போலே இருக்கு மறுபடி!" என்றாள் அஞ்சலை.

"இல்லேனு சொல்லிப்போடு. இந்தப் போலீசு வேலையிலே மனிசனுக்கு ராவு-பகல் நிம்மதி கெடையாது!"

"பார்த்துத் தொலைச்சிருப்பாரு நீ வந்திருக்கிறதை! அதான், வந்தா கப்சிப்னு சும்மா இருக்கியா? என்னா கூச்சல் போடறே! சை!"

"கதவைத் தொறந்து அனு! தொடியிலே ஒழிச்சுட்டு வரேன்!"

இம்மாதிரியானதொரு சந்தர்ப்ப விசேஷங்களுடன் கண்ணாயிரத்து வீட்டுக் கதவு திறந்ததும், நாகநாதய்யர் அங்கே பிரசன்னமானார். "கண்ணாயிரந்தானே! என்னை?" என்றார் அவர்.

"ஆமாமுங்க... விஷயத்தை முன்னாடி சொல்லுங்க!"

"உன்னண்டை ஒரு காரியமா வந்தேன்."

"சரிங்க, மேலே விஷயம்?"

"முக்கிய காரியமாக வந்தேன், என்ன?"

"சொல்லுங்க, சாமி! ராவேளையிலே வந்தப்போ தெரியுதே?"

"உன்னாலே அதைச் செய்து தாமுடியும்னு வந்தேன். என்ன?"

உள்ளேயிருந்து அஞ்சலை, "இந்தா மச்சான்! நீ களியைத் தின்னுட்டுப் பேச உட்காரு. ஆம்மா! விளக்கெரிக்க எண்ணெய் கிடையாது!" என்று ஓர் எச்சரிக்கை செய்தாள்.

"ஒண்ணுமில்லை, கண்ணாயிரம்! நம்ம ஊட்டிலே ஒரு திருட்டு நடந்து போச்சு! ஒரு நகைப்பெட்டி காணாமே போயிருக்குது!"

"சோமாரி சோமு எடுத்திருப்பான்; இல்லாட்டி கேடி காளிமுத்து எடுத்திருப்பான்."

"அவசரப்படாதே! சாதாரண திருட்டானா நீ சொல்றது சரியாக இருக்கும், என்ன? இது வேற மாதிரி... என்ன?"

இப்படியே பேச்சு தொடர்ந்தது. நடுநடுவே அஞ்சலை சம்பாஷணையைத் துரிதப்படுத்திவர, கிழவர் பெட்டி போன விவரத்தையெல்லாம் சொன்னார். நடராஜன் ரயிலில் உபத்திரவம் செய்ததையும், ஜாகை தேடி வந்ததையும், தம் சொந்த ஹேஷ்யங்களையும் கூறினார். "உன்னிடம் கேஸை ஒப்புவித்துவிட்டேன். காதுங்காதும் வைத்தாப்பலே பிரட்டிப்பார். நம்ம ஷட்டகன் சொல்லுவான், 'கண்ணாயிரம் போலீஸ் டிரஸ்ஸிலே வந்து ஒரு பார்வை பார்த்தாலே போதும், எதிராளி நடுங்கிவிடுவான்' என்று 'டிலே' மாத்திரம் கூடாது. இனிமே இன்ஸ்பெக்டருகிட்டே சொல்லி ஸ்டேஷனிலே கேஸ் எழுதி, தலையைச் சுத்தி மூக்கைத் தொடவேண்டாம்னு உன்னண்டை வந்தேன். என்ன? செலவுக்கு இதை வைத்துக்கொள்!" என்று ஒரு பெரிய வெள்ளி நாணயத்தை அவன் கையில் திணித்துவிட்டுப் போனார்.



கண்ணாயிரம் அஞ்சலையுடன் ஆறக்களியைச் சாப்பிட உள்ளே சென்றான். இன்று காலையில் சுந்தரத்தின் வீட்டு வாசலில் அவன் நின்றதன் காரணம், மேற்கூறிய சம்பாஷணைகள்தாம் என்பதை நாம் லகுவில் ஊகித்துக் கொள்ளலாம்.

கீழ்ப் புதுத்தெருவின் கோடியில் சுந்தரம் என்பவர் வீட்டில் ஊருக்குப் புதிய இளைஞன் வந்து தங்கியிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளக் கண்ணாயிரத்துக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. சுந்தரம் என்பவரே ஊருக்குப் புதிய ஆசாமி என்பதையும், அவரைப்பற்றிய விவரங்கள் சொல்லக்கூடியவர்கள் யாரும் இல்லை என்பதையும் கண்ணாயிரம் விசாரித்துக்கொண்டான். ஆனால், அவன் ஊகித்துக்கொள்ள முடியாத விஷயம் ஒன்றே ஒன்று, சுந்தரம் எப்பேர்ப்பட்டவர் என்பதுதான்! ஆகவே, அவன் அவர் வீட்டுக்குப் போனதுமே, எடுத்த எடுப்பில் ஏமாற்றம் அடைந்தான். தன்னைக் கண்டதும் பயந்து நடுங்கிப் பதறிக் கலங்குவார் அவர் என்று எதிர்பார்த்த கண்ணாயிரம் பதிலுக்கு அவனே அந்த நிலையை அடைந்தான்!

"வாருங்கள், கான்ஸ்டபிள்! நானே உங்களை வந்து பார்க்கவேண்டும் என்று இருந்தேன். நீங்களே வந்துவிட்டது ஒரு நடை மிச்சமாகிவிட்டது" என்றார் அவர்.

"உம்." என்றான் கண்ணாயிரம்.

"ஊரில் போக்கிரிகள் ஜாஸ்தியாகிவிட்டார்கள் என்று தோன்றுகிறது" கான்ஸ்டபிள்! உங்கள் மாதிரி உத்தியோகஸ்தர்களுக்கு அது மிகவும் கவலை அளிக்க வேண்டிய விஷயம் அல்லவா?"

"உம்."

"நான் சொல்கிறேனென்று கோபித்துக்கொள்ளக் கூடாது. ஆமாம்! நேற்று ராத்திரி ஒரு மனுஷன் என் வீட்டுக்குள் வந்து, 'உன்னைப் பார் கொல்கிறேன். அடித்துப் போடுகிறேன்' என்று என்னை மிரட்டுகிறான்! மகா மோசம்!" என்றார்.

"உம்."

"நீர் நம்ம வீட்டுக்குள் வந்து பாரும்! நம் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறான்; இந்த ஊரில் வேறு ஒருத்தனுக்கு அது பிடிக்கவில்லை என்றால், 'பெட்டியைத் திருடினாய்' என்கிறது; 'பேழையைத் தூக்கினாய்' என்கிறது. நான் நினைக்கிறதென்னவென்றால் அந்தப் பைத்தியக்கார ஆசாமி அனுப்பியேதான் நீங்கள் வந்து விட்டீர்களோ என்று! என்ன நான் கேழ்க்கிறது!"

"உம்".

"உள்ளே வாருங்கள்! நம் வீட்டுக்கு வந்திருக்கிற பையன் ஒரு பெரிய மனுஷர் பிள்ளை. படாடோபமாக இல்லாமல் இருப்பதால் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள் போலிருக்கிறது. அவன் வெளியே போயிருக்கிறான்; நொடியில் வந்துவிடுவான். இருங்கள்!"

"உம்."

"நம்மகூட விளையாடுகிற பேர்வழிகளுக்கு "நான் யார்?" என்று தெரியாது. போலீஸ் டிபார்ட்மெண்ட் யோக்கியர்களுக்குத் துணை செய்யுமா ஐயா, விஷமிகளுக்கு ஒத்தாசை செய்யுமா?"



"உம்."

"வெளியிலே நிற்கிறீர்களே, உள்ளே வாருங்கள். நீங்கள் நம் வீட்டைச் சோதனை போடுங்கள்!"

"சோதனை போடுவதா?"

"ஆமாம், வாரண்ட்கூடத் தேவையில்லை. நான் கேட்கவில்லை."

"வாரண்ட் தேவையில்லை."

"ஆமாம், நாகநாதய்யர் அனுப்பியிருந்தாலும் சரி, அனுப்பியிராவிட்டாலும் சரி. அவர்தான் ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ரார்."

"ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார்!"

"நீங்கள் என்ன கிளிப்பிள்ளையா?"

"கிளிப்பிள்ளையா?"

கண்ணாயிரம்—எவ்வளவோ பேர் அவன் உடையைக் கண்டு உளறி நடுங்கியிருக்கிறார்கள்; மிரட்டலைக் கேட்டுப் பதறியிருக்கிறார்கள். இவர் என்னடா என்றால், கிண்டல் மாதிரி தலையைத் தடவிக்கொண்டு அவன் கேட்டிராத பேச்சுகளைக் கேட்கிறார். உள்ளே அழைக்கிறாரே!

"கான்ஸ்டபிள் ஸார்! உங்கள் பெயர் தெரியவில்லையே!" சுந்தரம் மந்தஹாஸம் செய்து தமது தலையைத் தடவிக்கொண்டார்.

கண்ணாயிரம் தனது பெயரைச் சொல்லவில்லை. அகௌரவம் என்று பல்லைக் கடித்துக்கொண்டான்.

"நீங்கள் நம்ம வீட்டுக்கு வந்த காரணம் என்னவென்று இனியாவது சொல்லணும்."

"என்னவென்று சொல்லணும்?"

"ஆமாம்! உங்கள் மாதிரி உத்தியோகஸ்தர்கள் உடை அணிந்துகொண்டு நம் வீட்டுக்கு வந்தால், ஒன்று ரொம்ப கௌரவம். அல்லது, ரொம்ப அகௌரவம். நீங்கள் வந்த காரணம் என்னவென்று நாலு பெயருக்குத் தெரியணும்!"

"ஓ! நாலு பெயருக்குத் தெரியணும்!"

"இல்லாவிட்டால், நான் ஏதோ திருட்டுக் கேஸ், கொலைக் கேஸில் சம்பந்தப்பட்டதாக நினைத்துக் கொண்டு, வாழைக்காய் வெண்டைக்காய்கூட வாங்க முடியாதபடி போயிடும்."

"வாழைக்காய், வெண்டைக்காய்!"

"இதென்ன ஐயா, நீங்கள் என்ன கிளிப்பிள்ளையா?"

"மிஸ்டர்! நீர் யாரானால் எனக்கென்ன! நான் அதிகாரி என்கிற ஹோதாவில் உங்கள் வீட்டுக்கு வந்ததாகச் சொல்லவில்லையே!" என்றான் கண்ணாயிரம்.

"அடடே! இப்போதான் ஞாபகம் வருகிறது. அப்படிச் சொல்லவில்லை. என் பிசகு!" என்றார் சுந்தரம் தலையைத் தடவிவிட்டுக்கொண்டு.

கண்ணாயிரம் மீசையைத் தடவிவிட்டுக்கொண்டான். அவனுடைய கட்சி ஜயிக்கத் தொடங்குவதாகத் தெரிந்ததும், ஒரு ஸ்தாயி ஏறி, "நான் உம்ம பேரிலோ, உம்ம வீட்டில் தங்கியிருக்கிறவன் பேரிலோ எனக்குச் சந்தேகம் என்று சொன்னேனா?" என்றான்.

"அடடே! நீங்கள் சொல்லவில்லை என்று இப்போது தான் தெரிகிறது. சொல்லவே இல்லை."

"நீர் யார் என்றாவது கேட்டேனா? பெட்டி என்று பேச்சு எடுத்தேனா?"

"பேச்சு எடுத்ீரா?"



"நான் வந்த காரணம் என்ன என்று ஒரு வார்த்தை சொன்னேனா?"

"ஒரு வார்த்தை!"

"நாம் சொன்னதைத் திருப்பிச் சொன்னால் 'கிளிப் பிள்ளை' என்பீர்கள். ஏனென்றால், நாங்க பப்ளிக்-ஸெர்வென்ட்; எங்களை எப்படி வேண்டுமானாலும் பேசலாம். நீங்க கிளிப்பிள்ளை கணக்கா பேசினா கேள்விமுறை கிடையாது."

"கான்ஸ்டபிள் ஸார்! என்னை மன்னிக்கணும். நீங்கள் சொல்றது அவ்வளவும் சரி; ஆனா, ஒரு விஷயம் மறந்து பேசறீங்க. எனக்கு போலீஸ் டிபார்ட்மெண்ட் மேலே உள்ள மரியாதை உங்களுக்கு எப்படித் தெரியும்? செங்கோட்டையில் சிங்காரவேலுன்னு ஒரு ஸர்க்கிள் இருந்தாரே தெரியுமா?"

"இப்ப அவர் கமிஷனர்! தர்மதுரை ஆச்சுங்களே! இன்னிக்கு நான் 'யூனிபார்ம்' போடறேன்னால், அவரு செஞ்ச தர்மம்! நான் சாப்பிடற சாப்பாடு அவருதுங்க!"

"அந்தச் சிங்காரவேலு உமக்கு மாத்திரம் இல்லை, உம்மைப் போல் இருநூறு பேருங்களுக்குச் சாப்பாடு போட்ட பிரபு!"

"பிரபுங்க அவர்! இப்போ இங்கே இருக்கிறார்?"

"அவர் நம்ம வீட்டுக்கு அடுத்த திங்கள்கிழமை வராரு. அவரைக் கண்டால், சுந்தரம் என்கிற கல்லிடைக்குறிச்சி ஆசாமியைத் தெரியுமான்னு கேளுங்க!"

"அவர் யாருங்க?"

"இதோ நிக்கிறேனே, நான்தான் அது!"

"உங்களைத் தெரியுங்களா அவருக்கு! நீங்ககூட உத்தியோகம் வாங்கிக்கொண்டவங்களா?" என்று கேட்டான் கண்ணாயிரம். இப்போது சுந்தரத்தைத்

தனது சஹபாடி என்கிற அளவில் மதித்துக் கௌரவப் படுத்தவும் சித்தமாக இருந்தான்.

சுந்தரம் தலையைத் தடவிக்கொண்டார். மெள்ள ஒரு புன்னகை செய்து, "சிங்காரவேலு எனக்கு வேலை எதுவும் செய்து வைக்கவில்லை; நானும் பழகுகிற முறையிலே, நான் அவனுக்கு வேலை செய்து வைத்தது, அவன் எனக்கு வேலை செய்து வைத்தது என்கிறதில் ஒன்றும் வித்தியாசம் கிடையாது!" என்றார்.

கண்ணாயிரம் தன் பெரிய கண்ணை அகலத் திறந்து பார்த்தான். 'ஓஹோஹோ! ஆளை மிரட்டலாம் என்று வந்தோம்; நமக்குச் சமதையானவன்போல் பேசினான். சம அந்தஸ்தில் நடத்துவோம் என்று பார்த்தால் மேலே மேலே ஏறிப் போகிறானே!' என்று ஆச்சரிய மேலிட்டு' தலையை மட்டும் ஆட்டினான்.

"ஆமாம்! சிங்காரவேலுவுக்கு நான்தான் உத்தியோகம் செய்து வைத்து, பிரமோஷனும் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். சிங்காரவேலு அதைப் பிரமாதமாகச் சொல்லுவான். ஒன்றும் பிரமாதம் இல்லை எனக்கு!"

சிங்காரவேலுவைக் கண்டால் தானே கைகள் கட்டிக் கொள்ளும் தன்மை வாய்ந்திருக்க, அவனை அலட்சியமாகப் பேசும் இந்தச் சுந்தரம் யார்? வெறும் சவடால் பேர்வழியாக இருக்குமோ? ஒருகால் இவன் சொல்வதும் உண்மையாக இருந்து, சிங்காரவேலு இவனுக்குப் பணியும் பிரகிருதியாக இருந்துவிட்டால் என்ன செய்வது? எதற்கும் பணிவாய்ப் போவதே நல்லதென்று, 'ஐயா! நான் என்ன, ஓர் அற்ப கான்ஸ்டபிள்! நம்ம 'டூடி'யை நாம் செஞ்சுட்டுப் போறோம். ஆனா, நமக்கு உபகாரம் செஞ்சவங்களை மறக்கமாட்டோம்'' என்றான்.

"மறந்தாலுங்கூட மரியாதை மதிப்பு தவறி நடந்து விடக் கூடாது. சிபாரிசு பண்ணச் சக்தியிருக்கிறவன் கெடுத்திடவும் கெடுத்திடுவானில்ல!" 'பேர்வழியைப்



பார்த்தால் கர்நாடகமாகத் தோன்றுகிறார்; முகத்தைச் சாதாரணமாகக் கவனிக்கும்போது அசடாக இருப்பவராகவே காண்கிறது. பேசும் போதல்லவா உள் ஆழம் தெரிகிறது?" என்று எண்ணியவாறு, 'நாம் வாய் கொடுத்தால் ஆபத்து' என்று ஒதுங்க முயன்றான் கண்ணாயிரம்.

"எங்கே போகிறீர்கள், கான்ஸ்டபிள்? சிங்காரவேலு வருகிறார் என்கிறேனே, அவரிடம் ஏதாவது உமக்குச் சொல்ல வேணும் என்ற ஆவல் உண்டா? நான் எதைச் சொன்னாலும் கேட்பான். கீறின கோடு தாண்ட மாட்டான்!" என்றார்.

நரி வலம் போனாலும் சரி, இடம் போனாலும் சரி, மேலே விழுந்து பிடுங்காமல் போனால் சரி என்று, "ஒன்றும் வேண்டாம், ஸார்! தயவு இருந்தால் போதும்" என்று திரும்பினான்.

சுந்தரம் புன்னகை செய்தார். "ஏதோ காரியமாக வந்திருக்கிறீர்கள். சொல்லாமல் திரும்புகிறீர்கள். இருக்கட்டும், இன்னொரு சமயம் சொல்கிறீர்களா, பார்க்கலாம்! உம்! கான்ஸ்டபிள்! ஒரு காரியம்! நம்ம தெருவில் கலாட்டா எதுவும் நடக்காமல், நான் சொன்ன போக்கிரிகள் நடமாட்டம் இல்லாமல் கவனித்துக்கொள்ள வேண்டியது உம்ம பொறுப்பு! அதற்காக நம்ம மாதிரி சாதுக்களை மிரட்டிக்கொண்டிருக்கவும் கூடாது நீர். சிங்காரவேலுவுக்கும் சரி, எனக்கும் சரி அது கொஞ்சங் கூடப் பிடிக்காது!" என்றார்.

திருப்பித் திருப்பிச் சிங்காரவேலுவின் பெயர் சர்க்கஸில் துஷ்ட மிருகத்திடம் காட்டப்படும் காந்தக் கம்பம்போல நீட்டப்படும் மர்மம் புரியாதவனாக, ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கண்ணாயிரம் திரும்பினான். போகும்போதே தன்னை இம்மாதிரி ஓர் இக்கட்டான நிலையில் சிக்கவைத்த நாகநாதய்யரைச் சரியானபடி மாட்டி வைப்பதென்று கறுவிக்கொண்டே போனான்.

கண்ணாயிரம் வந்த காரியம் அவன் வரையில் எவ்விதப் பலனும் அளிக்கவில்லை என்பது வாஸ்தவமே யானாலும், எதிர்பாராதபடி இரண்டு இடங்களில் அதன் சாயை அடிக்கத்தான் செய்திருந்தது.

போஸ்டாபீஸிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த நடராஜனுக்கு முத்துச்சாமி இதைப்பற்றிச் சொல்லியதால் தான் ஜானகி வீட்டுக்குள் செல்ல ஓர் அவசரம் ஏற்பட்டது. எப்படி அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் புழக் கடைச் சுவரைத் தாண்டி குதித்து, 'டைகர்' என்ற பைரவரின் நித்திரைக்குப் பங்கம் விளைவித்து, அவர் குரலையும் கிளப்பிவிட்டான் என்பது ஏற்கனவே விவரிக்கப்பட்டுவிட்டது.

'டைக'ரும் ஆந்திரரும் இணைபிரியாத நண்பர்கள் தாம் என்றாலும், இன்று ஒருவர் வாசற்புறமும் ஒருவர் புழக்கடையிலும் பிரிந்திருக்க ஒரு முக்கியமான காரணம் இருந்தது. ஆந்திரர் கட்டை குட்டையான இரு ஆசாமி களுடன் அதி ரகசியமான சில விஷயங்களை வாசற்புறம் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தார். 'டைகர்' அவர்களைப் பார்க்குந்தோறும், சுபாவமாக நாய்களுக்கு இருக்கும் ஜைசிப்புத் தன்மையினாலோ என்னவோ, 'இவர்கள் துஷ்டர்கள்; இருட்டில் திருடுபவர்கள்; பகலில் சூழ்ச்சி செய்பவர்கள்' என்று தீர்மானித்துக் குரைக்கு மாகையால், ஆந்திரர் அதை ஒதுப்புறமாகத் தள்ளி வைத்துவிட்டு ரேழியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். அந்த இருவரும் கண்ணாயிரத்தின் கவனத்தில் சதா இருந்துவரும் உள்ளூர்ப் போக்கிரிகளான சோமாரி சோமு, கேடி காளிமுத்து என்கிற பிரபலஸ்தர்கள்தாம் என்பதை இந்த இடத்தில் வெளி யிடாமல் மூடி வைப்பதில் லாபம் ஒன்றுமில்லை.

அவர்கள் பேச்சைச் சிறிது நேரம் கவனித்தவர்கள்கூட ஏதோ சட்டத்துக்குப் புறம்பான முறையில் பேச்சு நடக்கிறதென்பதை அறிந்துகொள்ள முடியும்.



சம்பாஷணையில், "ராத்திரி வேளை; பதினொரு மணி; யார் வரட்டுமே, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்; மண்டை 'டணார்'" என்ற வாசகங்கள் வெகு சகஜமாக அடிபட்டுக் கொண்டிருந்தன. கோப வேளையில் ஓரளவு தெலுங்கு வார்த்தைகளையும் கலந்து பேசும் ஆந்திரருங் கூட இன்று தம் 'சகா'க்களை ஒத்து முழுக்க முழுக்கத் தமிழிலேயே பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் நடத்திய மூவர் மகாநாடு ஒருமித்த முடிவுகளுடன் கலையும் தறுவாயில் இருந்ததென்பதற்கு அடையாளமாக, "அவ்வளவுதான்! நீங்கள் போகலாம் அப்புறம் நான் சொன்ன வேளைக்குப் பார்க்கலாம்" என்றார் ஆந்திரர் சார்தமாக.

"நாங்கள் இப்ப வெளியே தலை காட்டக்கூடாது! கோடி வீட்டண்டை நிற்கிறான் கண்ணாயிரம். இங்கேருந்து வர்றதைப் பார்த்தால், 'என்னடா இந்தப் பயங்க அங்கேருந்து வரான்கள்?'னு குருட்டு யோசனை பண்ணிப்பான் என் எளவு, வீண் தொந்தரை! அவன் தான் போகட்டுமே" என்றான் சோமாரி வெளியே எட்டிப் பார்த்துவிட்டு.

"ஆமா... இவ்வளவு நாளி இருந்தலங்க, இன்னம் ஐந்து நிமிசம் தங்கிட்டுப் போனாபோச்சு! அங்கே கண்ணாயிரம் ஏன் வந்திருக்கான்னு தெரியல்லே!" என்றான் மற்றவன்.

"சரி, எப்படியோ செய்யுங்கள்! எனக்குக் கொஞ்சம் உள்ளே வேலை இருக்கிறது. தபால் எழுதணும் சரக்கு வருகிற விஷயம் இன்னம் எழுதல்லே..."

அவர்கள் பேச்சில் இந்தச் சமயத்தான் நடராஜன் 'டைக'ரைக் கிளப்பிவிட்டு, எந்த நிமிஷமும் தன் குரல் வளையை ஆந்திரரும், துடைச்சதையை 'டைக'ரும் பற்றிக்கொள்ளும் என்பதை நடுக்கத்துடன் எதிர் பார்த்தான். ஒரே இடத்தில் நின்றால் கட்டாயம் நாய் பிடுங்கிவிடும் ஆகையால் நாலு மூலையும் தாவின

நடராஜனின் செவிகளில் புழக்கடை கதவு திறக்கப்படும் சப்தம் நாராசம் போல் கேட்டது. பெரிய பிசாசை எதிர் பார்த்தவன் கண்ணின் முன்னால் பரமசிவனே பிரஸன்னமானது போல், திறந்த கதவின் வழியே அழகிய நடனப்பெண்தான் தென்பட்டாள். ஒரு முறை தன் பெரிய விழிகளை உருட்டி விழித்து, நிலைமையைப் புரிந்து கொண்டாள். "சீ! டைகர் இப்படி வா!" என்று ஓர் ஆக்ஞை பிறக்கவே, சோளிங்கபுரம் ஆஞ்சனேயப் பெருமாள் ஸந்நிதியின் முன்பு அடங்கி ஒடுங்கிப் போகும் பிசாசுகளை நினைவு மூட்டும் வகையில் வாலைப் பின்னங் கால்களுக்கிடையே நுழைத்து, அசட்டு முழியுடன் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டது சுவானம். அந்த வனிதையின் முகத்தில் 'ஆழ்ந்த சிந்தனை செய்கிறாள்' என்பதை அறிவிக்கும் குறியொன்று ஊசலாடியது.

மேற்கொண்டு என்ன நடக்குமோ என்று தத்தளித்த நடராஜனை 'உள்ளே வா!' என்று சகஜமாக அழைத்தாள். பேசாமலே பின் தொடர்ந்த நடராஜனுக்குச் சுவரோரம் இருந்த ஒரு பெரிய பத்தாயத்தின் மூடியைத் திறந்து காட்டி, 'உம்! உள்ளே இருங்கள் சிறிது நேரம்' என்றாள். அப்போது ஆந்திரரின் குரல் பலமாக அவன் காதை வந்து தாக்கியது. ஓர் அரக்கனிடமிருந்து தனக்கு ஒளிந்து கொள்ள இடம் அளிக்கிறாள் என்கிற உணர்வுடன் நடராஜன் கீழ்ப்படிந்தான். மூடி சார்த்தப்பட்டதும், ஒளி மறைந்து அந்தகாரம் சூழ்ந்துகொண்டது. கண்ணுக்கு எதுவும் புலப்படவில்லையாகையால் காதின் சக்தி அதிக தீக்ஷண்யமாயிருந்தது நடராஜனுக்கு.

ஆந்திரவாடு உரத்த சப்தம் போட்டுக்கொண்டு, "யார் இங்கே வந்தது? ஏன் டைகர் குரைத்தது? உம்?" என்று கேட்டதொனி அவன் செவிகளை எட்டியது.

நடனமாது என்ன பதில் சொன்னாள் என்பது அவனுக்கு ஸ்பஷ்டமாகத் தெரியவில்லை. மெல்லிய



குரலில் ஏதோ சொல்கிறாள் என்பதை மட்டும் அவன் அறிந்தான்.

'டைகர்' எழும்பிக் குதிப்பதும், கால்களால் பத்தாயத்தை நாற்புறமும் சுற்றுவதும் பிறாண்டுவதும், மெல்ல முனகி முனகிக் குரைப்பதும் அவனுக்குக் கேட்டது.

இந்தப் பயங்களுக்கிடையே, அவன் எதிரியான ஆந்திரர் பத்தாயத்தின்மீது உட்கார்ந்துகொள்வதும் அதன் காரணமாக அதன் மர மூடி உடைந்துவிடுவது போல் சப்திப்பதும் அவன் திகிலை இரட்டிப்பாக்கின.

இட நெருக்கடி மிக அதிகமாக இருந்தது; காற்றோட்டமே துளிகூட இல்லையாகையால் வியர்வை ஆறாகப் பெருகி க்ஷணம் செல்வது யுகமாகப் பட்டது. இத்தனை உபத்திரவங்களில் நடராஜன் நெஞ்சை ஒரு புதிய கிலி பற்றிக்கொண்டது.

ஒரு பெண்முகத்தில் நம்பிக்கை வைத்து அவன் வார்த்தையை நம்பி இப்படி அடைபட்டது சரியா? அவள் எதற்காக அவனைக் காப்பாற்ற வேணும்? பிடித்துக் கொடுக்க அவள் செய்த வேலையா இது? அன்று வாசற் புறமாக வந்தான், நாய் குரைத்தது; இன்று புழக்கடை வழியாக வருகிறான், நாய் குரைத்தது. திருடன் வந்திருக்கிறான் என்று சொல்லி எதிர்ச்சருகில் சற்றுத் தள்ளி நிற்கும் கான்ஸ்டபிளிடம் காண்பித்துக் கொடுத்து விட்டால், அவன் என்ன பதில் சொல்வான்? சொன்னால் நம்புவார்களா? ஏற்கனவே நாகநாதய்யர் குற்றச் சாட்டைக் கண்ணாயிரம் நம்பி வந்திருக்கும்போது, கையும் களவுமாகப் பிடிபடுவதனால் சும்மா விடுவாளா? அவன் எழுந்து ஓடிவிடாமல் இருக்கத்தான் ஆந்திரர் பெட்டியின் மூடிமீது உட்கார்ந்துகொண்டு வேறு யாரை யேனும் போலீஸ்காரரை அழைத்துவர அனுப்பி யிருப்பாரோ? அத்தனை இறுக்கத்திலும் வியர்வையிலும் கூட எப்போது கதவு திறக்கப்பட்டுக் கண்ணாயிரத்தின்

கையில் பிடிபடப்போகிறோம் என்ற பயத்தினால் அவன் உள்ளம் நடுங்கிக்கொண்டிருந்தான். நேரம் சென்று கொண்டேயிருந்தது.

# 10

"பார்த்தாவின் சுகதுக்கங்களில் பங்கு கொள்பவளும், அவனுடைய தேசாந்திர காலத்தில் சரீர இணைப்பும் தேக அசௌக்கியமும் கொள்பவளும் அவனிடம் சதா களித்திருப்பவளும், வீட்டுக் காரியத்தில் திறமையுள்ளவளும், கிருஹத்தைப் பரிசுத்தப்படுத்துகிறவளும், அதிகச் செலவில் மனமில்லாதவளும், பதிவிரதையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்."

—மநுஸ்மிருதி (5-150)

ஒரு கதாசிரியனுடைய ஐம்புலன்களைப் பற்றிச் சொல்லப் போகும்போது பல தேவர்களுடைய தனிப்பட்ட விசேஷ அம்சங்களை அவன் ஒருவனே பெற்றுத் தனது கற்பனைக்கு உருவம் அளிக்கிறான் என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். பாத்திரங்களின் சிருஷ்டியிலே அவன் பிரம்மாவுடன் போட்டி போடுகிறான். அவர்கள் எங்கிருந்தாலும் இந்திரனின் வஜ்ராயுதத்தின்வேகத்துடன் பாய்ந்து செல்கிறான். அவனுடைய மனதிற்கிசைந்தவர்களானால் சூரியனுடைய பிரகாசத்தையே அவர்கள்மீது வீசி ஸ்வர்ணமயமாக ஜ்வலிக்க வைக்கிறான். பிடிக்காதவர்களை நரகலோகத்தில் தள்ளி வர்ணிக்கிறான். வாயு நுழையாத இடமானாலும் துரத்திச் சென்று, எத்தனை ரகசியமாக இவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நடத்திக் கொண்டாலும் தெரிந்து வந்து அம்பலப்படுத்துகிறான். ஒரு பாத்திரத்தை ஆஞ்சனேய மூர்த்தியைப்போல் ஆகாயத்தில் பறக்க வைக்கிறான்; மற்றொருவனை



நரஸிம்ஹ மூர்த்தியைக்கொண்டு கிழித்துப்போடச் சொல்கிறான். இந்த அபாரமான திறனைக்கொண்டு பேனாவாகிற தன் ஆயுதத்தை ஆக்கலுக்கும் அழித்தலுக்கும் நிர்த்தாக்ஷிணியமாக உபயோகப்படுத்துகிறான்.

அந்தச் சக்தியை உபயோகித்துதான் நாமும் இப்போது மாயவரம் வள்ளலார் கோயில் தெருவில் ஒரு பெரிய வீட்டின் காமிரா அறைக்குள் அவசரமானதோர் அலுவலில் ஈடுபட்டிருக்கும் ஓர் இளந்தம்பதியைப் பார்க்கிறோம்; அவர்களின் சம்பாஷணையைக் கேட்கிறோம். அறைக்குள்ளே இருப்பவர்கள் நடராஜனின் ஆப்த நண்பனான மணியும் அவன் அருமைத்தங்கமும்தாம். பீரோவைத் திறந்து வைத்துக்கொண்டு, தனது பிரயாணத்துக்குத் தேவையான சட்டை வேஷ்டிகளைப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொள்கிறான் மணி. நண்பனின் தந்தி உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தும், உதவி செய்ய வேண்டியதை முன்னிட்டும் உடனே புறப்பட உள்ளம் ஒரு புறம் துடிக்கிறது; காலடியில் உட்கார்ந்து அவனுக்குத் தேவையாக இருக்கும் இதர உபகரணங்களை தேடித்தரும் அன்புக்கிழத்தி தங்கம்மாளைப் பார்க்கும் போது, 'இந்தக் கண்மணியைவிட்டுப் பிரிய வேண்டுமே' என்ற ஏக்கம் ஒரு புறம் போட்டு அவனை வதைக்கிறது.

தங்கம்மாள் வெகு நேரம்வரை தலைநிமிரவில்லை. அகன்ற அவள் கருவிழிகளில் லேசாக நீர் படர்ந்திருந்தது. டிசம்பர் மாத லீவுக்கு எத்தனை நாளாகக் காத்திருந்தான் அவள்! ஆனால் அது வந்து ஒருவிதப் பலனும் தரவில்லையே! இன்று இவர் போனால் ஒரு வாரமாவது தங்கிவிடுவார். அப்புறம் ஒரு வாரங்கூட மிகுதியிராது. எனினும், தன் அபிப்பிராயம் எதையும் அவள் சொல்லவில்லை; சொல்லும் வழக்கம் அவளிடம் இல்லை! அவருக்குத் தெரியாதா அவளுடைய மனம்? ஆறு வயதுச் சிறுமியாக இருந்தபோது, விளையாட்டில் நறுக்கென்று குட்டிவிட்டுப் போகும் மணி, பதிலைந்து நிமிஷத்துக்

கெல்லாம் திரும்பி வந்து, "ரொம்ப வலித்துவிட்டதோடி?" என்று கேட்பவனாயிற்றே! அந்த அன்பு இந்த ஆயுளில் மறைந்துவிடுமா?

"தங்கம்!" என்று மெல்ல அழைத்தான் மணி.

பதில் சொன்னால் தன் குரல் உடைந்து கேட்கும் என்ற பயத்துடன், மௌனமாக நிமிர்ந்து பார்த்தாள் தங்கம்.

"நான் போயிட்டு வரட்டுமா, தங்கம்?"

"போகிறதாகத் தீர்மானம் ஆனபிறகு நான் என்ன சொல்வதாம்! எனக்குக்கூடத் திருச்செந்தூர் பார்க்க வேண்டும்! என்று ஆசை ஒரு தரம் தரிசனம் செய்து விட்டால் ஆறுமுகன் கண்ணைவிட்டு அகலமாட்டான் என்று மாமி சொல்லியிருக்கிறார். நீங்களே போகும் போது..."

"கூட்டிக்கொண்டு போகிற சந்தர்ப்பம் இதுவானால் நான் அழைத்துக்கொண்டு போகமாட்டேனா? நான் போகிற காரியம் எப்படி! அதுதான் போகிறதென்றால், நாலுமாசமாக ஸ்நானம் செய்யாத பெண்ணை எப்படி அழைத்துக்கொண்டு போகிறதென்று அம்மா கேட்க மாட்டாளா?"

"நான் பிடிவாதம் பிடிக்கவில்லை!"

"நான் உன்னை அப்படிச் சொன்னேனா? எனக்கு எவ்வளவோ ஆசை, உனக்குப் பிள்ளையாகப் பிறக்க வேண்டும் என்று பிள்ளை பிறக்கட்டும்; நானும் நீயும் பயலை அழைத்துக்கொண்டு ஜோராக ஒரு 'டிரிப்' அடிக்கலாம். எப்படி நம்ம யோசனை?"

தங்கம் அழகுடன் புன்னகை செய்தாள். "நான் பிடிவாதம் செய்யாவிட்டாலுங்கூட, உங்கள் பிள்ளை கேழ்ப்பான், பாருங்கள்! நீங்கள் இப்போ போய்விட்டு



வருகிறமட்டும் எனக்குத் தூக்கம் வரப்போகிறதில்லை! அது தெரியுமோல்லியோ?"

"அதெப்படியோ! எனக்கு இன்று ராத்திரி தூக்கம் இல்லை. ரயிலில் உட்காரக்கூட இடம் கிடைக்கிறது சந்தேகந்தான்!"

"சரிதான்னா உங்க பரிகாசம்! நீங்கள் ஜாக்கிரதையாகப் போகணுமே!"

"துணைக்கு யாரையாவது கூட்டிக்கொண்டு போகலாம் என்றால், நீயும் வருகிறதற்கில்லை. நீதான் துளசி பூஜை பண்ணுவாயே, என் க்ஷேமத்துக்கு? அப்புறம் எனக்கு என்ன பயம், தங்கம்?"

"அதிலே என்னவாம் பரிகாசம்! நம் வீட்டுத் துளசிக்குப் பூஜை செய்துதான் உங்களையே அடைந்திருக்கிறேன். உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், அது இல்லவே இல்லை என்று சொல்லிவிடுகிறதாமோ? இங்கிலீஷ் புஸ்தகத்தில் 'ஏ பிளஸ் பி' என்று போட்டிருக்குணுமாக்கும்; அப்போதான் நம்புவீர்களாக்கும்! அப்பாக்கூட சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டார்."

"என்ன அவருக்கு வருத்தம், அடேடே!"

"நேற்று சாயந்தரம் 'ஸந்தி' பண்ணாமலே சாப்பிட உட்கார்ந்திட்டேன். நான் பொய் சொன்னேன், நான்தான் பாத்திரத்திரத்தில் ஜலம் கொடுத்தேனென்று."

"சபாஷ்! அதுன்னா பார்யாள் என்கிறது! இப்படிப் பக்கத்தில் வா சீக்கிரம், என் தங்கம்!"

"அம்மா சமையல் கட்டில் இருக்கிறார்; பின்னை சமர்த்தை எட்டிப் பார்த்துவிடப் போகிறார். ரயிலுக்குக் கிளம்புகிற காரியம் முன்னாடி ஆகட்டும். அங்கே போய்த் தேட வேண்டாம். இதில் சீப்பு, கண்ணாடி, சோப்பு, தைலம், பல்பொடி, விபூதி எல்லாம் வைத்திருக்கிறேன்."

"ரைட், தங்கம்! எவ்வளவு பணம் எடுத்துக்கொள்வ தென்று தெரியவில்லையே!"

"உங்கள் சிநேகிதருக்கு ஆபத்து என்கிறதனால் கூடவே எடுத்துக்கொண்டு போங்கள். அப்பாவிடமும் முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள்... ஆமாம்! ஏன்னா, நம்ம கல்யாணத்தைப் பற்றி பரிகாசம் பண்ணினாளே எல்லாரும்; இப்போ திருநெல்வேலி வரைக்கும் உங்கள் சிநேகிதர் போய் அவர் கல்யாணத்தைச் சிரிப்பாய்ச் சிரிக்க அடிக்கிறது நன்னாயிருக்கா!"

"உஸ்! பேசாதே!"

"ஏன் பேசப்படாது? நாம் எந்த விதத்தில் ஆசையில் குறைந்துவிட்டோம்? காலேஜில் படித்துக் காதல் கொண்டால்தான் உசத்தியா? சொல்லுங்கோ, அம்மாஞ்சி! அசட்டு அம்மாஞ்சி, சொல்லுங்கோ பதில்!"

"தங்கம்! நீ வரவரச் சுத்த அதிகப்பிரசங்கியாகப் போய்விட்டாய், நான் அடக்கப்போகிறேன்; ஆனால், அதற்கு இப்போ 'டயம்' இல்லை. சீக்கிரம் காப்பி கொடுத்தால் மெள்ள ரயிலுக்குக் கிளம்பிவிடலாம்."

"காப்பிதானே! வந்துகொண்டே இருக்கிறது! உங்க சிநேகிதர் அப்பா 'சுத்த பாஷ்', அவர்களுக்கும் கொடுத்து விடுகிறேன்!" தங்கம் மணியைப் பார்த்து ஒரு புன்னகை செய்தாள். பிறகு எழுந்து விசுக்கென்று சமையற்கட்டை நோக்கி விரைந்தாள். பழங்கால நாகரிகப்படி உடை உடுத்திப் பேசிச் சிரித்த இந்தப் பெண்மணியிடம் இல்லாத என்ன புதிய கவர்ச்சியை அந்த நடராஜன் மிஸ் ஜானகியிடம் கண்டுவிட்டான் என்கிற முறையில் மணியின் யோசனைகள் ஓடின.

அறையிலிருந்து வெளிப்பட்ட தங்கம் திரும்பிப் பார்க்காமலே போனதனால்; வெளியே ஒதுப்புறமாக நின்று தம் சொந்த விஷயங்களில் ஆழ்ந்து போயிருந்த



ஹரனைக் கவனிக்காமல் இருந்துவிட்டாள். இந்த இளம் தம்பதிகளுடைய பேச்சு அவர் செவிகளில் அகஸ்மாத்தாக விழுந்தது; அவர் மேலும் நின்றது அதை ஒட்டுக் கேட்க வேண்டுமென்ற நோக்கத்துடனே அல்ல; ஹரனுடைய சுபாவமும் அதுவல்ல. அந்தச் சம்பாஷணை அவருடைய இதய ஆழத்தில் மறைந்து கிடந்த சில பழைய சம்பவங்களைக் கிண்டி மேலே கொண்டுவந்தது. டெல்லியில் புதுக்குடித்தனம் வைத்த காலம்; கையில் பணம் அதிகம் இல்லை. அப்போது உத்தியோகமும் சாசுவதம் இல்லை. இளம் மனைவி ஜயம், ஒன்றும் அறியாத பேதை, ஆறு மாத கர்ப்பம். அவரை முற்றும் நம்பி அவர்மீது அன்பனைத்தையும் பொழிந்துகொண் டிருந்தாள். ஆபீஸிலிருந்து மாலையில் திரும்பச் சிறிது தாமதமாகிவிட்டால் தவிப்பாள்; இருநூறு தடவை வாசற்படிக்கும் உள்ளுக்கும் நடப்பாள். அவரைக் கண்ணால் கண்டுவிட்டால் அமிர்தபானம் செய்து விட்டாற்போல் மகிழ்வாள். தன் கையினால் செய்த பலகாரத்தைத் தானே கொடுக்க ஆசைப்படுவாள். "நீங்கள் பாட்டுக்கு எழுதிக்கொண்டோ, வாசித்துக் கொண்டோ இருங்களேன், நான் வாயில் போட்டு விடுகிறேன்" என்று முரண்டு பிடிப்பாள். ஒரு நாள் சாயந்திரம் நெய் சொட்டச் சொட்ட வெண்பொங்கல் செய்து சுடச்சுட வெள்ளிப் பேலாவில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, அவருக்கு ஊட்டினது ஞாபகம் வந்தது. கைவளைகள் குலுங்க அருள் ததும்பும் முகத்தில் அன்பு கனிய, "எப்படி இருக்கிறது?" என்று அடிக்கொரு தடவை கேட்டுக்கொண்டு நின்ற அந்தப் பத்தினி தெய்வத்தின் உருவம் தேஜசுடன் எதிரே நின்றது. என்ன பாக்கியத்தைப் பெற்றார்! என்ன அதிர்ஷ்டத்தை இழந்தார்! ஆஹா! தடிக்கம்பை ஊன்றிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்து போனார் ஹரன். அவன் ஞாபகத்துக்கு நடராஜன்தான் இருக்கிறான். "என் பிள்ளையைவிட்டுச் செல்கிறேன். நன்றாகக் கவனித்துக்

சொன்னாயா?" என்ற கேள்விக்குறியுடன் போயே போய் விட்ட பேதை ஜயத்துக்காக இருபது வருஷத்துக்குப் பிறகு கண் கலங்கினார். இன்று மணியும் நங்கமும் இருப்பது போலவே இருந்தன, அவர் பழைய நாட்கள்; அவை திரும்புமா?

நடராஜனுக்குக் கல்யாணம் செய்வித்து அவன் வாழ்க்கைக்கு அப்படி ஓர் இன்பம் தருவித்துத் தருவது ஒன்றுதான் சாத்தியம் அவரால். இன்று மணி போகும் திருச்செந்தூருக்கு ஊரனும் ஜயமும் முன்னொரு காலத்தில் போயிருந்தார்கள். மறுபடி வருவதாகவும் வேண்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால், ஏனோ அந்த முருகன் சந்தர்ப்பம் அளிக்காமலேயே பிரித்துவிட்டான்; மறுபடி போகவே இல்லை.

"ஸார்! காப்பி சாப்பிடுகிறீர்களா?" என்று பக்கத்தில் நின்ற மணியின் குரல் ஊரனை ஸ்வப்ன உலகத்திலிருந்து எழுப்பியது. ஜயம் மறைந்தாள்; எதிரே உடனே செய்ய வேண்டிய காரியங்கள் தோன்றின.

"மிஸ்டர் மணி! நானும் உங்களுடன் வருகிறேன். எனக்குப் பொன்மலையில் ஓர் அவசர காரியம் இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு திரும்புகிறேன். அதற்குள் நடராஜனுடன் நீங்கள் திரும்பி விடலாம்" என்றார் அவர்.

* * *

மதுரை அட்வகேட் பட்டாபிராமய்யருக்குப் பொழுது போகவில்லை. ஜானகியும் மங்களமும் திருச்செந்தூருக்குப் போய்விட்டார்கள், ஜகதீசனையும் அழைத்துக்கொண்டு அடிக்கடி கண்ணில் பட்டுக்கொண்டிருக்கும் கோபாலனும், காயத்ரி வந்த பிறகு தம் மாடி அறையைச் சீர் செய்து கொண்டு அதே அலுவலாயிருப்பதாகச் சொல்லி விட்டான். காயத்ரியின் கலகலவென்ற சிரிப்புமட்டும் ஒரொரு சமயம் அவர் செவிகளுக்கு வந்து எட்டிக்கொண்



டிருந்தது. அன்று வழக்கமாக ஒரு வியாதி சொல்லும் பாகீரதியுங்கூட, மாட்டுப்பெண் வந்துவிட்ட உத்ஸாகத்தினாலோ என்னவோ தன் தேகத்தைப்பற்றிய புகார் ஏதும் சொல்ல மறந்து போயிருந்தாள்.

பட்டாபிராமய்யர் பின்கையைக் கட்டிக்கொண்டு தமது ஆபீஸ் அறையில் உலாவினார். தலையை நிமிர்த்தி உயரப் பார்த்தார். 'திருச்செந்தூர்! உம் திருச்செந்தூர்! திவ்யமான க்ஷேத்திரம்!' சமுத்திர அலைகள் 'குகைதோறும் வீற்றிருக்கும் ஆறுமுகச்சாமி'யின் பாத பத்மங்களை ஸ்பரிசிக்க வரும் பெருமிதத்தில் வெண் நுரைகாட்டி இளமுறுவல் செய்யும் காட்சி அவர் கண்களுக்குத் தோன்றியது. மீண்டும் இருமுறை உலாவினார். சுவாமி மலையில் ஒரு சமயம் கந்தனுக்கு விபூதி அபிஷேகம் நடந்ததும், உடல் சிலிர்த்து நெஞ்சுருகிக் கண்ணில் நீர் சோர்ந்து நின்றதும் நினைவுக்கு வந்தன. தென்பரங் குன்றத்தில் பக்த கோடிகளுடன் முன்னிடத்துக்கு முண்டினதையும், பழனிமலை ஏறிப் பஞ்சாமிர்தம் பெற்றதையும் தொடர்ந்து ஞாபகம் செய்துகொண்டார். தம்மை அறியாமல் புஸ்தக அலமாரியின் முன்னால் நின்றார்; இயந்திரம்போல் அவர் கரத்தில் ஒரு புஸ்தகத்தை எடுத்தார். "அடியே! பாகீரதி!" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே சென்றார். "இந்தப் பாட்டைக் கொஞ்சம் கேளேன்!"

"கேட்டுத்தான் கிடக்கிறது. பூட்டுக்குப் பூட்டு வலி வரும்போல் இருக்கிறது!" என்றாள் அந்த அம்மாள்.

"ஒன்றும் பயப்படாதே! அதற்காகவேதான் வந்தேன், கேள்" என்று பாடலைத் தொடங்கிவிட்டார். பட்டாபிராமய்யர் சங்கீத வித்வான் அல்ல; சாரீர ஸம்பத்து அவரிடம் நெருங்கினது இல்லை; ராகஞானம் என்பது அவருக்குச் சட்டோடு கிடையாது. தோடிக்கும் பைரவிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று கவனித்தவர் அல்ல தம் இஷ்டம் போல அவர் பாடவே

பாகீரதி காதைப் பொத்திக்கொள்ளத் தயாரானாள். இம்மாதிரியான ஒரு வரவேற்பை எதிர் பார்த்தவரேயா கையால் அய்யர் லக்ஷ்யம் செய்யாமல் மேலே பாடினார்.

"சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றத் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேல்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு
மெய்த்துணையே!"

"கேட்டாயா, பாகீரதி! பரமசிவனை என்ன அழகாக வர்ணித்து, அப்பேர்ப்பட்ட பிரபுவின் குமாரன் ஷண்முகன் என்கிறார்!" என்றார்.

"நீங்கள் ஒன்றையுமே வாசித்தது கிடையாது! எங்கம்மா எத்தனையோ பக்திப் பாடல்கள் சொல்லுவாள், ஒண்ணொண்ணும் அற்புதமாயிருக்கும். உங்களுக்கென்ன, எப்போது பார்த்தாலும் சட்டப் புத்தகமும் கட்சிக்காரன் வம்புந்தான்!"

"எல்லாப் பாட்டும் பாடினால்தானா என்ன! இந்த ஒரே பாடலை வைத்துக்கொண்டு அச்வமேத யாகம் செய்யலாமே! போகட்டும், குழந்தை திருச்செந்தூருக்கு வா என்று கூப்பிட்டானே. இப்போ கையிலே வேலை ஒன்றும் இல்லை. இரண்டு மூன்று கேஸ் 'அட்ஜர்ன்' பண்ணிப் போட்டுவிட்டான் ஜட்ஜ் அப்புறம் முடிகிறதோ இல்லையோ? உனக்குச் சௌகரியமாக இருக்கிறதென்றால் இப்போதே போய்விட்டு வந்தால் என்ன! என்ன சொல்றே?"

"நான் என்ன சொல்கிறது? எனக்கு உடம்பு என்னிக்குந்தான் இருக்கு. நீங்கள் புறப்படு என்றால் புறப்படுகிறேன். மருந்துப் புட்டியைக்கூடக் கட்டி எடுத்துக்கொண்டால் போச்சு! எனக்கு தலைவலி வந்தால் உங்களுக்கு லட்சியமா? திருகுவலி வந்தால் லட்சியமா?"



"அட, அதற்குச் சொல்லல்லேடி. நாம போனால் கோபாலன் தனியாக இருப்பானே என்று கவலைப்படக் கூட வேண்டாம். அவன் அகமுடையான் வந்திருக்கிறான், கவனிச்சுக்கிறான். நாம் நாலு நாள் போய்விட்டு வரத்துக்குள்ளே எந்த அச்வமேத யாகம் நின்னுபோய் விடப் போகிறது இங்கே; என்?"

"எப்பவும் உங்கள் பேச்சுத்தான் உங்களுக்கு! நிமிஷத்திலே அச்வமேதயாகம் பண்றேன் என்கிறேன்! நிறுத்திப்பிடறேன் என்கிறேன். அவாளுக்கு ஜாகை கிடைச்சதைப் பத்திகூடப் பதில் கிடைக்கல்லை."

"அதெல்லாம் கிடைச்சிருக்கும்னா! கிழவர் பார்த்துச் செய்திருப்பார். பகவத் தரிசனத்தோடே ஜானகிகூட நீ நாலு நாள் இருந்தாப்பலேயும் இருக்கும்."

"உங்கள் இஷ்டம்!"

"அப்படியானால் கோபாலனைக் கூப்பிட்டுச் சொல்லி விடட்டுமா?"

"தாராளமாகச் சொல்லுங்கள். நிச்சயம் போகிற தானா, நான் டாக்டரிடம் சொல்லி மருந்தை வாங்கி வைச்சுப்பேன்."

அய்யர் உடனே கிளம்பிக் கோபாலனை மாடியில் கண்டுவரச் சென்றார்.

அதே சமயம் கோபாலன் பிடியிலிருந்து தனது கரத்தைத் திமிறி விடுவித்துக்கொண்ட காயத்ரி, "அழகுதான் போங்கள்! அம்மா வந்துவிட்டால் நன்றாகத் தான் இருக்கும். ஆனால், புருஷாளுக்குத்தான் வெட்கமே கிடையாதே!" என்று பாசாங்குக் கோபம் காட்டினாள்.

"அம்மா ஒன்றும் வரமாட்டாள். அவளுக்கு உடம்பு சரியில்லை. அப்பா கீழே யாரையாவது அச்வமேதயாகம் செய்யச் சொல்லிக்கொண்டிருப்பார்!" என்றான் கோபாலன்.

"பெரியவான் என்றால் அவ்வளவு அலட்சியமா! நீங்கள் மட்டும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறதில்லையோ? நான் வந்து ஒருநாள் ஆகல்லை! அதற்குள் 'உன் நினைவாகவே இருந்தேன்'னு ஆயிரம் தடவை சொல்லிவிடவில்லையா?"

"போக்கிரி! உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று ஆசையுடன் கோபாலன் பிடிக்கப்போனான். காயத்ரி அதை எதிர்பார்த்து வெளியே தாவி ஓடினாள். எதிரே வந்துகொண்டிருந்த தன் மாமனார்மீது விழாமல் தப்பி, வெட்கம் நிரம்பிய முகத்துடன் திரும்பி ஓடினாள்.

"என்ன ஓட்டம், என்ன பிடி! கீழே விழுந்தால் என்ன ஆகும்! கோபாலா, என்னடா குழந்தையைப் பயமுறுத்திக் கொண்டு!" என்றார் பட்டாபிராமய்யர்.

கோபாலன் பதில் சொல்லுமுன், "நான்கூட உன் அம்மாவோடே திருச்செந்தூருக்குப் போய்... உம்... மங்களம் ஜானகியோட தங்கி இரண்டு மூணு நாள் தரிசனம் பண்ணலாம்னு பார்க்கிறேன்" என்றார்.

"போய்ட்டு வாருங்கள், அப்பா!" என்றான் கோபாலன் அதை அவசரமாகச் சொல்லிவிட்டோமோ என்று பிறகு அஞ்சினான்.

"நீங்கள் தனியாக இருப்பீர்களா? துணைக்கு ஆள் வைக்கணுமா?"

"துணை வேண்டாம். நாங்கள் இரண்டு பேருமே அச்வமேத யாகம் செய்துவிட மாட்டோமா?" என்று உத்ஸாகமாக சொல்லக் கோபாலனுக்கு ஆசைதான். ஆனால், அப்பாவின் ஹாஸ்ய ரஸனையைப்பற்றிய திடமான நம்பிக்கை இல்லையாதலால், "நாங்கள் ஜாக்கிரதையாக இருக்கிறோம், அப்பா. நீங்கள் போய் வாருங்கள். அம்மா ஒரிடத்துக்கும் கிளம்பினதில்லை;



மங்களமும் ஜானகியும் சேர்ந்து இருக்கிற சமயமாதலால் சௌகரியமே, அப்பா!"

"உம்ம்... நானும் அதுதான் நினைத்தேன்" என்று பட்டாபிராமய்யர் திரும்பி மாடிப்படிகளில் மெதுவாக இறங்கினார். இப்போது காயத்ரி அந்த வழியாகக் கீழே ஓடமுடியாதென்பது நிச்சயமாகிவிடவே, கோபாலன் துணிச்சலுடன் தன் மனைவியின் வளைகரத்தைப் பற்றி விளையாடலாம் என்று உள்ளே இழுத்துச் சென்றான்.

"ஏ காயத்ரி தேவியே! உன்னை நாள்தோறும் உபாஸித்து வரும் இந்தப் பக்தனுக்கு நீ வரம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்! இல்லாவிட்டால் உன்னைவிடப் போகிறதில்லை. உன் முகத்தை திமிர்த்து!" என்றான்.

வெட்கம் தாங்காமல் காயத்ரி முகத்தை மூடிக் கொண்டாள்.

பத்தயத்துக்குள் மூச்சுத் திணறிக்கொண்டிருக்கும் நடராஜனை வெகுநேரம் அதே நிலையில் வைப்பது நியாயம் அல்லதான். இதை அறியாத ஆத்திரக்காரர் தான் தம் மகளிடம் பேசிக்கொண்டிருந்தார். யாரோ வந்ததனால்தான் தம் மகளிடம் பேசிக்கொண்டிருந்தார். யாரோ வந்ததனால்தான் 'டைகர்' குரைத்திருக்க வேண்டுமென்ற திடமானதொரு சந்தேகம் அவருக்கு உதித்திருந்தது. ஆனால், சுற்றுமுற்றும் எங்கே பார்த்தும் மனிதப்பூண்டே கண்ணில் படாதபடியால் தம் மகளையே கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார்.

"இங்கே ஒருத்தரும் வரல்லை, நாயனா! நீதான் பாரேன், நாயனா!" என்றான் அவள்.

அபிநயத்தில் அபாரமாகப் பழக்கப்பட்டுள்ள அந்தப் பெண், கேவலம் ஓர் ஆளை மறைத்துவிட்டு இல்லை என்று சொல்வதற்கு அஞ்சவில்லை. ஆத்திரர் மேலும் சந்தேகம் கொண்டவர்போல் தோன்றவே அவளும் கோபம்

கொண்டவள் போல் நடித்து, "இருந்தால் பிடித்துக்கொள் நாயனா!" என்றாள்.

டைகர் தனது பாஷையில், "என்பாடு தர்ம சங்கடமாக இருக்கிறது. பெட்டிக்குள் இருக்கிறான் ஆள் என்றால் இந்தப் பெண்ணைக் காட்டிக் கொடுப்பதாகும்; பேசாமல் இருந்தால் எஜமானத் துரோகமாகும். என்ன செய்வதென்று தெரியவில்லையே!" என்று முனகி, கூடத்துப் பக்கம் எட்டிப்பார்த்தது. சோமாரிச் சோமுவும், கேடி காளிமுத்துவும் தனியே அங்கே இருப்பதைக் கவனித்து 'வள், வள்' என்று பலமாக இரண்டு குரைப்புக் குரைத்தது. அதைத் தொடர்ந்து ஆந்திரர் கூடத்துப் பக்கம் வந்தார். அதன்பின் தன் இரு கையாட்களுக்கும் விடைகொடுத்தனுப்புவதற்கு அவருக்குச் சுமார் பத்து நிமிஷ நேரம் பிடித்தது. அந்தப் பத்து நிமிஷங்களும் நடராஜனுக்குத் தப்பித்துக்கொள்ளப் போதுமான அவகாசம் அளித்தன.

நாட்டியப்பெண் பத்தாயத்தைத் திறந்ததும் வெளிப்பட்ட நடராஜன் தன்னைப் பிடித்துச் செல்ல யாரும் இல்லை என்று அறிந்தான். அப்போது அவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் சொல்லி முடியாது. பொறியிலிருந்து வெளிப்பட்டவுடன் பூனை கௌவிக்கொள்ளும் என்று எதிர்பார்த்திருந்த ஓர் எலி, பூனையையும் காணாது ஓடித் தப்புவதற்கு வசதியையும் கண்டால் இருக்கும் மனோ நிலையை அடைந்தான். அந்த அழகிய நடிகை இரு விரல்களை வர்ணம் தீட்டி உலர்ந்து போன தன் அதரங்களில் வைத்து அழுத்தி, 'பேசாதே' என்று சமிக்ஞை செய்தாள். தப்பித்துக்கொள்வதானால், நடராஜன் அப்போது மட்டுமல்ல, ஒரு வார காலம் மௌன விரதம் சாதிக்கத் தயாராகத்தான் இருந்தான்.

"நீங்கள் தப்பிவிடலாம்... நான் வழி காட்டுகிறேன்... பயப்பட வேண்டாம்! அதோ பாருங்கள், அப்பா



வெளியே பேசிக்கொண்டு நிற்கிறார். இப்போது வர மாட்டார்!" என்றாள் அவள்.

இன்னும் ஒரே ஒரு சந்தேகம் நடராஜனுக்கு. "டைகர்?" என்று கேட்டான்.

"அதுவும் அப்பாவுடனே இருக்கிறது!" என்று சிரித்தாள் நங்கை.

'இதற்கென்ன கைம்மாறு செய்வது நான்?' என்ற பாவனையில் நடராஜன் பார்த்தான். அதைப் புரிந்து கொண்டவள் போலவே காணப்பட்டாள் அவளும்.

"எனக்கு நீங்கள் இதற்குப் பிரதி ஒன்று செய்து தானாக வேண்டும்" என்றாள்.

"நிச்சயம் என் உயிரை வேண்டுமானாலும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

"உங்கள் உயிர் எனக்கு உபயோகம் இல்லை" என்று சிரித்தாள் வனிதை. "எனக்கு வேண்டிய உதவி வேறு. நாளை ராத்திரி பதினொரு மணிக்குமேல் உங்களால் இந்தப் பக்கம் வரமுடியுமா?"

"பதினொரு மணிக்கா?".

"ஆமாம்."

"இந்த இடத்துக்கா?"

"ஆமாம்"

பகலில் பிடித்துக் கொடுப்பதைவிட இரவில் காட்டிக் கொடுப்பது நலம் என்று ஒருவேளை நினைக்கிறாளோ இவள் என்று நடராஜன் திகிலுடன் சம்சயித்தான்.

"ஒன்றும் கலங்க வேண்டாம். அப்பா இருக்க மாட்டார்; டைகரும் இராது. நான் கொடுக்கும் ஒரு கைப்பெட்டியை வாங்கிக்கொண்டு நீங்கள் ரயிலடி வரை போய் அங்கே காத்திருந்தால் போதும். நான் சீக்கிரமாக வந்து வாங்கிக் கொள்கிறேன். எனக்கு அது ஒரு பெரிய உபகாரமாக இருக்கும்!"

"ஆகட்டும்"

"உங்களை நம்பலாமா?"

நடராஜன் கதவிடுக்கால் வாசல்புறம் பார்த்தான். ஆந்திரர் இரு ஆட்களையும் அனுப்பிவிட்டு உள்ளே திரும்பிக் கொண்டிருந்தார். பத்து விநாடிகள் தாமதித்தாலும் மறுபடி ஆபத்தில் சிக்க வேண்டியதுதான். எனவே, "நம்பு" என்ற ஒரே பக்கத்தில் தனது பதிலைச் சொல்லிவிட்டு, வெளியின் கதவைத் திறந்துகொண்டு தோப்பில் நுழைந்தான்.

"தலைதடவி" சுந்தரம் நடராஜனைக் கண்டதும் தலையை ஒருமுறை தடவிக்கொண்டார். "ஆளைப் பார்த்தால் பேயைக் கண்டவன் மாதிரி இருக்கிறீரே, ஓய்! என்ன செய்தி?" என்று விசாரித்தார்.

"கான்ஸ்டபிளை எப்படி அனுப்பினீர்கள்?" என்று திணறினான் நடராஜன்.

"அனுப்புகிறதா? அவன் இங்கே நிற்க முடியாதென்று ஓடியல்லவா போய்விட்டான்! உள்ளே வரச்சொன்னால் மாட்டேனென்கிறான். பாவம் யோக்கியவன்!" என்றார். பிறகு நடந்த விஷயங்களைச் சொல்லி," நீர் வந்திருந்தால் இன்னும் தமாஷ் பண்ணியிருப்பேன். எங்கேயோ ஒளிந்து கொண்டிருந்துவிட்டு மெல்ல வருகிறீரே!" என்றார்.

நடராஜன் விருத்தாந்தங்களை ஒத்திப்போட்டு வைத்து, அன்று மாலை சமுத்திரக்கரையில் உட்கார்ந்திருக்கும்போது சாவகாசமாகச் சொன்னான். சுந்தரத்திடமிருந்து ஒருவித அபூர்வக் கவர்ச்சி நடராஜனுக்கு அவர்மீது அசைக்க முடியாத நம்பிக்கையை உண்டாக்கியது. ஒரு மகன் தன் தாயிடம் கூறுவதுபோல் அவன் போனது முதல் திரும்பி வந்து சேர்ந்த வரையில் நடந்ததை விவரமாய்க் கூறினான். சுந்தரம்



மௌனமாகக் கேட்டு வந்தவர் கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டார்.

"நல்லது! ஆபத்து ஒன்றுமில்லாதவரை சரிதான். நீர் இந்தச் சமயம் பார்த்துத் திருச்செந்தூருக்கு வந்தீரே!" என்றார்.

"ஏன்?"

"மாசி மாதம் பிரம்மோத்ஸவத்தின் போது வர வேண்டும். கூடார வாசல் தீபாராதனை நடக்கும்; பார்க்கவேண்டும்! அம்மா! அந்தக் காட்சியைப் பார்க்க முருகன் பன்னிரண்டு கண் கொடுத்தாலும் போதாது!"

"வேறு எதற்காகவாவது சொல்கிறீர்களோ என்று பார்த்தேன்!"

சுந்தரம் விஷயத்தை மாற்றுகிறார் என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. "கேளுங்கள், மிஸ்டர்! பெரிய கோபுர வாசற்படி முன்னால் ஜனங்கள் ஐயாயிரம் பதினாயிரம் என்று கூடி இரவு எட்டு மணிக்குக் காத்திருப்பார்கள். அவ்வளவு கண்ணும் வாசற்படிமேலே, இருக்கும். தீவட்டிகள் அடிக்கென்றாய் அணிவகுத்து நிற்கும். நீர் என்னதான் சொல்லும்! தீவட்டியின் குளிர்ச்சியும் அழகும் கால் லைட்டுக்கு வராது. டணார் என்று இரண்டு கதவும் திறந்துகொள்ளும். ஆஹாஹா! என்ன காட்சி, போம்! ஜனங்கள் ஒரு குரலாக 'முருகா! முருகா!' என்று உருகிப் போவார்கள். இப்போது நினைத்தாலும் மயிர்க்கூச்சலெடுக்கிறது! தங்க மயில்மேல் தங்க சப்பரத்தில் ஆறுமுகன் ஜம்மென்று வைரவேல் பிடித்து நிற்பான்; பக்கத்திலே இன்னொரு தங்க மயில்மீது வள்ளி அம்மை. இரண்டு பக்கத்திலும் அடுக்குத் தீபாராதனைகள் காண்பித்துக்கொண்டிருப்பார்கள் குருக்கள்மார்."

"நன்றாகச் சொல்கிறீர்களே!"

"தன்றாகவா! எனக்கு விவரிக்கத் தெரியவில்லை, ஸார்! அந்தத் திவட்டியின் ஒளிக்கும் தங்கச் சப்பரத்துக்கும் உள்ள ஒற்றுமையை எந்த மேதை கண்டுபிடித்தானோ! முருகன் அசைந்து அசைந்து முன்னே வர, தகதகவென்று தங்கம் திவட்டி வெளிச்சத்தில் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்க, உள்ளத்தைப்போட்டு உலுக்கி விடுவான் ஸார், என் அப்பன்! அதைப் பார்த்துவிட்டால் போதுமே; மனுஷனுக்குச் சகல பாக்கியமும் கிடைத்தது மாதிரி."

பொழுதுபோவது தெரியாமல் இப்படிப் பேசிக் கொண்டே வந்த சுந்தரமும் நடராஜனும் ஹோட்டலில் சாப்பிட்டார்கள். பிறகு வீடு நோக்கித் திரும்பினார்கள்.

"இன்று நல்ல காற்று; நல்ல தூக்கம் வரும். உமக்கும் ஏக அலைச்சல். படுக்கலாம் வாரும்!" என்றார் சுந்தரம்.

ஆனால், ஷண்முகன் போட்டிருந்த திட்டமே வேறு. இருபத்து நான்கு மணி நேரக் கெடு தீர்ந்து சுந்தரம் தங்கியிருப்பதைக் கவனித்த சந்துரு, சோமாரிச் சோமுவையும் கேடி காளிமுத்துவையும் அவர்களை எதிர்நோக்கி அனுப்பியிருந்தான். இந்த ஏற்பாட்டைக் கீழப்புதுத் தெருவுக்குப் பின்னாலிருந்த இருளடைந்த சந்தின் வழியாக வரும்போதுதான் அவர்களிருவரும் தெரிந்துகொண்டார்கள்.

## 11

"அருவமு முருவ மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் [குதித்தனன் உலகமுய்ய."

— ஸ்கந்த புராணம்



ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் நாகநாதய்யர் மனத்தில் ஒரு விதமான நினைவு தோன்றித் ததும்பிக் கொண்டிருந்தது. அவர் எடுத்த காரியங்கள் பூர்த்தியடைவது போலும், போட்ட திட்டங்கள் திரண்டு உருவாகிக்கொண்டு வருவதுபோலும் பிரமை தட்டியது. முக்கியமாக, கண்ணாயிரத்திடம் நடராஜனைப்பற்றிய விவரங்களைக் கூறிவிட்டது முதல் தம் சத்துரு விலகிவிட்டதாகவே எண்ணினார். மங்களம் அவர் கைப்பொம்மையாக இருந்ததும், ஜகதீசன் அவரைக் கண்டு விம்மமென மிரண்டதும் திருப்தியே அளித்தன. ஜானகி மட்டும் கெட்டியாகத்தான் இருந்தாள். 'சிறு பெண்கள்–அதுவும் இந்தக் காலத்துப் படிப்பு என்று ஏற்பட்டுவிட்டால் அப்படித்தானே இருக்கிறதுகள்' என்று சமாதானம் செய்துகொண்டார். தாம் எடுத்த காரியமான சந்துருவை ஜானகிக்கு மணமுடிப்பது என்ற விஷயத்தைத் தொடங்க இதுவே ஏற்ற சமயம் என்று எண்ணி, அன்று மாலை கோயிலில் பேச்சைத் தொடங்கினார்.

"மங்களம்! உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டுமென்று இருக்கிறேன்" என்று ஆரம்பித்தார். ஜானகி கோயில் சுவர்களில் அழகாகத் தீட்டப்பெற்றிருந்த அறுபடை வீடுகளின் ஓவியங்களை மெய்ம்மறந்து பார்த்துக்கொண்டும் முருகன் பெருமையை விவரிக்கும் அருள் பாடல்களை அதே சுவர்களில் பரவசமாகப் படித்துக்கொண்டும் ஈடுபட்டிருந்தாள். நாகநாதய்யரும் மங்களமும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாளே தவிர, அது எந்த விஷயம்பற்றி என்று லக்ஷியம் செய்தவளே அல்ல.

காலையில்தான் வீட்டில் இல்லாத சமயம் ஜானகி யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள் என்பதை மங்களம் சம்சயித்தாள். முத்துச்சாமி சொன்னது ஒன்று தவிர, வேறு பல ருசுக்களும் அகப்பட்டு இருந்தன. புழக்கடையி

லிருந்து நடராஜனை வெளியேற்றிவிட்டுத் திரும்பிய ஜானகியின் கண்களில் அசாதாரணமான பயம் ஒன்று தத்தளித்தது. அவன் கண்களுக்குத் தப்பவில்லை வ அதைவிட முக்கியமான விஷயமாக, ஒரு புதிய கைக்குட்டை சமையற்கட்டு வாசற்படியிலே கிடந்து அகப்பட்டது. ஒருவேளை ஜகதீசனுடையதாக அது இருக்குமோ என்ற சந்தேகமே அவனுக்கு ஏற்படவில்லை. அவன் அறியாமல் ஜகதீசனிடம் ஒரு பண்டமும் கிடையாது. ஆகவே, அவனுக்குப் பரிச்சயமில்லாத... ஆனால், ஜானகிக்கு மிகவும் வேண்டப்பட்டவன் ஒருவன் காலையில் வந்திருக்கிறான். ஒருகால், அவனுக்காகவேதான் ஜானகி சீக்கிரம் திரும்பினாளோ, என்னவோ என்று தீவிரமாக ஆலோசித்தான். கைக்குட்டையை எடுத்து ஜானகியின் முன்னாலே அதைப்போட்டு, இதைப் பார்! இது எப்படி நம் வீட்டுக்குள் வந்தது? உனக்குத் தெரிந்துதான் இருக்கும்" என்று கேட்டுவிட வெகுநேரமாகிவிடாது. ஆனால், அதிதைரியசாலியான மங்களம்கூட அந்தக் காரியம் செய்யப் பயப்பட்டாள். ஜானகி படித்த பெண். தன் நினைவு பெற்றவள். கேட்பதற்கு மரியாதையுடன் பதில் சொன்னால் போயிற்று. இல்லையேல், நிலைமை விரஸமாகப் போய்விடும். அதற்கு அவள் மனம் துணியவில்லை. பெரியவர்கள் கையில் காரியத்தை ஒப்புவித்துவிட்டு, ஒதுங்கி நின்று பார்ப்பதே உசிதம். நாகநாதய்யருடன் எத்தனையோ விஷயங்களில் அபிப்பிராய ஒற்றுமை இருந்ததெனினும், இது பற்றி அவரிடம் ஒரு வார்த்தைகூடச் சொன்னவள் அல்ல மங்களம். கடுதாசி போயிருக்கிறது என்பதுடன் மறுநாளே வந்துவிடுவதாகத் தகப்பனாரிடமிருந்து ஒரு தந்தி வேறு வந்திருந்தது. இது அவள் எதிர்பாராத ஒரு சௌகரியந்தான். தகப்பனார் வரட்டும், பேசிக்கொள்ளலாம் என்று காத்திருந்தாள் அவள். கைக்குட்டை அகப்பட்ட சமாசாரம் எதுவும் தெரியாத ஜானகி நிச்சிந்தையாகத் தமக்கையுடன் சகஜமாகவே இருந்தாள்.



சற்று ஒதுங்கி நின்ற ஜகதீசன் மனத்தில் அடிக்கடி ஒரு திகில் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. நாகநாதய்யரை நேரில் சந்திக்கத் தைரியம் இல்லாமல் அவன் ஓரமாகப் பதுங்கினான், ஐந்து நிமிஷத்துக்கொருதரம். அன்று காலை மங்களத்தின் பெட்டியை அவன் குடைந்துகொண்டிருந்ததைப் பார்த்துவிட்ட கிழவர் அசந்தர்ப்பமாக அது விஷயத்தை மங்களத்தின் முன்னால் போட்டு உடைத்து வைக்கப்போகிறாரே என்று அஞ்சினான். அதற்காகவே அங்கிருந்து நழுவவும் முயன்றான். ஆனையால், கிழவர், "மங்களம், உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்றிருக்கிறேன்" என்று ஆரம்பித்தவுடனே, தன் சமாசாரந்தான் வெளியாகிவிடப் போகிறதென்று பட்டதாடியும் ஒடுங்கிப்போய்ச் சிலைபோல் நின்றுவிட்டான்.

நாகநாதய்யர் ஜகதீசனை உற்றுப்பார்த்தார். இவன் எதிரே சொல்லலாமா அல்லது ஒத்திப்போடுவோமா என்ற நோக்கமாகவும் இருக்கலாம். அப்போது ஜகதீசன் உடலில் ஏற்பட்ட வெடவெடப்பு பகிரங்கமாக தெரிந்தது. "வேண்டாமே! வேண்டாமே!" என்று ஜாடையாகக் கெஞ்சினான் அவன்.

நாகநாதய்யர் புன்சிரிப்புச் செய்துகொண்டார். அவருக்குப் பெட்டி குடையப்பட்ட விஷயம் சுட்டோடு ஞாபகம் இல்லை. ஆகவே, ஜகதீசனுடைய சமிக்ஞைகளை நேர் எதிராக அர்த்தம் செய்துகொண்டு, "இரு, இரு! சொல்கிறேன்! பூராவும் சொல்கிறேன்! அவசரப்படாதே!" என்றார்.

ஜகதீசன் வேதனை தாங்காது தவித்தான். ஓட்டமாக ஓடிவிடலாமா என்றுகூட முயன்றான்.

"மங்களம்! நாம் திருச்செந்தூருக்குப் புறப்பட்டு வந்தபோது உன் அப்பா ஒரு விஷயம் சொன்னார்; உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார் கிழவர்.

"எதைப்பற்றி?" என்று விசாரித்தாள் மங்களம். ஜகதீசன் படுகிற அவஸ்தை அவளுக்கு விசித்திரமாக இருந்தது.

"உன் தங்கை ஜானகியைப்பற்றித்தான்! என்ன?"

ஜானகியைப்பற்றி இவரிடம் அப்பா வேறு என்ன சொல்லியிருக்கிறார் என்று இருவருமே உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

"நல்ல வரனாகப் பார் என்றார் அல்லவா? வந்தவுடன் அதே காரியமாக இருந்து, ஒரு பையனைப் பிடித்துவிட்டேன். என்ன?"

"நல்ல வரன் என்றால், உடனே மேற்கொண்டு பிரவேசிக்கலாமே! என்னைக் கேட்டால், நாளைக்கேகூட பேசி முடிக்கலாமே காலம்பற நீங்கள் சொன்னதைக் கேட்டதிலிருந்து எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது" என்றாள் மங்களம்.

"அதுக்குள்ளே சொல்லிவிட்டாரா? நான் உன் பெட்டியைத் திறந்தால் என்ன? திறக்கக்கூடாதா? அவசரமாகச் சில்லறை வேண்டியிருந்தது; ஏதாவது இருக்குமா என்று பார்த்தேன். இதில் கவலை எங்கிருந்து வந்தது?" என்றான் ஜகதீசன்.

"என் பெட்டியைத் திறந்தீர்களா? எதற்காக உங்களுக்குச் சில்லறை?" என்று வெடுக்கென்று விசாரித்தாள் மங்களம்.

"அட! யாரோ கேட்டான் வாசலில் வந்து! இருந்தால் கொடுக்கலாமே என்று பார்த்தேன். அதற்குள் இவர் வந்து விட்டார். நான் போய்ப் பார்த்தபோது அவன் போய்விட்டான். கடைசியில் பெட்டியைத் திறந்து மூடியதுதான் மிச்சம்!"

மங்களத்துக்குத் துளிக்கூட இதில் நம்பிக்கை ஏற்பட வில்லை. ஜகதீசன் ஏதோ புளுகுகிறான், எதையோ



மறைக்கிறான், சரியானபடி கேள்விமேல் கேள்வி போட்டால் வழிக்குவந்து உண்மையைக் கக்கிவிடுவான் என்று மட்டும் நிச்சயமாகப்பட்டது. கிழவர் அதற்குள், "இங்கே பார், மங்களம்! அவன் எதையோ நினைத்துக் கொண்டு உளறுகிறான். விட்டுத்தள்ளு! நம்ம ஜானகிக்குச் சரியான வரன் ஒன்று பார்த்துவிட்டேன். பையன் பட்டணத்தில் படிக்கிறான். குலம் கோத்திரம் விசாரிக்கவே வேண்டியதில்லை: என் பந்துதான். ராஜா மாதிரி இருப்பான்!" என்றார்.

"எந்த ஊர் ராஜா?" என்று ஜகதீசன் கேட்டான், அசடு வழிய மங்களத்தினிடம் தான் ஒன்றும் பயந்துவிட வில்லை என்பதை நிரூபிக்கவே அவன் இப்படிச் சொன்னான்.

"நீங்கள் உங்கள் திருவாயை மூடிக்கொண்டுதானே இருங்கள்! சுற்றி நடக்கிற விஷயம் ஏதாவதும் தெரிந்தால் இப்படிப்பேச வராது மனுஷாளுக்கு! தெரிந்துகொள்ள வேணும் என்கிற ஆவலும் கிடையாது! தெரிந்தாலும் உபயோகம் இல்லை!" என்றாள்.

ஜகதீசனுக்கு வந்த கோபத்தில், "உனக்குத் தெரிவதைக் காட்டிலும் எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது; ரொம்ப ரொம்ப ஓட்டவேண்டாம், ஆமாம்!" என்று கடச்கடக் கேட்டுவிட வேண்டும் என்று நாக்கு துடி துடித்தது. ஆனால், ஜானகியின் அதிர்ஷ்டதேவதை குறுக்கே நின்று அவன் குரல் வெளிக்கிளம்பாமல் தடுத்து வைத்தது.

"ஒரு நல்ல சமாசாரம் பேசலாம் என்று எடுத்தால், ஏன் மாப்பிள்ளை வீண் விவாதம்! ஜகதீசா! நீயும் கேட்கலாம் என் மச்சினி பிள்ளை சத்துருவை நீ பார்த்ததே இல்லையே! மெட்ராஸில் படிக்கிறான்!"

"இல்லை. பார்த்ததில்லை. இப்போதுதான் கேள்விப் படுகிறேன்!"

"வெகு சூடிக்கையான பயல்; பேசினால் கம்பீரமாக இருக்கும். அவன் ஜாதகத்திலேயே இருக்கிறது, ரொம்ப முன்னுக்கு வருவான் என்று வாட்டசாட்டமாக இருப்பான் ஏதோ பூர்விகம் கொஞ்சம் இருக்கிறது. ஆனால், பையன். நன்றாகச் சம்பாதிப்பான் என்று ஜோஸ்யர் சொல்லியிருக்கிறார் என்ன?"

"அந்த ஜோஸ்யரிடம் என் ஜாதகத்தைக் காட்டினால் கூடத் தேவலை. ஆனால் ஒன்று; பூர்விகம் இருக்கிறதென்று கொடுக்கிறோம். நாளைக்கே 'தராபுரா'வென்று செலவழித்துவிட்டு நின்றானானால் என்ன உபயோகம்? அது மாதிரி எத்தனையோ இடங்கள்" என்று ஒத்துப் பாடினாள் மங்களம்.

"அதற்காக ஸர்வ வறட்சையான ஓர் இடத்தில் பட்டாபிராமய்யர் தம் பெண்ணைக் கொடுக்கவும் சம்மதிக்க மாட்டார் அல்லவா?" என்றான் ஜகதீசன் இங்கிதம் இல்லாமல்.

"நான் சொல்லுகிற 'பையன்' வறட்சை இல்லை, ஸார்! கொஞ்சம் நில புலம் வீடு வாசல் உள்ள பையன் தான். ஏன், பட்டாபி படிக்கிற காலத்தில் இப்போ மாதிரி 'ஓஹோ' என்று இல்லையே, எனக்குத் தெரியாதா என்ன?"

"மாமா! இவர் பேச்சைக் கேட்கவேண்டாம். மேலே சொல்லுங்கள்" என்றாள் மங்களம்.

"பையனை நான் இன்னும் கேட்கவில்லை. நான் சொன்னால் மாட்டேன் என்று சொல்லமாட்டான். நேத்து ராத்திரி நான் ஜானகியை அழைத்துக்கொண்டு போனேனே, அப்போது அவனை அவள் பார்த்திருப்பாள் என்று நினைக்கிறேன். நான் பையனையே அழைத்துக் கொண்டு வருகிறேன்: பார்த்து வையுங்களேன். பிராப்தம் இருந்தால் நடக்கட்டும்!"



"மாமா! பிள்ளை நல்லதா அகப்பட்டால், பிராப்தமும் தானே வந்து சேருகிறது. உங்களுக்குப் பிடித்தால், ஜாதகத்தையும் தருவித்துவிடுங்கள். அப்பா ஒரு ஜாதகப் பித்து ஆச்சே! பொருத்தம் பார்த்தாகணும் என்பாரே"!

"அதற்கென்ன, அம்மா! அப்படியே ஆகட்டும். இப்போ தரிசனம் செய்துகொண்டு வீட்டுக்குப் போவோம். நீங்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டவுடன், நான் சாவகாசமாகப் பையனை அழைத்து வருகிறேன். ஆனால், அவனிடம் ஒன்றும் பிரஸ்தாபிக்க மாட்டேன். உங்களுக்குப் பையன் பிடித்திருந்து, மேற்கொண்டு பிரவேசிக்கலாம் என்று சொன்னால், நான் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்."

"ஜானகிக்கும் பிள்ளையைப் பிடித்திருக்க வேண்டாமா? அதையும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டுமே!" என்றான் ஜகதீசன்.

"சித்தே நீங்கள் பேசாமல்தானே இருங்களேன் மாமாவுக்குத் தெரியாததை நீங்கள் சொல்லிவிடப் போகிறீர்களா?" என்று கேட்டாள் மங்களம்.

அதற்குள் ஜானகி ஜகதீசனைக் கூப்பிட்டு, "அத்திம்பேர்! இந்தப்படம் என்னவென்று சொல்லமுடியுமா, பாருங்கள். நாகநாத மாமாவைக் கேட்டேன், தெரியாது என்கிறார்" என்று கூறவும், நல்லதாய்ப் போயிற்றென்று ஜகதீசன் அங்கிருந்து நகர்ந்துகொண்டான்.

அதற்குப் பிறகு பிரஸ்தாப விஷயம் பேசப்படவில்லை. யதோக்தமாக ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு திரும்பும்போது ஜானகி நாகநாதய்யரிடம், "என் மாமா! இங்கே வள்ளியம்மை ஒளிந்துகொண்ட குகை ஒன்று இருக்கிறதாமே! நீங்கள் அதை எனக்குக் காண்பிக்கவே இல்லையே!" என்று கேட்டாள்.

"ஆகட்டும், அம்மா! நான் மறக்கவில்லை. வெளிச்ச வேளையில் போனாலே அங்கே இருட்டாக இருக்கும்

நாளைக்குக் காலை ஞாபகமாகப் போய்ப் பார்க்கலாம்; கட்டாயம் பார்க்க வேண்டியதுதான். ஷண்முகன் வலக்கைப் புறம் நிற்கிறவளாயிற்றே வள்ளியம்மை!" என்றார் நாகநாதய்யர்.

"எனக்கு வள்ளி கதை மிகவும் பிடித்திருக்கிறது மாமா! ஏனென்றால் ஷண்முகன் திடுக்திடுக்கென்று அவள் எதிர்பாராத இடங்களில் எல்லாம் வந்துநிற்கிறான் அல்லவா?"

"ஆமாம்! நீ காலேஜில் படிக்கிற பெண்; இங்கிலீஷ் நாவல்கள் நிறையவாசித்திருக்கிறாய் 'திடுக்' 'திடுக்'கென்று அத்தியாயங்கள் முடிந்தால்தானே உங்களுக்கெல்லாம் பிடிக்கிறது" என்றார் கிழவர்.

"போங்கோ மாமா! உங்களுக்கு எதற்கெடுத்தாலும் படிக்கிற பெண்களைப் பழிக்கிறதுதான் வேலை!" என்றாள் ஜானகி.

"இல்லை ஜானகி! தாத்தாவுக்கு முருகனைத் தரிசனம் செய்தப்புறம் ஹாஸ்ய ரஸம் பெருகியிருக்கிறது. அது இப்படிப் பொங்குகிறது!" என்று ஜகதீசன் விவரித்தான்.

'தாத்தா' என்று அழைக்கப்பட்ட டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார், கசப்படைந்தவராக, அதை மௌனமாக வெளிக்காட்டும் உத்தேசத்துடன் வேகமாக நடக்கலானார்.

இரவு சரியாக ஒன்பதரை மணிக்குச் சாப்பிட்டு விட்டுக் கூடத்தில் இருந்த மங்களமும் ஜகதீசனும் பழைய வாக்கு வாதத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தனர். "பெட்டியை எதற்காகத் திறந்தீர்கள், சொல்லி விடுங்கள்!" என்று கேட்டாள் மங்களம்.

"உன் பெட்டியில் நான் பார்க்கக்கூடாததாக ஒன்றும் இல்லையே! எதற்கு இப்படி ஆத்திரப்படுகிறாய்?" என்று ஜகதீசன் கேட்டான்.



"நீங்கள் திறந்ததைப் பார்த்தால், அப்படி ஏதோ நினைத்திருக்கிறாற் போல்தானே தெரிகிறது! எங்கே, அப்படி நினைக்கவில்லை என்று சொல்லி விடுங்கள்!"

"நான் அப்படி நினைக்கவில்லை என்னவெல்லாம் கொண்டு வந்திருக்கிறாய் என்றுதான் பார்த்தேன். பதினைந்தே நாள் தங்குகிறவர்களுக்கு இத்தனை பெரிய 'டிரங்க்' எதற்கு என்றுதான் திறந்தேன்."

"அப்படியானால் சில்லறை தேடினேன் என்று சொன்னீர்களே; அது பொய்தானே?"

"அவசரத்துக்கு அப்படிச் சொன்னேன்."

"இப்போ சாவகாசமாக யோசித்துப் பொய் புளுகுகிறீர்களாக்கும்!"

"உன்னிடம் புளுகிவிட்டு என்னால் பிழைக்க முடியுமா?"

"அதுதானே இப்போது மாட்டிக்கொண்டு விழிக்கிறீர்கள்!"

"சரி, பொய் சொன்னேன்; உன் பெட்டியில் திருடினேன். என் தலையைச் சீவிவிடு! ஆகட்டும்!"

"அழகாகத்தான் இருக்கிறது! திருச்செந்தூருக்கு வந்தால் புத்தி தெளிவடையும் என்பார்கள்; உங்களுக்குக் கலங்கிப் போய்விட்டதே!"

"அப்படியானால், திருவடமருதூருக்கும் போய் விட்டுப் போகலாம்! மங்களம், என்னை நீ சும்மா மிரட்டிக்கொண்டே காலம் தள்ள முடியாது; ஆமாம்!"

"நன்றாயிருக்கிறதே! இப்போ யார் யாரை மிரட்டிக் கிறார்களாம்!"

"ஆமாம்! இந்த முருகன் க்ஷேத்திரத்திலே நான் காவி வாங்கிக்கொள்கிறேன். அவனும் ஆண்டி, நானும் ஆண்டி. சரியான ஜோடி!"

"பிள்ளை வரம் வேண்டிக்கொண்டு வந்துவிட்டு, ஆண்டி ஆச்ரமம் பார்த்துக்கொண்டு போகிற புத்திசாலியைப் பார்த்துக் கையைக் கொட்டிச் சிரிக்கப் போகிறார்கள். பெட்டியை என் முடைய வேண்டும் என்று கேட்டால் அதற்கு இன்னும் பதில் வரவில்லையே!"

பதில் வரவே இல்லை; வரவும் மூகாந்திரமில்லாதபடி நாகநாதய்யர் கதவைத் தட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார். அவர் பின்னாலே வந்தான் சந்துரு. சுபாவத்துக்குப் புறம்பான ஒரு வகை விறைப்பு அவனிடம் காணப் பட்டது. ராஜபார்வை என்று நினைத்துக்கொண்டு, கழுத்துச்சுளுக்கு ஏற்பட்டவன் போல் பார்த்தான்.

"என்ன ஜகதீசன்! என்ன மங்களம்! சும்மாத்தான் இப்படி வந்தேன். இவன் என் மச்சினி பிள்ளை. ஜானகி! வாயேன் இப்படி வெளியே! மெட்ராஸில் இவன் காலேஜில்தான் இவனும் வாசிக்கிறான்!" என்று அறிமுகம் செய்து வைத்தார் கிழவர்.

"வாருங்கள். உட்காருங்கள்!" என்று அழைத்தாள் மங்களம் ஜகதீசன் வெறுமனே விழித்தான்.

"உட்காருவதற்கில்லை. இவன் எங்கேயோ போய்க் கொண்டிருந்தவனைக் கூட அழைத்து வந்தேன். நான் வரட்டுமா?"

"நன்றாயிருக்கிறது! வந்துவிட்டு உடனே போகிறதா? கொஞ்சம் பாலாவது சாப்பிட்டுவிட்டுப் போங்கள்! இந்த ஊர்ப்பாலின் ருசியைச் சொல்லுங்கள்! கள்ளிச் சொட்டுத்தான்; சர்க்கரையும் போடவேண்டியதில்லை!" என்று உள்ளே சென்றாள் மங்களம்.

நாகநாதய்யர் சந்துருவை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். மிகத் திருப்தி அடைந்தவராக ஜகதீசன் முகத்தையும் கவனித்தார். பிறகு ஜகதீசனை ஒதுப்புறமாக



அழைத்து, "என்ன! பையனைப் பார்த்தீரா? எப்படி?" என்று விசாரித்தார்.

"பார்த்தேன். பையன் மனுஷன் மாதிரி இருக்கிறான்" என்று ஜகதீசன் சுருக்கமாகப் பதில் அளித்தான்.

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுமேன்! இவனுக்கு ஜானகியைக் கல்யாணம் செய்து வைத்தால் எப்படி இருக்கும்? என்ன?"

"எனக்குத் தெரியாத கேள்வியைக் கேட்டால் என்ன பதில் சொல்லுவேன் நான்! எனக்கு அது தெரிந்திருந்தால் இந்த மங்களத்தைக் கட்டிக்கொண்டிருப்பேனா?"

"ஏன் ஐயா, மங்களத்துக்கு என்னய்யா குறைச்சல்?"

"உங்கள் மங்களம் மல்யுத்தப் பயிற்சி ஒன்றுமட்டும் கற்றுக்கொள்ளவில்லை. அதுவும் கற்றிருந்தால், நான் இதற்குள் அப்பளமாகியிருப்பேன்!"

சந்துருவின் எதிரே, ஹாலில் தனியே வெகு சொற்ப நேரம் விடப்பட்ட ஜானகி உள்ளே நகர யத்தனித்தாள். ஆனால் அதை எதிர்பார்த்த சந்துரு முந்திக்கொண்டு "ஜானகி!" என்று மெள்ள அழைத்தான்.

"என்னையா கூப்பிடுகிறீர்கள்?"

"உன் பெயர்தானே ஜானகி?"

"ஆமாம்! ஆனால் சில பேர் 'ஷண்முகா', 'ஈசுவரி' என்று ஒரு காரணமுமில்லாமல் கூப்பிடுவதுண்டே. அது போல் கூப்பிட்டீர்களாக்கும் என்று நினைத்தேன்!"

"குறும்புப் பேச்சு இருக்கட்டும் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லவே நான் இங்கே வந்தேன். அந்த மெட்ராஸ் ஆசாமி ஒருவன் வந்திருந்தான் பார்..."

"யார் அது?"

"உனக்குத் தெரியாதா, நடராஜன்! உன் ஆப்த நண்பன் நடராஜன்! அவனை நொண்டியடித்துக்கொண்டு ஊரை விட்டு இன்றே ஓட ஏற்பாடு செய்துவிட்டேன், அசல் தில்லை நடேசன் மாதிரி."

"என்னிடம் ஏன் அதைச் சொல்லவேண்டும்?"

"நாளைக்கு அவனை ஊரில் காணோமென்று நீ தேடக்கூடாதல்லவா? அல்லது வாடக்கூடாதல்லவா?"

"என்ன கருணை, போங்கள்! உங்களிடம் விரோதம் செய்து கொள்கிற பேர் ஊரைவிட்டே ஓட வேண்டியது தானாக்கும்!"

"ஆக்ஷேபம் என்ன! அவன் மட்டுமல்ல; அவன் ஸகா ஒருத்தனுக்கும் உதை! நம்ம ஆசாமிகள் ரெண்டு பேர் நொறுக்கித் தள்ளிவிட்டார்கள்."

"உங்கள் புத்திசாலித்தனத்தை மெச்சிக்கொள்ள என்னால் முடியவில்லை. உங்கள் பெரியப்பாவிடம் சொல்லிச் சந்தோஷப்படச் சொல்லுங்கள்!" என்று ஜானகி உள்ளே சொல்வதும், எதிரே மங்களம் பாலுடன் வருவதும் சரியாக இருந்தன.

ஜானகியின் மனத்தில் பெரும் போராட்டம் கிளம்பி விட்டது. அடுத்த வீட்டில் நடராஜன் இறங்கியதும் நாய் குரைத்ததை அவள் அறிவாள். ஆனாலும், அவன் எப்படியோ சமாளித்துக்கொண்டு தப்பிப் போயிருப்பான் என்று திடமாக நம்பினாள். இப்போது அதைவிடப் பயங்கரமான வேறு ஓர் ஆபத்தல்லவா காத்திருந்தது! சந்துரு சொன்னதில் உண்மை இருக்குமோ? நடராஜன் அடிபட்டிருப்பானோ? அவனுக்கு அபாயம் நேரிட்டிருக்குமோ? ஏதும் அறியாது ஜானகி கலங்கினாள்.

சந்துருவின் வார்த்தையில் முற்றும் உண்மை இருக்கத்தான் செய்தது. நடராஜனையும் அவனுக்குப் பக்கபலமாக இருந்த சுந்தரத்தையும் பயமுறுத்தி அடித்து



விரட்ட அவன் இரு தடியர்களை ஏற்பாடு செய்திருந்த தென்னவோ வாஸ்தவந்தான். ஆனால், பலன் மட்டும் முழுக்க எதிர்பார்த்தபடி இல்லை.

ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த சுந்தரமும் நடராஜனும் அசைந்து அசைந்துதான் நடந்தார்கள். நடராஜனுக்கு உடம்பு அசதி. சுந்தரம் சுபாவமாகவே எதிலும் அவசரப்படுபவர் அல்ல; அதுவும் அன்று அவர் மனம் முருகன்பால் சொக்கி நின்றது. கடற்கரையில் 'கூடார வாசல் தீபாராதனை'யைப்பற்றி விவரமாகச் சொன்னவர் இப்போது பிரம் மோத்ஸவத்தில் ஆறுமுகன் புறப்பட்டு வீதி வலம் வரும் பேரழகை வாய் நிறைய வர்ணித்துக்கொண்டே வந்தார்.

"வருஷத்தில் இரண்டு முறைதான் எங்கள் ஆறுமுகன் வெளியே வருவார். அவர் வெளியே வந்திருக்கும்போது மூலவர் பூஜைக்காலங்கள் நின்று போய்த்திரும்ப வந்த பிறகுதான் தொடங்கும். ஆனால், ஒரு விசேஷம் பாருங்கள்; ஒரு கால பூஜைகூட விடாமல் சேர்த்துச் செய்வார்கள். இந்தத் திருச்செந்தூர் மாதிரி வேறே எங்கே இப்படி பரிஷ்காரமாகப் பூஜை நடக்கிறது, சொல்லும், பார்க்கலாம்!" என்றார் உத்ஸாகமாக

நடராஜன் மௌனமாக வரவே, "ஓர் இடத்தில் கிடையாது! ஷண்முகம் புறப்பட்டுவிட்டால், இந்த உப்புச் சமுத்திரக் கரையில் ஜன சமுத்திரம் நிற்கும். என்ன பக்தி! என்ன வெறி! 'முருகா, முருகா' என்று அழைக்காதவன் ஒருத்தனை இங்கே காணமுடியுமா? மயிர் சிலிர்த்துப் பார்க்காத ஆத்மா ஒன்று உண்டா? அந்தக் காட்சியில் சொக்கி மனம் கரையாத நெஞ்சுதான் இருக்குமா? அவன் ஜம்மென்று வரும்போது, ஒரு தரம் பார்த்தால்தான் திருப்தி வருமா, ஒன்பதாயிரம் தரம் பார்த்தால்தான் திருப்தி வருமா?"

"நான் அடுத்த உத்ஸவத்துக்கு அவசியம் வந்து விடுகிறேன்" என்றான் நடராஜன். அவனுக்குச்

சுந்தரத்தின் வர்ணனை அதிகமாகிவிடாமல் குறுக்கிடும் உத்தேசம் உண்டோ என்னவோ? அப்படி இருந்தாலும், பலன் நேர் எதிராகத்தான் இருந்தது. சுந்தரத்துக்கு அது 'சாவி' கொடுத்ததுபோல் அமைந்தது.

"மிஸ்டர் நடராஜன்! தவறாமல் வந்துவிடும், சொல்கிறேன். நானும் இருக்கிறேன். பிரம்ம, ருத்ர, விஷ்ணு அம்சங்களிலே ஷண்முகன் வருவான்; ஸம்ஸாரத்தை விட்டுவிட்டு இவன் காலடியில் உட்கார்ந்துவிடலாமென்று தோன்றாவிட்டால் பாரும்! பிரம்மாம்சம் என்கிறதில் வெட்டிவேர்ச் சப்பரத்தில் கிளம்புவார். வழியெல்லாம் பன்னீர் அபிஷேகம் நடக்கும். நாலு பக்கத்தில் நாலு 'போத்தி'கள் உட்கார்ந்துகொண்டு சளைக்காமல் பன்னீர்ப் போத்தல்களைக் கவிழ்த்துக் கொண்டே வருவார்கள். என் பிரபுவுக்கு என்ன குளுமை, என்ன குளுமை! பார்க்கவேண்டும் நடராஜன், நீரும்!"

"அவசியம் வருகிறேன், ஸார்!"

"கூடவே ஜனங்கள் பித்துப் பிடித்தாப்போல் வருவார்கள்; பைத்தியம் மாதிரி பின் தொடருவார்கள்; வசியம் செய்யப்பட்டவர்கள் போல் நடப்பார்கள். கீழே பன்னீர்ச்சேறு! சேறு, ஸார், சேறு!"

"சரிதான், சரிதான்!"

"எங்கேயாவது பன்னீரை அண்டாவில் வைத்துக் கொண்டு சொம்பால் அபிஷேகம் செய்து பார்த்திருக்கிறீரா? அந்த அபிஷேகம் இங்கே நடக்கும்! ஏன் ஐயா அந்தத் தெய்வம் ஸாந்நித்யமாயிராது? சொல்லுமேன்!"

"பேஷாக! நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால் தவறாமல் வரவேண்டுமென்று தோன்றுகிறது."

"வெட்ட விடியற்காலத்தில் வெள்ளை வெளேரென்று உடை உடுத்து, ருத்ராக்ஷம் அணிந்து, அவன் அப்பாவைப்



போல் வருவான்; மாலையில் பச்சைப் பீதாம்பரம் கட்டிக் கொண்டு அவன் மாமாவைப் போல் வருவான். என் முருகன் விளையாட்டுப் பிள்ளை ஆயிற்றே, மிஸ்டர் நடராஜன்! நம் உள்ளக்கோயிலில் விளையாடுகிறான் இங்கே! ஷண்முகனை நம்பினால், ஒரு காலும் அவன் கைவிடமாட்டான். இது நிச்சயம்!"

இப்படி இவர்கள் தங்களை மறந்து பேசிக்கொண்டே கீழப் புதுத் தெருவுக்கு அடுத்த சந்திற்குள் பிரவேசித்தார்கள். அங்குள்ள தெரு லாந்தர்கள் என்ன காரணத்தாலோ அணைந்து போயிருக்கவே, எங்கும் இருண்டு காணப்பட்டது. சற்றும் எதிர்பாராத சமயத்தில் இரண்டு முரடர்கள், சுந்தரத்தின் முன்பு ஒருவனும் நடராஜன் முன்பு ஒருவனுமாகத் திடீர் என்று எதிர்ப்பட்டார்கள். "யாரடா நீங்கள்?" என்று சுந்தரம் கேட்க விரும்பினார். ஆனால், அவர் பேசவொட்டாமல் இரும்புப்பிடியில் அவரது மோவாய்க்கட்டையை ஒருவன் அழுத்திக்கொண்டு, கழுத்தைத் திருப்பி, காலால் உதைத்தான். முழங்கால் பக்கம் குறிவைக்கப்பட்ட அந்த உதை எப்படியோ அடிவயிற்றைத் தாக்கவே, "அம்மா!" என்று சுந்தரம் தரையில் உட்கார்ந்துவிட்டார். இவ்வளவு லகுவில் தனது காரியம் சாத்தியமாகும் என்று எதிர்பார்க்காத அந்த ஆள், அடுத்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் சற்றே தயங்கினான்.

நடராஜன் எதிரில் வந்த ஆளுக்கு எடுத்த எடுப்பிலே வெற்றி கிடைத்ததெனினும், அது நீடித்திருக்கவில்லை. முதல் அடியை வாங்கிக்கொண்ட நடராஜன் நிலை கலங்கினது என்னவோ உண்மைதான், எனினும், மறுகணம் சமாளித்துக்கொண்டு, ஒரு பெரிய குத்து விட்டான். நியாயமாக அந்தக் குத்து எவ்விதச் சேதமும் செய்திருக்க முடியாதுதான். அந்த ஆள் அதற்கு ஒதுங்க முயலவே, அதை மோவாய்க்கட்டையில் வாங்கிக் கொண்டு, அதன் உத்வேகத்தைத் தாங்கமாட்டாமல்

பின்னால் சாய்ந்தான். இதைக் கவனித்த கூட்டாளி நடராஜன்மீது வீராவேசத்துடன் திரும்பினான்.

கீழே உட்கார்ந்துவிட்ட சுந்தரம் இதற்குள் நிலைமையை உணர்ந்துகொண்டு அவன் கால்களில் ஒன்றைப் பிடித்து லாகவமாக இழுத்துவிடவே, அவன் தடுமாறி, முன்னால் விழுந்து, எழுந்திருக்க முயன்று கொண்டிருந்த தன் தோழன் மேலேயே சாய்ந்தான்.

க்ஷணத்தில் எழுந்துவிட்டார் சுந்தரம், "நடராஜன்! இங்கே நிற்க நேரமில்லை. ஓட்டமாக வாரும்!" என்று உத்தரவு கொடுத்து, தாமே முன்னால் ஓடிக் காட்டினார். நடராஜன் பின் தொடர்ந்தான். சந்தின் கோடி வந்த போது இருவரும் நின்று கவனித்தார்கள். தொலைவில் எதிரிகளின் காலடிச் சப்தம் கேட்டது. "நிற்கப்படாது! உம்!" என்று சுந்தரம் மீண்டும் ஓடினார். மூன்றாவது நிமிஷம் கீழ்ப் புதுத்தெருவிற்குள் அவர்கள் திரும்பி விட்டார்கள். அப்போது தெருவே வெறிச் சென்று கிடந்தது. ஈ காக்கை காணப்படவில்லை. தெருக் காவலான 'டைகர்' கூட இல்லை! ஆந்திரர் வீட்டு வாசலில் மட்டும் ஒரு மோட்டார் 'வான்' நின்றுகொண்டிருந்தது. 'டிக்டிக்' என்று அதன் என்ஜின் சப்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

"நடராஜன்! நாம் தெருக்கோடி போவதற்குள் நம்மை அந்த ஆட்கள் மறுபடி மடக்கிக்கொள்ளலாம். சட்டென்று இதனுள் ஒளிந்துகொண்டிருப்போம். அவர்கள் இங்கே பார்க்கமாட்டார்கள். பார்த்தாலும் ஒன்றும் செய்துவிடமுடியாது. நின்று அகப்பட்டுக் கொண்டோமோ, மறுபடி குத்துப்பட என் வயிற்றில் சக்தி இல்லை" என்றார்.

அதற்கேற்றாற்போல் காலடிச் சப்தமும் கேட்கவே, இருவரும் மோட்டாரின் திறந்த பின் கதவு வழியாகப் புகுந்து, அதையும் மூடிக்கொண்டார்கள்.



ஆந்திரரின் வீட்டினுள்ளிருந்து யாரோ ஒருவன் வெளியே வந்தான். "நான் வரேன், ஸார்!" என்று யாரிடமோ உத்தரவு கேட்டுக்கொண்டு, வண்டியின் பின்புறத்தைப் பாராமலேயே முன்னால் ஏறி உட்கார்ந்து கதவைச் சாத்திக்கொண்டான். கும்மிருட்டில் உட்கார்ந்திருந்த சுந்தரமும் நடராஜனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள முடியாமல் திண்டாடினர்.

கதவைத் திறந்துகொண்டு கீழே குதித்துவிடலாமா என்று நினைப்பதற்குள், என்ஜின் சப்தம் பலத்தது. 'கிர்' போடப்படும் ஓசை கேட்டு வண்டியே பூகம்பத்தில் அகப்பட்ட ஒரு நகரம் போல் நடுநடுங்கியது.

சக்கரங்கள் சுழலும் சப்தத்திலிருந்தும், தடதடவென்று ஏற்பட்ட குலுக்கலிலிருந்தும் வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருந்ததென்பதை அவர்கள் இருவரும் ஊகித்தார்கள்.

## 12

"வில்லது வளைந்த தென்றும் வேழம துறங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற் றென்றும் வளர்கடா பிந்திற் றென்றும்
புல்லர்தம் சொல்லுக் கஞ்சிப் பொறுத்தனர் பெரியோர் என்றும்
நல்லதென் றிருக்க வேண்டாம் நஞ்செனக் கருத லாமே!"

—விவேக சிந்தாமணி

ஸம்ஸாரம் என்று சொல்லப்படும் காரிருளில் ஜீவயாத்திரிகன் ஞானம் என்கிற கைவிளக்கை எடுத்துக் கொண்டு பகுத்தறிவு என்கிற கைத்தடியை ஊன்றிக்

கொண்டு ஆசாபாசங்கள் சுகதுக்கங்கள் என்னும் துவந்தங்களாகிற குழிகளில் தடுக்கி விழாமல் செல்கிறான் என்று பௌராணிகர் அழகாக எடுத்துச் சொல்வார். அவர் இன்னும் விற்பன்னராக இருந்தால், அடுக்கடுக்காக மேலும் பலபல உபமானங்களைச் சேகரித்துக்கொண்டு கொட்டி, கேட்போரைத் திணற வைப்பார். இந்த ஸம்ஸாரத்தின் இருளைக்காட்டிலும் கூடுதலாகவே இருண்டிருந்தது. நம் கதாபாத்திரங்களில் முக்கியமான இருவர் ஏறியிருந்த மோட்டார் 'வான்' உள்புறம் இருந்த இருட்டு, காற்றில்லாத ஒருவிதப் புழுக்கத்துடன் ஒருவகை மணமும் கலந்து அடித்தது. கைகளைத் துழாவிக் கொண்டிருந்த நடராஜன் மெள்ளச் சுந்தரத்தின் கரம் ஒன்றைப் பற்றிக்கொண்டான்.

"ஸார்! ஸார்!" என்று கூப்பிட்டான்.

"மெள்ளப் பேசும்!" என்று சுந்தரம் பதில் கொடுத்தார்.

"சௌகரியமாக இருக்கிறதா?"

"உமக்குச் சௌகரியமாக இருக்கிறதா? சொல்லும்!"

"எப்படி இருக்கமுடியும்?"

"எஎஎஎனக்கு மமமமட்டும் எப்படி?" என்றார் சுந்தரம். ஒரு பெரிய பள்ளத்தில் வண்டி இப்போது ஏறி இறங்கியதனால் ஏற்பட்ட அதிர்ச்சியே அவர் குரலில் இருந்த நடுக்கலுக்குக் காரணம்.

"நாம் எங்கே போகிறோம், உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டான் நடராஜன்.

"இந்த மோட்டார் வண்டிக்கு வழியில் ஏதாவது விபத்து நேர்ந்தால் திருநெல்வேலி ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேருவோம். சத்துரு சொன்ன வாக்கும் நிஜமாகிவிடும்."



"அப்படி எல்லாம் சொல்லாதீர்கள், ஸார்!"

"அந்தச் சத்துரு இருக்கிறானே, துணிச்சலுள்ள பயலாக இருக்கிறான் என்று அவன்மீது எனக்கு ஒரு பூனைக்குட்டி விசுவாசம் இருந்தது. இப்போது அது அடியோடு போய்விட்டது. சரியானபடி கட்டி வைத்து அடிக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது."

"ஏன் ஸார்?"

"என் வயிற்றில் உதைக்கும்படி சொல்லியிருக்கிறான், ராஸ்கல்! அவனை நான் விடப்போகிறதில்லை. எங்கே போனாலும் சரி."

மோட்டார் எதிர்பாராதவிதமாக ஒரு பெரிய வளைவில் மடக்கென்று திரும்பி, 'கிர்ர்ர்' என்ற சப்தத்துடன் நிற்காமல் ஓடியது.

"முப்பது மைல் இருக்கும்போல் இருக்கிறது!" என்றான் நடராஜன்.

"எப்படி வேண்டுமானால் போகட்டும். முதல் தடவையாக எங்கே நின்றாலும் அங்கே இறங்கிக்கொள்ள வேண்டியது. நான் சற்றுப் படுக்கிறேன்; வயிற்றை வலிக்கிறது" என்றார் சுந்தரம், பிறகு மெள்ளச் சாய்ந்து கொண்டார். இருட்டிலேயே வெகுநேரமாக உட்கார்ந்திருந்ததனாலும், ரஸ்தா விளக்குகளின் ஒளி ஒரு சிறு துவாரம் வழியாக அவ்வப்போது உள்ளே எட்டிப் பார்த்ததனாலும் நடராஜனுக்கு மோட்டார் வானின் உட்புறம் சற்றுப் பரிச்சயமாயிற்று. சுந்தரம் படுத்த மூன்றாவது நிமிஷமே 'கொர்' என்று கீழ்ஸ்தாயியில் குறட்டைவிடத் தொடங்கியிருந்தார். பாவம், அத்தனை அசதி! இவ்வளவும் ஏன்? அவனை உத்தேசித்து அவர் ஏற்றுக்கொள்ளும் உபாதிகளால்தான்.

நடராஜன் தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டான். நடந்ததை ஜானகி அறிந்தால் என்னமாகத் தவிப்பாள்; நாளைக்கு மணி வந்து அவளை விசாரிப்பான்; ஆனால், என்ன தெரிந்துகொள்ள முடியும்? மணியிடமிருந்து எண்ணம் அவன் குடும்பத்திற்குத் தாவியது. அப்பா இதெல்லாம் கேள்விப்பட்டால் என்ன சொல்லுவார்? பிள்ளையாண்டானைப் படிக்க அனுப்பினால், துஷ்டப் பயலாகத் திரிகிறான் என்று மெச்சிக் கொள்ளுவாரா! கோபக்காரரான அவர் என்ன செய்தாலும் செய்வார்! ஆனால், டெல்லி எங்கே, திருச்செந்தூர் எங்கே? நடராஜனைத் தூக்கம் அழுத்தியது. உட்கார்ந்தபடி சாய்ந்துவிட்டான். கலகலவென்று பேசிக்கொண்டு ஒரு பெரிய கூட்டம் அதில் முன்னால் நாகநாதய்யர் கைத்தடியுடன் வருகிறார்; மங்களம் ஓர் அம்மிக் குழவியுடன் தயாராக நிற்கிறாள்; சந்துருவின் கையில் நீண்ட கத்தி; இரு முரடர்கள் அவனுடைய இருமருங்கிலும் பிச்சுவாக்களுடன் நிற்கிறார்கள். சுப்புரத்தினம் ஒரு மண்வெட்டியை வைத்துக்கொண்டு அவனைத்தள்ள ஒருகுழி வெட்டுகிறார் இவ்வளவு பேரும் தாக்குமுன், குழியில் தானாக விழுந்துவிடுவதே மேல் என்று நடராஜன் ஓடுகிறான். கால்கள் பின்னிக்கொண்டு ஓட மறுத்துத் தொய்கின்றன. ஒரு திணறு திணறிக் கண் விழித்தான் நடராஜன். அவன் இருந்த நிலைமையை உணர்ந்துகொள்ள ஐந்து நிமிஷங்கள் பிடித்தன.

மோட்டார்— வான் நின்றுகொண்டிருக்க, பலமாக அதன் ஹார்ன் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. ஒரு கதாகாலட்சேபத்திலிருந்து ஜனங்கள் கலகலவென்று பேசிக்கொண்டு போய்க்கொண்டு இருந்தார்கள். ஜனக்கூட்டத்தை உத்தேசித்து வண்டி நின்றது. ஒரு கதவைச் சொற்பமாகத் திறந்துகொண்டு சுந்தரம் அவனை, "இறங்கும், ஓய்! சீக்கிரம்! தவறினால் அப்புறம் எப்போதோ?" என்றார். சொல்லிக்கொண்டே இறங்கியும்



விட்டார். நடராஜனும் கூடவே பின்பற்றினான். அவர்கள் இறங்குவதற்காகவே நின்றது போல் காணப்பட்ட வண்டி, உடனே புறப்பட்டு முன்னோக்கிச் சென்றது.

"அப்பா!" என்றான் நடராஜன் ஒரு பெருமூச்சு விட்டு.

"என் அடிவயிற்றில் கை வைத்தாலும் 'அப்பா' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. நன்றாக உதைத்து விட்டான், ராஸ்கல்!" என்றார் சுந்தரம்.

அவர்கள் பக்கமாக இரு பாட்டிமார்கள் பேசிக் கொண்டு போவதைக் கவனித்தார்கள். தங்களை மறந்து அவர்கள் கேட்ட உபன்யாஸத்தை இப்போது 'அசை' போட்டுக்கொண்டு சென்றார்கள்.

"அடி சுப்பு! இந்தப் பொம்மனாட்டி ஜன்மம் எதுக்கும் உதவாதுன்னு ஆணித்தரமாகச் சொல்லிவிட்டாரே தீக்ஷிதர்! இதுக்கு எந்தக் காலத்திலேயும் ஸ்வாதந்திரியம் கிடையாதென்று சொல்லிவிட்டார். குழந்தையாக இருக்கச்சே தோப்பனார், கல்யாணமானால் புருஷன், பிற்காலத்திலே பிள்ளை இவான் ஆதீனத்திலேதான் இருக்கணும்னு இருக்கே!" என்றாள் ஒருத்தி.

"சாஸ்திரத்திலே இப்படி இருக்கிறதிலே, பொம்மனாட்டிகள் எந்தப்பாடு படுத்தறதுகள்! என் மாட்டுப் பெண் இருக்காளே கோமதி, அடியம்மா அடியம்மா, அது என்ன சொக்குப்பொடி போட்டாளோ, மந்திரம் ஜெபிச்சாளோ? அவன் கைப்பொம்மையாக ஆடறான்; தாளனா நிக்கறான் என் பிள்ளை!"

"தீக்ஷிதர் இன்னமும் சொன்னார்; ஆபரணம் கோபம், பொய், அனிகை எல்லாம் பொம்மனாட்டிகளுக்காகவே சிருஷ்டியாயிருக்குன்னு மநு சாஸ்திரத்

இலேருந்து சொல்லி விட்டாரே! உன் மாட்டுப்பெண் மட்டும் என்ன நன்னாப்படி!"

மேலும் சிறிது கவனித்தபோது, உபந்யாஸகர் சுந்தரராஜ தீக்ஷிதர் என்று அறிந்தார்கள். அவர்கள் ஊர்ஜிதம் செய்ய அந்த வழியே போன ஒரு கிருஹஸ்தரையும் விசாரித்தார்கள். அவர், "ஆமாம், அய்யா, ஆமாம்! சும்மா பொம்மனாட்டிகள் தூஷணைன்னா தீக்ஷிதர் பிரளயமாடிவிடுவார். இது விஷயமாக ஆராய்ச்சி பண்ணி ஏதோ புஸ்தகங்கூடப் போடறாராம். நான் இவர் பேச்சைக் கேட்டுட்டு வரவில்லை; எனக்குப் பிடிக்காது. சிநேகிதர் வீட்டுக்குப் போயிருந்தேன். நேரமாயிட்டுது, அவ்வளவுதான்" என்று தமக்கும் தீக்ஷிதருக்கும் ஏணி வைத்தும் எட்டாதென்பதைத் தெளிவுபடுத்தினார்.

"அப்படியென்றால் திருச்செந்தூரில்கூட இரண்டு மூன்று வீடுகள் இவருக்கு."

"ஆமாம், அவரேதான்!"

"இது எந்த ஊர்?" என்று கேட்டான் நடராஜன் சட்டென்று.

"அது தெரியாமயா இருக்கேள் இங்கே? இல்லை, பரிகாசம் பண்றேளா என்னை?"

"இல்லை, தெரியாமல்தானே கேட்கிறேன்!"

"எனக்கும் தெரியாது, போங்கள்! சந்தேகமாக இருக்கிறது. ரயிலடியில் போய்ப் பாரும் பெரிசாக, 'திருநெல்வேலி ஜங்ஷன்' என்று போட்டிருக்கும்" என்று நடந்தார் வேகமாக.

சுந்தரம் நடராஜனின் தோளைப்பற்றிக்கொண்டு அவனை நிறுத்தினார். "என்னால் உம்மோடு நடக்க முடியவில்லை. இங்கேயே ஒரு வீட்டில் தங்குவோம்.



நாளைக்குக் காலையிலே இந்தச் சுந்தரராஜதீக்ஷிதரையே நான் கண்டுபேசி திருச்செந்தூர் வீடுகளைப்பற்றி ஒரு 'கலாட்டா' செய்துவிடுகிறேன். உமக்கும் அவகாசப் பட்டால் நீர் நெல்லையப்பர் கோவிலைச் சுற்றிவிட்டு வரலாம்; நான் 'ரெஸ்ட்' எடுத்துக்கொள்கிறேன். என் வயிறு சரியானவுடன் திருச்செந்தூருக்குத் திரும்பலாம். பழைய நாடகத்தைத் தொடர்ந்து நடத்தலாம்!" என்றார்.

"நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?"

"பின், வயிற்றில் இத்தனை வலியை வைத்துக் கொண்டு விளையாட்டா? அந்த ராஸ்கல் சந்துருவை நான் சும்மா விடப்போறதில்லை. பசுமாதிரி இருக்கிறேன் என்று என்னிடம் கொட்டம் அடித்திருக்கிறான்; சிம்ஹம் மாதிரி இழுத்துப் போடுகிறேன். சரியான 'பிளான்' போடுகிறேன்."

"அப்படியானால் நானும் தீக்ஷிதர் வீட்டுக்கு வருகிறேனே!"

"வேண்டியதில்லை. நெல்லையப்பரைத் தரிசனம் செய்துகொண்டு பிராகாரத்திற்கு வந்து உட்காரும். ஆறுமுகன் சிற்பம் இருக்கிறது. ஒரே கல்லில் எம்பெருமான் ஆனந்தமாக இருக்கிறான். நிஜ மயில் ஒன்று அங்கே உலாவுகிறது. ஓய்! தரிசனம் செய்துவிட்டு அது மாதிரி எங்கேயாவது நீர் கண்டதுண்டா என்று வந்து சொல்லும் தீக்ஷிதர்வரை நான் பார்த்துக்கொள்கிறேன். இப்போதைக்கு ஒரு வீட்டில் படுத்துக்கொண்டு பகல்வரை தூங்கவேண்டியது!"

"மோட்டார் வானுக்குள் முப்பத்தைந்து மைல் போனதுகூடத் தெரியாமல் நன்றாகத் தூங்கிவிட்டீர்களே!"

"அது அதிசயமில்லை! இது எந்த ஊர் என்று கேட்டீரே, அதுவும் அதிசயமில்லை. நாம் ஏறினதும்

இறங்கினதும் தெரியாமல் வந்து சேர்ந்தோமே அதுதான் 'பன்னிருகை கோலப்பன்' காட்டின அருள்!" என்றார் சுந்தரம்.

நடராஜனும் சுந்தரமும் மோட்டார் வானில் ஆடிக் குலுங்கிக்கொண்டு சென்ற அதே சமயம், மங்களம் ஒரு நிலையில்லாமல் தத்தளித்துக்கொண்டிருந்த உள்ளத் துடன் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தான். இதுவரை தன் சந்தேகங்கள் எதுவும் ஜானகிக்குத் தெரியாதபடி அவன் மறைத்து வைத்துவிட்டான். நாகநாதய்யர் கூறிய விஷயங்கள் சமையற்கட்டுருகில் கிடந்து அகப்பட்ட கைக்குட்டை எல்லாம் அவன் செய்துள்ள ஹேஷ்யங்கள்யாவும் சரியானவைதாம் என்பதற்குப் போதுமான ருசுக்கள். ஆனால், இனியும் பேசாமல் இருக்க முடியுமா? நாளைக்கு மாலையில் அவன் தாயாரும் தகப்பனாரும் வந்த பிறகு இதைப்போட்டு உடைத்து தேர்படக் கேட்பதோ பேசுவதோ எச்சரிப்பதோ சரியா?

"இல்லை" என்றது அவனுடைய பகுத்தறிவு அப்படி யானால் அவன் செய்யக்கூடியது என்ன?

திடீரென்று ஓர் அபூர்வமான யோசனை அவனுடைய மனத்தில் உதயமாயிற்று. மங்களம் போன்ற ஒரு பிறவிக்குத்தான் அது உற்பத்தியாவது சாத்தியம் என்று அவனே எண்ணி மகிழ்ந்துகொண்டான்.

நாகநாதய்யர் மங்களத்தின் வார்த்தைக்கு என்றும் கட்டுப்படுபவர். செல்வாக்குள்ளவர். அவர் மூலமாகக் காலையில் பத்து மணிக்கு ஒரு வாடகை மோட்டாரை ஏற்பாடு செய்துகொண்டு, பட்டாபிராமய்யரையும் பாகீரதியையும் எதிர்நோக்கிச் சென்று அவர்கள் வரும் ரயில்வண்டியைப் பிடித்து, சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டால் என்ன? பரபரவென்று எழுந்து ரயில்வே கால அட்டவணைப் புஸ்தகத்தை எடுத்துப் புரட்டினான்



அரைத்தூக்கத்தில் ஜகதீசன், இன்னும் என்ன படிப்பு!" என்று முனகினதைக் காதில் வாங்காமலே ஸ்ரீவைகுண்டம் ஸ்டேஷனில் வண்டி எட்டு நிமிஷம் நிற்கிறதென்பதைக் கண்டுகொண்டான். ஸ்டேஷனில் பெற்றவர்களைச் சந்தித்து, விஷயத்தைச் சொல்வது; அதற்குள் முடியா விட்டால் அம்மாவை மட்டுமாவது வண்டியிலிருந்து இறக்கி, தன்னுடன் காரில் ஏற்றிக்கொண்டு, வரும் வழியில் நடந்த விஷயங்கள் பூராவையும் தெரிவித்து விடுவது குழந்தைமுதலே மங்களத்துக்குத் தன் தங்கை ஜானகியின்மீது சிறு பொறாமைகள் உண்டு. ஒன்றைப் பத்தாகப் பெருக்கிச் சொல்லுவான் என்ற ஒரு புகார் உண்டு. இப்போது நாகநாதய்யர் கூடவே இருந்து 'தாஸ்து' சொல்வதால், அம்மா ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அதோடு மங்களத்தின் பொறுப்பும் விட்டுப்போகிறது. "பெண் வளர்க்கிறார்களாம் பெண்! காலேஜில் படித்துக் கழுதையாகத்தான் போய்விட்டது!" என்று வெறுத்துக்கொண்டு, படுக்கையில் திரும்பிப் படுத்துக்கொண்டான். மனத்திலிருந்த பெரிய பாரம் ஒன்று நீங்கிவிட்டது போன்ற உணர்வுடன் நித்திராதேவி அவனைத் தன் வசமாக்கிக்கொண்டாள்.

காலையில் நாகநாதய்யருக்கு மங்களம் தன் அற்புத மான யோசனையைச் சொல்லத் துடியாகத்துடித்தான். அதைக் கேட்டதுமே, கிழவரும் நெல்லிக்கனி போல் குதித்துக்கொண்டு ஆமோதித்தார். ஜகதீசனை அழைத்து, "உன்னைத்தானே; ஒரு விஷயம்!" என்று ஆரம்பித்தார்.

"ஏன் மாமா! இன்னும் பெட்டியைத் திறந்த விஷயத்தை விடமாட்டீர்களா?" என்று நீளமாகக் கேட்டான் ஜகதீசன்.

"என்னடா நீ, எப்போ பார்த்தாலும் அதையே நினைத்து நடுங்கிக்கொண்டு! ஆனாலும் பயந்து சாகிறாய், அப்பா! கொஞ்சம் தைரியமாக இருக்கணும், என்ன?" என்றார் அவர்.

"நான் தைரியமாக இருந்துவிடலாம், மாமா! அப்புறம் நடக்கிறதைப் பெற்றுக்கொள்ளச் சக்தி வேண்டாமா? உங்களுக்கென்ன, நாரதர் மாதிரி இரண்டு பக்கமும் பேசுவீர்கள், வேடிக்கை பார்ப்பீர்கள்!"

"நாரதர் மாதிரிதான். இப்போ ஓர் அயனான வரன் நிச்சயம் செய்கிறேன், என்ன? உன் ஸம்ஸாரத்தை அழைத்துக்கொண்டு போய், பையனைக் காண்பித்து... என்ன?"

"பேஷாகப் போங்கள்! நீங்களும் கூடப்போகிறீர்கள் அல்லவா? அதைவிடச் சந்தோஷ சமாசாரம் வேறு இல்லை" என்றான் ஜகதீசன்.

ஜானகியிடம் மங்களம் விடை பெற்றுக்கொண்ட விதமே வேறு. "நம்ம நாகநாத மாமாவுக்கு ஒரு தமக்கை இருக்கிறாள். கேள்விப்பட்டிருக்கிறாயோ, ஜானகி? பத்தே மைலில் அவள் கிராமம் என்கிறார். அவளைப் பார்த்து விட்டு வரணுமென்று ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்பா அம்மா எல்லாரும் வந்த பிறகு போகிறதென்பது முடியாது; இன்னிக்கு ஒரு கார் கொண்டுவரேன் என்கிறார். போய்விட்டு வந்துவிடலாம் என்று சொல்லி, ஒப்புக்கொண்டும்விட்டேன்" என்றாள்.

ஜானகி, "நானும் வருகிறேனே, அக்கா! கிராமங்களைப் பார்க்கிறதென்றால் எனக்கு ரொம்ப ஆசை!" என்று வெகுளியாகச் சொன்னாள்.

இதை மங்களம் எதிர்பார்க்கவில்லை. எனினும், சமாளித்துக்கொண்டு "நீ வரலாம். ஆனால், அவர்கள் கண்ணிலெல்லாம் நீ அநாவசியமாகப் படக்கூடாதென்று அம்மா சொல்லியிருக்கிறாள். எப்போதோ உன்னை ஆறு மாதத்தில் அவள் பார்த்தது" என்றாள்.

"அதனால் நான் உடனே இளைத்துப்போய்விடு வேனா, அக்கா? அழகாக இருக்கிறது!"



"அழகோ இல்லையோ! வேண்டாம் என்றால், வேண்டாமே! எத்தனையோ காரணம் இருக்கும்!"

"அப்போ வாஸ்தவமான காரணத்தைச் சொல்லி விட்டேன்."

"நீ படித்தவள்; புரட்டிப்புரட்டிப் பேசுகிறவள். காரணம் பின்னால் தெரியும். நீ காலம்பற சுவாமி தரிசனம் பண்ணி விட்டு இரேன். வந்துவிடுகிறேன் போனதும் வந்ததுமா!" என்று முடித்துக்கொண்டாள்.

நாகநாதய்யர் சொன்னபடி கார் கொண்டுவந்து விட்டார். அவர்கள் செய்த ஏற்பாட்டின்படியும் புறப் பட்டார்கள். பிற்பகல் 2-15க்கு ஸ்ரீவைகுண்டம் வரும் வண்டி 2-20க்குத்தான் கிளம்புகிறது. பட்டாபிராமய்யரின் பரிபாஷையில் 'ஒன்பது நிமிஷத்தில் ஓர் அச்வமேத யாகமே செய்துவிடலாம்.' வெகு ஆனந்தமாக, பெரிய தொரு தேவகாரியத்தை எடுத்துக்கொண்டு பூர்த்தி செய்யும் ஆத்ம திருப்தியுடன் பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டாள் மங்களம். டிரைவருக்கு அடுத்த ஸீட்டில், தம் உடைகளை ஒடுக்கிக்கொண்டு அமர்ந்தார் நாகநாதய்யர். குண்டு குழிகள் நிறைந்த மண்ரோடுகளை உதறித் தள்ளிவிட்டு, நீண்ட கப்பி ரஸ்தாவில் மோட்டார் இறங்கி, துரிதமாக ஓடத்தொடங்கியது.

"இந்த வேகத்தில் ஓடினால், முக்கால் மணி முன்னாடி ஸ்டேஷனில் போய் இருக்கலாம். என்ன?" என்றார் கிழவர் உத்ஸாகத்துடன்.

"அந்த ஊர்க்கோயிலை வேண்டுமானால் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம். வந்தால் சரியாக இருக்கும்" என்று மங்களம் யோசனை சொன்னாள்.

"வரும்போது உன் அம்மாளை அழைத்துக்கொண்டு வந்துவிடு. சொல்கிறேன்! என்ன? ஸ்ரீவைகுண்டம்,

ஆழ்வார் திருநகரி இரண்டு ஊர்களையும் பார்த்துக் கொண்டு வரலாம்; என்ன?'' என்றார் அவர்.

இவர்கள் அபிப்பிராயத்தை டிரைவர் ஆமோதிக்கவில்லை. ''அதெல்லாம் முடியாது, ஸார்! வண்டி 'ஷெட்'டிலே அஞ்சரை மணிக்கு இருக்கணும்னு எங்க எஜமான் உத்தரவு'' என்றான்.

''அட சரித்தான், அப்பா! நான் சொல்லிக்கிறேன் உன் எஜமானனிடம் என்ன?''

''எங்க ஊட்டிலே ஆறுமணிக்கு வரதாகச் சொல்லி விட்டு வந்திருக்கேன். எங்க எஜமான் கேட்டாலும், அங்கே நடக்காது!'' என்று டிரைவர் தீர்மானமாகச் சொன்னான்.

''வார்த்தை எடுக்கிறதற்கு முன் என்ன வாக்குவாதம்? முதலில் போய்ச் சேருவோமே!'' என்றாள் மங்களம்.

அவள் வாக்கில் 'அஸ்து' தேவர்கள் நித்யவாஸம் செய்தார்களோ என்று சம்சயிக்கும்படி 'டபார்' என்று ஒரு வெட்டுச் சத்தம் உடனேயே கேட்டது. மோட்டார் கடகடவென்று நடுங்கியது. திடீர் 'பிரேக்' போட்டு நிறுத்திவிட்டு, டிரைவர் வண்டியிலிருந்து அவசரமாகக் கீழே இறங்கினான்.

''என்ன, என்ன?'' என்று பதறினார் கிழவர்.

மங்களம் ஒன்றும் பேசத் தோன்றாமல் விழித்தாள்.

டிரைவர் உதட்டைப் பிதுக்கி, '''ட்யூப்' 'பர்ஸ்ட்' ஆயிட்போச்சுங்க!'' என்ன செய்வது?''

''இப்போ என்ன செய்வது?''

''வேறே 'ட்யூப்' போடணும். போட்டால் வண்டி ஓடும்!''

''வேறே 'ட்யூப்' எங்கே இருக்கு?''



டிரைவர் மூன்று நான்கு முறை வண்டியைச் சுற்றி வந்தான். வித்தையாடி நடுத்தெருவில் ஒரு கீரிப்பிள்ளையைக் கட்டிப்போட்டு, பாம்புக் கூடையை ஒதுப்புறமாக வைத்துவிட்டு ஐந்தாறு முறை மகுடியுடன் பிரதக்ஷிணம் செய்தால் கூட்டம் குபுகுபுவென்று கூடுவது போல் இங்கும் ஜனங்கள் வந்தார்கள்.

''என் ஸார், நின்னு போச்சுங்களா வண்டி?... த்ஸொ த்ஸொ!!''

''எதினாச்சியும் ஆக்ஸிடெண்ட் ஆயிப்போச்சா? யாருக்குங்க அடி?''

''என்ன 'ட்ரபிள்' வண்டியிலே! ஓ! பங்சர் ஆயிடிச்சா? இப்படித்தான் ஒரு தபா மூணாம் வருசம் நான் குறும்பூர் ரஸ்தாவிலே போயிக்கிட்டிருக்கேன். ராவைக்கு இரண்டே முக்கா மணி, 'புஸ்' இன்னிச்சு; சடார்னு வண்டி நின்னுக்கிச்சு. நான் என்னா பண்ணுவேன்? கும்பிருட்டு'' என்று ஒருவன் பெரிய கதையை ஆரம்பித்தான்.

நாகநாதய்யருக்குச் சகிக்கவில்லை. ''என்ன டிரைவர்? பின்னாலே ஒரு சக்கரம் இருக்கே அதைப் போட்டு மாத்தேன்'' என்றார்.

''தெரியுமுங்கோ; தெரியும்! இது என்ன மாதிரி ஆச்சுன்னு பாத்துக்கிட்டுத்தானே கிளம்பணும்!'' என்று, சர்க்கார் நடத்தும் முறையில் தன் ஆராய்ச்சிகளை நடத்தலானான் டிரைவர். இடையில் நாகநாதய்யர் பட்ட அவஸ்தையையும் கூட்டத்துக்கு நடுவே மங்களம் பட்ட லஜ்ஜையையும் ஊகித்துக்கொள்ள விட்டுவிட்டு, வண்டி மறுபடி ஐம்பது நிமிஷ தாமதத்துடன் புறப்பட்டதென்று கூறிவிடுகிறோம்.

டிரைவர் மூன்றங்குலக் குறுக்களவில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ''ஸாமி! நாம் ஸ்ரீவை

குண்டம் போகக்குள்ளற வண்டி போயிடும்" என்று கனைக்குப் பார்த்துச் சொன்னான்.

"அப்படியானால்?"

"அடுத்த ஸ்டேஷன்லே நிப்பாட்டிக்கிறேன் வண்டியை. அங்கேயே மனுசங்களைக் கண்டு பேசிட்டு வாங்க."

"பேசலாம். அடுத்த ஸ்டேஷனில் அதிக நாழி நிக்காதே; என்ன செய்யலாம்?" என்று கவலைப்பட்டாள் மங்களம்.

"இப்போ என்னா செய்யறது?" என்று கையை விரித்தான் டிரைவர். அவன் யோசனையின்படி ஆழ்வார் திருநகர் ஸ்டேஷனில் மோட்டாரை நிறுத்தச் சொல்லும் படியேதான் ஆயிற்று. அதை ஏற்றுக்கொண்டதும் ஓரளவு புத்திசாலித்தனம் என்பதற்கேற்ப, அவர்கள் அந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தை அடைந்ததும் வண்டியும் கறுத்ததொரு மகிஷம்போல் ஜிகுஜிகுவென்ற சப்தத்துடன் தொலைவில் வரும் காட்சியைக் கண்டார்கள்.

அசாதாரணமான கூட்டம் ஏறியிருந்ததற்கு அடையாள மாக, ரயில் வண்டியின் இருபுறங்களிலும் பிரயாணிகளின் ஆடைகள் காற்றில் வெண்மையாகப் பறந்து கொண்டு வந்தன. வண்டி வந்து நின்றது. மங்களம் தனது சங்கடமானதொரு நிலைமையை அப்போதுதான் உணர்ந்தாள். பட்டாபிராமய்யரும் பாகீரதி அம்மாளும் தங்கள் மூத்த மகளை நடுஸ்டேஷன் ஒன்றில் சந்திக்கலாம் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள். ஆகவே, அவர்கள் வெளியே எட்டிப்பார்ப்பார்கள் என்று எதிர் பார்ப்பதில் பிரயோசனமில்லை. நிதானமாகத்தேடுவோம் என்றாலோ இருந்தது இரண்டே நிமிஷ அவகாசந்தான்.

ஸுக்ருத பலனாகவோ என்னவோ, நாகநாதய்யர் எஞ்சின் சமீபத்தில் உள்ள வண்டிகளுக்குள் குனிந்து குனிந்து பார்த்து 'அய்யர்வாள், அய்யர்வாள்' என்று



கூவிக்கொண்டிருந்தபோது, மங்களத்தின் சமீபத்திலிருந்த ஒரு பெட்டியில் பாகீரதியின் வெளிறடித்த முகம் தெரிந்தது.

"அம்மா!" என்று உரத்து அழைத்தாள் மங்களம்.

திடுக்கிட்டு வெளியே எட்டிப் பார்த்தாள் பாகீரதி. அவளுக்கு எதிரே உட்கார்ந்திருந்த பட்டாபிராமய்யரும் ஆச்சரியம் மேலிட்டவராகத் தம் காதுகளை நம்பாமல் வெளியே பார்வையைச் செலுத்தினார். சாக்ஷாத் மங்களந்தான் சந்தேகம் இல்லை.

"மங்களமா! நீயா?"

"ஆமாம்! நான்தான்! நானேதான், அம்மா! இப்படி ஜன்னலண்டை சீக்கிரமாக வாருங்களேன்! அவசியமாகப் பேச வேண்டும்!"

மங்களம் இதை லகுவாகச் சொல்லிவிட்டாளே யொழிய அவ்வளவு சுலபமாக நடந்துவிடும் காரியமாக இல்லை. ஏற்கெனவே ஜன்னலடியிலிருந்த தம்பதிகளுடன் வாக்குவாதம் நடத்தி வந்தவர்களாதலால், இப்போது மிகுந்த பிரயாசையின் மேலேயே அது சாத்தியமாயிற்று.

"கூட்டில் வரவேண்டியவர்கள் ரயிலில் ஏறிவிடு கிறார்கள்! ஹூம்... பன்னிரண்டாம் கிளாஸ் வண்டி போட்டால் அதற்கும் தகுதியுண்டோ இல்லையோ! அடேயப்பா. ஏறினது முதல் என்ன உபத்திரவம்! விலைக்கு வாங்கிவிட்டாப்போல்தான் பேச்சு; சேச்சே! கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!" — இப்படிப் பல முணுமுணுப்புகளிடையே அவர்கள் நகர்ந்துகொள்ள, பட்டாபிராமய்யரும் பாகீரதியும் முன்னுக்கு வந்தார்கள்.

"என் மங்களம், என்ன சமாசாரம்? ஏதாவது விசேஷம் உண்டோடி? இங்கே எப்படி வந்தே?"

"விசேஷந்தான் அம்மா! முக்கியமான ஒரு விசேஷம், அம்மா!"

சொல்லேன், யாருக்கும் உடம்பு ஒன்றுமில்லையே?"

மங்களம் பதில் சொல்லுமுன், "ஆமவடை போளி!" "ஆமவடை போளி!" என்று கூவிக்கொண்டு வந்த ஒருவன் அவன்மீது மோதி, சில போளிகளையும் கீழே சிந்திவிட்டுக் கூக்குரல் போட்டான். மங்களம் அதை மதிக்காமலேயே, "அம்மா! விஷயம் முக்கியமானது. நீதான் இறங்கி வந்துவிடேன். கார் கொண்டு வந்திருக்கேன், அதில் போகலாம்!" என்றான்.

"அதெல்லாம் யாரும் இறங்க முடியாது. இங்கே வழி இல்லை!" என்று வாசற்படியை அடைத்துக்கொண்டு நின்ற நவவீரர்களில் ஒரு யுவன் பளிச்சென்று இளித்தான்.

"அட சொல்றதைச் சொல்லேன், நீ பண்ணுகிற 'டிலே'யில் ஏழு அச்வமேத யாகம் பண்ணிவிடலாம் போலிருக்கிறதே;" என்று சலித்தார் பட்டாபிராமய்யர்.

"ஏன் அம்மா, பேசியாயிற்றோ இல்லையோ!" என்று உள்ளேயிருந்து அவசரப்படுத்தினாள் பழந்தம்பதிகளில் பெண் இடையில் நாலு மூட்டைகளுடன் வந்த ஒரு போர்ட்டர் மங்களத்தின் காலை மிதித்து மோதிவிட்டுப் போனான்.

"என்ன சமாசாரம், சட்டென்று சொல்லேன் உன் அம்மாவுக்கு உடம்பு நேசில்லை, காரில் வரமுடியாது" என்றார் பட்டாபி.

"காரில் வந்தால் எனக்கு நெஞ்சுக்கு வலி வந்துவிடும்" என்றாள் பாகீரதி, அன்று என்ன கிழமை என்பதை எண்ணாமலேயே.

"இங்கே இருந்தால் பாக்கிப் பேருக்கு மூச்சுத் திணறி விடும் போலிருக்கிறதே" என்றார் பழைய தம்பதிகளில் ஆண்.



"அப்படிப் பகிரங்கமாகச் சொல்வதற்கில்லை, அம்மா நான் ஒரு காரியம் பண்ணுகிறேன். அதோ நாகநாத மாமாவிடம் சொல்லிக் காரை அனுப்பிவிட்டு, நாங்கள் இரண்டு பேரும் உங்களுடன் வந்துவிடுகிறோம். சாவகாசமாகப் பேசிக்கொண்டு போகலாம்."

"இங்கே நிற்கக்கூடத் துளி இடம் கிடையாது!" என்றார்கள் பழைய ஆணும் பெண்ணும்.

"நீ சீக்கிரம் வாயேன்!" என்று அவசரப்படுத்தினாள் தாய்.

தன் 'பிளான்'கள் தலைகீழாகவிட்டதில் மனம்நொந்த மங்களம், எதிரே வந்த நாகநாதய்யரிடம் டிக்கெட் வாங்கி வர உத்தரவு போட்டு, கார் டிரைவரை அனுப்பத் தானே ஓடினான். ஆனால், அவன் எதிரில் முறையே ஒரு பழக் கூடைக்காரன், பால், காப்பி விற்பவன், பித்தளைப் பாத்திர வியாபாரி, சாக்குமூட்டை மீசைக்காரன் ஆகியோர் எதிர்ப்பட்டு அவன் திரும்பின பக்கமே பார்த்துப் பாய்ச்சுக் காட்டி ஆலசியம் செய்தார்கள். நாகநாதய்யர் கூட்டத்தில் இடிபட்டு, டிக்கெட் வாங்கத் திணறி, கையை 'கௌண்ட'ரிலிருந்து பிரயாசையுடன் இழுத்தபோது ரயில் ஊதிவிட்டது.

"வா, மங்களம்! எங்கே போயிட்டே!"

"மாமா"! எத்தனை நாழி டிக்கெட்டுக்கு!"

இரண்டு பேரும் உள்ளே விரைந்துதான் வந்தார்கள். ஆனால், வண்டி நகர ஆரம்பித்துவிட்டது. ஆண்பிள்ளையாக இருந்தாலும் தொத்திக்கொள்ள முடியாதபடி புட்போர்டெல்லாம் கூட்டம் நின்றது.

கடைசி வண்டியின் பின்புறத்தைப் பார்த்துவிட்டுச் சோர்வுடன் வெளியே வந்தபோது, அவர்கள் செய்த மற்றொரு பிசகு தெரிய வந்தது. ரயிலை தம்பி மோட்டாரை அனுப்பிய பிசகுதான் அது. அந்த டிரைவர்

உத்தரவு கிடைத்ததுதான் சாக்கு என்று வண்டியை விட்டுக்கொண்டு போயிருந்தான்!

நாகநாதய்யரும் மங்களமும் ஆழ்வார் திருநகரி ஸ்டேஷனில் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டு நின்றார்கள்.

# 13

வெம்புவாள் விழுவாள் பொய்யே; மேல்விழுந்
தழுவாள் பொய்யே;
தம்பலந் தின்பாள் பொய்யே; சாகின்றே னென்பாள்
பொய்யே;
அம்பினுங் கொடிய கண்ணாள் ஆயிரஞ் சிந்தை
யாளை
நம்பின பேர்க ளெல்லாம் நாயினுங் கடையா வாரே!

—ஒரு பழைய பாடல்

சேலம் சர்க்கரைச் செட்டியார் என்பவரை இந்த அத்தியாயங்கள் எதிலுமே நாம் சந்திக்க வேண்டிய அவசியம் இராது என்பதை முன்னதாகக் கூறிவிடுகிறேன். எனினும், அவர் விதைத்த சில வினைப்பயன்கள் மட்டும் கதையின் போக்குக்கு மிக அவசியமான சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்திவிட்டதைத் தெரிந்துகொண்டால் போதுமானது.

கடவுள் சிருஷ்டியில் மனிதனுக்கு மனிதன் அபிலாஷைகளில் மாறுபாடு இருப்பதை நாம் கவனிக்காமல் இருந்துவிட முடியாது; விசாரித்துக் காரணம் கண்டுபிடிப்பதும் இயலாது. ஒரு மனிதனுக்குக் கறிவேப்பிலைத் துவையல்மீது பிராணன்; மற்றொருவனுக்குத் தன் கையில் சில்லறைகளை (அவை யாருடையனவாயிருந்தாலும்) வைத்துக்கொண்டு பட்டுவாடா



செய்ய வேண்டுமென்றதோர் ஆசை; மூன்றாமவனுக்குக் கொழுகொழுவென்று தாடி வளர்க்க வேண்டும் என்ற ஆதுரம். இவற்றை இதரர்கள் பார்த்தால் வம்புக்கு இலக்காகுமே என்று அச்சம் மட்டும் இருப்பதில்லை. அதேபோல் சர்க்கரைச் செட்டியார் ஜகத்தின்மீது காதல் கொண்டார்!

பிறந்தது முதல் தன்னைக் குறித்து யாரும் சொல்லக் கேட்டிராத அந்த இனிய வார்த்தைகள் ஜகத்தின் செவிகளிலே 'தேன் வந்து பாய்வது' போல் பிரவாகமாய் வந்து விழவும், அவள் தன் ஜாதகத்தைப் பெட்டியின் அடியில் வைத்துப் பூட்டினாள். நல்ல காலம் வந்த பிறகு ஜாதகம் பார்ப்பவன் முட்டாளே அல்லவா? ஜகத்தின் யோகம் சர்க்கரைச் செட்டியாருக்கு ஏறவே, அவளைக் கதாநாயகியாகப் போட்டு ஒரு சினிமாப் படமே பிடித்தார். அவருடைய கண்களைப் பெற்றிராத அசட்டு உலகம் ஜகத்தின் உருவத்தைப் பழித்தது. பழித்தால் என்ன! சர்க்கரை அதை நம்பவில்லை. தம் காதல்கிழத்திக்கு மேலும் ஏராளமான நகைகளைப்பூட்டி, வைரக் கம்பெனிக்கு விளம்பரமாகச் செய்து, அவர்வரை ஆத்ம திருப்தியே அடைந்திருந்தார்.

ஆனால், அது ஒரு முக்கியமான 'ஆனால்'தான், ஜகம் திருப்தி அடையவில்லை. சர்க்கரையை மேலும் கரைக்கப் பல யுத்திகள் கையாண்டாள். அவர் உள்ளத்துக்கு நேர்மாறாக 'பாங்கி'ப் பணம் அசைந்து கொடுக்காமல் கருங்கல்லாக இருந்து வரவே, புதிய உபாயங்கள் கண்டுபிடிக்கத் தன் மூளையைக் கசக்கினாள். தன் சகோதரனைத் தருவித்து யோசனை கேட்டாள். ஜகத்திற்கு வேண்டியது பணம்; செட்டியார் கொடுப்பது என்னவோ பண்டந்தான். பண்டத்தைப் பணமாக்கிக் கொள்வோம் என்றால், அவளுக்கு ஸ்வாதந்தர்யம் 'லேது'.

"கண்டேன் ஒரு வழியை!" என்று எகிறிக் குதித்த தங்கச்சியைத் தங்கவேல் வியப்புடன் நோக்கினான்.

"நகையை நான் விற்றால்தான் செட்டியார் ஆட்சேபம் செய்வார்; அல்லவா?"

"ஆமாம்... அதனால்?" என்று கேட்டான் அப்பாவி அண்ணன்.

"நகை திருட்டுப் போய்விட்டதானால் பேசுவாரா?"

"எனக்கெப்படித் தெரியும்?"

"பேசாமல் வேறு நகை பண்ணிப் போடுவார். திருட்டுப் போன நகையை விற்றுப் பணமாக்கி நாம் வைத்துக்கொண்டால் போச்சு. எப்படி என் யோசனை?"

"யோசனை எப்படி? மண்ணாங்கட்டி மாதிரிதான் இருக்கிறது. நகை திருட்டுப்போனால், அப்புறம் திருடன் அல்லவா அதைப் பணமாக்கிக்கொள்ள முடியும்?"

"சரிதான், அண்ணா! நகைகளை நீ திருடிவிடேன்!"

"நானா?"

"உன்னையும் என்னையும் தவிர இங்கே எந்தத் திருடன் இருக்கிறான்?"

"நீ சொல்கிறது விளங்கவில்லை, ஜகம்!"

"நீ வந்து என் நகையைத் திருடிக்கிட்டுப் போயிடு. நான் திருட்டுப் போயிட்டதாகக் கூவறேன்; அழுவறேன்; அடிச்சிக்கிறேன்; அப்பாலே செட்டியார்கிட்ட புது நகை கேட்டு வாங்கிக்கிறேன். ஊரெல்லாம் திருட்டாகக் கெடக்குது சரின்னு சொல்லு!"

"திருட்டு நடந்தது மாதிரி புளுகறேன் என்கிறே!"

"ஆமாம், ஆமாம், ஆமாம்! உன் கிராப் மண்டையிலே ஏறிக்கிச்சா? நீ சந்துடி செய்யாம நகையை நாலு மாசத்துக்கெல்லாம் வித்திடு."



சற்று நேரம் தங்கவேலு பேசாமல் இருந்தான். ஒரு திருட்டுக்கு உடந்தையாகத் தன்னை இருக்கும்படி தங்கச்சி அழைக்கிறாளே என்ற ரோஷம் அவன் வாயை அடைக்கவில்லை; தன் தங்கச்சி இந்த அடாத யோசனையின் சிருஷ்டி கர்த்தா என்பதனால் உண்டானதொரு பிரமிப்பும் காரணம் இல்லை. திருடி அகப்பட்டுக்கொண்டுவிட்டால் நம் கதி என்ன ஆகும் என்ற கலக்கந்தான் அது. ஜகம் தன் உடன்பிறந்தானின் உள்ளிப் பூண்டை நிகர்த்த மண்டையில் ஜனனமாகிச் சஞ்சாரம் செய்யும் எண்ணங்களை ஒரு தெய்வ-உபாஸகர் அறிந்து கொள்வதுபோல் கண்டாள்.

"நீ இந்தப் பட்டணக்கரையில் போலீஸார் கையில் சிக்கிக் கொண்டுவிடுவாய் என்றுதானே பயப்படுகிறாய்? ஐயய்யா! இத்தனை யோசனை சொன்னவள் அதையும் நினைக்காமல் இருப்பேனா? முருகன் சேவைக்காக நான் திருச்செந்தூர் போகிறேன். நீ என் பின்னாலே வந்து திருநெல்வேலியிலே தங்கியிரு, தலைமறைவாக. நான் சொல்றப்போ வந்து காதுங்காதும் வைச்சாப்பலே நகையைக் கொண்டு போயிடு. நீ போன அப்பாலே நான் கூச்சல் போடறேன். இப்போ சரிதானே?" என்று விவரமாகக் கூறினாள்.

"சரிதான்!" என்றான் தங்கவேலு, மன நிம்மதி சிறிது ஏற்பட்டவனாக.

ஆகவே, "முருகனைச் சேவிக்க" ஜகம் என்கிற சீமாட்டி சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் நம் கதாநாயகியுடன் வண்டி ஏறினாள். திருச்செந்தில் சுப்புரத்தினத்திற்குப் 'பிரயோசனம்' செய்வித்துவிட்டு ஒரு தனி ஜாகையையும் ஏற்படுத்திக்கொண்டாள். உண்மையிலேயே, மூக்குத்தியைக் கெட்டுப்போக்கி, கதாநாயகன் மூலம் அதைத் திரும்பப் பெற்று, அதன் பிரத்யுபகாரமாய் நாகநாதஅய்யரின் கேவலமான மனத்தையும் செய்கையையும் அவனுக்கு வெளிப்படுத்தினாள். வந்து இடம் பிடித்துக்கொண்ட பின்னர், அதிக ஆடம்பரத்

தடபுடல்கள் இன்றித் தமையனுக்கு உடனே வரும்படி ஒரு தந்தியையும் தபாலையும் அனுப்பிவிட்டு, ஷண்முகன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, இன்றிரவு தன் நகைகளைப் பறி கொடுக்கத் தயாராகக் காத்துக் கொண்டும் இருக்கிறான். அந்தச் சகோதரனும் அதே இரவு பதினொருமணியை எதிர்பார்த்து அருகிலே தங்கிக் காத்துக்கொண்டிருக்கிறான்! இத்தனை பூர்வ பீடிகைகளை நம்மைப் போலவே அறிந்திராத நடராஜன், அவன் எழுதின கடிதத்தின் ஒரு பகுதியை மட்டும் படித்து விட்டுப் பதறிப்போய் நண்பன் மணிக்கு இரண்டாவது தந்தி அடித்ததில் அதிசயம் ஒன்றும் இருக்க முடியாதல்லவா?

* * * *

ஆழ்வார் திருநகரியைவிட்டுப் புறப்பட்ட ரயில் வண்டியில் பட்டாபிராமய்யரும் அவர் தர்மபத்தினி பாகிரதி அம்மாளும் அடைந்திருந்த ஆச்சரியமும் பிரமிப்பும் மனவேதனையும் சொல்லி இயலாது. ஜன்னலடியில் பிடிவாதமாக இருந்த பழந்தம்பதிக்கு இடத்தை ஒழித்துக்கொடுத்த பிற்பாடு அவர்கள் மண்டையைத் துழாவி, மங்களம் வந்த காரணம் என்னவாயிருக்கும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தார்கள்.

"என்னத்திற்காக மங்களம் முன்னாடி புறப்பட்டு வருகிறான் என்று தெரியவில்லையே! அதையும் சொல்லாமல் கொள்ளாமல் மூடுமந்திரம் செய்கிறான். பண்ணுகிற ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால் பெரிய அச்வமேதயாகம் செய்யப் போகிறதாகத்தான் மனத்துக் குள்ளே நினைவு" என்று கோபித்துக்கொண்டார் பட்டாபி.

"என்னைச் சொல்லி என்ன செய்கிறது! பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கிறாப்போல் உங்கள் பெண்ணுக்கும்



கொடுத்து வளர்த்துவிட்டீர்கள். இன்றைக்கு, இல்லாத ஆகாத்தியங்கள் எல்லாம் செய்து காட்டுகிறாள்" என்றாள் பாகிரதி.

பழந்தம்பதி தங்களுக்குள், "அம்மா மாதிரிதான் பெண் வளர்ந்திருக்கிறது!" என்று பேசிக் 'களுக்'கென்றும் சிரித்தார்கள்.

பட்டாபி அதைப் பொருட்படுத்தாமலே, "யார் சொல்கிறதைக் கேட்கிறாள் மங்களம்! புருஷனைக் கேவலம் துரும்பு மாதிரி நடத்தறாள்!" என்றார்.

பழந்தம்பதியில் ஆண், "இங்கேயும் அப்படித்தான்!" என்று மெல்லச் சொல்லித் தன் பெண் ஜாதியைக் குதூகலப்படுத்தியது.

"மாப்பிள்ளைதான் என்ன! ஒரு வார்த்தை அதட்டல் போட மாட்டானோ?" என்று பாகிரதி சொல்லவும், மேற்படி தம்பதியில் பெண், "தத்ரூபம் இவர்கள் மாதிரியேதான்!" என்று முத்தாய்ப்பு வைத்தது.

"இப்படி அடிக்கடி பேசினாயானால், அந்த மனிதர் இந்த இடத்திலேயே அச்வமேத யாகம் செய்ய ஆரம்பித்து விட்டாலும் விடுவார்!" என்று கேலி செய்தது ஆண்.

இம்மாதிரியான சூழ்நிலையிலிருந்து ஒரு வழியாக ரௌரவாதி நரக பாதையிலிருந்து விடுபட்ட ஆத்மாக்களைப் போல் திருச்செந்தூர் ஸ்டேஷனில் பட்டாபியும் பாகிரதியும் மிகுந்த திருப்தியுடனேயே இறங்கினார்கள். ஸ்டேஷனுக்கு ஜகதீசன் வந்திருந்தான். அவன் மிகுந்த களைப்புடன் காணப்பட்டான். அன்று காலையில் மங்களமும் நாகநாதய்யரும் சில மணி நேரம் போயிருப்பார்கள் என்ற செய்தி அவன் மனத்தைக் குளிர வைத்தது. முன் ஒரு காலத்தில் குமரக்கடவுள் "சிவனார் மனங்குளிர உபதேச மந்திர மிருசெவி மீதிலும் பகர்"ந்த காலத்தில் பரமசிவனுக்கு ஏற்பட்ட

ஆனந்தத்தை நிகர்த்த ஸந்தோஷம் அப்போது அவனுக்கு உண்டாகியிருந்தது. விச்ராந்தியாக தைரியமாக அவன் சுந்தரத்தின் வீட்டில் போய் உட்கார்ந்துகொண்டு, தன் நெஞ்சில் குமுறும் தாபத்தையெல்லாம் மனம்விட்டு அவருக்குச் சொல்லி, நடராஜனுடன் கலந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு வரலாம் என்ற ஆசையுடன் கிளம்பினான். சைனாபஜார் ரஸ்தாவில் திருப்திகரமாகப் பவுண்டன் பேனா பேரம் செய்துவிட்டு, வீட்டிற்குப் போனதும் 'அதில் நிப்பும் நேரில்லை ஒழுக்கும் உண்டு' என்கிற எதிர்பாராத பேரிடியைத் தாங்கிக்கொள்ளும் பட்டிக்காட்டுக் கிருஹஸ்தனை ஒத்த மனநிலையையே அவன் அடைந்தான். சுந்தரத்தின் வீட்டுக் கதவு பூட்டிக் கிடந்தது!

ஒருகால் கோவிலுக்குப் போயிருப்பார், யாருடனாவது பேசிக்கொண்டு நிற்பார் என்பதாகப் பலவிதமாக ஹேஷ்யங்கள் செய்துகொண்டு தன் ஜாகைக்கும் கோடி வீட்டுக்குமாக இருநூறுமுறை நடந்து பார்த்தான். பூட்டின கதவு, அன்று பூராவும் பூட்டியபடியே இருந்தது!

பிற்பகல் 4-20க்குத் திருநெல்வேலியிலிருந்து ரயில் வண்டி திருச்செந்தூர் ஸ்டேஷனுக்கு வந்து சேருகிறது. பட்டாபிராமய்யர் தந்தியின்படி அந்த ரயிலுக்குத்தான் அவர் வரவேண்டும். அதற்குள்ளாவது மங்களம் திரும்பி விடமாட்டாளா என்று எதிர்பார்த்தான் ஜகதீசன். அவள் வரவில்லை. மாமனார் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்றதொரு புதிய வேதனை அவனுக்கு ஏற்படலாயிற்று.

ஜானகியின் மனத்திலும் அவளால் புரிந்துகொள்ள முடியாததொரு கவலை புகுந்துகொண்டு உறுத்தியது. தகப்பனார், தாயார் வருவதில் அவளுக்குத் திருப்திதான். ஆனால், மங்களம் அவர்களிடம் மூட்டிவிடாமல் இருக்க வேண்டுமே! நாகநாதய்யருடன் போக மங்களம் சொன்ன



காரணம் உண்மை அல்ல என்று அவள் அந்தராத்மா சொல்லியது. தன்னை ஏமாற்ற அவள் பசுத்தோல் போர்த்திக் கொள்கிறாள் என்ற சம்சயமும் வலுத்தது. எத்தனை சங்கடங்கள்! சத்துருவின் வர்மம், நாகநாதய்யரின் வஞ்சம்-எல்லாம் பாவம் நடராஜனைத் தாக்குகின்றன. சத்துரு சொன்ன வார்த்தை உண்மையாக இருக்குமா? அதன்படி நடராஜன் அடிபட்டு அப்போது ஆஸ்பத்திரியில் கிடப்பானா?

அதை நினைக்கவே அவள் உள்ளம் நடுங்கியது. ஏன் அப்படி அவன் பால் அத்தனை பரிவு ஏற்பட வேண்டும் என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அடிக்கடி வாசல்புறம் வந்தாள். குறுக்கு நெடுக்கில் நடராஜன் போய், தன் கண்ணில் படமாட்டானா என்ற ஆவலே அவள் கால் வலியையும் மறக்கச் செய்தது அன்று பூராவும் அந்த ஆசை நிராசையாயிற்று. ஜகதீசனைக் கேட்கலாம்; கேட்டால் பார்த்துவிட்டு வந்துகூடச் சொல்லுவான். ஆனால், அதற்கு வேண்டிய துணிச்சல் அவளுக்கு ஏனோ உண்டாகவே இல்லை.

பட்டாபி இறங்கியவுடனேயே 'பச்சை மிளகா'யாக உறைத்தார். "என்ன மாப்பிள்ளை, எனக்கு ஒண்ணும் புரியவில்லையே! மங்களத்தை என்னத்துக்காக ஆழ்வார் திருநகரிக்கு அனுப்ப வேண்டும்? நாங்கள் வருகிறமட்டும் பொறுத்துக்கொண்டால் எந்த அச்வமேதயாகம் நின்று விடுகிறது!" என்று பொரிந்தார்.

"மங்களமா? ஆழ்வார்திருநகரியா? நான் அனுப்பினேனா?" என்று வாயைப் பிளந்தான் ஜகதீசன்.

"ஆமாம், அப்பா! இப்போ அவளைப் பார்த்தோமே, அந்த ஸ்டேஷனில் உனக்குத் தெரியாதா அவள் புறப்பட்டுப்போனது?"

"தெரியாது, மாமா! அதாவது அவள் போகிறாள் என்று தெரியும்; ஆனால், எங்கே போகிறாள் என்று

சொல்லவில்லை அதுவும் சொன்னான்: ஆழ்வார் திருநகரி என்று.''

''திருத்து! நீ ஒருத்தன்!'' என்று வெறுத்துக்கொண்டார் பட்டாபி. ''நாகநாதய்யரும் அவளுந்தான் காரில் வந்திருக்கிறார்கள் என்றானே!''

''ஆ! காரில்தான்! TSV 37421 இத்தான் 'டாப்'போட்டு ஒரு 'டூரர்' வண்டி; நீல பெயிண்ட்.''

''அட சரிதான், விடு! ஏன் வந்தான் என்று கேட்டால், உனக்குச் சொல்லத் தெரியவில்லை; கார் வர்ணனை இங்கே யாருக்கு வேணும்? ஏதானும் மனத்தைக் கஷ்டப் படுத்திக்கொள்ள நடந்துவிடுகிறது. நானும் பார்த்துக் கொண்டே வருகிறேன்! உம்ம்ம் ஜானகிக்காவது விஷயம் தெரியுமோ?''

''விசாரிக்கணும் என்கிட்டே சொன்னது, ஏதோ வரன் 'ஸெட்டில்' பண்றதாகச் சொன்னான்.''

''இவன் என்ன 'ஸெட்டில்' பண்றது! என்ன பாகீரதி! கேட்டுக்கொண்டிருக்கிறாய் அல்லவா?''

''இரண்டு காதாலுந்தான் கேழ்க்கிறேனே! எனக்கு மண்டையிடி வரும்போல் இருக்கிறது!'' என்று எச்சரித்தாள் அந்த அம்மாள். அந்தப் பெரும் உத்பாதம் நிகழுமானால் தம் சங்கடங்களும் பெருகிவிடும் என்பதைப் பழக்கத்தில் அறிந்த பட்டாபி, மேலும் பேச்சை வளர்க்காமல் வீட்டுக்குக் கிளம்பினார். ஜானகியைக் கண்டதும் முதல் கேள்வி மங்களம் போன காரணம் என்ன என்பதைப் பற்றித்தான். அவள் சொன்ன பதில் இருவரையும் மேலும் திகைப்பூட்டியது. எதற்கும் மங்களமே வரட்டும், பார்க்கலாம் என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பொறுமைக்குப் பெயர் எடுத்த பூமாதேவியை இருள் கவிந்துகொண்டது. பட்டாபி ராமய்யர் தம் பார்யாளையும் புத்திரியையும் அழைத்துக்



கொண்டு, கவலைகளை மூட்டை கட்டிவைத்துவிட்டுக் கோவிலுக்குப் புறப்பட்டார்.

இதே போன்ற மனக்கவலைக்கு ஆளான புதியதோர் ஆத்மா, பட்டாபி இறங்கிய அதே ரயில் வண்டியில் இறங்கியது. ஏற்கெனவே அவரையோ அவர் தர்மபத்தினியையோ மூத்த மாப்பிள்ளையையோ கண்டிராதபடியினால் அந்த ஆத்மா அவர்கள் பக்கங்கூடத் திரும்பாமல் ஒரு ஹோட்டலைத் தேடிக்கொண்டு சென்றது. அது வேறு யாருமில்லை; கதாநாயகனின் ஆப்த நண்பன் மணிதான்! நடராஜனின் இரு தந்திகளைப் பார்த்துவிட்டு, ஹரனைப் பொன்மலையை நோக்கி அவர் காரியமாக அனுப்பிவிட்டுத் திருச்செந்தூருக்கு வந்திருக்கிறான் அவன்.

தந்திகளிலிருந்து நடராஜன் ஏதோ ஒரு சிக்கலில் சுழன்றுகொண்டிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு, அவன் இருப்பிடம் முதலியவற்றை விசாரிக்கலாமென்று முயன்றான். அவன் கண்களில் முதன் முதலில் தென்பட்டவன் செவிட்டு முத்துச்சாமிதான். ''மிஸ்டர், உங்களிடம் ஒரு வார்த்தை!'' என்று அவனைத் தன் அருகே அழைத்தான்.

''சரிதான், ஸார்! நான் ஒன்றும் எடுக்கவில்லை தெரியுமா சேதி! நீங்கள் பணத்தை எங்கேயோ கோட்டை விட்டுவிட்டு, ஊரில் அப்பாவி எவன் என்று என்னைப் பார்த்தீர்களோ?'' என்று கோபித்துக் கொண்டான் முத்துச்சாமி, அவனுக்கு அன்று மத்தியான்னம் சமுத்திர மணலில் கிடந்து ஒரு முழு ரூபாய் நாணயம் அகப்பட்டிருந்தது அதனாலேயே அவனிடம் வருபவர்கள், பேசுபவர்கள் எல்லாம் அதைப்பற்றியே கேட்க வருவதாக எண்ணத் தொடங்கியிருந்தான்.

குரலை உயர்த்தி, மணி நடராஜனைப்பற்றி விசாரித்தான். ''ஓஹோஹோ! அவரா? சரிதான், சரிதான்!

நீங்கள் வேறே யாரையோ சொல்கிறீர்களாக்கும் என்று நினைத்துவிட்டேன். அவரைக் கேட்டீர்களா, சரிதான்!" என்றான் முத்துச்சாமி.

"ஆமாம். அவரைத்தான், ஐயா! அவர் எங்கே இருக்கிறார்?"

"சௌக்கியமாயிருக்கிறார், ஸார்!"

"சௌக்கியத்திலும் உன் காதிலும் சேர்ந்தாப்போல் இடிவிழ!" என்று சபித்தான் மணி.

"யாரும் கீழே விழவில்லையே! ஓ! நீங்கள்தான் விழுந்தீர்களோ! பார்த்து நடக்கணும், ஸார்! அடடே! எங்கே அடிபட்டது? நான் பார்க்கலாமா?"

"அதில்லை, ஓய், முழுச் செவிடரே!"

"உங்களுக்குக் காது கேழ்க்காதோ! அதான் அப்பவே முதல் என்னடா என்று பார்த்தேன்!" என்றான் முத்துச்சாமி.

இப்படியே அவர்கள் பேச்சை வளர்த்திக்கொண்டு போனார்கள். இந்தக் கூச்சலைக் கேட்டுச் சகிக்காத ஓர் உள்ளூர்க்காரர் இவர்களுக்கிடையே 'இண்டர்பிரிட்டர்' வேலையைச் செய்து, ஒரு வழியாக இவர்களிடையில் சமாதானமும் செய்து வைத்துவிட்டார். அதன் பலனாக, மணியும் முத்துச்சாமியும் ஹோட்டலில் அன்றிரவு சேர்ந்தாப்போல் சாப்பிட்டார்கள்; சமுத்திரக் கரையில் உட்கார்ந்து காற்று வாங்கினார்கள். முத்துச்சாமி நடராஜனைப்பற்றித் தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொன்னான்.

"ரொம்ப நல்ல மாதிரி மனுஷர்! ஹிஹி. எனக்கு இட்டிலி வாங்கிக்கொடுத்தார். நல்ல மனுஷர்!"

"அது இருக்கட்டும், ஐயா! அவர் யார்கூடத் தங்கி இருக்கிறார்?"



"சுந்தரம்கூட இருக்கிறார். அவரும் நல்ல மாதிரிதான்; இருந்தாலும் ஒருமாதிரி. நான் கேட்டுப் பார்த்துட்டேன். பைஸா கொடுக்க முடியாதுன்னுட்டார் இட்டிலிக்கு!"

"நடராஜனுக்கு ஏதானும் சிரமம் ஏற்பட்டிருந்ததோ?"

"கிராமமா?"

"கிராமமுமில்லை · கிரகசாரமுமில்லை! கஷ்டம்! சங்கடம்!"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. நீங்கள் நாளைக்குக் காலையிலே கூப்பிட்டால் இட்டிலி சாப்பிட வந்துடறேன்! இட்டிலி சாப்பிடறதிலே என்ன ஸார் கஷ்டம், சங்கடம் எனக்கு நீங்க ஒருத்தர், தமாஷ் பண்றேன்!"

சமுத்திர மணலில் உட்கார்ந்து இம்மாதிரி முத்துச்சாமியுடன் அளவளாவிக்கொண்டிருந்த சமயத்தில் தான் அங்கே எதிர்பாராத விதமாகச் சந்துரு மணிக்கு எதிர்ப்பட்டான். பட்டணத்தில் இருவருக்கும் அதிகப் பரிசயம் இல்லை. ஒரு தடவைகூடப் பேசிக்கொண்டதில்லை.

ஒருவரையொருவர் நினைக்காமல் குறிக்காமல் இங்கே நேருக்கு நேர் சந்தித்தபோது ஒரு நிமிஷ காலம் மௌனமாக நின்றார்கள்.

"ஹல்லோ மிஸ்டர்! ஆச்சரியமாயிருக்கிறதே!" என்றான் சந்துரு.

"ஒன்றுமில்லை. என் சிநேகிதன் நடராஜன் உங்களுக்குக்கூடத் தெரிந்திருக்கலாம். இங்கே வந்திருக்கிறான். நீங்கள் இங்கே சந்திருக்கலாமே! அவன், என்னை வரும்படி தந்தி அடித்தான். அவனை எங்கே பார்க்கலாம்?" என்று விசாரித்தான் மணி.

"பார்த்தேன் அவர் இன்றைக்கு இங்கே இல்லையே. நேற்றே புறப்பட்டு போய்விட்டாரே!"

"என்னையும் வரச்சொல்லிவிட்டுப் போனாரா? இருக்காது, ஸார்!"

போனது வாஸ்தவம் ஆனால். அவர் இஷ்டத்தின்மேல் போயிருந்தால் வரச்சொல்லியிருக்கமாட்டார். அப்படி இல்லையே!"

"எப்போ திரும்புவான்? ஏதாவது சொல்லிவிட்டுப் போனானா?"

"சொல்ல அவகாசம் இருந்திராது தவிர, அவன் மறுபடி இங்கே வருவான் என்று நான் எதிர் பார்க்கவில்லை."

"நீங்கள் சொல்வது சரியாக மனசுக்கு ஆகவில்லை."

"ஆகாது! விவரமாகச் சொல்லவேண்டும். நான் இப்போ அவசர காரியமாக போய்க் கொண்டிருக்கிறேன்; நிற்க முடியாது. நீங்கள் நம் வீட்டுக்கு வாருங்கள். எல்லாம் சொல்கிறேன்; அங்கேயேகூடத் தங்கலாம். (முத்துச்சாமியைப் பார்த்து) இவரை அழைத்துக்கொண்டு வாயேன்!" என்று உத்தரவு போட்டான்.

"கொண்டுவிடறேன், ஸார்!" என்று முத்துசாமி ஒப்புக் கொண்டான், காதில் எதையுமே வாங்கிக் கொள்ளாமல்.

"நான் வீடு திரும்பப் பதினொருமணி ஆகலாம். நீங்கள் முன்னாலேயே வந்தால்கூட..."

"நான் அந்த 'டய'த்துக்கே வருகிறேன். இங்கே சுகமாக இருக்கிறது. அதுவரை உட்கார்ந்திருக்கிறேன்" என்று மணி கடற்பரப்பில் மேல் துணியை விரித்தான்.



சந்துருவின் பேச்சு மணியின் அமைதியைப் பங்கம் செய்தது. ஒருகால் அவன்தான் நடராஜன் எதிரியோ என்று சிந்தித்தான்.

* * * *

ஆந்திரவாடுவின் வீட்டில் ஒரு பெண்ணுள்ளம் இன்ப-துன்பங்கள் என்ற துவந்தங்கள் வசப்பட்டு, புயல் காற்றில் அகப்பட்ட துரும்புப்போல் அந்தப் போதில் துடித்துக் கொண்டிருந்தது. நாட்டியப்பெண் ஹிருதயத்தில் பிறந்திருந்த காதல் பலம் பெற்று, வளர்ப்புத் தந்தையின் பிடிகளை அறுத்தெறிந்து கொண்டு, அவளை ஓட வைக்கும் அளவுக்கு வளர்ந்திருந்தது. வெகு காலமாகப் போட்டிருந்த திட்டம் பலிக்கும் சுபதினம் அன்று—அன்றிரவு—வந்துகொண்டிருந்தது. அந்தச் சுப வேளை யான பதினொருமணியும் துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்தது.

கடவுள் அவள் துணைக்கு ஓர் இளைஞனை அனுப்பி, அவனுக்கு ஓர் உதவி செய்ய வைத்து, அதற்குப் பிரத்யுபகாரமாகவே அவள் காரியம் கைகூடச் செய்கிறார். அவன் காதலனுடைய ஊர் அவளுக்குத் தெரியும்; அவன் பெயர் தெரியும்; அவன் அழைத்துப் போக வருவான் என்றும் தெரியும். 'ஆனால், அந்தப் பேதையுள்ளத்துக்குப் பொறுமை என்பதுதான் இல்லை. அவனை முந்திக் கொண்டுபோய்ச் சேர அது விம்மியது. ஒரு ஸூட்கேஸை எடுத்து வைத்துக்கொண்டு அதிரகசியமாகத் தனக்கு வேண்டிய பொருள்களை அதனுள் சேகரித்தாள். இரவு 11 மணிக்குப் புறப்படு முன் இந்த ஸூட்கேஸை அந்தப் புதிய இளைஞன் கையில் கொடுத்துவிட்டால், முன்னதாக அவன் கொண்டுபோய் ரயிலடியில் வைத்துக்கொண்டு காத்திருப்பான். அவள் ஒரு வில்லங்கமுமின்றி அவனைப் போய்ச் சேர்ந்து, இரண்டு மணி வண்டிக்கு ஏறினால் பறந்துவிடலாம். இந்த ஆனந்த எண்ணங்களினூடே சங்கீதம் கிளம்பியது; ஒவ்வொரு பண்டத்தையும் பெட்டியில்

வைக்கப் எடுக்கப் போனபோது சிறுசிறு அபிநயங்கள் செய்துவிட்டுப் போனான். அவன் கவலைக்கு ஒரே காரணம், ஒருவேளை அந்த இளைஞன் சொன்னால் சொன்னபடி வராமலிருந்துவிட்டால் என்ன செய்வது என்பதே! ஒரு நிமிஷம் அவன் முகத்தை மனக்கண்ணின் முன்னால் வருவித்தான். "சேச்சே! கட்டாயம் சொன்னால் சொன்னபடி செய்வான் அவன்!" என்று அந்தராத்மா உறுதி கூறியது. இந்த மாதிரியான ஆசாமிகளை அவன் நன்கு அறிவான். இவர்களுக்குப் பணம் பெரிதல்ல; கொடுத்தாலும் ஏற்க மறுப்பார்கள். தொண்டு செய்வதைத்தான் பெரிதாகக் கருதுவார்கள்; அசடுகள்!

ஆந்திரப் பெரியார் அந்தச் சமயம் வீட்டிலில்லாதது ஒரு பெரிய அநுக்ரமாக இருந்தது அவனுக்கு. அவரையும் (ஐயோ, பாவம்) ஏதோ ஒரு கவலை பிடுங்கித் தின்று கொண்டிருந்தது. இரவு பதினொருமணிக்கு அவர் ஒரு லாரியைத் தம் வீட்டு வாசலில் எதிர்பார்த்தார். அது வருவதும் போவதும் பிறர் கண்ணில் விகல்பமாகப் படலாகாதென்று சிந்தாகுலராயிருந்தார். இது அவருக்கு வாரம் ஒருமுறை வரும் கண்டந்தான். அஸ்தமித்த பின்னர் ஏனோ இன்றைக்கு அவருடைய பதற்றம் அதிகமாகக் காணப்பட்டது. 'டைக'ரை இட்டுக்கொண்டு கடற்கரைக்குப் போவதும், திரும்பி வருவதுமாக இருந்தார். மணி ஏறஏற அவர் உடம்பில் இரத்த ஓட்டத்தின் வேகம் அதிகப்பட்டு வந்ததுபோல் தோன்றியது.

தாம் எதிர்பார்த்த காரியங்கள் விக்கினம் இன்றி நடைபெற வேண்டுமே என்று இணைறினார் ஆந்திரர். இப்படித் தமக்குச் சஞ்சலம் ஏற்படும்போதுமட்டும் முருகன் கோபுரத்தைப் பார்த்துக் கை கூப்புவது அவர் வழக்கம். 'பதினொருமணி தாண்டட்டும்' என்று பொறுத்திருந்தார்.

இரவு பதினொருமணிக்கு முன்பு முடிக்கவேண்டிய காரியம் வேறு இரு பிரக்ருதிகளுக்கும் அன்று இருந்தது.



அவர்கள் இரட்டைப் பிள்ளைகளைப்போல் வளர்ந்து, ஒருமித்து அவ்வூரில் தொழில் செய்பவர்கள். சோமாரி சோமுவும், கேடி காளிமுத்துவுந்தான் நேயர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்களாயிற்றே!

இன்றிரவு பதினொருமணிக்கு அவர்களுக்குக் கடற்கரையில் ஓர் அந்தரங்கமான காரியம் இருந்தது. அதைத்தான் ஆந்திரக்காரருடன் முன் தினம் அவர்கள் பேசி முடித்திருந்தார்கள். அது கைகூடிவிட்டால் கை மேல் காசு. ஒரு வாரத்துக்கு நிம்மதியாக ஊரைச் சுற்றிக் கொண்டு வரலாம்.

இதே நிம்மதி கான்ஸ்டபிள் கன்னாயிரத்துக்கு அன்று காலை முதல் போயிருந்தது என்பதை அவர்கள் அறியவில்லை என்பதையும் இங்கேசொல்லிவிடவேண்டும். 'தலை தடவி' சுந்தரம் சிங்காரவேலுவைத் தெரியும்என்று சொல்லி, அதே மூச்சில், 'ஊரில் போக்கிரிகள் ஜாஸ்தியாகி விட்டார்கள்; நீ ஒன்றுக்கும் உபயோகம் இல்லை' என்று அவனைக் குற்றம் சாட்டிக் கூறியது அவன் திகிலைக் கிளப்பியிருந்தது. தன் பிழைப்புக்கே ஆபத்து வந்து விட்டவன்போல் நடுங்கினான். ஆகவே, அன்றிரவு போஜனம் ஆனபின், படுக்கையை விரித்துப்போட்டுப் 'பேசாமல் படுக்கச் சொன்ன' இல்லாள் அஞ்சலையைக் கடுமையாகப் பார்த்து, "அதெல்லாம் இனிமே சரிப்படாது சரியானபடி செருமப்பட்டு வேலை செய்தாலொழிய உத்தியோகம் போயிடும் போலே இருக்குது! அப்புறம் சோத்துக்குத் 'ததிங்கிணத்தோம்' போடணும் நானும் நீயும்; கதவைச் சாத்திக்க நான் ஊரை ஒரு சுத்து சுத்திக் கிட்டு வர்றேன். வரப் பதினொருமணிக்கு மேலே ஆவலாம்!" என்று கிளம்பினான்.

பதினொருமணியை நோக்கிக் கடிகார முட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. அந்த மணியை எதிர்பார்த்தவர்களும் முருகன்மீதுபாரத்தைப் போட்டுவிட்டுத் தங்கள் காரியங்கள் நிமித்தமாக நகரத் தொடங்கினார்கள்.

கோயிலில் அர்த்தஜாமத்தைத் தரிசிக்க ஆர்வத்துடன் காத்திருந்த முருக பக்த சிகாமணி ஒருவர் அந்தப் 'பிரபுக்களுக்கெல்லாம் பிரபு'வின் எழில் வதனத்தில் எல்லையற்ற கவர்ச்சியுடன் ஒரு புதிய புன்னகை தென்பட்டதாக எண்ணிப் பரவசமாக்கிக்கொண்டிருந்தார்.

## 14

"யுத்த சாஸ்திரத்தில் மகா நிபுணனான ராவண குமாரன் பெரிய வில்லையும் எஃகினால் செய்யப்பட்ட கூர்மையான முனைகளையுடைய பாணங்களையும் எடுத்துக்கொண்டு ஆஞ்சனேயனை நோக்கிக் கடுவேகமாக வந்து, 'நில்; நீ யார்?' என்று கர்ஜித்தான். தனக்குத் தகுந்த சத்ரு வந்துவிட்டான் என்பதை ஆஞ்சனேய மூர்த்தியும் அந்த க்ஷணத்திலேயே அறிந்துகொண்டார்."

**— வால்மீகி ராமாயணம், சுந்தர காண்டம், ஸர்க்கம் 48**

திடுக்கிடும் சம்பவங்களை வர்ணிக்கவும், கொலை கொள்ளைகள் நடந்ததாகக் கூறவும், பேய் பிசாசங்களைத் தம் கையிலே போட்டுக்கொள்வதற்கான துர்மந்திரங்களைப் பிரயோகம் செய்யவும் ஜன நடமாட்டம் நின்று உலகம் உறங்கத் தொடங்கவும் நடுநிசி வேளையைப் போல் உகந்ததாக இருந்துவரும் நேரம் அறுபது நாழிகையிலும் கண்டுபிடிப்பது சாத்தியம் இல்லை. அந்தப் பன்னிரண்டு மணிக்கு அப்பாலும் இப்பாலும் இருக்கும் போதில், அப்பாலுள்ளது அதிபயங்கரமானதால், அதில் நாம் எவ்விதமான காரியமும் வைத்துக்கொள்ளப் போவதில்லை. ஆகையினால்தான் கூடியவரை ஸஜ்ஜனர்களான நம் கதாபாத்திரங்களும் பதினொரு மணியையே தங்கள் காரியங்களுக்கு ஏற்ற சமயமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்!



மணி ஏற ஏற, பட்டாபிராமய்யருக்குத் தம் மூத்த மகள் செய்த அசட்டுக் காரியத்தினால் கோபமே விருத்தியாகிக் கொண்டிருந்தது. 'என்னதான் நாகநாதய்யர் வேண்டியவரானாலும், துணைக்கு வந்தாலும் தன் புருஷனிடங்கூட உள்ளதைக் கூறாமல் சொந்தத் தங்கையிடமும் மாறுபட்டுச் சொல்லிவிட்டு, தாயார் தகப்பனாரிடத்திலும் கவலையைக் கிளப்பிவிடும் அளவுக்குப் பேசிவிட்டு, இரவு வெகுநேரம் ஆகியும் திரும்பாமல் ஒரு பெண் இருப்பது சேச்சே! ரொம்பக் கழுதையாகப் போய்விட்டாள்! சரியானபடி அடக்க வேண்டும்!" என்று துடித்துக்கொண்டு எழுந்தார். எவ்வளவுக்கெவ்வளவு குதூகலத்துடன் கிருத்திகையன்று சேவை செய்ய வந்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு சிந்தாகுலராகிவிட்டார். அவருக்கு ஏற்பட்டிருந்த வேதனையில் 'அச்வமேதயாகம் செய்வ'தைக்கூட அநேகமாய் மறந்து போய், பாகீரதியிடமும் ஜானகியிடமும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தார்.

"ஏண்டி! எங்கேதான் போயிருப்பாள் அவள், நான் கேட்கிறேன்!" என்றார்.

"என்னையே திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தால்...? நானும் உங்களோடு ரயிலில் வந்தவள் தானே? எனக்குமட்டும் என்ன ஞானதிருஷ்டி வந்து விட்டது? எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வருகிறது. கண்ணெரிச்சல் தாங்கமுடியவில்லை!" என்றாள் அந்த அம்மாள்.

"ஏன் ஜானகி! உன்னிடம் வேறு ஒன்றுமே சொல்லாமலா போய்விட்டாள்? உம்? நீயாவது கேட்கப் படாதோ? படித்த பெண்ணாக இருந்தும்... உம்!"

"நானும் கூடவரேன் என்றேன். 'கண்பட்டுவிடும், வராதே' என்கிறபோது எப்படி அப்பா பிடிவாதம் செய்கிறது? 'ஒன்றுமில்லை ஒன்றுமில்லை' என்ற

தற்குத்தான் அவன் 'நீ படித்த பெண், உன் மாதிரி எனக்குப் பேச வராது' என்று கடுகடுத்தண்டு போனானே!"

ஜகதீசன் கண் மறைவாக இருந்தவன் தன்னையும் மீறி, "எல்லார் வாயிலும் ஜானகி படிக்கிறது ஒன்று புகுந்துகொண்டு தொல்லைப்படுத்துகிறது. ஜானகி, நீ வேண்டுமானால் படிக்க வேண்டியதில்லை, அம்மா!" என்றான்.

"என்ன மாப்பிள்ளை, நீ அங்கேயா இருக்கே?" என்றார் பட்டாபி.

"ஆமாம்!"

"ஐ ஸே! இவன் வரலையே என்று விசாரிக்கப் போய்க் கொண்டிருக்கிறாய் என்றல்லவா பார்த்தேன்!"

"கப்புரத்தினத்தைக் கேட்டேன், தெரியாது என்று கையை விரித்து விட்டார். அந்த மனுஷன் ஏதோ புது தினுசு எலிப்பொறி ஒன்று கண்டுபிடித்துப் பண்ணு கிறானாம். அதனால் ஒரே வெங்காய வடைக்கு ஒன்பது எலிவரை பிடிக்கலாமாம். நிமிர்ந்து கூடப் பார்க்காமல் பதில் சொல்லி அனுப்பி விட்டான்!"

"அதைக் கேட்டுக்கொண்டு இங்கே வந்து ஜபம் பண்ணிண்டு உட்கார்ந்திட்டியோ?"

"இல்லை. நேரே வாடகை மோட்டார் கம்பெனிக்குப் போனேன். இவாள் போன மோட்டார் திரும்பி வந்து விட்டது. டிரைவர், வீட்டிற்குப் போயிருந்தான். அங்கேயும் போய்ப் பேசினேன்."

"சொல்லேன் அப்பா, கிடுகிடென்று! உன்கிட்ட ஒரு சமாசாரத்தை க்ரகிக்கிறதற்குள்ளே 'க்ளீனா' நாலு அச்வமேதம் பண்ணிவிடலாம் போல் இருக்கே!"

"அங்கே டிரைவருக்கும் அவன் ஒய்புக்கும் துவந்த யுத்தமே நடக்கிறது. கொடுத்தான் பெண்டாட்டி



முதுகிலே நாலு தொம்-தொம்-தொம்னு... பார்க்க ஆனந்தமாக இருந்தது. 'என்னடீ கழுதே! நான் வீட்டுக்கு வர்ற வேளையிலே அடுத்த வீட்டிலே வம்பா அளக்கிறே!'ன்னு. இன்னம் அடிக்கப் போன வேளையிலே நான் போய்ச் சேர்ந்தேன். அவனை விசாரித்ததும், 'என்ன பொம்பளை அந்த அம்மா! சேச்சே! நம்ம வீட்டுக்காரி அப்படி ஒரு நிமிஷம் இருந்திட்டாலும் மென்னியைத் திருகி, பாழுங்கெணத்திலே தள்ளிட மாட்டேனா! சீச்சீ!'- அப்படின்னான். அப்புறம் கேட்டா, இவன் மோட்டாரை நம்ம மங்களமே போகச் சொல்லிவிட்டாளாம்!"

"அது சரி, அப்பா! ரயில் போகிறதுக்கு முந்தியே அனுப்பினாளா? போன அப்புறம் அனுப்பினாளா?"

"அதை நான் விசாரிக்கவில்லை."

"நீ ஒரு மகா புத்திசாலி, போ!"

"இல்லாவிட்டால் மங்களத்தைக் கட்டிக் கொள்வேனா!" என்று பட்டாபி காதில் விழாத வகையில் வகையில் முணுமுணுத்துக் கொண்டு வாசற்புறம் வந்தான் ஜகதீசன். மறுபடி விசாரிக்கத் தான் போகிறான் போல் இருக்கிறது என்று பட்டாபியும் தாற்காலிகமாக மௌனமானார்.

மணி பதினொன்றும் அடித்தது. மங்களம் வரவில்லை. பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்த பட்டாபியின் காது களில் ஒரு மோட்டார் வரும் சத்தம் கேட்டது. அந்த மோட்டார் கீழ்ப் புதுத் தெருவுக்குள் திரும்பியதும் பெருஞ்சத்தம் செய்தது. அவர் வீட்டு வாசல் வந்ததும் நிற்பதுபோல் தயங்கி, அடுத்த வீட்டின் வாசலில் வந்து நின்றது. பட்டாபியின் மனத்தில் எழும்பிய நம்பிக்கையும் அடங்கி நின்றது. அது ஆந்திரருக்கு வரும் மோட்டார்-வான்!

'தடார்' என்று வீட்டு வாசற்கதவைத் திறந்து கொண்டு ஆந்திரர் வெளியே வந்தார். வெகு தாராளமாக,

மோட்டார்-வானை எதிர்பார்த்தவர் போல் டிரைவர் உட்காரும் இடத்துக்குச் சென்று, "என்ன! எல்லாம் சரியாக நடந்ததா?" என்று கேட்டார்.

"நடந்தது; ஐந்து நிமிஷம் முன்னாலேயே நடந்து விட்டதுங்க!" என்றான் டிரைவர் குஷியாக.

"இரண்டு பேரும் வந்திருந்தாங்களா?"

"ஓ! காத்திருந்தாங்களே! சடசடவென்று தீர்ந்து விட்டது. வழியிலே போலீஸ் கிலீஸ் தொல்லை ஒண்ணு கிடையாது. இந்த மாதிரி நடக்கிறதானா, இந்த இடத்தையே எப்போதைக்கும் வைச்சுக்கலாம்."

"அதைப்பற்றி அப்பால் யோசித்துக்கொள்ளலாம் இப்போ சீக்கிரம் சரக்குகளை எடுத்து உள்ளே வைக்கணும் நல்ல வேளை, தெருக்கோடி வீட்டுக்கு வந்திருக்கிறவங்க கூட வீட்டைப் பூட்டிக் கொண்டு போயிருச்சாங்கள்!"

"ஏன், தொறந்துதான் இருக்கட்டுமே! என்ன செஞ்சிட முடியும்? நம்ம ஊட்டுக்கு 'வான்' வரதே பிசகுன்னு சொல்லிடுவாங்களோ?"

"அப்படி இல்லை, அப்பா! சந்தேகமே இல்லாமெ இருக்கிறதெப்படி, அதைக் கிளப்பி விட்டுட்டுப் பயந்து கிட்டே இருக்கிறது எப்படி? சீக்கிரம் நடக்கட்டும்."

மோட்டார் தம் வீட்டுக்கு இல்லை, மங்களம் வந்து விட்டான் என்ற ஆசைக்கும் இடமில்லை என்று கண்டதும் பட்டாபிராமய்யர் அசிரத்தையாகிவிட்டார். ஆகவே, அடுத்த வீட்டு வாசலில் நடந்த சம்பாஷணையைக் கவனிப்பதில் அவர் புத்தி செல்லவில்லை. மோட்டார் வான் கதவு திறக்கப்பட்டு அதனுள்ளிருந்து வீட்டின் உள்ளே சில பண்டங்கள் கொண்டு வைக்கப்படுவதையும் அவர் பார்க்க முயலவில்லை.

சுமார் பத்து நிமிஷ காலம் அவர் தம் நினைவுகளில் லயித்துப் போய் நின்றபோது, செருப்பு போட்டுக்



கொண்டு ஒரு கனத்த ஆசாமி வருவது தெரிந்தது. நெருங்கியதும் அவன் போலீஸ்காரன் என்பதையும் அறிந்துகொண்டார். தன் ஆசைக்கிழத்தி அஞ்சலை யிடம் சொல்லிவிட்டு நேரே வருகிறான் கண்ணாயிரம். அவன் தெருமுனைக்கு வருவதும், ஆந்திரர் வீட்டினுள் வந்த சாமான்கள் அடக்கமாகி டிரைவர் வெளியே வருவதும் சரியாக இருந்தன. கண்ணாயிரம் நெருங்கு வதைக் கண்ட டிரைவர், சடேரென்று வண்டியினுள் ஏறி உட்கார்ந்து கதவையும் அடைத்துக்கொண்டான். "நான் வர்றேனுங்க!" என்று ஆந்திரரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, வண்டியைக் கிளப்பினான்.

இதற்குள் கண்ணாயிரம் அருகில் வந்து, வண்டியின் முன் வெளிச்சத்துக்கெதிரே நின்று, "யாரப்பா நீ?" என்று விசாரித்தான்.

"நான் திருநெல்வேலிங்க அய்யா ஊட்டுக்கு வந்தேன்."

"என்ன விஷயம்?"

"ஒரு விஷயமுமில்லேங்க... காயல்பட்டணத்திலே ஒரு கல்யாணமுங்க. சரக்கு ஏத்தி வந்தேன். நாலு மைலிலே அய்யா இருக்கச்சே, கண்டுகிட்டுப் போகலாம்னு வந்தேன். (ஆந்திரரிடம்) கான்ஸ்டேபிள் அய்யாவை அடிக்கடி பார்த்திருக்கிறேனுங்க! அவருக்குத்தான் என்னைத் தெரியல்லை."

"சரி, நீ போ, அப்பா! உனக்கு நேரமாறது" என்றார் ஆந்திரர்.

கண்ணாயிரம் நகர்ந்துகொள்ளவும், வண்டிக்கு 'கீர்' போட்டுக்கொண்டு, "ராவைக்குக் காயல்பட்டணத்திலே போட்டுடுவேனுங்க" என்றான் டிரைவர்.

கீழப் புதுத்தெருவை விட்டுச் சென்ற வண்டி, காயல் பட்டணம் போகவில்லை. இரண்டு தெருக்களுக்கு

அப்பால் ஒரு சந்தினுள் நுழைந்து, ஒரு காம்பவுண்டுக்குள் சென்று மறைந்தது.

ஆந்திரரும் டிரைவரும், "அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சு விட்டதை மீசையை முறுக்கிக்கொண்டு போன கண்ணாயிரம் அறிய நியாயமே இல்லை.

கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான் தங்கவேலு. மணி பதினொன்றாகும் தருணம் துரிதமாக நெருங்கிக்கொண்டிருந்தது. எந்த வழியாக வந்து, எந்த வழியாகப் போக வேண்டும் என்பதெல்லாம் ஏற்கெனவே நிதானித்து வைத்திருந்தானாகையால் சிறிதும் அச்சமின்றி நடந்தான். கீழப் புதுத்தெருவுக்குப் பின்புறம் உள்ள சந்தில் நுழைந்து, சிறு வாய்க்காலைத் தாண்டி, அடர்ந்த தோப்பின் குறுக்கே சென்றால், ஜகத்தின் ஜாகையின் பின்புறம் வந்துவிடுகிறது.

பனிவாடை வீசுகிறது. அவன் அணிந்திருந்த சில்க் ஜிப்பாவுக்குள்ளும் ஜில்லென்ற காற்று புகுந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு மேலே சென்றான். ஒரு காரியம் செய்வதென்றால் எவ்வளவோ சிரமங்களைப் பொருட்படுத்தாமல் தானே இருக்க வேண்டியிருக்கிறது! ஜகத்தின் வீட்டுத் தோட்டத்துக்கு அருகில் ஒரு தண்ணீர் ஏற்றம் இருந்தது. அதன் அடியில்தான் அவள் அவனுக்காகக் காத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லியிருந்தாள். இன்னும் ஏன் வரவில்லை?

பூனை போல் நடந்த தங்கவேலுவுக்குக் காரணமும் தெரிந்துவிட்டது. ஒரு வீடு தள்ளி அடுத்த வீட்டின் கதவு மெள்ளத் திறக்கப்படுவதும் சார்த்தப்படுவதுமாயிருந்தது! 'அடடே! இதென்ன கஷ்டம்! நம் விஷயம் தெரிந்துதான் யாராவது வேவு பார்க்கிறார்களோ?' என்று திகைத்தான். உடம்பு வெலவெலத்தது. அப்படியே உட்கார்ந்து விடலாமா என்று எண்ணிய சமயம், "அண்ணே! நீதானே?" என்ற மெல்லிய குரல் கேட்டது.



"ஆமா, தங்கச்சி! அங்கேயே இருக்கிறே?"

"ஆமா; இங்கிட்டு வா! மெள்ளப் பேசு...எல்லாம் சேர்த்து மூட்டையாகக் கட்டி வைத்திருக்கேன். ஜாக்கிரதையா ஓடிடு, தெரிஞ்சுதா?"

"நீ எங்கே வரலையோன்னு பயந்திட்டேன், ஜகம்!" என்றான் தங்கவேல், நகைகளைப் பெற்றுக்கொண்டு.

"நானு கோயிலிலேருந்து இப்பத்தான் வந்தேன். அங்கே எல்லா சனங்கள் எதிரவும் அம்பிட்டு நகையும் போட்டுக்கிட்டிருந்தேன். நாளைக்குக் கேள்வி வந்தாலும்."

"நீ எல்லாம் யோசனை செய்திருக்கே, ஜகம்; நான் போவட்டுமா? எப்போ கூச்சல் போடுவே?"

"நீ போன அரை மணிக்குப் பின்னே போடறேன், போ! பயந்து சாவாமே போ!" என்றாள் ஜகம்.

தங்கவேல் நிற்காமல் மறுபடி தோப்பைக் கடந்து சென்று வாய்க்காலையும் அடைந்துவிட்டான்.

"ஸார்! உங்களைத்தானே! இப்படிப் போனால் தெருவுக்குக் கொண்டுவிடுமா?" என்று ஓர் ஆசாமி கேட்பதை உணர்ந்ததும், மறுபடி அவனைக் கிலி பிடித்துக்கொண்டது. க்ஷண காலம் ஸ்தம்பித்துப் போனவன் திடீரென்று உணர்வு பெற்றவனாக ஓட ஆரம்பித்தான். 'சாதாரணமானதொரு கேள்விக்கு இந்த ஆள் நடுங்கி ஓடுவது ஏன்?' என்பது புரியாமல், மற்றவன் ஆச்சரியத்துடன் அங்கே நின்றான். பிறகு, தானே தன் மனத்தைத் திடம் செய்துகொண்டு தோப்பினுள் நுழைந்தான்.

தங்கவேல் ஓடினானென்றாலும், அவன் ஓட்டம் அவனை வேறு இரு பெரிய ஆபத்துகளிடையேதான் விரைவில் கொண்டு சேர்த்தது. ஓர் ஆபத்து சோமாரிச் சோமு; மற்றோர் ஆபத்து கேடி காளிமுத்து! ஸ்வாபாவிக

மாக நிசாசரர்களான இந்த இரு சிருஷ்டிகளுக்கும் இன்று கடற்கரையில் ஓர் அலுவல் இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டு, ஆடி அசைந்துகொண்டும், தெம்மாங்கு பாடிக் கொண்டும் சொல்லத்தகாத பேச்சுகளைப் பேசிக் கொண்டும் வந்தார்கள் அவ்விருவரும்.

"அண்ணே! இப்ப எவனாவது நம் கண்ணு முன்னே வந்தால் என்ன பண்ணலாம்?" என்று கேட்டான் சோமாரி.

"தொக்கு போடலாம், தம்பி, கன்னத்திலே ஒண்ணு கொடுத்துக் கைப்பெட்டியைப் பிடுங்கலாம்."

"ஆனா, ஒரு பயலும் நம்ம எதிரே வர்றதில்லை, அதைப் பார்த்தியா, அண்ணே?"

"அவ்வளவும் பயம், திலில், நம்ம பேரைக் கேட்டா ஜில்லா ஜட்ஜுக்குக்கூடத் தூக்கம் போயிடுதாமே, தம்பி?"

"இன்னிக்குக் காரியம் எப்படி நடந்திச்சு, பார்த்தியா?"

"என்னிக்குத்தான் நம்ம வேலை சோடையாப் போச்சு!"

கடற்கரை மணலிலிருந்து ரஸ்தாவுக்கு ஏறிவிட்டார்கள். சுற்றிலும் ஜனசூன்யமாக இருந்தது. வானத்தில் தோன்றிய ஒன்றிரு நட்சத்திரங்களும் பனிப்படலத்தில் தேஜஸ் குன்றிப் போய் உருப்பெறாமல் காணப்பட்டன. இவ்விரு அயோக்கியர்களும் ரஸ்தாவுக்கு வருவதும் தங்கவேல் ஓட்டமும் நடையுமாக எதிர்ப்படுவதும் ஒன்றுக்கொன்று ஒத்துக்கொண்டன.

"சிலுக்குச்சட்டைச் சீமான் வர்றாரு. கூப்பிட்டு விசாரிக்கலாமா, தம்பி! சட்டைப் பையிலே எதினாச்சும் தங்கம் வெள்ளி இருக்குமான்னு?"

"உடப்பா, பொளைச்சுப் போகட்டும்."



"ஏன் தம்பி, நாமமட்டும் பொளைக்க வேணாமா? நிறுத்தப்பா அந்த மிட்டாதார் மவனை! ஏ அப்பா! இங்கிட்டு வாயேன். மணி என்ன ஆவுது?"

நம்முள் ஓர் அபூர்வமான தேவதை இருக்கிறது. அதற்கு மட்டும் எப்போது மகத்தான அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெரியாமல் போவதில்லை. அதிலிருந்து மீளமுடியாது என்று ஏற்படும்போது, அந்தத் தேவதை பலமாக, "அடேய்! நீ அகப்பட்டுக்கொண்டு விட்டாய்! பேசாமல் அநுபவித்துவிட்டுப் போ!" என்று எச்சரிக்கை செய்கிறது. அதே போன்ற ஒரு தேவதை இப்போது தங்கவேலுவிடமும், "உன் கையிலுள்ள நகை இனி அதிக நேரம் இராது. அதை அறிந்து கொள்" என்று ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டது. எனினும், நகைகளில் பதித்திருந்த வைரங்களைப் போலவே தன் நெஞ்சையும் கெட்டிப்படுத்திக்கொண்டு, "நீங்கள் யார்? என்னைக் கூப்பிட்டீர்களா?" என்று கேட்டான் தங்கவேல். எனினும், குரல் தழுதழுத்தது.

"தேவலையப்பா, தேவலை! எங்களைப் பார்த்து யார் என்று கேட்க நல்ல தைரியம்!" என்றான் சோமு.

"உன்னைக் கூப்பிடாவிட்டாலும் எங்களைப் பாராமல் போகமுடியாது. என் சீமானே!" என்று 'கேடி' அவன் கையைப்பற்றினான்.

"ஏய்! விடு கையை!" என்றான் தங்கவேல் உதறிக் கொண்டு அதைத் தொடர்ந்து மீண்டும் ஓடலானான். தோப்பண்டை தங்கவேலுவைச் கவனித்த ஆள் துரத்தவில்லை; ஆனால், இவர்கள் குணம் வேறு விதமாக இருந்தது. தங்கவேல் ஓடும்போதே 'தப்தப்' 'திப்திப்' என்று இரும்புத் தூண்கள் இடிப்பதுபோல் அந்த இரு தடியர்களின் பாதங்களும் துரத்திக்கொண்டு வருவதை உணர்ந்தான். இஷ்டப்பட்டிருந்தால் அவர்கள் அவனை ஒரே எட்டில் பிடித்து நிறுத்தியிருக்க முடியும். ஓடவிட்டு,

களைப்பாக்கிய பின்னரே பிடிக்கவேண்டும் என்று விளையாடினார்கள் என்றே தோன்றிற்று தங்கவேலு வுக்கு. கடைசியில் முடிவும் வந்தது. அவன் இருகால் களுக்குமிடையில் சோமுவின் கால் விடப்பட்டதும் தங்கவேல் குப்புற விழுந்து, அசைவற்றுக் கிடந்தான். மறுபடி கண் விழித்தபோது கடற்கரை ஓரமாகத் திறந்த வெளியில் தன்னந்தனியே கிடப்பதை உணர்ந்தான். மண்டையில் வலி பிளந்தது. அதைத் தடவிப்பார்த்தான், மாங்காய் அளவு வீங்கியிருந்தது. பூரா நினைவு திரும்பியதும், ஜகத்தின் நகைகள் தன்னிடமிருந்து பறிபோய்விட்டதையும் தெரிந்துகொண்டான். பகீர் என்றது. மெள்ள எழுந்து தள்ளாடிக்கொண்டு சென்று, ஒரு மண்டபத்தினுள் சென்று படுத்தான்.

எம்பெருமான் ஷண்முகனைக் குறித்துத் தவம் செய்ய வள்ளியம்மை சென்று உட்கார்ந்த குகையின் முன் மண்டபந்தான் அது!

* * * *

இம்மாதிரியான காரியங்கள் இங்கே நடந்துகொண்டிருந்தபோது தற்போது முக்கியமானதொரு பாத்திரமாக இருந்துவரும் மணியின் நடவடிக்கைகளையும் நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. கடற்பரப்பில் சிறிது காலம் உட்கார்ந்திருந்த பிறகு, பனிக்கு அஞ்சி முத்துச்சாமியுடன் கோயிலுக்குள் சென்றான் அவன். பக்திக்கு இடம் கொடுத்த எந்த ஆத்மாவுக்கும் நேரும் அநுபவமே அவனுக்கும் ஏற்பட்டது. விசாலமான பிராகாரங்களைச் சுற்றிவந்தான். முருகன் பாடல்களைப் பாடிக்கொண்டு ருத்ராக்ஷ பூஷிதராக ஆனந்தத் தாண்டவம் செய்த பக்தர் ஒருவரை உன்னிப்பாகக் கவனித்துக்கேட்டான். தம்மை முற்றும் மறந்துவிட்டு அந்தப் பெரியவர், "என்னப்பா, அப்பப்பா, முருகப்பா" என்று குதிக்கும்போதெல்லாம் மணிக்கு உடம்பை என்னவோ செய்தது. "என்ன ஊர், என்ன நிலம், என்ன



பணம் வேண்டியிருக்கிறது! என் பிரபுவே, உன் காலடியில் என்னைக் கொண்டுவந்து வைத்துக் கொள்ளேன். இங்கேயே என் ஜீவியமெல்லாம் இருந்து விடுகிறேன்!" என்று க்ஷண காலம் உருகிப்போனான்.

மூலவரை எத்தனையோ தரம் பார்த்தாகிவிட்டது. கிருத்திகையாதலால் பக்த கோடிகளின் கூட்டத்துக்கு ஓர் அளவுஇல்லை. 'ஜேஜே' என்று வந்தவண்ணம் இருந்தனர். ஆறுமுகப்பெருமானின் ஆறு திவ்ய முகங்களுக்கும் அர்ச்சனைகள் செய்து களித்த பாக்கியசாலிகளின் முகங்களையெல்லாம் மணி பார்த்தான். இப்படி வெகு நேரம் இருந்த அவன், முத்துச்சாமியை முற்றும் மறந்தான். திருச்செந்தூர்க் கோயில் நெய்-அப்பங்களை உட்கார்ந்து சுவைத்து ரஸித்துக்கொண்டிருந்த அவன், மணி பதினொன்று அடித்ததும், "என்ன ஐயா! புறப்பட வேண்டாமா? இன்னும் மனசு வரவில்லையா?" என்று மணியைக் கேட்டான்.

"போகலாமே! சற்று இரும்!" என்றான் மணி.

"எனக்கு நிற்க அவகாசம் இல்லை. இப்போகூட நீங்கள் வந்தீர்களானால், வழி காண்பித்துவிட்டுப் போவேன். என்ன, வருகிறீர்களா?"

வழி தெரிந்த இவனை விடவேண்டாமென்று, அரை மனத்துடன் வெளியே வந்தான் மணி. பனி கொட்டிக் கொண்டிருந்தது. தனது மேல்துண்டைத் தலையைச் சுற்றி ஊர் வழக்கப்படி கட்டிக்கொண்டு முத்துச்சாமியைப் பின் தொடர்ந்தவன், ஒரு தெருச்சந்தியில் அவனைப் பிரியவேண்டியதாயிற்று. ஏனெனில் முத்துச்சாமி பிடிவாதமாக, "ஸார்! இனிமேல் என்னால் வர முடியாது. ஏற்கெனவே நேரமாகிவிட்டது. வீட்டில் வெடிய வெடிய யார் கேட்கிறது ஸஹஸ்ரநாமம்! அதோ அப்படிப்போய், வலது பக்கம் திரும்புங்கள்; மறுபடி வலதுபக்கம் திரும்பினால் வீடு!" என்றான்.

"ஏன் ஐயா! சந்துருவின் வீட்டைத்தானே சொல்கிறீர்கள்?"

"ஆமாம்! உங்கள் நடராஜன் இருக்கும் வீடுதான் அது!"

"நான் கேட்பது சந்துருவின் வீடு."

"நான் சொல்வது நடராஜன் வீடுதான், ஐயா என்றால் ஐயய்ய! ஊர் பூரா செவிடுகளா?"

"நீ நாசமாய்ப் போக!"

"நான் போய்க்கொண்டேயிருக்கிறேனே!"- முத்துச்சாமி இளித்துவிட்டு வேகமாகச் சென்றான். அவனைக் கையைத் தட்டிக் கூப்பிடுவது இயலாது. ஆகவே, தானே போய்ப்பார்க்கலாமென்றுதான் சென்றான். தங்கவேலைச் சந்தித்து வழி விசாரித்ததும் மணிதான். தங்கவேல் பயந்து ஓடிவிடவே, மணி அவன் வந்த வழி நுழைந்துதான் பார்க்கலாமென்று துணிச்சலாகச் சென்றான். வேலியைத் திறந்து உள்ளே கால்வைத்ததும் ஆந்திரரின் வீட்டுப் புழக்கடைக்கதவு திறந்து கொண்டது. "இதன்ன மோகினியா? இக்ஷிணியா?" என்று மணி புரியாது நிற்கும்போது, அந்த ஆந்திர நாட்டிய மாது அவனை நோக்கி வெகு வேகமாக வந்துகொண்டிருந்தாள்.

"கொஞ்சம் நேரமாகிவிட்டது அல்லவா?" என்றும் கேட்டாள்.

என்ன பதில் சொல்வதென்று மணி ஒரு முடிவு செய்வதற்குள், "அதனால் பரவாயில்லை. அப்பா இன்னம் வாசலில்தான் இருக்கிறார். 'வான்'கூட வந்துவிட்டுப் போய்விட்டது. நீங்கள் இதைப் பிடியுங்கள்!" என்றாள்.

'அப்பாவாம், வானாம், பெட்டியைப் பிடிக்க வேண்டுமாம்! இதென்ன கூத்து!' என்று திகைக்கும்



மணியின் கரத்தைப்பற்றி, ஒரு பெட்டியின் கைப்பிடியை அவள் கொடுத்தாள். "நான் சொன்னது ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு?" என்றாள்.

"என்ன சொன்னீர்கள்?"

"நேரே ரயிலடியில் போய்க் காத்திருங்கள். நான் வந்து சேர்ந்துகொள்கிறேன். இந்த உபகாரத்தை மறக்கவேமாட்டேன்!"

"மறக்கிறதும் மறக்காததும் இருக்கட்டும், அம்மா! என்னை எதற்காக இந்த காரியம் செய்யச் சொல்கிறீர்கள்?" என்றான் மணி.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா! நேற்று நீங்கள் எங்கள் வீட்டிற்குள் குதித்தபோது, எதற்காகக் குதித்தீர்கள் என்று நான் கேட்டேனா?"

ஏதோ பிசகு நடந்திருக்கவேண்டும், வேறு யாரோ ஒருத்தர் என்று எண்ணியே இவள் நம்மிடம் பேசுகிறாள் என்று உணர்ந்துகொண்டான் மணி.

"சும்மா தயங்கிக்கொண்டு நிற்கவேண்டாமே! தயவு செய்து போங்களேன். ஐயையோ? அதோ அப்பா வருகிறார். தம்மைப்பார்த்துவிட்டால், என்னை வெட்டிப் போடுவார்! போங்களேன், சீக்கிரம் போங்களேன்!"

மணி அவளைக் கூர்ந்து கவனித்தான். அடேயப்பா! என்ன நடிப்பு! என்ன அபிநயம்! என்ன தளுக்கு!-இவ்வளவையும் மெச்சினான் என்றால்கூட, 'அப்பா வருவ'தைப் பற்றி அவள் அவனை ஏமாற்றினாள் என்பதை மட்டும் உணரவில்லை. ஆகவே விஷயங்களை ரயிலடியில் கேட்டுக்கொண்டால் போச்சு என்று அங்கிருந்து நகர்ந்தான்.

"என்னை உங்கள் சொந்தத் தங்கை மாதிரி நினையுங்கள். வாசற்புறமாக வந்துகொண்டேயிருக்கிறேன்... ஐயோ, போங்களேன்!"

மேலும் நிற்க மனம் இல்லாதவனாக மணி புறப்பட்டான். வந்த வழியே திரும்பி ரஸ்தாவுக்கு வந்து ரயிலடி செல்லும் வீதியையும் பிடித்தான். என்ன விசித்திரம்? நடராஜனைத் தேடி வந்தான்; அவனைக் காணோம். சந்துரு வீட்டிற்கு அழைத்தான்; அங்கேயும் போகவில்லை யாரோ முன்பின் தெரியாத ஒரு பெண் ரயிலடிக்குப் போகச் சொன்னால், அதற்காக இரைக்க இரைக்க ஓடிக்கொண்டிருக்கிறான்! இந்த விநோதங்களில் திளைத்துக்கொண்டு சென்ற மணி தனக்கு நேரிடப் போகும் பயங்கரமான ஒரு நிலையைப்பற்றிச் சிந்தனை கூடச் செய்யவில்லை.

'வான்' புறப்பட்டுப் போய், கண்ணாயிரமும் சென்ற பிறகு, ஆந்திரருக்குச் சிறிது அச்சம் தோன்றியது எதற்கும் ஒரு முறை எச்சரித்துவிட்டு வரலாமென்று தமது நாயுடன் புறப்பட்டுப் போயிருந்தார். அவர் திரும்பு வதற்குள்தான் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நடந்து விட்டன.

ஜகத்தின் வீட்டுக்கு நேர் எதிரே அவர் வரும்போது அவள் வீட்டுக்கதவு அசாதாரணமானதொரு வேகத்துடன் திறக்கப்பட்டது. தலைவிரி கோலமாக ஜகம் வெளியே வந்தாள். "ஐயையோ! ஐயையோ!" என்று அவள் போட்ட கூச்சல் நள்ளிரவின் நிச்சப்தத்தைக் கிழித்தது.

திகைத்து நின்றார் ஆந்திரர்.

"ஐயையோ! கேட்பார் யாரும் இல்லை இந்த ஊரில்! என் நகையெல்லாம் பறிபோச்சே! கொள்ளை போச்சே! அவ்வளவும் போச்சே!"

முதலில் பதில் குரல் கொடுத்தது 'டைகர்'தான் "அடி அசட்டுப்பெண்ணே! பாதுகாக்க யோக்யதை இல்லாத போது உனக்கு என்ன நகை வேண்டியிருக்கிறது?" என்பதைத் தனது பிரத்தியேக பாஷையில் அது குரைத்துக் காட்டியது.



பட்பட்டென்று இரண்டு மூன்று வீட்டுக் கதவுகள் திறந்துகொண்டன. தெருக்கோடியில் சென்றுகொண்டிருந்த கண்ணாயிரம் காதிலும் இந்தத் தீனமான குரல் கேட்டதுடன் பைரவரின் எச்சரிக்கையும் எட்டியது. திருட்டு நடந்த ஸ்தலத்தைப் போய்ப் பார்த்துப் பெருமூச்சு விடுவதைவிட, திருடன் ஓடியிருக்கும் திக்கில் செல்வது எவ்வளவோ நலம்' என்று மகா புத்திசாலித் தனமாக முடிவு செய்து, அங்கிருந்து எதிர்ப்புறமாக நடையைக் கட்டினான் அவன்.

தலையிலே முண்டாசு கட்டி, கையில் ஒரு ஸூட்கேஸ் தாங்கிக்கொண்டு ஊருக்கே புதிதான ஓர் ஆசாமி வந்து கொண்டிருந்தான்.

"ஏய்! யாரய்யா! நில்!" என்று அதட்டல் போட்டான் கண்ணாயிரம்.

இருட்டில் ஒரு கரும்பூதமென்று நினைக்கும்படி நின்ற கான்ஸ்டபிளை - மணி பயமின்றிப் பார்த்து, "என்ன சேதி?" என்று திருப்பி அதட்டினான்.

"என்ன சேதியா? ஊரிலே திருட்டுப் போயிருக்கிறது! என்ன சேதின்னு கேக்கிறியா? என்ன அந்தப் பெட்டியில்?"

"திருட்டா நடந்திருக்கிறது?"

"ஆமா, அய்யா! இப்படிக் கொடு பெட்டியை! இது உன்னுதா?"

"ஏன்? சொல்லித்தான் ஆகணுமா?" என்றான் மணி வெளிப்படத் தைரியமாகவே.

"இதிலே என்ன இருக்கிறது?"

மணி என்ன சொல்வதென்று யோசனை செய்தான். ஒருகால் அது திருட்டுப் பண்டமாக இருக்குமோ? அவனையும் அறியாமல் களவுக்கு உடந்தையாக இருந்து விட்டானோ? அந்தப் பெண்தான் கள்ளியோ? அவன்

தயக்கம் கண்ணாயிரத்துக்குச் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தது. "திறந்து பார்த்தால்தான் உனக்கும் தெரியுமா? ஹெஹ்ஹே! உனக்கு எந்த ஊரு? நட ஸ்டேஷனுக்கு!" என்றான்.

அதே சமயம் ஆந்திரர் தம் வீட்டுக்குள் நுழைந்து, அருமைப் புதல்வியைப் பல சுருதிகளில், "பங்காரு! பங்காரு!" என்று அழைத்துப் பார்த்துவிட்டு, வீட்டினுள் எங்குமே அவள் இல்லையென்றதும் இரு கைகளையும் உதறிக்கொண்டு வெளியே வந்து, "ஐயையோ! என் பெண் போய்விட்டாளே! என் பெண் போய் விட்டாளே!" என்று தமிழும் தெலுங்கும் கலந்த மணிப் பிரவாளத்தில் ஊளையிடத் தொடங்கினார்.

## 15

> "தான் பண்ணின காரியத்தைப் பிறர் பார்த்து நன்றாயிருக்கிறதென்று நுதிக்க வேண்டுமென்ற சித்தம் 'டம்பம்' எனப்படும் சாட்சி அம்பரீஷன் 'ஏன்டா, என்னை நீ அறியாயா? பிடித்த காரியம் விடுவேனா! எனக்கு நீ யார் புத்தி சொல்ல!' என்ற சித்தம் 'அகங்காரம்' எனப்படும். சாட்சி : மதுகைடவன்."
>
> —வேதாந்த ஜட்ஜிமெண்டு

திருநெல்வேலி டவுனில் ஸ்ரீமான் 'தலைதடவி' சுந்தரமும் நடராஜனும் இரவு நேரத்தில் அதிகம் அலையவில்லை. அடிவயிற்றில் வலி அதிகமாக இருக்கிறதென்று புகார் சொல்லிக்கொண்டு வந்த சுந்தரம் எதிர்பாராமல் சட்டென்று ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். ஒரு ஹரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு ஒரு பெரியவர் கதவைத் திறந்து, "யார் அது?" என்றார்.

"குஞ்சத்தான் இருக்கிறானோ?" என்று கேட்டார் சுந்தரம்.

"அது யாரு? சுந்தரம் குரலாயிருக்கிறதே!" என்று பெரியவர் ஹரிக்கேன் லாந்தரைத் தூண்டி முகத்துக்கு



நேரே பிடித்தார். நடராஜன் இப்போது அவர் முகத்தை நன்றாகப் பார்த்தான். சுமார் எழுபது வயதுவரை மதிக்கக்கூடிய மனிதர் அவர் படுக்கையிலிருந்து எழுந்து வந்திருந்தார். எனினும், முகத்தில் பெரிய குங்குமப் பொட்டு இருந்தது. சிவந்த களை மிகுந்த முகம். எடுப்பான மூக்கு, வயதின் தளர்ச்சியினால் சுருங்கிக் காணப்பட்டது. "என்னடா இது! நடுநிசியில் வந்து நிற்கிறாய்! உனக்கேதுடா ரயில் இப்போ?" என்றார் அவர்.

"இல்லை, மாமா! ஒரு காரில் வந்தேன்; இவர் என் சிநேகிதர். விடியற்காலையில் எங்களுக்கு இந்த ஊரில் ஒரு காரியம் இருக்கிறது. அதனால் இங்கே தங்கிவிடலாம் என்று வந்துவிட்டேன்" என்றார்.

"நம் வீட்டில் தங்குவதற்கென்ன? பேஷாய்த் தங்கலாம். நீ வரமாட்டாயே என்கிறதுதான் எங்கள் குறை. குஞ்சு இன்னும் வரவில்லை. சுந்தரராஜ தீக்ஷிதன் என்னமோ மண்டபத்திலே இன்னிக்கு உபந்யாசம் பண்றானாம். கையைப் பிடித்து வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு போயிருக்கிறான்" என்று அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போனார் அவர்.

வீடு ஓட்டுக் கட்டடம் என்றாலும், விசாலமாகவும் வசதியாகவும் கட்டப்பட்டுத் துப்புரவாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. பெரிய ஊஞ்சல் நடுக்கூடத்தில் தொங்கியது. ஈஸி-சேர் ஒன்றும் இரண்டு மூன்று பிரம்பு நாற்காலிகளும் விருந்தாளிகளை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தன. சுந்தரமும் நடராஜனும் உட்கார்ந்து கொண்டதும், சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஓர் அம்மாள் வெற்றிலை-பாக்குத் தட்டையும் வெந்நீர் நிறைந்த கூஜாவையும் வைத்துவிட்டுப் போனாள்.

"சாப்பிட்டாயோ இல்லையோ?" என்று கேட்டார் பெரியவர்.

"அதெல்லாம் எப்போதோ ஆகிவிட்டது!"

"இவர் யார், சொல்லவில்லையே?"

"எனக்கு வேண்டியவர்; ரொம்ப நல்ல பிள்ளை; கல்யாணம் ஆகவேண்டும், அதுதான் பாக்கி."

நடராஜன் சிரித்துவிட்டு, "மனுஷனைக் கெடுப்பதற்கு அது ஒன்றே போதும் என்கிறீர்களோ?" என்று கேட்டான்,

பெரியவர் குறுக்கிட்டு, "அப்படி இல்லையப்பா! காலா காலத்தில் நடக்கவேண்டியது நடக்காவிட்டால் நல்ல பிள்ளையும் கெட்டுப் போய் விடுவான். நேற்று நான் பூஜையில் இருக்கிறபோது ஒரு பிள்ளையாண்டான் வந்தான். ரொம்பத் திமிரா, டாம்பீகமாக இருந்தான். முப்பத்தாறு வயசாகிறது; கல்யாணம் எப்போ ஆகும்னு கேட்டான். கண்ணை மூடிண்டு அம்பிகையைத் தியானம் பண்ணினேன். திருப்தியா பதில் கிடைக்கவில்லை. 'ஆகிற காலம் வந்துட்டால் நிற்காது அப்பா!' என்றேன். 'அது எனக்கும் தெரியும். உங்கள் பூஜையிலே கேட்டுத் தெரிய வேண்டாமே!' என்றான். 'நீ சொல்றதும் சரிதான் அப்பா! நீ ரொம்பப் பெரியவன்; நானும் இந்த ஈச்வரியும் உன் முன்னாலே வரக்கூட யோக்கியதை இல்லாதவா'ன்னு சொன்னேன். உலகம் அப்படி இருக்கு இவரைப் பார்த்தால் அப்படித் தோணல்லை எனக்கு!" என்றார்.

நடராஜன் நிமிஷத்தில் அந்தப் பெரியவர் ஒரு தேவி உபாஸகர் என்பதை ஊகித்துக்கொண்டு, அடக்க ஒடுக்கமானான்.

"இவருக்கு எப்போ கல்யாணமாகும் என்று நீங்கள் நாளைக்குப் பார்த்துச் சொல்லவேணும், மாமா!" என்றார் சுந்தரம்.

பெரியவர் சிரித்துக்கொண்ட, "பேஷாய்ப் பார்க்கிறேன்" என்றார்.



"இவரும் ஒரு தேவி-பக்தர்தான், மாமா! இவருடைய தேவிக்கு முருகன் என்றால் பிராணன். அதற்காக அவள் திருச்செந்தூரோடு இருக்கிறாள்."

"முருகன் ஆனால் என்ன, சங்கரன் ஆனால் என்ன, நாராயணன் ஆனால் என்ன—எல்லாரும் ஒருத்தர்தானே! யார் மனத்துக்கு எந்தச் சொருபம் பிடித்ததோ அதை ஆராதிக்க வேண்டியது; க்ஷேமமாயிருக்க வேண்டியது. 'காளி—டாகினி - மோஹினியைத்தான் ஆராதிப்பேன்' என்று எத்தனை பேர் இல்லை! அதது அவரவர்கள் போக்கு!"

சுந்தரம் நடராஜன் பக்கம் திரும்பி, "மாமா சொல்வதை ராத்திரி பூராவும் சளைக்காமல் கேட்டுக் கொண்டிருக்கலாம். அதற்கு நாம் சாவகாசமாக உட்கார வேண்டும்" என்றார்.

அப்போது கிட்டத்தட்ட சுந்தரம் வயதும் ஆகிருதியும் உள்ள ஒருவர் வந்து, "அடடடாடா! இது யார் இது! அத்தி பூத்தது? எங்கே இப்படி வழி தவறி?" என்று கேட்டுக் கொண்டு நின்றார். அவர்தான் அத்தான்-குஞ்சு என்று நடராஜன் ஊகித்தான்.

"உன்னால் ஒரு காரியம் ஆகவேணும், குஞ்சு! இப்படி உட்கார்! மாமா, நீங்கள் கண் விழிக்கக்கூடாது, படுத்துக் கொள்ளுங்கள்" என்று சுந்தரம், குஞ்சுவை உட்கார்த்தி, கிழவரை உள்ளே அனுப்பினார். பிறகு குஞ்சுவிடம் சுந்தரம் நடராஜனைப் பற்றிப் பொதுவாகக் கூறி, ரகசியங்களை வெளியிடாமலே நாகநாதய்யர் அநாவசியமாக எதிர்க்கிறார் என்பதையும் சொல்லி, "தீக்ஷிதரை விட்டு ஒரு கலக்குக் கலக்கச் சொல்ல வேண்டும். நாகநாதனைப் போகிற போக்கில் விடக்கூடாது. 'எதற்காக என் வீட்டைத் தனிப் பெண்பிள்ளைக்கும் நாட்டியக்காரிக்கும் விடுகிறாய்?' என்று கேள்வி கேட்கச் சொல்லு! நாலு நாளைக்கு அவனும் சுப்புரத்தினமும் வேறு வேலையில் கவனமாயிருந்தால் இவருக்குப் போதும்" என்றார்.

"அதற்கென்ன! தீக்ஷிதரை இஷ்டப்படி வளைத்து விடலாம். இல்லாவிட்டால் அவர் 'லெக்ச'ரைக் கேட்க மாட்டேன் என்று விடுகிறேன். வயிற்றில் அடி என்கிறாயே, மருந்து போட்டுக் கொள்கிறாயா?"

"மருந்தா! அதைச் செய்யச் சொன்னவனைப் பதிலுக்கு நான் உதைத்தால்தாண்டா என் வலி ஆறும்! வேறே மருந்து கிடையாது அதுக்கு!" என்றார் சுந்தரம் முடிவாக.

மறுநாள் காலையில் சுந்தரமும் குஞ்சுவுந்தான் தீக்ஷிதர் வீட்டுக்குப் போனார்கள். நடராஜன் ஸ்நானம் செய்து நெல்லையப்பர் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு வந்து, பெரியவர் பூஜையில் உட்கார்ந்தான். ராஜராஜேச்வரியின் பெரிய படத்தின்முன் சுமார் ஓரடி உயரமுள்ள விக்கிரகம் வைத்துப் பூஜை செய்தார் அவர். வாசஸ்பஷ்டமாக அர்ச்சனைகள் செய்து, வருகிறவர்களுக்கெல்லாம் பிரஸாதமும் கொடுத்தார்." அம்பிகையை நினைத்துக்கொண்டு பிரஸாதத்தை இரண்டு வேளையும் இட்டுக்கொள். சௌக்கியமாகிவிடும்" என்பதையே அநேகமாக எல்லாருக்கும் சொன்னார். அங்கே கூடின ஜனத்திரளைப் பார்த்த நடராஜன், ஈசுவரியின் அருளில் நம்பிக்கை அதிகமா, இந்தப் பெரியவரின் மந்திரசக்தியின் மீது நம்பிக்கை அதிகமா என்று தெரிந்துகொள்ள முடியாமல் திணறினான்.

கடைசியில் நடராஜனிடமும் அவர் பிரசாதத்தைக் கொடுத்துவிட்டு, "உனக்குச் சௌகரியமான காலம் வர இன்னும் கொஞ்சம் போகணும்" என்றார்.

"இன்னுமா போகணும்?"

"ஆமாம்! இன்னங்கூட இரண்டொரு தடங்கல்கள் தென்படுகின்றன. நீங்கள் நியாயமாக, சத்தியமாக நடந்து கொண்டு விட்டால் தானே நீங்கிவிடுகிறது. வஸிஷ்டர் மேலே விச்வாமித்திரன் அம்புகளை வர்ஷித்தான்.



ஒன்றாவது மேலே பட்டதா? பிரஹ்லாதனைப் படாதபாடு படுத்தினான் ஹிரண்யன். கடைசியிலே என்ன ஆச்சு? நீங்கள் அம்பிகையை மனத்திலே தியானம் பண்ணிண்டிருங்கோ. யாராலும் அசைக்க முடியாது!"

அந்தச் சமயத்திலே வாசலில் பேச்சுக் குரல் கேட்டது. கையில் புஸ்தகங்கள் இரண்டை அடுக்கி, ஒரு சால்வையை யக்ஞோபவீதமாகப் போர்த்திக் கொண்டு ஒருவர் நுழைந்தார். அவர் கைகால்கள் பரபரத்தன. மூக்கு நுனியில் இருந்த மூக்குக் கண்ணாடி கீழே சாய்ந்துவிடும் போல் துடிதுடித்தது.

"கேட்டேளா சமாசாரத்தை! நம்ம திருச்செந்தூர் வீட்டிலே ரெண்டு வீட்டைப் பெண் பிள்ளைகளுக்கு விட்டிருக்கிறானாம் சுப்புரத்தினம். அவனே ஒரு கழுதை! அவன் கூடச்சேர்ந்த அந்த நாகநாதன் ஒரு கோவேறு கழுதை! ஹூம்!" என்றார் படபடப்புடன்.

பின்னால் வந்த சுந்தரம் நடராஜனிடம் காதோடு, "இவர்தான் சுந்தரராஜ தீக்ஷிதர். பேசாமல் பாரும் வேடிக்கையை!" என்றார்.

"யார் இருந்தால் என்ன! நாம் அவ்வளவு தூரம்..." என்று பெரியவர் சாந்தமாக ஆரம்பித்தார்.

"என்ன சொல்றேள்! யார் இருந்தால் என்னவா? பொம்பிள்ளைகளைக்கொண்டே குடி வைத்து அக்கிரமம் பண்றான்கள்! மெதுவாகச் சொல்றேளே!"

"உலகத்திலே பாதி ஆண், பாதி பெண். ஒன்றாலே ஒன்று ஜீவித்துக் கொண்டிருக்கிறது. 'லோக-ஏக-மாதா' என்கிறதாக ஸர்வேச்வரனுக்கும் அதிபதியாக இருக்கப் பட்டவள், ஸ்திரீ-ஜாதியைச் சேர்ந்தவள்தான் ராஜராஜேச்வரி. ஒருமிக்க ஸ்திரீகளை நிந்திக்கிற துங்கிறது எனக்கு உசிதமாகப் படல்லை."

"நிந்திக்கிறதிலே உபயோகமில்லைதான்! ஸ்திரீ வர்க்கத்தை அழிச்சுப்பிடணும், ஓய்! துவம்ஸம்

பண்ணிப்பிடணும்! கொலை கொள்ளை ராகத் துவேஷ வர்க்கம் பதிமூணுக்கும் காரணம் அவாள்தான். நிர்மூலம் பண்ணிவிட்டால்..."

"நாமும் நிர்மூலமாக வேண்டியதுதான்! பராசக்தி ஸ்வரூபமான ஸ்திரீவர்க்கம் சிருஷ்டிக்கு ஹேதுவாக இருக்கிற வரைக்கும் உலகத்தில் ஒரு குறைவில்லை!"

"சிருஷ்டியா? ஹூம்! பிரளயம், நாசம்! நான் பெரிய பெரிய கிரந்தங்களைப் புரட்டி ஸ்திரீகளாலே ஆகி யிருக்கிற கேடுகளை உங்களுக்குப் படும்படி சொன்னா, அசந்து போவீர்! இப்ப நான் திருச்செந்தூர்லே போய் ஒரு கலக்கு கலக்கிவிட்டு வரணும்; குஞ்சு சொல்றதைப் பார்த்தால், பறந்துவிடலாம் போலே இருக்கு!"

"என்னடா குஞ்சு! என்ன இவரைப் போய்க் கிளப்பியிருக்கே?"

"கிளப்பறதாவது! சினிமா-ஸ்டாராம்! நாட்டியப் பெண்ணாம்! தலைக்கு ஒரு வீடு விட்டிருக்கான்கள்! நடுவிலே கல்யாணத்துக்கு இருக்கிற பெண்ணாம்! அவளைச் சுற்றிக் கொண்டு ஒரு காலிப்பயல் அலைகிறானாம்! எப்படி இருக்கு விஷயம், பார்த்துக் குங்கோ!"

நடராஜன் துணுக்குற்றான். தீக்ஷிதர் அவனைக் 'காலிப்பயல்' என்று வர்ணிக்கிறார். சுந்தரம் கவனித்து ஒரு புன்னகை செய்துகொண்டு, நடராஜனைச் சும்மா இருக்கும்படி ஜாடை செய்தார்.

"நீர் ஒன்றும் அவசரப்படாதேயும், ஓய்! பார்த்துக் கொள்ளலாம். சுந்தரம் ஒரு நாளாவது இங்கே தங்காமல் போகக் கூடாது; நான் விட மாட்டேன். நாளைக்கு எல்லாருமாகப் போங்கள். நீரும் அப்புறம் ஸ்திரீகளை வதமோ ஹதமோ செய்யும், உங்கள் பாடு..."

தீக்ஷிதர் பதில் பேசாமல் உறுமிக்கொண்டு திரும்பினார்.



நடராஜன் ஏதோ சொல்ல வாயெடுத்து, "எனக்கு இன்று ராத்திரி கட்டாயமா இருந்தாக வேணுமே திருச்செந்தூரில்!" என்றான்.

"அதெல்லாம் இல்லை. இன்றைக்கு ராத்திரி பூஜைக்கு நீர் இங்கே உட்கார வேணும்கிறதாக அம்பிகை யோட உத்தரவு. அப்புறம் உங்கள் இஷ்டம் நான் சொல்றதுக்கு இல்லை" என்றார் பெரியவர் முடிவாக.

நடராஜன் கையைப் பிசைந்துகொண்டு உட்கார்ந் திருந்தான். "சரி, அப்படியே செய்கிறது! எனக்குக்கூடக் கொஞ்சம் ஓய்வு இருந்தால் நல்லதுதான்!" என்றார் சுந்தரம். நடராஜன் மறுபடி பேச வந்தவன், தானாக நிறுத்திக்கொண்டான்.

* * * *

இரவு பதினொரு மணி அடிப்பதற்கு முன்பு படுப் பதற்கு வீட்டிற்குள் காலடி வைப்பதில்லை என்ற விரதம் கொண்டவர்களில் ஒருவன் சந்துரு. வேலை இருந்ததோ இல்லையோ, வெளியே திரிந்துவிட்டுத்தான் வருவான். அந்த நியதியின்படி குறிப்பிட்ட ஒரு தினத்தில் மணியைக் கடற்கரையில் கண்டு தன் கிருஹத்திற்கு அழைத்துவிட்டு, ஐந்தாறு இடங்களில் உட்கார்ந்து பேசிவிட்டு, சீட்டி யடித்துக்கொண்டு திரும்பி வந்துகொண்டிருந்தான். கடலோசை காதில் வந்து மோதியது; படலம் படலமாகப் பனி இறங்கிக்கொண்டிருந்தது.

மேலத் தெருவுக்கு அவன் திரும்பவேண்டிய மூலை வந்தபோது, அதற்குள் போய்க் கூண்டில் அடைவதா என்ற எண்ணம் உதித்தது. தயங்கிச் சற்றே நின்றான். "பெட்டியை இப்படிக் கொடுக்கிறாயா, என்ன! மருவாதி யாய்க் கேட்கிறேன்; கடைசி வாட்டியாகக் கேட்கிறேன். மேலே கைபோட்டேனா, நல்லாயிருக்காது!" என்று ஒருவன் அதட்டும் குரல் வந்து கேட்டது.

'ஓஹோஹோ! திருச்செந்தூரில் வழிப்பறியா!" என்று எண்ணினான் சந்துரு. உத்ஸாகம் பொங்கிக்கொண்டு

வந்தது; வாழ்க்கையில் புதிய ருசி பிறந்து விட்டது சப்தம் வந்த திசையை நோக்கி விரைந்தான். அங்கே நின்றவர்கள் இருவரும் அவனுக்குத் தெரிந்தவர்கள்தாம். மாயவரத்திலிருந்து அன்றே வந்திருந்த மணியும், உள்ளூர்ச் சிங்கமாகிய கண்ணாயிரமுந்தான் அவர்கள். மணியின் கைப்பெட்டியைப் பிடுங்கக் கண்ணாயிரம் முயன்று கொண்டிருக்க அவன் கையில் அது அகப்படாதவாறு மணி பாய்ச்சுக் காட்டிக்கொண்டிருந்தான். முன்னொரு காலத்தில் சந்துரு சிறுவனாக இருந்த காலத்தில் சுவரின் தேளும் பல்லியும் சுற்றிச் சுற்றி வந்த காட்சியையே இது அவனுக்கு ஞாபகமூட்டியது. பல்லியைத் தேள் முன்னாடி கொட்டுமா, பல்லிதான் முந்திக்கொண்டு தேளின் கொடுக்கைக் கத்தரிக்குமா என்று நிலைமை புரிபடாமல் இருந்தது.

"மருவாதியாய்க் கொடுத்திரு இல்லாட்டி கெட்டுப் பூடுவே!" என்றான் கண்ணாயிரம்.

"உன் மிரட்டல் நம்மகிட்டே செல்லாது, அப்பா. உள்ளூர்க்காரங்ககிட்ட அதெல்லாம் வச்சுக்க, ஆம்-மாம்!" என்றான் மணி.

"ஏன், ஏன், என்ன சமாசாரம்?" என்று சந்துரு பிரவேசித்தான்.

"ஆளு பார்த்தா திருடனாட்டம் இருக்குது; கையிலே யானா பெட்டி வைச்சிருக்கிறான்: கள்ளன் கணக்கா முழிக்கிறான். விலாசம் கேட்டால் சொல்லமாட்டேங்கிறான். ஸ்டேஷனுக்கு வாடா என்கிறேன்" என்றான் கண்ணாயிரம். சந்துருவை அவன் அறிவானாதலால் அவன் உதவி கிட்டியதில் திருப்தியடைந்தவனாகக் காணப்பட்டான்.

"இவனா திருடன்?"

"ஆமாமுங்க. கெட்டியான பேர்வளி!"



"இவன் இப்போ என்ன திருடியிருக்கான்?"

"ஊளப் புதுத் தெருவிலே ஏக அமர்க்களம் நடக்குதே! அங்கேருந்து இவனைத் துரத்தியாந்திருக்கேனே இப்மட்டும்?"

"அப்படியானால் சரிதான், சரிதான்!" என்று இளித்தான் சந்துரு.

மணி இதுவரை பொறுத்துக்கொண்டிருந்தவன், "இதற்குத்தானா என்னை உம்ம வீட்டுக்கு அழைத்தீர், மிஸ்டர் சந்துரு!" என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டான்.

"பொறுங்கள், ஸார்! கான்ஸ்டபிள் பிசகு பண்ணி விட்டார். உடனே எதிர்த்துச் சொன்னாலோ கோபிப்பார். சொல்லாமலே இருந்துவிட்டாலும் ஸ்டேஷனில் அவர் அவமானப்படுவதும், உத்தியோகத்தைக் கெடுத்துக் கொள்வதும் நமக்கு லாபம் இல்லை. ஆகையால், பொறுங்கள்!" என்றான் சந்துரு.

"என்னத்தைதங்க பொறுக்கிறது, உமியிலேருந்து அவலை! இவன் திருடன்; கையிலே வச்சிருக்கிற பெட்டி யாருது, அதிலே என்ன இருக்குதுன்னு சொல்லத் தெரியல்லே!" என்று சீறினான் கண்ணாயிரம்.

"அதிலேருந்து ஒருத்தன் திருடன்னு முடிவு கட்டி விட முடியுங்களா, கான்ஸ்டபிள்? வழியிலே கண்டு இவர்கிட்ட நானே இந்தப் பெட்டியைக் கொடுத்து நம்ம வீட்டுக்கு அனுப்பினேன்; இவருக்கு எப்படி அதிலே இருக்கிறது என்னன்னு தெரியும்?"

"ஓஹோ!"

"இதிலே என்ன இருக்குதுன்னு என்னைக்கேட்டாலே தெரியாது. நம்ம வீட்டுக்கு வந்த விருந்தாளியுடைய பெட்டியாக்கும் இது!"

"ஓஹோ!"

"இவர் திருடன் இல்லை! நமக்கு ரொம்ப வேண்டியவர். மாயவரம் ஜமீன்னா உமக்குத் தெரியாது? பதினைந்து லட்சத்துக்கு அதிபதி! விரலை அசைச்சார்னா, ஊரே ஆடும்."

"ஓஹோ!"

"சும்மா 'ஓஹோ'ன்னா லாபம் இல்லை. வேறே திருட்டுப்பய எங்கேயானும் இருந்தால் பார்க்கப் போங்க, கான்ஸ்டபிள்! நம்ம ஊட்டுக்கு வர்றவரை, அதுவும் நானே வரச்சொல்லி வழி காட்டி அனுப்பினவரை—நீரு எதுவும் செய்யக்கூடாதில்லே? யோசிச்சுப் பாருங்க."

"ஓஹோ!"

"வாருங்கள், மிஸ்டர் மணி! பெட்டியை இப்படி என் கையில் கொடும்! இதை உம்மிடம் நான் கொடுத்தது பிசகு; சங்கடத்தில் மாட்டி வைத்துவிட்டேன். நான் வர்றேன், கான்ஸ்டபிள்!"

கண்ணாயிரம் இதற்கு 'ஓஹோ' சொல்லவில்லை. மணியைப் பிடித்துக்கொண்டு போய்க் கெட்ட பெயர் வாங்கிக்கொண்டு அவதிப்படுவது பெரிதா? அவன் உண்மைத் திருடனாகவே இருந்து, அவனைக் கை விடுவது பெரிதா-என்ற சிக்கலான ஒரு சிந்தனையில் ஆழ்ந்தான். கூடியவரையில் அவதி இல்லாமல் இருந்து வருவதே சிறந்த காரியம் என்ற தீர்மானத்துக்கு அவன் வந்த சமயம் சந்துருவும் மணியும் போயிருந்தார்கள்.

வீட்டை அடைந்ததும் மணியிடம் சந்துரு அன்றிரவு ஓர் அத்தியாயம் சொல்லிவிட்டான். நடராஜன்தான் அதில் கதாநாயகன்; மகா துஷ்டனான கதாநாயகன்தான் அவன் துஷ்க்ருத்யங்கள் ஊரில் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டன. தங்கியிருந்தால் அவனை ஊரார் நொறுக்கியிருப்பார்கள். அப்படி ஒரு பெரும் விபத்து நேரிடாதபடி, சந்துருதான் நல்ல எண்ணத்துடன்



பயமுறுத்தி வெளியூருக்கு அனுப்பியிருக்கிறான். மணி இந்த விருத்தாந்தங்களை முற்றும் கேட்கவுமில்லை; கேட்டவரையில் நம்பவுமில்லை. ரயிலில் வந்த அசதியில் பெருங்குறட்டைகளை எழுப்பிச் சந்துருவின் பேச்சுக் கிரைவிலே ஒரு முற்றுப்புள்ளி வைத்தான்.

* * * *

இந்தச் சந்தர்ப்பத்தில் திருச்சிவரை மணியுடன் பிரயாணம் செய்துவிட்டு இறங்கிக்கொண்ட ஹரனை நாம் பின்பற்றிச் சென்றாக வேண்டும் இல்லாவிட்டால் மறுநாள் காலையில் திருச்செந்தூர் ஸ்டேஷனில் அவர் வந்து இறங்குவதைக் கண்டு நாம் திடுக்கிட நேரிடும். திருச்சியில் தம் பழைய நண்பர் கணபதி சுப்பிரமணிய அய்யரைப் போய்ச் சந்தித்த ஹரன், அவரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தார்.

"அடடா! எங்கிருந்து வருகிறீர்கள்? டெல்லியிலிருந்து எப்போது வந்தீர்கள்? லெட்டர் போடக்கூடாதோ?" என்று பரபரப்புடன் விசாரித்தார் அவர்.

"அதெல்லாம் 'சுத்த பாஷ்!' அவசியமே இல்லை, நடராஜனுக்கு ஓர் ஏற்பாடு செய்துவிடலாமென்று நினைத்துக் கொண்டேன்; உடனே புறப்பட்டு வந்தேன். நீங்கள் எழுதின இடத்தைப் போய்ப் பார்க்கலாமா?" என்று கேட்டார், எடுத்த எடுப்பில்.

"இடத்தை என்றால், பெண்ணைச் சொல்கிறீர்களா? பெண்ணின் பெற்றோர்களைச் சொல்கிறீர்களா?" என்று கேட்டார் கணபதி சுப்பிரமணிய அய்யர்.

இந்தக் கேள்வி ஹரனின் அபிப்பிராயத்தில் 'சுத்த பாஷ்' தான் என்றாலும், காரியம் ஆகவேண்டியதை உத்தேசித்து, "இரண்டும் பார்க்க வேண்டியதுதான்" என்று சாந்தமாகவே ஒப்புக்கொண்டார்.

"பெண் இப்போது திருச்செந்தூரில் இருக்கிறாள்; அவளைப் பையனும் பார்க்கவேண்டாமா?"

இதை ஹரன் 'சுத்த பாஷ்' என்று கருதவில்லை. அவரும் அவர் பிள்ளையும் பார்க்கவேண்டியதுதான்; நல்ல காலமாகப் பையனும் திருச்செந்தூரிலேயே இருக்கிறான். இப்போது இவரும் அங்கே போயவிட்டால் சரியாகப் போய்விடும்! பிற்பாடு பெண்ணின் தகப்பனாரைச் சரிக்கட்டிக்கொண்டால் போயிற்று.

"அப்படியானால், நாளைக்குக் காலை திருச்செந்தூருக்குப் போகலாம் நாம் இருவரும்" என்றார் கணபதிசுப்பிரமணியம்.

இரண்டு நிமிஷங்களாக அடக்கிவைத்திருந்த ஹரன் இரட்டிப்புப் பலத்துடன், "சுத்த பாஷ்!" என்று கூச்சல் போட்டு, "இப்போதே கிளம்ப வேண்டும்" என்று ஒரு காலால் நின்றார்.

அவர் சொன்னபடி கேட்பதைத் தவிர வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார் கணபதி சுப்பிரமணியம்.

"பெண் வேறு யாரும் இல்லை. என் பெண் காயத்ரியை மதுரையில் அட்வகேட் பட்டாபிராமய்யருடைய பிள்ளைக்குக் கொடுத்திருக்கிறேன் அல்லவா? மாப்பிள்ளைக்குத் தங்கையைத் தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். பட்டாபிக்கு இரண்டு பெண்; மூத்தவளைத்தான் ஜகதீசன் என்கிற பையனுக்குக் கொடுத்து, வீட்டோடு வைத்துக்கொண்டிருக்கிறார். அவன் மதுரையிலேயே..." என்று விவரிக்க ஆரம்பித்தார்.

"அதெல்லாம் என்ன இப்போ, சுத்த பாஷ்! சீக்கிரம் கிளம்புங்கள், சொல்கிறேன்!" என்றார் ஹரன்.

ஆழ்வார் திருநகரி ஸ்டேஷனில் ரயிலையும் தவற விட்டு, வாடகை மோட்டாரையும் அனுப்பிவிட்டுத்



தத்தளித்துக் கொண்டிருந்த மங்களத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன் கோபத்தைக் காஸ்பிக்கப் பக்கத்தில் வேறு யாருமே இல்லாத படியால், தன் மதிப்புக்குகந்த நாகநாதய்யர் மீதே திருப்பினாள். அம்பரீஷர் மீது அனுப்பப்பட்ட பைசாசம் துர்வாஸரையே திரும்பத் திரும்பத் துரத்தியது போல், நாகநாதய்யர் மங்களத்தைத் தம் கைப்பொம்மையாக ஆட்டியது போக, அவள் கண்களால் இப்போது இயந்திர பீரங்கி கொண்டு சுடப்பட்டார்.

"உங்களுக்கு யோசனையே போதாது! 'ஏதடா ஒருத்திதான் பேசிக்கொண்டிருக்கிறாளே, நாம் நின்று கேட்போம்' என்று தோன்றாதோ?" என்றாள்.

"இல்லை, மங்களம்! நீ அவர்களைப் பார்த்தவுடனே சட்புட்டென்று விஷயத்தைச் சொல்லி..."

"சட்புட்டென்று வாயால் சொல்லிவிடலாம்! மோட்டார் கொண்டுவந்தீர்களே, மோட்டார்! அது மோட்டாரே இல்லை; உங்களை ஏமாற்றிவிட்டான்!"

"இல்லை, மங்களம்! நாம் வந்ததில் ஒன்றும்."

"வேண்டாமே, வேண்டாமே! உங்களுக்கு விரோதிகள் ஜாஸ்தி; வேண்டுமென்றே யாரோ இப்படிச் செய்திருக்கிறான்!"

"பேசிக்கொண்டிருந்தால், நாலும் இரண்டு சொல்ல, மனஸ்தாபந்தான் வளரும். இப்போது ரயில் கிடையாதே நமக்கு நாளைக்குக் காலையில்தானே வண்டி?"

"ஐயய்ய! எப்படியாலும் திரும்பியாகணுமே! நிற்காமல் போய் வேறு மோட்டாரானும் பாருங்கள்! உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு வந்த என்னைச் செருப்பால் நாலாயிரம் அடி அடிக்கணும்!" என்றாள்.

நாகநாதய்யர் துடியாகத் துடித்து ஓட்டமாகத்தான் ஓடினார். ஆனால், அங்கே கையைச் சொடுக்கினவுடன் கொண்டு வர மோட்டாரும் இல்லை. உள்ளூரில் இருந்த மோட்டார்களில் ஒன்றில் ஒரு சக்கரம் தேவையாக

இருந்தது; இன்னொன்றுக்கு இஞ்சின் கிடையாது. அந்த ஊர் மைனர் ஒருவரின் மோட்டாரும், அந்தரங்கமான இடத்திற்குப் போயிருந்தது. ஆகவே, வேறு வழியின்றி அந்த இரவு அந்த ஊர் பட்டாச்சாரியார் வீட்டில் தங்கினார்கள். பட்டாச்சாரியார் கொஞ்சம் ஜோதிஷமும் தெரிந்தவர் என்று சொல்லிக்கொண்டபடியால், மங்களம் தனக்கு அஷ்டமத்துச் சனி என்று அறிந்துகொண்டான். அதற்குப் பரிகாரமாகப் பெருமாளுக்கு ஒரு வருஷத்திற்கு அர்ச்சனைக்காக மேற்படி பட்டாச்சாரியாரிடமே கட்டளைப் பணமும் செலுத்தினான். விடியற்காலையில் மைனருடைய காரைப் பெரும்பாடு பட்டு ஏற்பாடு செய்துகொண்டு, திருச்செந்தூர் வீதிகளில் ஆதித்தனின் பொற்கிரணங்கள் விழத்தொடங்கிய சிறிது நேரத்திற்குள் கிழப் புதுத்தெருவுக்கு வந்து சேர்ந்தான்.

வெகு திட நெஞ்சம் படைத்த மங்களத்தின் நெஞ்சில் கூட, 'நாம் பிசகு செய்துவிட்டோம்; தண்டனை கிடைக்காமல் போகாது' என்ற அச்சம் பிறந்திருந்தது. நல்ல வேளையாக அவன் வீட்டில் நுழைந்த சமயம் பட்டாபி ராமய்யர் குடும்பத்துடன் விச்வரூப தரிசனத்துக்குப் போயிருந்தது, பெரிய ஆறுதலாக இருந்தது.

திருச்செந்தூரில் சூரியன் ஏற ஏற, முன் குறிப்பிட்ட மகாஜனங்கள் நெருக்கிக்கொண்டிருந்தார்கள். சரியாக 8—45க்கு முதல் வண்டி திருநெல்வேலியிலிருந்து வருகிறது ஸ்டேஷனுக்கு அருகேயிருந்ததொரு ஹோட்டலில் காலை ஆகாரங்களை முடித்துக்கொண்டு வந்திருந்த மணி வண்டி வந்து நின்றதும் ஒரு முறை எஞ்சினிலிருந்து கடைசி வண்டி வரை நடந்து பார்க்கத் தீர்மானித்திருந்தான்.

எஞ்சினுக்கு அடுத்த வண்டியிலிருந்து அவன் சற்றும் எதிர்பாராத ஆசாமி ஒருவர் இறங்கினார். அதை மணி முதலில் பார்க்கவில்லை; காதால்தான் கேட்டான்! "சுத்த பாஷ்! ஹூம்! என்னமா வச்சிருக்கான்கள் ட்ரெயின்களை!



என்னிக்குத்தான் நம்ம ஜனங்களுக்கு புத்தி வரப் போகிறதோ!" என்று கூச்சல் போட்டுக்கொண்டே வந்தார். அவரைப் பின்தொடர்ந்தவரை மணி பார்த்ததில்லை; 'நடராஜனைப் பார்த்தீரா?' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற திகில் வேறு மணிக்கு ஏற்படவே, தலைமறைவாக இருந்துவிட முயன்றான்.

ஆனால் அதோ செல்வது யார்? சாக்ஷாத் நடராஜனே அல்லவா? அவன் மட்டுந்தான் போகிறான். ஏனென்றால், சுந்தரம் தம் சொந்த ஜோலி ஒன்றிருப்பதாகச் சொல்லி, கடைசி நிமிஷத்தில் திருநெல்வேலியிலேயே நின்றுகொண்டுவிட்டார்.

"சரி! நீங்களும் என்கூட வந்து தங்கிவிடுகிறீர்களா? அல்லது...", என்று கணபதிசுப்பிரமணிய அய்யர் கேட்டுக்கொண்டு சென்றபோது, மணியின் குரல், "டேய்! நடராஜ்! டேய்!" என்று எழும்பியது. மூன்றாவது நிமிஷம், நடராஜனும் மணியும், ஹரனும் கணபதிசுப்பிரமணியமும் ஒன்றுகூடிவிட்டார்கள்! அப்போது ஹரன் சொன்ன வார்த்தைகளில் பெரும்பாலும் அவர் வழக்கத்தையொட்டி நமக்கும் பரிசயமானபடியால், இங்கே விவரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நடராஜனுடன் மணியும் ஹரனும் சுந்தரத்தின் வீட்டில் போய் இருப்பதென்றும் கணபதிசுப்பிரமணியம் பட்டாபியைத் தயார் செய்து வைப்பதென்றும் ஏற்பாடாகி அதன்படி பிரிந்து நடந்தார்கள்.

அந்த ரயில் வண்டியில் ஒரு கூடைக்காரியுடன் சுந்தரராஜ தீக்ஷிதர் ஏதோ சச்சரவு ஏற்படுத்திக்கொண்டு, ஸ்திரீ வர்க்கம் அழிவதற்கு இதுவும் ஓர் அவசிய காரணம் என்பதைச் சிறு சபையோர் முன் அங்கேயே உபந்யசித்துக்கொண்டிருந்ததை நாம் தற்சமயம் பொருட்படுத்த வேண்டியதில்லை.

வழியில் மணி நடராஜனைத் தனிமையாக இழுத்து, ஹரன் காதில் படாதபடி, "என்னடா இங்கே காலித்தனம்

செய்துகொண்டு அலைகிறாயாம்! ஊரெல்லாம் ஒரே புரளியாக இருக்கிறதே!" என்றான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லையே!" என்றான் நடராஜன்.

"மகா ஒழுங்காகத்தான் இருந்திருக்கிறாயோ?"

"ஆட்சேபமென்ன! நீ வீட்டுக்கு வா! உன்னிடம் எல்லா விஷயங்களையும் நான் நிரூபிக்கிறேன். நான் ஒழுங்கு தவறினவனே இல்லை!" என்றான் நடராஜன்.

"வீடு எப்படி? தனியா? அல்லது..."

"தனிதான்! நான், சுந்தரம், இரண்டே பேர்தான்! வரும்போது பூட்டிக்கொண்டு வந்திருக்கிறோம்."

வீடு வந்தது ஹரன், "அப்பாடா!" என்று திண்ணையில் உட்கார்ந்தார். நடராஜன் பூட்டைத் திறந்து கொண்டு மணி பின்தொடர முன்னாடி உள்ளே சென்றான். சென்றவன் எலெக்ட்ரிக் 'ஷாக்' அடித்தவன் போல் திடுக்கிட்டுப் போய் நின்றான்.

கூடத்து நாற்காலியிலிருந்து வெகு சாவகாசமாக ஒரு புன்னகையுடன் ஒரு பெண் எழுந்தாள். காலி வீடென்று மணியிடம் சொல்லிய அந்தே நிமிஷத்தில் நடராஜன் வார்த்தை பொய்த்துவிட்டது! ஆந்திரரின் பெண்-நாட்டிய மங்கைதான்-அங்கே இருந்தவள்! நடராஜனைப் பார்த்து, வெகு பரிசயமாக, "எனக்காக நேற்று வெகு நேரம் காத்திருந்தீர்களோ? ஐயோ பாவம்!" என்றாள்.

## 16

"பிராயச்சித்த பரிகாரம் எதும் இன்றி அநுபவித்தே தீர வேண்டியவைகள் பிரதானமாக



மாத்ருசாபம், செய்நன்றி மறத்தல் இரண்டும் சொல்லப்படுகின்றன."

-மகாபாரதம், சாந்திபர்வம்

கணபதிசுப்பிரமணிய அய்யரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட இப்போதைவிடச் சௌகரிய மான சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாகும். அநேக வருஷங்களுக்கு முன்பு ஹரன் சென்னைப் பட்டணத்துக்கு உத்தியோகம் தேடிவந்த காலத்தில் அவருடைய அதிர்ஷ்ட தேவதை அவரைப் பல பெரிய மனுஷ்யர்கள் கிருஹங் களுக்கு இழுத்துச் சென்றது. அந்தக் காலத்தில் கணபதி சுப்பிரமணிய அய்யரின் தந்தை ராவ்பகதூர் சங்கர அய்யர் ஜீவியவந்தராக இருந்து வந்தார். சென்னைப் பட்டணத்தில் நீதிபதியாக மிகுந்த கௌரவத்துடன் வாழ்ந்து வந்தார். அவரிடம் ஒரு சிபார்சுக் கடிதம் வாங்கிவிட்டால் டெல்லியில் நல்ல உத்தியோகம் கிடைப்பது நிச்சயம் என்று கேள்விப்பட்ட ஹரன் அவருடைய பங்களாவை நோக்கிச் சென்றார்.

ஜட்ஜ் சங்கர அய்யர் ஒரு சிவப்பழம்; கோர்ட்டுக்குப் போகும் வேளை தவிர, இதர நேரங்களில் ஒரு வெண் பட்டை உடுத்திக்கொண்டு, கிருஷ்ணாஜின விரிப்பின்மீது அமர்ந்து ஏதேனும் ஒரு ஸ்தோத்திரப் புஸ்தகத்தைப் புரட்டிக்கொண்டிருப்பவர். வேத பாராயணம் என்ப தோடுகூட பழங்காலத்தில் எப்படிஎப்படி ஜனங்கள் இருந்து வந்தார்கள் என்பதை வேத பாடங்களிலிருந்து ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார். உதகசாந்தி பாடத்திலிருந்து "ஆதிகாலத்தில் நம் முன்னோர்கள் பாலையும் ஒருவித விதையின் சாரத்தையும் இனிப்புடன் கூடிய ஜலத்தையும் கலந்து உட்கொண்டார்கள்" என்ற பொருள்படும் வாக்கியத்தை எப்படியோ கண்டு எடுத்துவிட்டார். "இது அவர்களுக்கு அமிர்தமாக இருந்தது; ஹிதத்தைச் செய்தது" என்ற வாக்கியமும் அடுத்தாற்போல் வரவே

அவர் குதூகலம் பிடிபடவில்லை. வருகிற போகிற பேர்களிடமெல்லாம், "என்ன ஸார்! எட்டாயிரம் வருஷத்துக்கு முந்தியே காப்பி சாப்பிட்டிருக்கிறார்கள், ஸார்! புதிதாக நாம் ஒன்றும் கண்டுபிடித்து விடவில்லை. காப்பி என்றால் காப்பி இல்லை ஒரு டிக்காஷன், பால், சர்க்கரை இவைகளைக் கலந்து குடித்தார்கள்" என்று சொல்லி, அந்த வாக்கியத்தையும் சொல்லிக் காட்டுவார், அலுக்காமல் சளைக்காமல்.

'சங்கரய்யர் நீதிபதியாகையாலும், படித்தவர், புத்திமான் என்ற மரியாதை காரணமாகவும் கேட்பவர்கள் பரவசமாகிப் போவார்கள். உலகானுபவம் உள்ளவர்கள் அவரிடம் காரியம் சாதித்துக்கொள்ள, "ஸார்! நீங்கள் இதுபோன்ற ஆராய்ச்சிகளை ஒரு புஸ்தகமாகப் போட்டு விட்டால் லோகோபகாரமாக இருக்குமே" என்று கேட்டுக் கொள்வார்கள்.

ஹரன் போன சமயம் கணபதிசுப்பிரமணியம் அகஸ்மாத்தாக வெளியே வந்தார். "யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். விஷயத்தைத் தெரிவித்தபோது கணபதிசுப்பிரமணியம், "அப்பா யாருக்குமே லெட்டர் கொடுக்க மாட்டாரே! அந்த வழக்கமே கிடையாதே!" என்றார்.

"எப்படியாவது எனக்கு நீங்கள் இந்த உதவி செய்தாக வேண்டும். நான் மறக்க மாட்டேன்" என்றார் ஹரன்.

அவருக்கு ஹரன்மீது பச்சாத்தாபம் வந்துவிட்டது.

"நீ வேத புஸ்தகம் ஏதானும் படித்திருக்கிறாயா?" என்று விசாரித்தார்.

"இல்லையே!" என்றார் ஹரன்.

"அதனால், பரவாயில்லை. அப்பாவிடம் பேசும் போது, 'இந்தக்காலத்தில் புதிதாகக் கண்டுபிடித்தது



எதுவுமே இல்லை. முன் காலத்திலிருந்தே எல்லாம் இருந்திருக்கிறது' என்று அடித்துவிடு. உனக்குத் தெரியாதா? புஷ்பக விமானந்தான் ஏரோப்ளேன்; அணுக்குண்டு என்பது பிரம்மாஸ்திரம்."

"அப்படி நன்றாகப் பேசுவேன், ஸார்! 'நெல்லை மர உரலில் குத்தித்தான் உலைவாக்க வேண்டும்; வேறு எந்த வழியிலும் அந்த அரிசி தயாரிக்கக்கூடாது என்று தர்ம சாஸ்திரத்தில் வருகிறது ஸார்! மிஷின் வராத காலத்திலேயே அப்படிச் சொல்லிவிட்டார்கள்; என்ன ஆச்சரியம்!' என்று சொல்கிறேன்."

"அதென்ன சொல்வீரோ, உம் சாமர்த்தியம் அதிர்ஷ்டம்! வழி சொல்லிக் கொடுத்துவிட்டேன். வாரும் இப்படி" என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனார். கணபதிசுப்பிரமணியத்தின் உதவியுடன் நன்றாக அறிமுகம் செய்யப்பட்ட ஹரன், ஓர் அருமையான கடிதத்துடன் வெளிப்பட்டார். பிறகு தமக்கு உத்தியோக உயர்வு ஏற்படும் போதெல்லாம் உதவி செய்த நண்பரை மறக்காமல் லெட்டர் போட்டார். இந்த பாந்தவ்யம் வளர்ந்து கணபதிசுப்பிரமணியம் டெல்லிக்குப் போனாலும், ஹரன் இந்தப் பக்கம் வந்தாலும் ஒருவரை யொருவர் பார்க்காமல் இருப்பதில்லை என்று ஆயிற்று. ஹரனுக்குப் பதிலாக நடராஜனை அவர் சென்னையில் வந்து பார்த்து லெட்டர் போடுவதும் உண்டு. ஆகையினாலேயே, நடராஜன் கல்யாணத்தைப்பற்றிய அக்கறை எடுத்துக்கொண்டு கடிதமும் எழுதிவந்தார். பட்டாபிராமய்யருக்கும் சம்பந்தி கணபதிசுப்பிரமணிய அய்யரிடம் நல்ல மதிப்பு உண்டு. பாகீரதியின் வழியில் அவர் சொந்தமாகவும் ஆனபடியாலே காயத்ரி-கோபாலன் கல்யாணமும் நடந்து, மேலும் நெருங்கினார்கள்.

ஹரனும் நடராஜனும் திருச்செந்தூரில் சந்தித்துக் கொண்டு மணியுடன் சென்றபோது, அவர் பட்டாபி

ராமய்யர் வீட்டை நோக்கிச் சென்றார். அவர் போன சமயம் வீட்டில் மங்களமும் ஜானகியும்மட்டுமே இருந்தார்கள். சுமார் ஒரு மணி அவகாசத்துக்கு முன்பே வந்திருந்த மங்களம் அசதியுடன் கவலையும் கொண்டவளாகக் காணப்பட்டாள். அதன் காரணத்தை அறியாத கணபதிசுப்பிரமணியம், "என்னம்மா, உனக்கென்ன உடம்பு?" என்று விசாரித்தார்.

"எனக்கென்ன வந்தது இப்போ? ஒன்றும் இல்லை!" என்றாள் மங்களம் சிடுசிடுப்புடன்.

ஜானகி அவரை வழக்கமான புன்சிரிப்புடன் வரவேற்றாள். "வாருங்கள், மாமா! எப்போ வந்தீர்கள்? இந்த ஊர் ரொம்பப் பிடித்திருக்கிறது" என்றாள்.

"இப்போதான் வந்துகொண்டேயிருக்கிறேன். குழந்தை! இந்த ஊர் உனக்குப் பிடிக்கும் என்று தெரியும். ஆமாம், உன் அப்பா அம்மாவைக்கூட இங்கே வர வழைத்துவிட்டாயாமே? மணி என்று ஒரு பையன் வந்திருக்கிறான்; அவனுக்கு யாரோ சொன்னானாம். ஸ்டேஷனில் அவனைப் பார்த்தேன், சமாசாரத்தைச் சொன்னான்" என்றார்.

"ஆமாம், மாமா! மங்களம் எழுதித் தருவித்தாள். நீங்கள் காப்பி சாப்பிடுங்கள். அப்பா, அம்மா, அத்திம்பேர் மூணுபேரும் விச்வரூப தரிசனத்துக்குப் போயிருக்கிறார்கள்; இரண்டு கால பூஜை பார்த்துக்கொண்டுதான் திரும்புவார்கள்."

"காப்பி சாப்பிடுகிறேன். இப்போ நான் மட்டும் வரவில்லை. வேறே ஒரு பெரிய மனுஷரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். உன் அப்பாவை முன்னால் கண்டு பேசிவிட்டு, அவரையும் இங்கே அழைத்துக்கொண்டு வரவேண்டும். நான் கோவிலுக்குப் போய்ப் பார்த்துவிடுகிறேன் முன்னாடி" என்றார்.



கணபதிசுப்பிரமணியஅய்யர் கோவிலில் பட்டாபியின் குடும்பத்தை 'ஷண்முக விலாஸ்'த்தில் கண்டு பிடித்தார். விச்ராந்தியாக உட்கார்ந்து பெரிய தம்பதிகளும் மாப்பிள்ளையும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன பாகீரதி! இங்கே நீ உட்கார்ந்திருந்தாயானால் உனக்குக் கிழமைகள்கூட மறந்து போய்விடும். ஆமாம்! நொறுக்குவலி, பூட்டுக்குப் பூட்டு குடைச்சல், கண்ணெரிச்சல் எல்லாம் போய்விடுமே!" என்றார்.

"உங்களுக்கு எல்லாம் பரிகாசந்தான்! மங்களத்துக்கு நல்ல புத்தி வருகிறதானால் என் வியாதியெல்லாம் போய் இங்கேயே என் ஆயுசைக் கழிக்கிறேன்" என்றாள் அந்த அம்மாள்.

"என்ன ஜகதீசா! நீ காலம்பற அந்த நாகநாதய்யர் வந்துட்டாரா, பார்க்கிறதுதானே?"

"நாம் வரமட்டும் அவர் வரல்லை; சுப்புரத்தினம் சொன்னார். ஒரு தரத்துக்கு இரண்டு தரம் கேட்டால் அந்த மனுஷன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறான். ஊசியில் நூல்கோத்துக்கொடுக்க ஓர் இயந்திரம் பாதி கண்டுபிடிச்சிருக்கானாம்; அதைப்பற்றித்தான் அளக்கிறானே ஒழிய நம்ம கவலை அவனுக்குப் படவில்லை. அவன் பிள்ளையாம் ஒருத்தன், சுத்தக் காலியாயிருப்பான் போல் இருக்கிறது; பேசவே பயமாயிருக்கிறது!"

"ஆமாம்! மாப்பிள்ளைக்கு யாரைக் கண்டாலுமே பயம்!" என்று தொத்துகொண்டாள் பாகீரதி.

ஜகதீசனுக்கு உதடு துடித்துக்கொண்டு வந்தது. பக்கத்தில் யாருமில்லாவிட்டால் சூடாகப் பதில் கொடுத்துவிடலாம், நடக்கிறது நடக்கட்டும் என்று சுற்றுமுற்றும் அவன் பார்த்த சமயத்தில்தான் கணபதிசுப்பிரமணிய அய்யர் வந்துகொண்டிருந்தது தெரிந்தது. "அடடே! நம்ம கோபாலன் மாமனார் மாதிரி இருக்கிறது! அவர் எப்போது வந்தார் இங்கே?" என்று கூவிவிட்டான்.

"அவராக இராது. அவர்போல் யாரோ ஒருத்தர்" என்றான் பாகிரதி.

"அவரேதான்! பேஷ் பேஷ்! நல்ல சமயத்தில் வந்தார். அவரை வைத்துக்கொண்டு ஓர் அச்வமேதயாகம் செய்து விடலாமே இந்த ஊரில்!" என்று ஆனந்தப்பட்டார் பட்டாபி.

கணபதிசுப்பிரமணிய அய்யர் நெருங்கி வந்தார். "நீங்கள் இங்கே வந்தது எனக்கு ஊரில் இறங்கின பிறகு தான் தெரிந்தது. என் சிநேகிதர் ஹரன் என்று டெல்லியில் இருக்கிறதாகச் சொன்னேனே; அவர் பையன் இங்கே வந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டு வந்தோம். அந்தப் பையனுடைய சிநேகிதனும் நேத்திக்கு வந்தானாம். நீங்கள் வந்த சமாசாரம் கேள்விப்பட்டதாக அவன்தான் சொன்னான் ரயிலடியிலே!" என்றார்.

"என்னை எப்படித் தெரியும் அந்தப் பையனுக்கு?" என்று ஆச்சரியப்பட்டார் பட்டாபி.

பாகிரதி குறுக்கிட்டு, "உங்களுக்குத்தான் ஒருத்தரையும் தெரியாது! உங்களை எல்லாருக்கும் தெரிந்து தான் இருக்கிறது" என்று ஒரு போடு போட்டுவைத்தான்.

ஜகதீசனைப் பார்த்துக் கணபதிசுப்பிரமணியம் ஜாடையாக ஒரு புன்னகை செய்துவிட்டு, பட்டாபியின் பக்கம் திரும்பி, "நீங்களும் இங்கே இருப்பது பழம் நழுவிப் பாலில் விழுந்தாப்போல் ஆச்சு! ஹரனை மதுரைக்கும் அழைத்துக்கொண்டு உங்களைப் பார்க்க வருவதாக இருந்தேன். முருகன் எல்லாரையும் ஒரே இடத்தில் சேர்த்து வைத்துவிட்டார். அதுவே சுபசூசமாக இருக்கிறது" என்று தொடங்கி, ஹரன் குடும்பத்தை விவரித்தார். நடராஜன் இப்போது அந்த ஊரில் அதே தெருவில் இருப்பதையும் சொன்னார். பட்டாபி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு வந்தார். ஜகதீசன் முகத்தையும் அதில் வழியும் அசட்டையும் கவனித்து, "என்ன?" என்றார்.



"எனக்கெல்லாம் தெரியும்" என்றான் அவன்.

"நடராஜனைக்கூடத் தெரியுமா? நீ பார்த்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்; பேசியும் இருக்கிறேன். தங்கமான பிள்ளை."

"என்னிடம் சொல்லவேயில்லையே நீ!"

"மாப்பிள்ளைக்கு எதை எப்போது சொல்வது என்று மட்டும் தெரியாது" என்றான் பாகிரதி.

ஜகதீசனுக்குச் சொரேல் என்றது. நடராஜனைப்பற்றி அதற்குமேல் தான் வெளியிட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. மேலும் தனக்கே ஆபத்தாகும் என்று ஊகித்து, கணபதிசுப்பிரமணியத்தையே பேசவிட்டான்.

"இப்போது போனவுடன் ஹரனைக் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன். அப்புறம் பையனையும் பெண்ணையும் பார்க்கச் சொல்லலாம்."

"ஜாதகமும் பொருந்தி ஈசுவர ஸங்கல்பமும் இருந்தால் நடத்திவிடுவோம்" என்றார் பட்டாபி.

"பெண்ணும் பிள்ளையும்..." என்று ஆரம்பித்த ஜகதீசன் தெய்வ ஸங்கல்பத்தாலேயே, "ஏற்கெனவே வேண்டிய அளவு பார்த்துக் கொண்டுவிட்டார்கள்" என்று கூறி முடிக்காமல் நிறுத்திக் கொண்டான்.

"என்ன பெண்ணும் பிள்ளையும்?" என்றார் பட்டாபி வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டே.

"பேஷாகப் பார்த்துக்கொள்ளட்டும் என்றேன்" என்றான் ஜகதீசன்.

வாசற்கதவு பூட்டப்பட்டுக் காலியென்று கிடந்த ஒரு வீட்டிற்குள் ஒரு யுவதி எப்படி நுழைந்தாள், எதற்காக வந்தாள் என்பது யாவருக்குமே ஒரு குழப்பம் என்ற

நிலையில், நடராஜனுக்கும் மணிக்கும் வேறு விதமான கவலைகளும் உள்ளப் போராட்டங்களும் ஏற்பட்டிருந்தன. மணி சந்துருவையோ, சந்துரு சொன்னவற்றையோ நம்பத் தயாராக இல்லை; நடராஜன்மீது அவ்வளவு நம்பிக்கை உண்டு. ஆனால், அவன் இங்கே இப்போது காண்பதென்ன? ஒரு யௌவன மங்கையை இவன் வீட்டிற்குள் பூட்டி வைத்திருக்கிறான்; வந்ததும் வராததுமாக அவனிடம் அவள் வெகு சுவாதீனமாகப் பேசுகிறாள். இவர்களுக்குள் தொடர்புண்டு என்பதற்குப் போதிய அத்தாட்சியாக அது ஒன்றே போதும். ஒரு மனுஷன் ஊரைவிட்டுக் கிளம்பி ஒரு வாரத்திற்குள் இவ்வளவு கெட்டுவிட முடியுமா?

நடராஜனின் படபடப்பும் அதிகமாக இருந்தது. இந்தப் பெண்ணிடம் வாக்குக் கொடுத்தபடி வராதது அவனுக்கு வேதனை செய்தது. என்றும், இப்படி அவள் கிளம்புவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அதைவிட, கூட வந்திருக்கும் மணியும், வாசலில் உட்கார்ந்திருக்கும் தகப்பனாரும் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்ற பெருந்திகில் பற்றிக்கொண்டது. தமாஷாக, 'சுத்த பாஷ்' என்று சொல்லிக்கொண்டிருக்கும் ஹரனுக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்பதை அவன் அறிவான். சிவாக்ஞையின் பேரிலே ஆவிர்ப்பவித்த அக்கினி வீரபத்திர மூர்த்தியும், துஷ்டநிக்கிரகத்துக்காகத் தூணைப் பிளந்து கொண்டு வெளிப்பட்ட நரஸிம்ம ஸ்வாமியும் அப்போது அவருக்கு நிகராக முடியாது. இதை நினைத்தபோது அவனுடைய கைகால்கள் பதறின.

"நீயா!" என்றான் நடராஜன்.

"நானேதான்! உங்களுக்கு ஆச்சரியமாயில்லை?" என்று புன்னகை பூத்து, ஆச்சரிய ரஸத்தை அபிநயபூர்வமாக நடித்துக் காட்டினாள் அந்த ஆந்திர 'பங்காரு.'

"நீ ஏன் இங்கே வந்தாய்? என் அப்பா வாசலில் இருக்கிறாரே!" என்று கடிந்தான் நடராஜன்.



"நீங்கள் ஏன் வரவில்லை நேத்து ராத்திரி? என்னை ஏமாற்றிவிட்டீர்கள் அல்லவா?" பிறகு மணியைக் கூர்ந்து பார்த்து, "நீங்கதானே என்று என் கைப்பெட்டியை வாங்கிக்கொண்டு போனீர்கள்? இப்போ எங்கே அது?" என்றாள்.

மணிக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'ஓஹோ! நடராஜனைத்தான் இவள் எதிர் பார்த்தாளோ? அவன் புகுந்து கெடுத்துவிட்டானோ?'... நடராஜன் மணியைப் பார்த்தான். மணி தன் உதடுகளைச் சுருட்டி இறுக்கிக் கொண்டு, இமைகளை மட்டும் உயரத் தூக்கினான்.

"என்னடா நடராஜா! நான் வரட்டுமா?" என்று ஹரனின் குரல் மின்னலை அடுத்து வரும் இடியோசை போல வாசலிலிருந்து வந்தது.

"தாயே! என்னைச் சந்தியில் இழுத்துவிடுவாய் போலிருக்கே! அப்பா வந்து உன்னைப் பார்த்தால் குடி முழுகிப் போகுமே!" என்றான் நடராஜன் பதறிப்போய்.

"நான்மட்டும் பரவாயில்லையோ?" என்று கேட்டான் மணி.

"அடேய் மணி! உன்னிடம் உள்ளதைச் சொன்னால் காதாலாவது கேட்பாய், நம்புவாய்! அப்பா புயல் காற்றுடா! அம்மா பரதேவதை! சீக்கிரம் ஒளிந்து கொள்ளேன். அப்பா புழக்கடைப்பக்கம் போன பிறகாவது நீ வெளியேறலாம்! சீக்கிரம் போயேன். அப்பா வரப் போகிறார். ஐயோ, போய் விடேன்!" என்று நடராஜன் துடித்து அங்கிருந்த பெரிய மரபீரோவின் பின்னால் போகும்படி அவளை அவசரமாக வேண்டிக் கொண்டான்.

மணி சிரித்தான்: "ஐயோ பாவம்! இரண்டு பேரும் அப்பாவுக்குப் பயந்து சாகிறவர்கள்தான்! நேற்று, 'அப்பா வந்துவிடுவார், பெட்டியுடன் ஓடிவிடு' என்று இந்த அம்மாள் அவசரப்படுத்தினாள். இன்று 'அப்பா வருகிறார்; மறைந்துகொள்' என்று நீ அவசரப் படுத்துகிறாய். காதல்-பாதை 'கரடுமுரடு' என்பது நிதர்சனமாகிறது" என்றான்.

இதற்குள் ஹரனின் காலடி ஓசை ரேழியில் கேட்டது. ஆந்திர மங்கையும் நடராஜனின் நெஞ்சில் பால் வார்த்து உடனே ஒதுங்கிக்கொண்டாள்.

"உள்ளே வந்தீர்கள், பேச்சு மூச்சைக் காணோம் சுத்தபாஷ்! கணபதிசுப்பிரமணிய அய்யர் வருவதற்குள் நான் ஸ்நான பானங்களைச் செய்து முடித்திருந்தால் தானே போகச் சௌகரியமாக இருக்கும்! எங்கே கிணறு?" என்று கேட்டார்.

"நீங்கள் உள்ளே வருகிறதற்குள் கொஞ்சம் ஒழுங்கு செய்து வைக்கலாம் என்று நுழைந்தோம்" என்று மழுப்பினான் மணி.

"நேரே சென்றால் ராட்டினம் இருக்கிறது! சௌகரியமாக ஸ்நானம் செய்யலாம். சீக்கிரம் வெந்நீர் போட்டுவிடட்டுமா, அப்பா?" என்று கேட்டான் நடராஜன்.

"வெந்நீரா? சுத்த பாஷ்! நம்ம பக்கத்துக்கு வந்து விட்டு எவன் வெந்நீரில் ஸ்நானம் செய்வான்! கிணற்றில் இழுத்து நாலு குடம் விட்டுக்கொள்ளமாட்டோமா என்று வருகிறோம்" என்று இரண்டாங்கட்டை நோக்கிச் சென்றார். அங்கிருந்து பல முறைகள் 'சுத்த பாஷ்', 'சுத்த பாஷ்' என்ற வார்த்தைகள் கேட்டதிலிருந்து, ஏற்றத்தில் ஜலம் இழுத்துப் பழக்கம் இல்லாத ஹரன் அதனுடன் சங்கடப்படுகிறார் என்று மணியும் நடராஜனும் ஊகித்துக்கொண்டார்கள்.

"என்ன நடராஜா! இந்தப் பெண் யார்? இப்போதாவது கொஞ்சம் உண்மையைச் சீக்கிரம் சொல்லி என் மனத்தைச் சந்தேகப் பிணைப்பிலிருந்து விடுதலை செய்யலாமா?" என்று கேட்டான் மணி.

நடராஜன் வேகமாகச் சென்று புழக்கடைக் கதவைச் சாத்திவிட்டுத் திரும்பிவந்தான். "எனக்கு இவன் யார்



என்று தெரியும். ஆனால், எப்படி இங்கே வந்தான் என்று மட்டும் தெரியாது. நான் இவனுக்கு உதவி செய்வதாகச் சொன்னது உண்மை. ஆனால்..." என்று சொல்லும்போது ஆந்திர 'பங்காரு'வே வெளியில் வந்து விட்டான். "உங்களுக்கெல்லாம் இவ்வளவு சங்கடம் உண்டாக்குவேன் என்று தெரிந்திருந்தால் நான் வந்தே இருக்கமாட்டேன். நேற்று ராத்திரி பெட்டியைக் கொடுத்து அனுப்பிவிட்டு நான் ரயிலடிக்குப் போகும் வழியில் இவர் போலீஸ்காரரிடம் சிக்கிக்கொண்டு நின்றார். துணுக்குற்றுப்போய் ஒதுப்புறமாக நின்று கவனித்தேன். இவர் முண்டாசை அகற்றும்போதுதான் என் பெட்டியை வேற்று ஆளிடம் சேர்ப்பித்துவிட்டேன் என்று தெரிந்தது. 'இதில் என்னமோ சூழ்ச்சி இருக்கிறது. இரவு வேளையில் ரயிலடியில்போய் மாட்டிக்கொள்ளக் கூடாது' என்று திரும்பிவிட்டேன். தெரு வழியாக வந்தால் அப்பா பிடித்துக்கொள்வார் என்று புழக்கடைப் பக்கமாக இங்கே வந்து, நாரத்தை மரத்தில் ஏறி இரண்டாங்கட்டில் குதித்தேன். கூடத்துக்கு வந்து நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று இரவெல்லாம் காத்திருந்தேன். மெல்ல இப்போதுதான் வருகிறீர்கள்!" என்றான் அவன்.

"அப்படியானால் நடராஜனைத்தானே நேற்று நீ எதிர்பார்த்தாய்?" என்றான் மணி.

"ஆம், அண்ணா! இவர் உதவியோடு நான் என் மனுஷரைப்போய் சேரலாமென்று பார்த்தேன். நீங்கள் தடை போட்டுவிட்டீர்கள்."

"நான்தான் தடை போட்டேனோ?"

"ஆமாம். நீங்கள் வராவிட்டால் நான் கிளம்பி யிருக்கவேமாட்டேன்; இப்போது ஊரைவிட்டும் போக முடியாமல் என் வீட்டுக்குள்ளும் கால்வைக்க முடியாமல் நடுவில் நின்று தவிக்கிறேன். அப்போதே, 'நான் இல்லை

நீ நினைத்திருக்கிற ஆசாமி' என்று சொல்லிவிடுகிறதற்கென்னவாம்?"

"ஓஹோஹோ! பிசகத்தனையும் என் பேரில் தானோ?"

"பின்னே யார் பேரில்? நான் கையெழுத்துப் போட்டுத்தரட்டுமா?"

'பங்காருவின் கையெழுத்து எப்படி இருக்கிறது, வெளியிலே அதன் மதிப்பு எத்தனை' என்று கண்டுபிடிக்க மணி விரும்பியிருந்தால்கூட முடியாதபடி வாசலுக்கு வெளியே 'வள்வள்' என்று நாய் குரைப்பது, 'உர் உர்' என்று உறுமுவதும், அதைத் தொடர்ந்து, "சீ!சீ! சட் புட்" என்று யாரோ கத்துவதும் முன்னோக்கி ஓடிவருவதும் கேட்டன. சற்றும் எதிர்பாராத வேகையில் நாகநாதய்யர் டைறி அடித்துக்கொண்டு, பஞ்சகச்சம் ஐந்து பக்கங்களில் பறக்க உள்ளே ஓடிவந்தார்; அவர் கால்களை நோக்கி எழும்பிக் குதித்துக்கொண்டு டைகர் பின் தொடர்ந்தது. இந்தக் காட்சி தென்படுவதற்கு முன்பே 'பங்காரு' மின்னற்கொடிபோல், பீரோவுக்குப் பின்னால் தனது யதாஸ்தானத்துக்குள் சென்று பதுங்கிக்கொண்டுவிட்டாள். அதைக் கவனித்த நடராஜனும் மணியும் தலைக்கொரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, மேலே நடக்க வேண்டியது என்னவென்று கவனிக்கத் தலைப்பட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாகநாதய்யர் இங்கே எப்படி வந்து சேர்ந்தார் என்ற காரண காரியங்களைச் சாவகாசமாக ஆராய்ச்சி செய்வதற்கு வைத்துக்கொண்டு, அடுத்த ஐந்தாறு நிமிஷங்களில் நடந்ததோர் அகோரமான யுத்தத்தை நாம் வர்ணித்துத்தான் ஆகவேண்டும். 'டைக'ரின் உண்மைச் சொருபத்தை நாகநாதய்யரும் நடராஜனும் அறிவார்கள். மணி அறியமாட்டான். அறிந்திருந்த நாகநாதய்யரே அதன் வாலையும் மிதித்து



அலட்சிய பாவத்துடன் வந்துவிட்டதாலேயே 'டைக'ரின் கடுங்கோபத்துக்கு ஆளாகி, இப்போது ஓடி வரும் நிலைக்கு வந்தார். எந்த வீட்டுக்குள் கால்வைக்கக்கூடாது என்று பிரதிக்ஞை செய்திருந்தாரோ அங்கேயே வரவும், யாருடன் முகாலோபனமே வைத்துக்கொள்வதில்லையென்று விரதம் கொண்டிருந்தாரோ அவனிடமே அடைக்கலம் புகுந்துகொள்ள வேண்டிய அவசியமும் அவசரமும் நேர்ந்துவிட்டன அவருக்கு!

டைகர் தன் வாயைத் திறந்து சிவந்த நாக்கையும் இரு வரிசைப் பற்களையும் காட்டி "உற்ற்-ற்" என்று வல்லின 'ற'னா போட்டுத் தனது கோபத்தை வெளியிட்டது பிறகு பாய்ந்தது. மனிதனுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படும் காலத்தில் அசாத்தியமான காரியங்களையும் யத்தனிப்பான் என்பதற்கு அத்தாட்சியாக—இலங்கையை நோக்கி ஆஞ்சநேயப்பெருமான் கடல் தாண்டியதையும் லேசாக ஞாபகப்படுத்தியவாறு, நாகநாதய்யர் அங்கிருந்த மேஜைமீது தாவினார். அந்த அற்ப மேஜை கனமற்ற தாகையால் இவ்வளவு கனத்த மனிதரைத் தாங்க மாட்டாது பின்னால் வந்த 'டைகர்'மீது சாய்ந்து வைத்தது!

"யாரப்பா இவர்கள்?" என்றான் மணி.

"இரண்டு பேரும் நம் விரோதிகள்தான்!" என்று நடராஜன் ஒட்டமாக ஒதுங்கி, தற்காப்புக்காக ஒரு தலையணையைத் தூக்கிக்கொண்டான்.

முதுகில் அடி வாங்கிக்கொண்ட 'டைகர்' கீழே விழுந்துவிட்ட நாகநாதய்யரைப் பழி வாங்கியே தீருவதென்ற வைராக்கியத்துடன் அவர் பின்புறத்தை நோக்கிப் பாய்ந்தது. தக்ஷணமே நடராஜன் வீசிவிட்ட தலையணையால் ஓர் அடியும் வாங்கிக்கொண்டது.

நாகநாதய்யர் சுற்றிச் சுற்றி ஓடினார். ஒருபோது நடராஜன் பின்னாலும், மறுபோது மணியின் பின்னாலும்

ஓண்டினார். சோமுனைப்பற்றிய பிரம்மஹத்திபோல் 'டைகர்' எங்கேயும் விடாமல் துரத்திற்று. 'உர்உர்' என்று தன் பாஷையில் பேசி அவர் வயிற்றைக் கலக்கியது. மணி ஒரு கட்டை மணையை எடுத்துக் குறிபார்த்துப் பலமாக டைகரின்மீது வீசினான். அப்போதே யம லோகத்தில் யம ஸதஸில் யமக் கணக்கனான சித்திர புத்திரன் வேகமாக தோட்டைப் புரட்டினான். யம ஜ்வரர்களான பன்னிரண்டு க்ஷபணான்களும் ஆஜராகத்தான் இருந்தார்கள். எனினும் 'டைக'ரின் ஆயுள் தீரவில்லை என்று சித்திரபுத்திரன் தலையை ஆட்டி விட்டான். கட்டைமணை குறிதவறிச் சுவரில் படீரென்று இடித்து, 'டைக'ரின் கோபத்துடன் பயங்கரத்தையும் வேகத்தையும் தூண்டிவிட்டது. மேலும் அதிவேகமாக அது துரத்த, நாகநாதய்யர் துரிதமாக ஓட, பழைய நாடகமே துரித காலத்தில் நடைபெறலாயிற்று. ஆனால், ஒரு பெருச்சாளியை ஓர் அறையில் பூட்டிச் சுற்றிச் சுற்றி விரட்டினால், எத்தனை நாழி அதன் பலம் தாங்கும்? நாகநாதய்யருக்குப் பெரும் சோர்வு பிறந்தது. முன் ஒரு காலத்தில் தமக்கு இருப்பதாக அவர் நினைத்த 'பிளட்-பிரெஷர்' இப்போதே வந்துவிட்டதாக எண்ணி, கஜேந்திரன், "ஏ ஆதிமூலமே!" என்று கத்தியதுபோல், "ஹே திரிபுரசுந்தரி! இனித் தாங்காது! என்னை நீ ஆட்கொள்ளடி!" என்று கதறிவிட்டுத் தொப்பென்று கீழே உட்கார்ந்துகொண்டு பெருமூச்சுவிடலானார்.

நிராயுதபாணிகளான நடராஜனும் மணியும் இரு மூலைகளில் செயலற்று நின்றார்கள்.

'டைகர்' ஒரு முறை சுற்றிலும் பார்த்துக்கொண்டு தயங்கியது. தனது வெற்றி என்று கர்ஜனை செய்தது. மறுகணம் நாகநாதய்யர் குரல் வளையை நோக்கி அதி உத்ஸாகத்துடன் பாய்ந்தது. சித்திரபுத்திரன் மறுபடி தோட்டைப் புரட்டினான். யம ஜ்வரர்களான பன்னிரண்டு க்ஷபணான்களும் மறுபடி தொண்டையைக் கனைத்து



விட்டுக்கொண்டார்கள். ஆனால், இப்போதும் முன் போலவே தலையை ஆட்டிவிட்டான் யமக்கணக்கன்!

"ஆச்சு, நாகநாதய்யர் காரியம் தீர்ந்தது!" என நான்கு ஆத்மாக்கள் நினைத்தபோது, பீரோவின் மறைவி லிருந்து சாக்ஷாத் திரிபுரசுந்தரியே போல் வெளிப்பட்டாள் 'பங்காரு'.

"ஏய்! டைகர்! சீ! போகிறாயா, என்ன!" என்று அதட்டினாள் அவள். சினிமாக் காட்சிகளில் ஓங்கின கை ஓங்கினபடி நிற்பதை மணியும் நடராஜனும் பார்த்திருக் கிறார்கள். இங்கே பாய்ந்த நாய் பாய்ந்தபடி நின்று விட்டதைத் தத்ரூபமாகக் கண்டார்கள்! 'டைக'ருக்கு 'ஷாக்' அடித்திருந்தது. காண்பது நிஜமா, கேட்பது உண்மையா என்று அது பிரமித்தது. "நீ போ! போய் விடு!" என்றாள் பங்காரு. சப்த நாடியும் அடங்கியதாக, 'டைகர்' சடேரென்று திரும்பியது. வாசலை நோக்கி நகர்ந்தது.

இந்த மகதாச்சரியத்தினால் மூன்று பேரும் ஸ்தம்பித்துப் போனார்கள். நாகநாதய்யர்தான் முதல் முதலில் விழித்தார். அபாயம் நீங்கிவிட்டதையும் உணர்ந்தார். கண்களைக் கசக்கிக் கொண்டு பங்காருவை கனல்வீசும் கண்களுடன் பார்த்தார்.

"ஓஹோ! நீ இங்கேயா இருக்கிறாய்! இங்கேயோ இருக்கிறாய் என்று கேட்கிறேன். உன்னை உன் அப்பன் தேடுகிறானே! ஓஹோ! உன்னை என்ன பாடுபடுத்தி வைக்கிறேன், பார்!" என்று உறுமிவிட்டு, கீழே நழுவிக் கிடந்த கைத்தடியைப் பொறுக்கியெடுத்துக்கொண்டு விடுவிடென்று டைகரின் பின்னால் வெளியேறினார்.

அதே சமயம் புழக்கடைக் கதவை ஹரன் போட்டு உடைத்துக்கொண்டிருந்தார். "ஏய்! இதென்ன சுத்த பாஷ்! யார் தாழ்ப்பாள் போட்டது? திறக்கிறாயா என்ன! எத்தனை நாழி? அங்கே என்ன கூட்டி நடக்கிறது! சுத்த பாஷ்!" என்று கூச்சல் போட்டு அமர்க்களமும் செய்தார்.

# 17

"ஓ ராஜ சிரேஷ்டனே! தெய்வமே கதி என்று இருக்கும் சோம்பேறிகளைவிட்டு மேன்மையை அடைய முயல்கிறவர்களையே லக்ஷ்மி பிரயத்தனத்தினால் தேடியடைகிறாள். ஆகையால், எப்போதும் மேலான பதவியை அடைய நீ முயற்சியுடையவனாக இருக்கவேண்டியது."

மத்ஸ்ய புராணம், சுலோ—221

மனிதர்களில் செருக்கு வயதும் ஆகி, பணமும் பெருகி, பெயரும் சேர்ந்துகொண்டவுடன், ஊரிலுள்ளவர்கள் அவ்வளவு பேரும் தம்மை மதித்து மரியாதை செய்கிறார்கள் என்ற உணர்வு உண்டாகிறது. அந்த ஆனந்தத்திலே தலையை நிமிர்த்திக்கொண்டு, "ஏ உலகமே! நீ எத்தனை பெரிய முட்டாள்! அதிலே நான் எத்தனை பெரிய புத்திசாலி!" என்று நினைத்துக் கொள்கிறார்கள். பொதுஜனங்களில் யாரும் இதற்கு எவ்வித ஆட்சேபமும் சொல்வதில்லை; இந்த மாதிரியான அசடுகளில் எத்தனையோ பேர்களைப் பார்த்துப் பார்த்து அவர்கள் புன்னகையும் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். சங்கடம் எப்போது ஏற்படுகிறதென்றால் இந்த ரக ஆசாமிகளில் இருவர் ஒரே பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து, ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் போதுதான். திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூரைச் சேர்ந்த சுந்தரராஜ தீட்சிதரும், ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் நாகநாதய்யரும் இம்மாதிரியான இனத்தில் வருபவர்களாக இருந்ததன் பலனாக ஒருவரைப்பற்றி ஒருவர் குறைவான அபிப்பிராயமே கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

"என்ன தெரியும் அந்த நாகநாதனுக்கு? வேஷம் போடுகிறான், நிரக்ஷர குக்ஷி! ஒரு புருஷனுக்கும் ஸ்வரத்துடன் சொல்லத் தெரியாது!" என்பார் தீக்ஷிதர்.



நாகநாதய்யர் தம் வட்டாரத்திற்குள், "தீக்ஷிதர் சுத்த ஜம்பம். ஸ்திரீவர்க்கத்து மேலே தமக்குத் துவேஷம் மாதிரி ஒரு 'புருடா'வைக் கிளப்பிவிட்டுக்கொண்டு கலாட்டா பண்ணுகிறார். தட்டிலே பணம் வந்து 'தொப் தொப்'புனு விழறதே, அது ஸ்திரீ வர்க்கம் போடற பணமா, புருஷ வர்க்கம் போடற பணமா? ஹூம்! இவர் பேத்தல்களைக் கேட்க எந்தப் புருஷனுக்குப் போதோ பொறுமையோ இருக்கிறது!" என்பார்.

இவர்கள் பரஸ்பர அபிப்பிராயங்கள் அவ்வப்போது சம்பந்தப்பட்டவர்கள் காதில் விழுவதுஉண்டென்றாலும், நடுத்தெருவில் எதிர் எதிராகச் சந்திக்கும்போது இருவரும் குசலம் செய்துகொள்ளுவதிலும் மரியாதைகள் செய்துகொண்டு தலையை விசையாக ஆட்டிக்கொள்வதிலும் குறைவில்லை. இந்த நாகரிக உலகத்தில் இந்தக் காரியம் எல்லாத் துறைகளிலும் சகஜமானதே அல்லவா? ஆனால், இரு நெஞ்சுகளின் ஆழத்திலும் எரிமலையின் அக்கினிப் பிழம்பானது குமுறிக்கொண்டிருந்தது.

சுப்புரத்தினத்திடம் தீக்ஷிதருக்குப் பூனைக்குட்டி விசுவாசம் இருந்ததற்குக் காரணம், அவருடைய மூன்று வீடுகளிலும் ஏற்படும் ரிப்பேர்களைச் சுப்புரத்தினமே அவ்வப்போது பணச்செலவின்றிச் செய்து கொடுத்து வந்ததுதான். ஆனால், அவர் நாகநாதய்யரின் பேச்சைக் கேட்பதைத் தீக்ஷிதர் வெறுத்து வந்தார். இப்போது தம் வீடுகளை அநாசாரம் பிடித்த ஆசாமிகளாகப் பார்த்துக் கொடுத்துவிட்டார், அதுவும் நாகநாதய்யர் உபதேசப்படி நடத்துகொண்டுவிட்டார் என்றதொரு விஷவித்து நெஞ்சில் விழுந்துவிடவே, ரௌத்ராகாரமாகத்தான் ரயிலடியிலிருந்து வீடு நோக்கி விரைந்தார்.

அவர் வந்த சமயம், சுப்புரத்தினம் ஒரு தென்னை மரத்தின்மீது உட்கார்ந்துகொண்டு பாளைக்குப் 'பாலிஷ்' கொடுத்துக் கொண்டிருந்தார். தீக்ஷிதரைக் கண்டதும் இறங்கிவரும் வழக்கம் உண்டென்றாலும், இன்று அவர்

முகத்திலே கொதித்த கோபத்தையும், நடையில் பூமி அதிர்வதையும் கண்டு இருந்த இடத்தில் இருந்துகொண்டு நடப்பதைக் கவனிப்பதே சிலாக்கியம் என்று நினைத்து விட்டார். வாசல் தாழ்வாரத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டிருந்த நாகநாதய்யர் அதை முடித்து ஆசமனம் செய்து, பாத்திரத்தில் மிகுதியிருந்த ஜலத்தை வாசற் புறமாக வீசிவிட்டு எழுந்தார். வீசப்பட்ட தண்ணீர் ஏற்கெனவே படபடப்பாக வந்துகொண்டிருந்த தீக்ஷிதரின் உதரத்தில் சடேரென்று தாக்கியது.

"ஏங்காணும், எத்தனை வயசாச்சு உமக்கு! மூளை மிஞ்சித்தானும் இருக்கா?" என்று கேட்டார் தீக்ஷிதர்.

நாகநாதய்யர் தமது கைத்தடியைப் பொறுக்கிக் கொண்டு எழுந்தவர், தாம் செய்துவிட்ட பிசகை உணர்ந்து, "அடடா! கொஞ்சம் பார்த்து வரப்படாதோ? என்று அநுதாபம் தெரிவித்துக்கொண்டார்.

"ஆமாங்காணும், ஆமாம்! நான்தான் பார்த்து வரணும்! அகம்பாவம் பிடிச்ச மனுஷன்கள் வீடு தேடி வந்தால் பார்த்துத்தான் வரணும்! ஹ்ம்! துர்ஜனனைக் கண்டால் தூர விலகு என்று தெரிந்துதானே சொன்னார்கள்!"

நாகநாதய்யர் கீழே இறங்கிவிட்டார். அவர் செய்தது என்னவோ தவறுதான்; ஆனால் வேண்டுமென்று செய்து விடவில்லை. அதற்காக இவர் ஏகதேசமாகப் பேசுவதா, தான் கேட்டுக்கொண்டிருப்பதா? "ரொம்ப ஓட்டாதேயும், தீக்ஷிதரே! மரியாதை தவறி விடவேண்டாம்! கொஞ்சம் தீர்த்தம் பட்டுவிட்டது; கவனித்திருந்தால் பட்டிருக்காது!"

ரொம்ப லேசாகச் சொல்லிவிட்டீரே! உம்மதலையிலே ஒரு மண் குடம் ஜலத்தைப் போட்டு உடைச்சுட்டு நான் சமாதானம் சொல்றேன்; கேட்டுக்கொண்டு பேசாமல் இருந்து பாருமேன்! கேவலம், ஸ்திரீ ஜாதிக்கு இருக்கிற பொறுப்புக்கூட இல்லாமல்தானே நீர்..."



"அட சரிதாங்காணும், உம்ம கைத்தடியும் மூஞ்சியும்! நீர் பார்த்து வர்த்துக்கென்னங்காணும்!"

"நன்னாச் சொன்னே; மகாமேதாவி நீ! என் வீடுகளை நாசம் பண்ணினியே, அப்பவே நான் பார்த்துத் தான் உன்னுடனே சகவாசம் பண்ணியிருக்கணும்!" என்று தீக்ஷிதர் கையையும் தடியுடன் ஆட்டினார்.

நாகநாதய்யர் தமக்கும் அதேபோல் திருப்பிச்செய்யத் தெரியும் என்பதை நிரூபித்துக்கொண்டு, "உம்ம வீடு மகா அழகாச்சே! என்ன கெட்டுப்போயிடுத்தாம்! இடித்துத் தரைமட்டமாக்க வேண்டியதுதான் பாக்கி. உம்ம உபந் யாஸத்தைக் கேட்டுவிட்டு எவனாவது ஒருவன் ஆத்திரமாக அதையும் செய்யத்தான் போறான்! பார்த்துக் கொண்டேயிரும்!" என்றார்.

"நீ ஜாகை வைத்தாயே, நீ ரிஜிஸ்திரார் பண்ணின மூளையை உபயோகித்து! ஒரு சினிமா, ஒரு நாட்டியம், நடுவிலே ஓர் அப்ஸரஸ்! சை! உனக்கான வயசுக்கு! உன்னைச் சிரிக்கிறான். ஊரிலே! உன்னோட என்னையும் சேர்த்துச் சிரிக்கிறான். யாரோ காலிப்பயல் சுத்தறானாம் அந்த அப்ஸரஸை! நீ போடறதோ பக்தர் வேஷம்! கட்டுக் கட்டாக விபூதி! ருத்ராக்ஷப் பூணை! கபட சந்நியாசி!"

"தீட்சிதரே! உமக்கு வயசாச்சேன்னு சும்மா விட்டேன்!"

"ஆமாம்! உனக்கு வயசே ஆகல்லே! அதிபால்யம்! நீ பண்ணியிருக்கிற தொழிலுக்கு உன்னை முன்னாடி தொறுக்கி வாரணுமே; எங்கே அந்தச் சுப்புரத்தினம்? நான் கேட்கிறேன்!"

உயரே தென்னைமரத்தில் சுப்புரத்தினம் மரத்தோடு மரமாக ஒட்டிக்கொண்டார். கீழே இறங்கினால் இந்த இரண்டு கிழவர்களின் கைத்தடிகளும் தம்மீது கட்டாயம் சந்திக்கும் என்ற திகில் அவரைப் பிடித்துக்கொண்டது. சிலப்ப விளையாட்டில் இரு தடிகளும் ஒருமுறை ஒன்றன்

மீது ஒன்று மெல்ல உராய்ந்து கொண்டது என்னவோ வாஸ்தவம்!

"சே! உன்னோடு பேசினேனே! ஐம்பது காயத்ரி பண்ணணும்!" என்று நகர்ந்தார் தீக்ஷிதர்.

"நான்மட்டும்! 'பெர்மாங்கனேட்' ஜலம் போட்டு வாயைக் கொப்புளிக்கிறேன்!" என்று திரும்பினார் அய்யர். அவர் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

என்ன கேவலம்! இந்த மங்களத்தின் தங்கையினால் அவருக்கு என்ன அவமானம்! எதிர்வீட்டு வாசலில் இடக்குப் பிடித்த வக்கீல் குமாஸ்தா சாம்பமூர்த்தி இந்தச் சண்டையை ரஸிக்கிறான். சின்னப்பையல்கள் ஏழெட்டுப் பேர், 'தாத்தாக்கள் யுத்த'த்தை வேடிக்கை பார்க்கக் கூடி விட்டார்கள். "விடக்கூடாது இதை! போட்டு உடைத்து விடுகிறேன்!" என்று புறப்பட்டார் நாகநாதய்யர், பட்டாபியிடம் புகார் செய்ய.

ஆந்திரரின் நாயான 'டைகர்' அன்று காலை முதலே தெருவில் ஜாக்ர-ஸ்வப்ன-ஸுஷுப்தி நிலைகளில் மாறி மாறிச் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. விழிப்பு வேளைகளிலே வாலை மடக்குவதும் நீட்டுவதும் ஆட்டுவதுமாக இருந்தது.

அந்த வாலை அது இழுத்துக்கொள்ளும் சமயத்திலே தான் அதை நாகநாதய்யரின் பாதம் ஓர் அழுத்து அழுத்தி வைத்தது. விவேகம் உள்ள எந்தச் சுவானமானாலும் இம்மாதிரியான அவமரியாதை செய்யப்பட்டவுடனே, அதன் கர்த்தா கெஞ்சிக் காலில் விழுந்து 'அபராதத்தை க்ஷமிக்க வேண்டும்' என்று கேட்பான் என்று எதிர் பார்ப்பது நியாயமே. தன் காரியமே கண்ணாகச் சென்ற நாகநாதய்யர், வாலை மிதித்ததுமில்லாமல் நமது கைத் தடியின் நுனியினால் அதன் மூக்கின்மீது ஒரு தட்டும் தட்டி, "சீ போ!" என்றவுடன், நாய்-குலத்திற்குள்ள சுயமரியாதை அவ்வளவும், உடைக்கப்பட்ட நல்ல சோடா



குப்பியைப்போல் பொங்கி வழிந்து வாயில் நுரை ரூபமாக தென்பட்டது. 'கர்ர்ர்ர்ர்' என்ற, முழக்கத்தைக் கேட்ட நாகநாதய்யர் ஓடினார். சுவான பரம்பரையின் இன்றியமையாத வழக்கம் ஓடுபவரைத் துரத்துவதே அல்லவா? அந்த ஆசாரத்தை வழுவாது ஒட்டி, 'டைகர்'ரும் அவரை நடராஜன் வீட்டுக்கு துரத்தியது. அங்கே நடந்ததொரு ஹாஸ்யமும் ஆச்சரியமும் பயங்கரமும் மற்றும் இதர ஆறு ரஸங்களும் நிறைந்த நாடகம் ஏற்கெனவே விவரிக்கப்பட்டுவிட்டது.

தம் உயிருக்கு இனி ஹானி இல்லை என்ற நிச்சயமும் ஏற்பட்டு, ஆந்திர 'பங்காரு' இருக்குமிடம் நடராஜன் இருக்குமிடமேதான் என்றும் நாகநாதய்யர் அறிந்தவுடன், தாம் என்ன கேவலமான நன்றி கெட்ட காரியம் செய்கிறோம் என்பதையும் சிந்திக்காமல், ஆந்திரரிடம் போய்க் கோள் சொல்லி நடராஜனுக்குக் கெடுதல் செய்விக்க எண்ணம் கொண்டார். மனத்தினுள் ஆத்திரம் ஏற்பட்டால் பகுத்தறிவும் நல்லுணர்ச்சிகளும் உடன் வெளியேறிவிடுவது சகஜமே அல்லவா?

நாகநாதய்யர் இதற்கு முன்பு ஆந்திரரை அருகில் பார்த்ததுமில்லை; ஒரு வாசங்கூட வார்த்தையாடியது மில்லை. எனவே, இது அவருக்கு ஒரு புதிய அநுபவம். பக்கத்தில் நெருங்கிப் பார்த்தபோது ஆந்திரர் தூரப் பார்வையைவிட விகாரமாகத் தென்பட்டார். நாகநாத அய்யர், தாம் சிநேகபாவமாக வருகிறோம் என்பதற்கு அடையாளமாக அவருக்கு முறுவலித்துக் காட்டினார். அந்த மலையொத்த முகத்தில் கருங்கல்லின் கடினமேதான் பிரதிபலித்தது. பதிலுக்கு அசைவே இல்லை.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன்" என்றார் நாகநாத அய்யர்.

"பாரேன், என்னை நீ என்ன பார்வை?" என்றார் ஆந்திரர். அவருக்கு இப்போது இல்லாத சந்தேகங்கள் வந்துவிட்டன.

"உங்கள் வீட்டுக்குள் வரலாமா? ஓர் அந்தரங்கமான விஷயம்..."

ஆந்திரர் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. 'ஓஹோ ஹோ! இவனுக்கு நம்ம சமாசாரம் தெரியும்போலே இருக்கிறது' என்று எண்ணி, "உன்கூட என்ன அந்தரங்கம்? நீ யார்? ஏதானும் இருந்தால் இங்கேயே சொல்லு!" என்றார்.

"இங்கே சொல்லமுடியாதே!"

"முடியாவிட்டால் போய்விடு!"

"இல்லை, மிஸ்டர்... உங்க பேர் தெரியல்லையே!"

"என் பேர் உனக்கு ஏன் தெரியணும்? உன் பேர் தெரியணும்னு நான் ஆசைப்படுகிறேனா?"

"அதில்லை, ஸார்! விஷயம் என்னன்னா..."

"சொல்றதானா சீக்கிரம் சொல்லு! இல்லை, பாதி பேசறப்போ நான் உள்ளே போய்விடுவேன், ஆமாம்!"

'இதென்னடா இவனுக்கு நல்லதைச் சொல்லவந்தால் நம்ம மேலேயே பாய்கிறான்' என்று நாகநாதய்யர் தயங்கினார். 'எதற்கும் சொல்லிவிடுவது மேல்' என்று, உங்கள் பெண் எங்கே இருக்கிறாள் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"எனக்குப் பெண்ணே கிடையாது! போம்!"

"நீங்கள் கோபிக்கக்கூடாது. உங்கள் பெண் என்று தான் அவளை நினைத்தேன். நேற்று முதல் அவளைக் காணோமாமே!"

"ஆமாம்! நேத்துவரை- பன்னிரண்டுமணிவரை— அவள் என் பெண்ணாகத்தான் இருந்தாள். அதுக்கு மேலே இல்லை! நான் அவளுக்கு ஸ்நானம் பண்ணி விட்டேன்!"



"அவள் இந்த க்ஷணம் இருக்கிற இடம் எனக்குத் தெரியும்."

"எனக்குச் சொல்லாதே! அது எனக்குத் தெரிய வேண்டியதில்லை."

"நீங்கள் அப்படி அதை விட்டுவிடக்கூடாது."

"என் இஷ்டம்! நீ யார் என்னண்டை தடுத்துச் சொல்றது! இப்போ போறியா என்ன!"

"இல்லை. அவளை நீங்கள் திருப்பி அழைத்துக் கொள்வதாக உத்தேசம் இருந்தால்..."

"நான் திருப்பி அழைக்கமாட்டேன்! அவளாக ஓடினாள், அவளாக வரவேண்டியதுதான்!"

"அவளாக ஓடவில்லையே! வேறு ஓர் அயோக்கியன், அவள் மனசை எப்படியோ மாத்தியல்லவா..."

"நீ இப்போ என் மனசை மாத்தப் பார்க்கறே! ஓடிப் போயிடு!"

"நான் நல்லதைச் சொல்றேன்!"

"போறியா..."

"நீங்கள் கேட்டால்..."

"போ, போ, போய்விடு!..."

"நான் போகத்தான் போறேன்."

"உஷ்ஷ்... ஏ டைகர்!"

நாகநாதய்யர் 'டைகர்!' வார்த்தையைக் கேட்டதும் ஒரு தாவு தாவினார். அடுத்த நிமிஷம் ஆந்திரர் இடுப்பில் கைவைத்துக்கொண்டு ஓடும் கிழவரைப் பார்த்துத் தமது விலா வலிக்கச் சிரித்தார்.

வழியில் பட்டாபியின் வீட்டு வாசலில் க்ஷணகாலம் நின்றார் நாகநாதய்யர். அன்று எழுந்த வேளை

நல்லதில்லை விழித்த முகமும் சுகமில்லை அவருக்கு! ஜானகி மட்டும் கதவருகே நின்றுகொண்டிருந்தாள்.

"எங்கே மங்களம்?"— கடுமையான கேள்வி!

"மாமா! உங்களைத் தேடிக்கொண்டுதானே அக்காள் போனாள், கால்மணிக்கு முந்தி? நீங்கள் அவளைப் பார்க்கவில்லையா?"

மதுரமான குரல், இனிமையான முகம். அதை ரசிக்கக்கொடுத்து வைக்காத நாகநாதய்யர் பதில் சொல்லாமலே கைத்தடியை ஆட்டிக்கொண்டு வீட்டை நோக்கி 'விசுக் விசுக்'கென்று ஓட்டமும் நடையுமாகத் திரும்பினார்.

* * * *

இன்னும் ஒரே ஒரு நிமிஷ நேரம் புழக்கடைக் கதவைத் திறக்காமல் இருந்தால், அதை ஹரன் உடைத்துக் கொண்டு வந்துவிடுவார் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டதை உணர்ந்த மணி, பீரோவின் பின்னால் நன்றாக ஒளிந்துகொண்டிருக்கும் படி 'பங்காரு'வுக்கு ஆக்ஞை இட்டுவிட்டு, ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். தலையிலிருந்து ஜலம் சொட்டச்சொட்ட ஹரன் வந்து, "இங்கே என்ன சப்தம்! 'பீபிளஸ் பார்க்'கைத் திறந்து விட்ட மாதிரி அல்லவா இருந்தது கூச்சல்! சுத்த பாஷ்!" என்றார்.

"ஸார்! சத்தத்தைக் கேட்டா அப்படிப் பயந்து விட்டீர்கள்? நீங்கள் திருப்தியாக ஸ்நானம் செய்துவிட்டு உடம்பைத் துடைத்துக்கொண்டு டிரெஸ் செய்து கொள்ளுங்கள். இங்கே ஒரு வேடிக்கை நடந்திருக்கிறது. சாவகாசமாக நான் சொல்கிறேன்" என்றான் மணி.

விசேஷம் ஒன்றும் இல்லை என்று கவலை நீத்து, ஹரன் சென்றார். அவர் திரும்புவதற்குள்ளாக மணி



நடராஜனிடமிருந்து ஊரில் நடந்த விஷயங்களை அறிந்து கொண்டு ஒருவிதமாகத் தயாராக இருந்தான்.

ஹரன் கதை கேட்க வருபவர் போல் வரவும், மணியும் சாந்தமாகச் சொல்லத் தொடங்கினான்.

"நான் சொல்லப்போகிறதை வைத்துக்கொண்டு நீங்கள் நடராஜனைக் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், நீங்கள் இன்றைக்குச் செய்ய வந்திருக்கும் காரியத்துக்கு முன் ஏற்பாடாகத்தான் நடராஜனே இங்கே வந்தான். நீங்கள் பார்க்கவந்த பெண்ணை பட்டாபி ராமய்யரின் புத்திரியை எனக்கும் நடராஜனுக்கும் பட்டணத்தில் முன்னாலேயே தெரியும்!" என்றான்.

"சேச்சே! தெரிந்தால் என்ன பிசகு? இதற்கு நான் கோபிப்பேனா? சுத்த பாஷ்!" என்றார் ஹரன்.

"தெரியும் என்றால், நடராஜனுக்கு என்னைவிட அதிகமாக, பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளும் அளவுக்குச் சிநேகம் உண்டு!"

"ரொம்ப சரியாப்போச்சு! நான் ஏன் கோபிக்கிறேன், சுத்த பாஷ்!" என்று ஹரன் இருவரையும் மாற்றிமாற்றிப் பார்த்தார்.

"இப்போ திருச்செந்தூர் வந்தகூடச் சுவாமி தரிசனம் செய்வதற்கென்பது இரண்டாம் பக்ஷந்தான்..."

"அது சுத்த பாஷ்! நானே நினைத்ததுதான். தெய்வத்தைப் பூரா நம்பினால் எனக்குப் பிடிக்காது!"

"ஜானகியின் கண்பார்வையில் இருக்கலாமே என்று தான் வந்தான்!"

இதற்கு மணியும் நடராஜனும் எதிர்பார்த்தபடி ஹரன் உடனே பதில் சொல்லவில்லை. ஆனால், அவர் அநுமதிக்க வில்லை என்றும் காண்பித்துக்கொள்ளவில்லை. மௌன மாகத் தலையைமட்டும் ஆட்டினார்.

"நடராஜன் எனக்குத் தெரிந்த அளவில் தப்புத் தண்டாக்களில் இறங்குகிறவனே இல்லை. இங்கே சுந்தரம் என்கிறவருடன் தங்கியிருக்கிறான். ஆனால் பாருங்கள்! இவனுக்கு எதிராக ஒரு கிழவர் கிளம்பி இவனை ஊரிலிருந்தே விரட்ட முயற்சி செய்திருக்கிறார். இல்லாத பழிகளைச் சுமத்துவது, துஷ்டர்களைக்கொண்டு பயமுறுத்துவது, ஜானகியின் வீட்டிலேயே இவனைப் பற்றித் துஷ்பிரசாரம் செய்கிறது-இப்படிச் செய்து கொண்டிருக்கிறார். இவன் ஸூட்கேஸை வேறு வைத்துக் கொண்டு கொடுக்கமாட்டேன் என்கிறாராம்..."

"வாட்! அதென்ன அயோக்கியத்தனம்? யார் அவன்?" ஹரன் கிழவர்மீது கோபங்கொள்கிறார் என்பதை இருவரும் கவனித்தார்கள்.

நடராஜன் சட்டென்று, "இல்லை. அப்பா! அப்புறம் அவரிடமிருந்து அதைப் பிடுங்கிவிட்டோம். இப்போ அது என்னிடந்தான் இருக்கிறது" என்றான் அவசரமாக.

"அந்தக் கிழவர் ஜானகியின் தமக்கையிடம் வேறு இல்லாத பொல்லாத புகார்கள் சொல்லியிருக்கிறார் என்று தெரிகிறது."

"என்னத்தைச் சொல்லிவிடுவான், சுத்த பாஷ்!"

"தகவல் வந்திருக்கிறதே! ஜானகியின் தமக்கை புருஷன் ஜகதீசன் என்கிறவனுக்கு நம்ம நடராஜனிடம் விசுவாசம். இவனைக் காலிப்பையன் என்கிறதாக 'எஸ்டாப்லிஷ்' செய்யப் பார்க்கிறாராம் கிழவர். அவரைத்தான் இப்போ ஒரு நாய் துரத்திக்கொண்டு உள்ளே வந்துவிட்டது. அதில்தான் அவ்வளவு கலாட்டா நாயை விரட்டினோம்.

"நன்றாகக் கடிக்கட்டும் என்று விடுகிறதுதானே!" என்றார் ஹரன்.

"கடித்தே இருக்கும், அப்பா! நல்ல வேளையாக சமயத்தில் பீரோவின் பின்னால் இருந்து..." என்ற



நடராஜன் சட்டென்று நிறுத்திக்கொண்டான். ஒரு திகில் அவன் உடலெல்லாம் பாய்ந்தது. மணி அவனை விழித்து விட்டு, "பீரோவின் பின்னால் இருந்த ஒரு கட்டை மணையை எடுத்து அடித்த பிறகுதான் அது வெளியே ஓடிப்போயிற்று!" என்று முடித்துச் சமாளித்தான்.

"அதிருக்கட்டும், யார் இந்தக் கிழவன்? நடராஜன் மீது அவ்வளவு துவேஷம் காட்டவேண்டிய காரணம் என்ன? கேட்கச் 'சுத்த பாஷ்' ஆக இருக்கிறதே!" என்றார் ஹரன்.

"இரண்டு காரணம் இருக்கிறது, ஸார்! ரயிலில் வரும் போது யதேச்சையாக நம்ம நடராஜனுக்கு அவருக்கும் இட நெருக்கடியில் வாக்குவாதம் வந்துவிட்டது. அதை மனத்தில் வைத்துக்கொண்டு இவனுக்குக் கிடைத்த ஜாகையைக்கூடக் கைவிட்டுப்போகும்படி செய்து விட்டாராம் அவர்."

"சுத்த பாஷ்! அப்புறம்?"

"அவருக்குச் சொந்தத்தில் ஒரு பையன் இருக்கிறான். அவனை ஜானகிக்கு முடிபோட வேண்டுமென்று 'பிளான்' செய்திருக்கிறார். இவர் ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ராராம். பட்டாபிராமய்யருக்குத் தூர பந்துவோ என்னவோ தெரியவில்லை."

"இருக்கட்டுமே, மிஸ்டர்! அதற்காக நம்ம பையனை இகழ்ச்சியாகப் பேசிவிட முடியுமா? உடனே பல்லை உடைப்பதில்லையா?"

"அவ்வளவு வேண்டாம்!" என்றான் நடராஜன்.

"அவர் வார்த்தை ஏறாமல் பார்த்துக்கொண்டால் போதும்," என்றான் மணி.

"சுத்த பாஷ்! நான் அப்படிப் போறவன் இல்லை, மிஸ்டர்! எங்கே இந்தக் கணபதிசுப்பிரமணிய அய்யர்!

போனால் மனுஷர் சுத்த பாஷ்-வர முப்பது நாழியா! இருக்கட்டும்; நான் முன்னாடி போய் அவரைச் சந்திக்கிறேன். அந்தக் கிழவன் பேர் என்ன?" என்று ஹரன் தமது 'வாக்கிங் ஸ்டிக்' கைத்தடவிக்கொடுத்தார்.

"நாகநாதய்யர்" என்றான் நடராஜன் மெல்லிய குரலில்.

"நான் பார்த்துக்கொண்டு வருகிறேன்" என்று அதை முன்னால் வைத்துப் புறப்பட்டார் ஹரன்.

"என்னடா மணி, வம்பு பண்ணிவிட்டாயே! அப்பா போய் ஏதாவும் கலாட்டா செய்துவிட்டால் என்னடா செய்கிறது?" என்று கவலைப்பட்டான் நடராஜன்.

"இந்தா! நீ எத்தனை நாள் இதையெல்லாம் மூடி வைக்கலாம் என்று நினைக்கிறாய்? உன் அப்பா வெளியே போனாரோ, நீ பிழைத்தாயோ என்பேன். இன்னும் பதினைந்து நிமிஷத்துக்குள் அந்த ஆந்திர மகாநுபாவர், நாகநாதய்யர் போட்டிருக்கும் சபதத்திற்கு அடிமையாகி, இங்கே வந்து சேராவிட்டால் பார்! அப்போது உன் அப்பாவும் இருந்து 'பங்காரு'வும் வெளிப்பட்டால், எப்படி இருக்கும்?"

இது நியாயமாகப் பட்டது நடராஜனுக்கு ஆனால் 'பங்காரு'வை என்ன செய்வது? இப்போது அவளை வெளியே துரத்துவது, எலியைப் பொறியிலிருந்து பூனையின் முன் அவிழ்த்துவிடுவது போலவே அல்லவா? அது தர்மமா? மேலும், அவள் அருகில் ஒளிந்திருக்க, இதர விஷயங்களைப் பேசலாகாதே! ஆகவே, இருவரும் தோட்டத்தின் பக்கம் சென்றனர்.

சற்றுமுன் சுருக்கமாகக் கூறின விருத்தாந்தங்களுடன் கூட நடராஜன்தான் ஜானகியுடன் பேசியது, கைக்குட்டை ஒன்றை எங்கோ நழுவவிட்டது; 'பங்காரு'வின் உதவியுடன் தப்பியது, சுந்தரத்துடன் மோட்டார்-வானில் சென்றது, சுந்தரராஜ தீட்சிதரைக் கிளப்பிவிட்டது ஆகிய சகல விருத்தாந்தங்களையும் சொன்னான்.



"நடராஜா! நீ சம்பந்தப்பட்ட காரியங்கள் எதுவானாலும் ஒரே அவசர அவசரமாகத்தான் நடக்கிறதுகள், பார்த்துவிட்டேன்! நீ வந்து நாலே நாள் ஆகிறது; நாலு வருஷத்துக் கதையை நடத்திவிட்டாயே!" என்றான் மணி.

"அதிருக்கட்டும்! அப்பா போய் நாலு யுகம் ஆகிறதே! எங்கே போகிறார், என்ன செய்கிறார் என்று ஒன்றுமே தெரியவில்லையே!" என்று விசாரப்பட்டான் நடராஜன்.

"நீ ஸ்நானம் செய்துவிட்டு வா. நான் ஒரு நொடியில் பார்த்துக்கொண்டு வருகிறேன்." என்று மணியும் அங்கிருந்து வெளிப்பட்டான்.

கிழப் புதுத் தெருவின் கோடியிலிருந்து மற்றொரு கோடியை ஹரன் அடையுமுன்பே, கோவிலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த பட்டாபி தம்பதியையும் ஜகதீசனையும் கணபதிசுப்பிரமணிய அய்யரையும் சந்தித்துவிட்டார். கணபதிசுப்பிரமணியம் ஹரனைப் பட்டாபிக்கும் ஜகதீசனுக்கும் தக்ஷணமே அறிமுகம் செய்து வைத்தார்.

"என்ன மாப்பிள்ளை! நீ போய் நாகநாதய்யர் திரும்பிவிட்டாரா என்று பார்த்துக்கொண்டு வருகிறது தானே? நாங்கள் பேசிக்கொண்டே போகிறோம்" என்றார் பட்டாபி.

ஹரனுடன் பேசவேண்டுமென்று ஜகதீசனுக்கு ஆசை தான் என்றாலும், அரை மனத்துடன் அகன்றுவிட்டான். இந்த கோஷ்டி டெல்லி மாநகரைப்பற்றிய பேச்சு ஸ்வாரஸ்யத்தில், பாகீரதி முன்னால் போவதையும் லட்சியம் செய்யாமலே மெல்ல மெல்ல நகர்ந்து வீட்டு வாசலில் வந்து சிறிது நேரம் தங்கூரமும் பாய்ச்சியது.

வாசலில் அகஸ்மாத்தாக வந்த ஜானகி, கணபதி சுப்பிரமணியஅய்யர் சொன்ன 'புதிய மனித'ரை முதல் முதலாகப் பார்த்தாள். 'யார் இவர்? முகஜாடையில் நமக்கு ஆப்தமானவர் ஒருவருடைய சாயல் தென்படுகிறதே' என்று சிந்தனை செய்தாள். ஓர் இன்ப ஊற்று உடலெங்கும் ஓடியது. அப்படியும் இருக்குமா? 'நடராஜனின் தகப்பனராக இவர் இருப்பாரோ?' என்று நினைத்தாள். நின்று பேச்சைக் கவனித்தாள்.

ஹரன்தான் பேசிக்கொண்டிருந்தார். எனக்கு அந்த மாதிரியான காரியங்களில் நம்பிக்கை கிடையாது. 'சுத்த பாஷ்' என்பேன். என் பையன் இஷ்டப்பட்டால்தான் சரி என்பேன்; இல்லையென்றால் எனக்கும் இஷ்டமில்லைதான்! நடராஜன்கூட இங்கேதான் இருக்கிறான். நான் எதையும் நேருக்கு நேர் பேசுகிறவன்..."

கணபதிசுப்பிரமணிய அய்யர் சமாதானமாக, "எனக்கு ஜானகியையும் தெரியும்; நடராஜனையும் தெரியும்; எங்கப்பா அடிக்கடி சொல்லுவார், வேதத்திலே எங்கேயோ என்னமோ வந்திருக்கிறதென்று; எனக்கு இப்போ சரியாக ஞாபகம் வரல்லை. அதேமாதிரி பிராப்தம் இருந்தால்தானே விவாகமும் நடக்கிறது!" என்றார்.

"நமக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கார் இங்கே மாப்பிள்ளையைப் போய்ப் பார்த்துக்கொண்டு வரும்படி அனுப்பினேனே! அவரையும் வைத்துக்கொண்டு-இருச்செந்தூர் ஸ்வாமி ஸந்நிதியாக இருக்கிறது நம்மால் ஆனதைச் செய்வோம் தெய்வபலம் இருக்கவே இருக்கிறது."

"சுத்த பாஷ்!" என்று முணுமுணுத்தார் ஹரன்.

"அதோ வருகிறாப்போலிருக்கிறதே கிழவர், மாப்பிள்ளை, உங்கள் பெண் எல்லாருமே!" என்றார் கணபதி சுப்பிரமணியம்.



அந்தக் கோஷ்டி இங்கே வந்து சேர்ந்தது. வந்ததும் வராததுமாகப் பட்டாபி, "நல்ல சமயத்துக்கு வந்தேன்! நம்ம குழந்தைக்கு இவான் பையனைக் கொடுக்கலாம்னு சொல்லிண்டிருக்கார்!" என்றார்.

நாகநாதய்யர் ஹரனை ஏற இறங்கப் பார்த்தார். "யார் இவர்? எந்த ஊர்?" என்றார் வெடுக்கென்று.

"இவான் நம்ம பக்கந்தான்; திருவையாறு இப்போ இருக்கிறது டெல்லி! பையன்கூட இங்கேதான் இருக்கிறான் அதோ கோடி வீட்டில் ஜாகையாயிருக்கிறானாம்."

புருவத்தை நெரித்துக்கொண்டார் நாகநாதய்யர். "யார்? செவத்தவனாய், உயரமாய், பட்டணத்துப் பையன் மாதிரி இருக்கிறானே, சுந்தரத்தின் வீட்டில், அவனா?" என்று கேட்டார்.

"ஆமாம்! பையன் அவனேதான்! நீங்கள்கூடப் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறேனா? பார்த்திருக்கிறேனா என்றா கேட்கிறேன்? பட்டாபிராமய்யர்வாள்! உமக்கு அந்தச் சம்பந்தம் வேண்டாம்! பாழுங்கிணற்றில் தள்ளலாம், அய்யர்வாள்! காலாடிப்பையன் ஆச்சே! இன்னொருதரம் சொல்லாதங்கோ!" என்று அதட்டினார்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றார் பட்டாபி திகைத்து.

அடி உதட்டைக் கடித்துக்கொண்டு ஹரன் கணபதி சுப்பிரமணியத்தைப்பார்த்து, "யார் இவன்? சுத்த பாஷ்!" என்று அதட்டினார்.

"நாகநாதய்யர் என்று பேர் ஆனால், ஏன் இவர் இப்படி..."

"இவர்தானே டிஸ்டிரிக் ரிஜிஸ்ட்ரார் கிடையர்ட்?"

"ஆமாம்! ஆனால் ஏன் இவர் இப்படி....?"

ஹரன் கைத்தடியை ஒரு முறை தட்டிக்கொடுத்தார். "ஏன் எப்படி என்பதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். சுத்தபாஷ்! எல்லாரும் நகர்ந்து நின்று கொள்ளுங்கள், சொல்கிறேன்! இந்தக் கிழவனை என் கைத்தடியால் இப்போ தொறுக்கித் தள்ளப் போகிறேன்! நகருங்கள் சொல்கிறேன், சுத்த பாஷ்!" என்று கர்ஜனை செய்தார்.

சந்துரு நகத்தைக் கடித்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்துபோயிருந்தான். நடராஜன் திரும்பிவிட்ட சேதி அவனை எட்டி விட்டது. வெட்ட வெட்ட முளைக்கும் மயில்-ராவணன் தலையைப்போல துரத்தத் துரத்தத் திரும்ப வரும் நடராஜன் அவனுக்குக் கவலையே கொடுத்தான். மணிவேலு வந்து பக்கபலமாகச் சேர்ந்துகொண்டான். பலாத்காரத்தால் தவிர்க்கமாட்டாத அவனை நயவஞ்சகத்தால் கவிழ்ப்பது சாத்தியமா என்று அவன் மூளை முனைந்து வேலை செய்தது. ஒரு முடிவும் காணவே, அதை நிறைவேற்ற நடராஜன் ஜாகைக்குள் நுழைந்தான். அந்தச் சமயம் புழக்கடையில் நடராஜன் ஸ்நானம் செய்துகொண்டிருந்ததும் வெகு வாய்ப்பாக இருந்தது.

"இது தருணம்" என்று பாடிக்கொண்டு அவன் வந்த காரியத்தை முடிப்பதில் ஈடுபட்டான்.

## 18

"அகஸ்தியரே! ஒருவனது வம்சத்தில் எவராவது ஒருவருக்கு ஸ்ரீ லலிதையின் மஹா மந்திரம் கிடைத்திருக்குமானால், அவ்வம்சத்தில் தோன்றும் அனைவருமே தேஜஸ்விகளாகவும், சக்திவந்தர்களாகவும், மனோபலம் பெற்றவர்களாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும், முக்தர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்."

—ஸ்ரீலலிதோபாக்யானம் அத்தியாயம்—34



நடராஜனால் புரிந்துகொள்ள முடியாத சில விஷயங்களில் முதன்மையானது, அவனுக்குக் கிடைத்த நண்பர் சுந்தரம் எப்பேர்ப்பட்டவர் என்பதே. ஒரு சமயம் அவனுக்கு அவர் பெரிய பக்தர் போலவும், திடமான தெய்வ நம்பிக்கையுள்ளவர் போலவும், சகலமும் துறந்து முருகன் பாதமே கதி என்று வந்துவிட்டவர் போலவும் தோன்றினார். நித்திய கர்மாக்களிலே அவர் வெளிப்படுத்திய சிரத்தையும் அவற்றைச் செய்வதில் காண்பித்த ஊக்கமும் இந்த நம்பிக்கைக்குப் பலம் ஊட்டின. ஆனால் ஒரொரு சமயம் எல்லாவற்றையும் தூக்கி விசிறிவிட்டு அலட்சியமாக இருந்ததை நோக்கும்போது, இவர் முன்னால் போட்டதெல்லாம் வேஷமோ என்று சம்சயித்தான். ஆயிரம், இரண்டாயிரம் என்ற தொகைகளைத் துச்சமாகப் பேசுவதிலிருந்து லட்சாதிபதி என்று நினைத்தான்; ஓரணா இரண்டணா கணக்குகளில் அதி ஜாக்கிரதையாக இருப்பதைப் பார்த்துவிட்டு, மனுஷர் சிரமதசையில் இருக்கிறாரோ என்று யோசித்தான். வெகு நேரம் இடித்த புளிமாதிரி மௌனியாக இருப்பதிலிருந்து சுறுசுறுப்பில்லாதவர் என்று செய்த தீர்மானத்தை உட்கார்ந்த இடத்திலிருந்தே அவர் பெரிய விஷயங்களைப் பற்றி அநாயாசமாகவும் அனுவனுவாகவும் அபிப்பிராயம் கூறும்போது மாற்றிக்கொண்டான். பரம சாதுவைப் போல் காணப்பட்டவர், ஆவேசம் கொண்ட ருத்ரரூபியாக மாறுவதும், மந்தபுத்தியுடன் இருப்பவர் காரியவாதியாகத் திரும்புவதும் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. அவர் யார்? பெரிய உத்தியோகஸ்தரா? அல்லது, சவுடால் பேர்வழியா? அவரை நண்பர் என்று நெருங்குவதா? நெருப்பென்று ஒதுக்குவதா? இதுகூட அவன் கையில், அவன் ஸ்வாதந்தரியத்தில் இல்லை என்பதை அவன் அடிக்கடி அறிந்து கொண்டிருந்தான்.

பெரிய வம்சத்தில் பிறந்தவர் சுந்தரம்; பெரிய பொறுப்புள்ள உத்தியோகத்தில் அதிகாரம் வகிப்பவர் தான்; துஷ்டர்களுக்கு அவருடைய சௌலப்யமும் வெண்டைப் பேச்சுமே நன்றாக அமைந்தன. 'இந்த அசடு என்ன செய்துவிடப் போகிறது; இதை அடக்கிப் போட்டாலவிட்டது' என்று அவர்கள் நினைத்த சமயந்தான் சுந்தரத்தின் வெற்றி வேளை. 'சுந்தரம் தலையை நடவிவிட்டாரே' என்று அதையடுத்து எதிரிகளின் ஏகமனதாகக் கூக்குரல் கிளம்பும்.

சுந்தரத்தின் ஒன்றுவிட்ட பெரிய தகப்பனார்தான் திருநெல்வேலி தேவி-உபாஸகர்; சுந்தரத்திடம் அத்தியந்த விசுவாசம் உள்ளவர். அவருடைய குணம் தெரிந்து பழகுபவர்.

ஸ்ரீவித்யையை உபாஸித்து மிருந்த தேஜஸ்வியாகவும் பொது ஜனங்களுக்குப் பரோபகாரியாகவும், பரம சாந்தராகவும் இருந்த அந்தப் பெரியவரைப் பார்த்த மாத்திரத்தில் பக்தியும் அன்பும் ஏற்படுவது இயல்பே என்றாலும், சுந்தரமும் அந்த உணர்ச்சிகளுக்கு வசமானாரா என்று நிச்சயமாகச் சொல்லிவிடுவதற்கில்லை. சுந்தரம் ஒருவேளை தேவி பக்தராக உட்கார்ந்திருப்பதை அவர் அப்படியே நம்பிவிடமாட்டார். வெறுமனே சிரித்துக்கொள்வார்.

ஒருவேளை உபாஸகரையே கேலி செய்து, "அம்பாளை நினைத்துக்கொள்கிறது; "என்னைக் காப்பாத்து" என்று சொல்லி, பிராணாயாமத்தை இட்டுக் கொள்கிறது. உடம்பு சரியாகப்போயிடும்" என்று விகடம் செய்வதையும் அவர் கண்டித்தவர் அல்ல. அதற்கும் வழக்கமான புன்னகைதான். "சுந்தரந்தானே சொன்னான்? அவன் எப்போதுமே அப்படித்தான். ஆனால், அவன் கையில் இருக்கிற காரியம் யாரிடம் இருக்கிறது? அம்பாள் கிருபை பரிபூரணமாக இருக்கிறதே! அவன் தாத்தா கிருஷ்ணய்யரின் மந்திரசித்தியெல்லாம்



எங்கே போயிடும்? லலிதாம்பிகை நின்று பேசுவாளே, அவருக்கு!" என்பார். உதாரணமாக, உத்தியோகத் துறையில் சுந்தரத்துக்கு ஏற்படவிருந்த மிகப்பெரிய ஆபத்துகளிலிருந்து அவர் தப்பியதெல்லாம் அந்தத் தேவியின் கடாக்ஷத்தினாலன்றி வேறில்லை என்று கதை கதையாகச் சொல்லுவார். அப்போது சுந்தரத்தின் முகபாவத்திலிருந்து அவர் அதை ஒப்புக்கொண்டாரா என்று கண்டுபிடிப்பது மிக துர்லபம்.

நடராஜன் குறிப்பிட்ட தினத்தின் காலையில் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் புறப்பட்ட சமயம் சுந்தரம் திடுதிப்பென்று தங்கிவிட்டது ஞாபகம் இருக்கலாம். அதன் காரணம் தமக்குச் சிறிது அலுவல் இருப்பதாகச் சுந்தரம் சொல்லிவிட்டார். அவர் சென்ற காரியத்துக்கும் நமது கதைப் போக்குக்கும் தொடர்பு இருக்கிறபடியால், இங்கே சுந்தரத்தைப் பின்தொடர்ந்து செல்லவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ரயிலடியில் நடராஜனைப் பிரிந்த சுந்தரம் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் சிவசங்கரன் பிள்ளையின் வீட்டை நோக்கிச் சென்றார்.

அந்தச் சமயம் சிவசங்கரன் பிள்ளை தம் இரண்டு வயதுக்குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தார். அந்தச் சின்னப்பயல் தன் இரண்டு குஞ்சுக்கால்களையும் உதைத்து, அப்பாவின் கன்னங்களிலிருந்து சதையைக் கிள்ளியெடுக்க அன்புடன் முயற்சி செய்துகொண்டிருந்தான்.

"வாருங்கள், வாருங்கள்! அடாடா! நீங்கள் இங்கே வந்திருக்கிற சமாசாரமே தெரியாதே! வீவிலே இருக்கிங்கன்னு கேள்விப்பட்டேன். எப்ப வந்தீங்க? எப்படி வந்தீங்க?" என்றார் சிவசங்கரன் பிள்ளை.

"இரண்டு கேள்வியும் பலத்த கேள்வியாகக் கேட்டுட்டா, என் மாதிரி இளைச்சவங்கள் எப்படிச்

சமாளிச்சுச் சொல்லமுடியும்! லீவுலேதான் இருக்கிறேன்; ஒரு கேஸ் விஷயமாக வேலை செய்றேன்!"

"வழக்கந்தானுங்களே உங்களுக்கு. யாரடா அவன்? காப்பி கொண்டுவாடா! பார்த்துக்கிட்டு மரம் கணக்கா நிக்கிறியே!"

"காப்பிவேண்டாம். அப்புறம், மோரும் வேண்டியதில்லை; இப்ப உங்களாலே ஆகவேண்டியது, என்கூட வரவேண்டியது; கையைக் காட்டற ஆளை பிடிச்சுக்க வேண்டியது; அவ்வளவுதான்..."

"இது என்ன பழைய புதிர் மாதிரி போடறீங்க! முன்னே சொல்லுங்க எப்ப வந்தீங்க? எங்கே இப்போ தங்கறீங்க?"

"சொல்றேன்; ராத்திரி பன்னிரண்டுமணிக்கு வந்தேன், ஒரு மோட்டார்-வானுக்குள்ளே. நம்மையும் இன்னோர் ஆளையும் கெடுபிடிக் கட்டாயமாக வைச்சுத் தள்ளிக் கதவைச் சாத்திக்கொண்டு வந்துவிட்டான் ஒருத்தன்..."

சிவசங்கரன் தம் பையனைக் கீழே இறக்கிவிட்டார். அப்பாவுக்கு ஆபீஸ் வேலை வந்துவிட்டதென்று உணர்ந்த அவன் ஓட்டமாக உள்ளே ஓடிவிட்டான். சுமார் அரை மணி நேரம் சுந்தரமும் சிவசங்கரன் பிள்ளையும் பேசிக் கொண்டார்கள். "தானே வர்றேனுங்க. அதுமாதிரி ஆள் அகப்பட்டுட்டா, பெரிய சமாச்சாரம் ஆச்சுங்களே!" என்றார் சிவசங்கரன் பிள்ளை உத்ஸாகமாக.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது என் கையிலே இருக்கிற 'எவிடென்ஸ்' போறுமா, அதன்படி பார்த்துச் செய்யுங்க முன்னாலே!"

"இதென்னங்க! முன்னாடி ஒண்ணு சொன்னீங்க. இப்ப மெல்லக் கழண்டுகிறீங்களே!" என்றார் சிவசங்கரன் சிரித்து.



"அது என் வழக்கம்" என்று முடித்தார் சுந்தரம்.

திருநெல்வேலியிலிருந்து போலீஸ்-வான் ஒன்று ஒரு மணிக்குப் பின் அதிசீக்கிரமாகப் புறப்பட்டு முப்பத்தைந்து மைலையும் இரண்டே மணிகளுக்குள் கடந்து, திருச்செந்தூர் போலீஸ் ஸ்டேஷனை வந்தடைந்தது. ஸப்-இன்ஸ்பெக்டர் குமார் எதிர்பாராத வகையில் ஸர்க்கிள் வந்திருப்பதைக் கண்டு திகைத்தார். சுந்தரத்தைப் பார்த்ததும், 'அடிக்கடி இந்த ஊரில் இவரைப் பார்த்திருக்கிறோமே, இவர் யார்?' என்று விழித்தார்.

"இவர் யார் தெரியுமா? எக்ஸைஸ் கமிஷனர், பிரசித்தி பெற்ற சுந்தரம்! கேள்விப்பட்டிருக்கிறீரா?" என்றார் ஸர்க்கிள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் உடல் சடசடவென்று சுருங்கியது! "ஸார்! ஸார்! எனக்குத் தெரியலே தெரியாதே! தெரிந்திருந்தால்..."

"தெரியக் கூடாதென்றுதானே நானே இருந்தேன்" என்று சிரித்தார் சுந்தரம்.

"நான் வரும்போது ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்களே, கான்ஸ்டபிள்களுடன்; என்ன விசேஷம்?" என்று கேட்டார் சிவசங்கரன்.

"வள்ளிக் குகை மண்டபத்தில் யாரோ ஒருவன் மயக்கமாகப் படுத்துக் கிடக்கிறானாம். பார்த்தால் அடிபட்டவன் மாதிரி இருக்கிறதாம்; பேசமாட்டேன் என்கிறானாம். அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தான்."

சுந்தரமும் சிவசங்கரனும் ஒருவரையொருவர் பார்த்துச் சமிக்ஞை செய்து கொண்டார்கள். பிறகு சட்டென்று, 'நாங்களும் போய்ப் பார்த்துவிட்டு அரை

மணியில் வருகிறோம்" என்று கிளம்பினார் ஸர்க்கிள், சுந்தரத்துடன்.

வள்ளிக் குகையில் படுத்துக்கிடந்த தங்கவேல் மூன்று முறை விழித்துக்கொண்டான். மூன்று முறையும் மயக்கம் போல் ஒன்று வந்து அவனைக் கீழே ஆழ்த்தியது. உடம்பில் அங்குலம் அங்குலமாக வலித்தது. நடந்துபோன விஷயங்கள் மனத்தில் எழும்பி எழும்பி அடங்கின. அவன் செய்த காரியம் வெளியானால், சிறைவாசம் நிச்சயம் என்றும் தெரிந்து கொண்டிருந்தான். போலீஸார் வந்து பிடிப்பதாகவே பல முறை கனாக்கள் கண்டு மிரண்டு போயிருந்தான். நான்காம் முறையாக அவன் கண் விழிக்கும்போது, நிஜமாக ஸர்க்கிள் சிவசங்கரன்பிள்ளை நிற்கவே அவன் உளறிவிட்டான்.

"நீர் யார்? எந்த ஊர்? ஏன் இங்கே வந்து படுத்தீர்?" என்று அதட்டினார் ஸர்க்கிள்.

தங்கவேல் தன் கிழிந்த ஷர்ட்டையும் உடம்பில் புடைத்துப் போயிருந்த இரண்டு இடங்களையும் மௌன மாகக் காட்டினான்.

"ஓ! யாராவது அடித்துவிட்டார்களா உம்மை?"

"ஆமாம்!" என்று தலையசைத்தான் தங்கவேல்.

ஸர்க்கிள் உத்தரவின்மீது தங்கவேல் ஒரு டம்ளர் காப்பியை இருநூறு வாயாகக் குடித்தான்; அப்புறம் பேசும் சக்தி வந்தது.

"யார் ஐயா, உம்மை இப்படிப் போட்டு அடித்தது?"

"யாரோ இரண்டு பேர். இரண்டு தடியன்கள், கறுப்பாய், குண்டாய், வந்தார்கள், அடித்துவிட்டு..."

"எப்போ நடந்தது அது?"

"நேத்து ராத்திரி பன்னிரண்டுமணி இருக்கும். நான் ஓடக்கரைத் தெருவில் போய்க் கொண்டிருந்தேன்..."



"அந்த வேளைக்கு நீர் ஏன் அங்கே போனீர்?"

தங்கவேல் இரண்டு பேரையும் பார்த்து விழித்து, மென்று மென்று விழுங்கினான்.

"தொலைகிறது: அதை யோசித்து அப்புறமாகப் புளுகலாம்; கேட்டுக் கொள்கிறோம். முன்னாடி அவர்கள் எதற்காக அடித்தார்கள் என்று சொல்லும்! உம் பணப் பையைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார்களா?"

"இல்லை" என்றான் தங்கவேல். ஏனென்றால், அவன் பணப்பையும் வைரச் சங்கிலியும் அப்படியே இருந்தன.

"பின் ஏன் அடித்தார்கள்? நீர் அவர்களை வழி மறித்தீரா?

சட்டென்று ஒரு புதிய யோசனை தோன்றியது தங்கவேலுவுக்கு, தப்பித்துக்கொள்ள அதுவும் ஒரு நல்ல மார்க்கமென்று, "அவர்கள்தான் எதையோ கொள்ளை யடித்துக்கொண்டு போனார்கள்; நான் குறுக்கே வந்து விட்டேன்..." என்றான்.

"அப்படியா சேதி? எழுந்திருந்து ஸ்டேஷனுக்கு வாரும். இந்த ஊரிலே நேத்து ராத்திரி நகைகள் திருட்டுப் போயிருக்கிறது. உம்ம சாட்சி உபயோகமாக இருக்கும்" என்றார் ஸர்க்கிள்.

"அந்த ஆள்களை இப்போது உம் முன்னாலே கொணர்ந்து நிறுத்தினால் அடையாளம் கண்டு சொல்லுவீரா?" என்று கேட்டார் சுந்தரம்.

'இருட்டு', 'சரியாகப் பார்க்க முடியவில்லை' என்று ஏதாவது சமாதானம் சொல்லலாம் என்று தங்கவேல் நினைத்திருந்தால்கூட அந்த யோசனையை அவன் கை விட்டிருக்கவேண்டும். ஏனெனில், அப்போது சுந்தரத்தின் முகத்தில் ஜ்வலித்த அசாதாரணமானதொரு களை

அவனை, "நான் கண்டு சொல்லி விடுவேன், ஸார்!" என்று சொல்லும்படி தூண்டியது.

தங்கவேலுவுடன் சுந்தரமும் ஸர்க்கிள் சிவசங்கரனும் போலீஸ்— வானில் மறுபடி ஏறிக்கொண்டார்கள்.

* * * *

பிரபலமாயிருப்பவர்களானாலும் சரி, இதரர்களுடன் சகஜமாகப் பழகி அநுகூலமாக இருப்பவர்களானாலும் சரி, அவர்களுக்கு ஒரு பட்டப் பெயர் ஏற்படுவது இயற்கையே. அந்த நியதியையொட்டித் திருநெல்வேலி தேவி—உபாஸகருக்கும் "மந்திர மாமா" என்ற பெயர் பிறந்து விட்டது. எதிரில் இருக்கும்போது வெறும் 'மாமா'வாக இது சுருங்கிக்கொண்டது. உபாஸகர் யாவருக்குமே 'மாமா'தான். அவர் பிள்ளையும் அவரை 'மாமா'வென்று தான் அழைத்தார். சுந்தரமும் 'மாமா'வென்றுதான் அழைத்தார். அதேபோல் அவர் பிள்ளை குஞ்சுவுக்கும் ஆதிகாலந்தொட்டு 'குஞ்சத்தான்' என்ற பெயர் ஏற்பட்டு யாராலும் அசைக்க முடியாதபடி ரிஜிஸ்டரும் ஆகி விட்டது.

தீக்ஷிதருக்கு உபாஸக—மாமா சொன்னாலும் சரி, குஞ்சு அத்தான் சொன்னாலும் சரி, ஸ்திரீ—வர்க்கம் சம்பந்தமான ஓர் அபிப்பிராயம் தவிர, இதர எல்லா வற்றிலும் முழு நம்பிக்கை உண்டு. ஆகவே, தம் திருச்செந்தூர் வீடுகளைச் சுப்புரத்தினம் நாகநாத அய்யரைக்கொண்டு கெடுத்துவிட்டார் என்று அறிய நேர்ந்ததும் பொங்கிக்கொண்டு எழுந்தார். திருச்செந்தூரில் நாகநாதய்யரும் சரியானபடி அகப்பட்டுக் கொள்ளவே வெளுத்துக் கட்டிவிட்டு, அந்தத் தோஷ நிவாரணார்த்தம் போல் ஸ்வாமி தரிசனத்துக்குச் சென்று விட்டார்.

நாகநாதய்யர்தான் (பாவம்) அன்று விழித்த வேளை நல்லதில்லைபோல் இருக்கிறது! எழுந்தது முதல் யார்



வாயிலாவது வசவு வாங்கிக் கட்டிக்கொண்ட வண்ணமே இருந்தார். மங்களத்தின் வாய்க்குத் தப்பி, தீக்ஷிதரின் கைத்தடிக்கு ஒதுங்கி, டைகரின் 'தீக்ஷண'மான பற்களுக்குப் பிழைத்து, ஆத்திரரின் கோபாக்னியிலிருந்து விடுபட்டு, திரும்ப வீடு வந்து சேர்ந்தார். வந்து சேர்ந்தால், அவர் ஜானகியிடம் அறிந்து கொண்டபடி அங்கே மங்களம் வந்து காத்துக்கொண்டிருந்தாள். அகாரணமாக அவள் அதற்குள் விஜயம் செய்ய மாட்டாளாகையால் ஏதோ விசேஷம் இருக்க வேண்டு மென்று ஊகித்துக்கொண்டார் கிழவர்.

"உங்களிடம் ஒரு விஷயம் சீக்கிரம் சொல்லிவிட்டுப் போக வேண்டுமென்று வந்திருக்கிறேன். திருச்சினாப் பள்ளியிலிருந்து கோபாலன் மாமனார் திடுதிப்பென்று வந்திருக்கிறார்" என்றாள் மங்களம்.

"கணபதிசுப்பிரமணியத்தானே! அவன் கிடக்கிறான்! தள்ளு" என்றார் அய்யர். அதைவிடப் பெரியதொரு செய்தியை எதிர்பார்த்தார் அவர்.

"தள்ளுகிற விஷயம் இல்லை. நம் வீட்டுக் காரியமாகத் தான் வந்திருக்கிறார். ஜானகிக்கு வரன் பேச வந்திருப்பார் போலிருக்கிறது."

"பேசிவிட்டுப் போகட்டுமே! நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"அதுமட்டும் இல்லை, மாமா! யாரோ ஒருவரையும் கையோடு கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். என்னைக் கேட்டால், முன்னையோ பின்னையோ, ஜானகிக்கு ஒரு கல்யாணம் என்று ஆகிவிட்டால் தேவலை. இந்த ஊரில் நடந்த சமாசாரம் வெளிப்பட்டால், கல்யாணமே ஆகாது!"

நாகநாதய்யருக்குப் 'பக்'கென்றது. மங்களம் தன் சகோதரிக்குக் கல்யாணமாக வேண்டுமென்று விரும்பு

கிறானேயொழிய, சந்துருவைப்பற்றிய அபிப்பிராயம் எதுவும் வைத்திருக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டார். அவரவர்களுக்கு அவரவர்கள் காரியந்தானே பெரிது? தம் மனக்கசப்பை வெளியிட்டுக்கொள்ளாமல், "எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை, மங்களம்! இப்போ நான் ஒரு விஷயம் கண்டுபிடித்துக்கொண்டு வந்தேன்; அதிலிருந்து நிம்மதி எனக்கு!" என்றார்.

"என்ன அது?"

"பெட்டி கொண்டு வந்தானே ஜானகி, அந்த ஆள் தான் நம்ம வீட்டில் ஜாகை கேட்டு வந்தான்? அப்புறம் சுந்தரத்தின் வீட்டிலும் இருக்கிறான்? அவன் வன்னல் புரிந்துகொண்டு விட்டேன். அவன் அந்த நாட்டியப் பெண்கூட இருக்கிறான்."

"என்ன?"

"'பட்லர்'க்காக இருக்கான், நான் என் கண்ணால் பார்த்து விட்டேன்!"

"எப்படி?"

"எப்படியோ செய்தேன். கண்ணால் கண்டுவிட்டு, நேரே அந்த நாட்டியப்பெண்ணின் அப்பன் கிட்டேயும் சொல்லி விட்டுத்தான் இங்கே வருகிறேன். ஹாய்! உலகம் ரொம்பக் கெட்டுப்போயிடுத்து!"— தலையை ஆட்டினார் கிழவர்.

"அதனால் நமக்கென்ன லாபம்?"

"பெரிய லாபம்! இப்போ கணபதிசுப்பிரமணிய அய்யர் எதிரிலேயே அந்தப் பயல் வண்டவாளத்தைப் போட்டு உடைக்கிறேன்."

"உடைத்தால் என்ன?"



"வரன் என்றால் நிர யோசித்து விசாரித்துச் செய்யணும், அவசரப்படப்படாது என்று சொல்றேன். நம்ம சந்துரு இருக்கிறான்; அவனைப்பற்றி ஒன்றும் விசாரிக்கவே வேண்டியதில்லை, பாரு!"

மங்களத்தின் செவிகளில் இது சமாசாரம் ஏறி அவள் முகபாவத்தில் எவ்விதமான மாறுதலை ஏற்படுத்தியது என்பதைக் கிழவர் தெரிந்துகொள்ளும் முன்பாக ஜகதீசன் வந்து நின்றான். "அடடே! எப்போ வந்தீர்கள்? மங்களம், நீ சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போனதற்கு மாமா ரொம்பக் கோபித்துக் கொள்கிறார்—என்னை!" என்றான்.

மங்களம் அதற்குப் பதில் எதுவும் சொல்லவில்லை.

"இப்பதான் வருகிறோம். ஆழ்வார்திருநகரிவரை ஒரு காரியமாகப் போனோம்" என்றார் நாகநாதய்யர்.

"அது எப்படியோ போகட்டும். உங்களை மாமா கையோடு கூட்டிக்கொண்டு வரச்சொல்கிறார். வருகிறீர்களா?" என்றான் ஜகதீசன்.

இதைத் தொடர்ந்து நாகநாதய்யரும் மங்களமும் புறப்பட்டு வந்ததும், பட்டாபிராமய்யர் முன்னிலையில் நடந்த வாக்கு வாதங்களும், கடைசியில், "நகர்ந்து கொள்ளுங்கள், சொல்கிறேன், முதலில் இந்தக் கிழவனை நொறுக்கியாக வேண்டும்" என்று ஹரன் சொன்னதும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டன. இக்கட்டான அந்தச் சந்தர்ப்பத்திலே, என்ன சொல்வது, என்ன செய்வது என்று யாரும் புரிந்துகொள்ள முடியாத நிலையிலே சற்றும் எதிர்பாராத ஓர் ஆசாமி தோன்றினார். அவர் தான் நாகநாதய்யரின் சாக்ஷாத் ஷட்டகரான சுப்புரத்தினம். ஷட்டகர்களுக்குள் எத்தனைதான் அபிப்பிராயபேதங்கள், வர்மங்கள், கோபதாபங்கள் மனத்துக்குள் இருந்திருக்குமோ, நாம் அறியோம்.

ஆரம்ப காலத்தில் ஆருயிர் நண்பர்களாகவும் ஒருயிர் ஈருடலாகவும் தொடங்கும் ஷட்டக–பரம்பரையாவது காலக்கிரமத்தில் ஒன்றோடொன்று முஷ்டி யுத்தம் செய்துகொண்டு நிற்பது உலக இயல்பே அல்லவா? இந்த இயல்புக்கு ஏற்றபடி எவ்வளவோ முறை நாகநாத அய்யருக்கும் சுப்புரத்தினத்துக்கும் இடையே சில்லறைத் தகரார்றுகள் நடந்துவிட்டன. ஆனால், மூன்றாம் மனிதரின் கைத்தடிக்கு நாகநாத அய்யரின் முதுகு இலக்காவதைச் சுப்புரத்தினம் சகிக்கவில்லை. ஆகவே, அவர் பிரவேசித்து, "நிறுத்துங்கள், சொல்கிறேன்! என்னத்துக்காக இப்போ இந்த சண்டை? என்னத்துக்காக அடிப்பது?" என்று கேட்டார்.

"தகும், ஐயா! உன் முதுகிலும் விழப்போகிறது! சுத்த பாஷ்!" என்றார் ஹரன் திடமாக.

"அடியும், சொல்கிறேன்! அடியும்! வாங்கிக்கொள்கிறேன் நான்! இவர் ஒரு வார்த்தை சொன்னார் என்றால், அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறதென்று கேட்டுக்கொண்டு அப்புறம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தெரிந்ததா? பிசகாக இருந்தால் எங்கள் இருவரையும் அடியுங்கள்!" என்றார் அவர்.

"கொஞ்சம் எல்லாருமே உள்ளே வந்துவிடுங்களேன், வாசலில் என்னத்துக்குப் பேச்சு? நாலு பேர் பார்த்தால் நன்றாயிராது" என்றான் ஜகதீசன் இடையிலே.

"நானே நினைத்தேன். என்ன அமர்க்களம் இது!" என்று ஒப்புக்கொண்டார் பட்டாபி.

அங்கிருந்தவர்களுக்குள் ஜகதீசனே வயதிலும் சரி; அதிகாரத்திலும் சரி, மிக தீனன் என்றாலும், அவன் சொன்ன யோசனையில் ரஸம் இருந்ததால், மங்களம் முதற்கொண்டு அதை ஏகமனதாக அங்கீகரித்துக்கொண்டார்கள். அவ்வளவுபேரும், எதிர் வீட்டிலிருந்தபடி



நகத்தைக் கடித்துக்கொண்டு வெகு ஸ்வாரஸ்யமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வக்கீல் குமாஸ்தா சாம்பமூர்த்தியின் ஆசையில் மண்ணையள்ளிப் போட்டுவிட்டு, உள்ளே சென்றார்கள். தீக்ஷிதர் வீட்டுக் கூடத்தின் பெரும் பகுதியில் உட்கார்ந்து கொண்டார்கள். இந்தச் சமயம் மணியும் சந்தடியின்றி வந்து ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு மேலே நடப்பதை மெல்லக் கவனித்தான். ஹரன் தம் கைத்தடியைக் கீழே வைத்தார் என்றாலும், சட்டென்று எடுத்துக்கொள்வதற்குத் தயாராக ஒரு கையை அதன்மீது வைத்துக்கொண்டே இருந்தார்.

"என்னய்யா சொல்றீர் இப்போ? என் பையன் இவருக்கு என்ன கெடுதல் பண்ணிவிட்டான்? ரயிலில் இவருக்கு இடம் கொடுக்காத குற்றம் பெரிய குற்றமா?" என்று கேட்டார் ஹரன் சுப்புரத்தினத்தைப் பார்த்து.

"அவன் சுத்த அயோக்கியன்யா! காவாலிப்பயல்! என்ன!" என்றார் நாகநாதய்யர் படபடப்பாக.

"இதற்குத்தான் அடிப்பேன் என்கிறது" என்று ஹரன் கைத்தடியை இழுத்தார். கணபதிசுப்பிரமணிய அய்யர் அந்தக் கையைப் பிடித்து அமுக்கி, "சற்றுப் பொறுங்கள்!" என்று கெஞ்சினார். பட்டாபியும் நாகநாதய்யர் முன் தம் கைகளைக் கூப்பி, "தயவு செய்து பேசாமல் இருங்கள். இங்கே ஒன்றும் அச்வமேதயாகம் நடந்துவிடப் போகிறதில்லை. சாந்தமாகத்தானே பேசுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்.

"நீங்கள் மங்களத்தைக் கேளுங்கள்! என்ன? அந்தப் பயல் பட்டணத்திலேயே இவர்கூட வந்து ரயில் ஏறினான். கேட்டுப்பாருங்கள்!"

"சுத்த பாஷ்! ரயிலில் நீர் மட்டுந்தானா ஏறலாம்? அப்படித்தான் ஏறுவான்..." என்றார் ஹரன்.

"இவன் பெட்டியை ஜானகியிடம் கொடுத்திருக்கிறாள். அவள் அதை என்னிடம் கொடுத்து, இங்கே கொண்டுவரச் சொன்னாள்."

"சுத்தபாஷ்! நீர் மாட்டேனென்கிறதுதானே?"

"மாட்டேனென்று சொல்லியிருந்தால் இந்தக் குட்டெல்லாம் உடைந்திருக்குமா? பட்டாபி! உம்ம பெண்ணைக் காலேஜில் சேர்த்தீரே, அது மகா முட்டாள் தனம்! என்ன?"

"என் பிள்ளையைச் சொல்லிவிட்டு, அவர் பெண்மீது பாய்ந்துவிட்டீரோ! சுத்த பாஷ்!"

"பாய்கிறதென்ன! அந்தப் பெட்டியில் அவ்வளவு கேவலமான கடுதாசிகள் இருந்தன என்கிறேன்!"

"நீர் கேவலமான மனிதன் ஆனதினாலே அதைப் படித்து விட்டு வைத்துக்கொண்டீரா?" பல்லைக் கடித்தார் ஹரன். தம்பிள்ளை உண்மையிலேயே என்ன பிசகு செய்திருந்தாலும் அவர் நாலு பேர் முன்னிலையில் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை!

"என்ன கடுதாசி? உம்? என்ன கடுதாசி? யார் கடுதாசி? எங்கே, இப்படிக் கொண்டுவரச் சொல்லு!" என்று துடித்தார் பட்டாபி.

"இனிமேல் நான் எதையும் மறைக்கப் போவதில்லை. நன்றாக உடைத்துவிடப் போகிறேன். ஆமாம்! என்ன? உங்கள் பெண் எழுதின காதல் கடிதாசிகள்-இவர் பிள்ளைக்கு எழுதின மையல் விகிதங்கள்!"

"எங்கே என்னிடம் காட்டும்!"-பட்டாபிக்கு முகம் சிவந்து விட்டது... கோபத்தில் உதடு துடித்தது.

"அது இருந்தால் காட்டமாட்டேனா, கேழ்க்கிறதற்கு முந்தி? அது காணாமல் போகக்கொண்டுதானே கையொடித்த மாதிரி இருக்கிறேன்!"



"திருட்டுக் கிழப்பயலே, சுத்த பாஷ்! பொய் எல்லாம் சொல்கிறாயா? உன் கையை உடைக்காவிட்டால் பார்! எப்போ கடுதாசி இல்லையோ ஏன் அதைப்பற்றி இங்கே பேசறே?" இந்தத்தடவை ஹரன் அடித்தே இருப்பார்; மறுபடி சுப்புரத்தினம் குறுக்கிட்டுவிட்டார்.

"அவசரப்பட வேண்டாம்! கடுதாசி அவரிடம் இல்லையேயொழிய இல்லாமலேயே போய்விடவில்லை! என்னிடம் இருக்கிறது!" என்றார்.

"உம்மிடமா?" நாகநாதய்யர் திடுக்கிட்டுத் திரும்பினார்.

"ஆமாம்! நான் முன் ஜாக்கிரதையாக அந்தக் காரியம் செய்தேன். எப்போ இவருடைய பையன் என் வீட்டில் ஜாகை கேட்டானோ, அப்போதே இந்தப் பெட்டிக்கும் அடி போடுவான் என்று ஊகித்துக்கொண்டேன். பெட்டியில் முக்கியமாக இருந்தது ஜானகி எழுதின கடுதாசிகள், அவைகளை எடுத்து..."

"எடுத்து என்ன பண்ணினே?" நாகநாதய்யர் உள்ளம் பாதி சந்தோஷத்திலும் பாதி பயத்திலும் துடித்தது. கைகால்கள் பதறின.

"எடுத்து, புழக்கடைப் பிறையில் ஒரு பள்ளம் இருக்கிறது அதனுள் ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன்! எங்கேயும் போகாது!"

நாகநாதய்யர் இரு கைகளையும் உயரத் தூக்கினார். "ஹேபிரபோ! ஷண்முகம்! என்னைக் காப்பாற்றினாயடா! மங்களம்! பார்த்துக்கொள்!" என்றார் சந்தோஷம் பொங்க.

"சுத்த பாஷ்!" என்றார் ஹரன்.

"என்ன மங்களம், உனக்கு இதெல்லாம் முன்னே தெரியுமா?" என்றார் பட்டாபி.

"அதைச் சொல்லத்தான் அப்பா, நானும் நாகநாத மாமாவும் தேற்றுப் புறப்பட்டு ஓடி வந்தோம்!"

பட்டாபியின் முகத்தில் சிறிது வெளிச்சம் தென்பட்டது. 'ஓஹோஹோ! மெல்லப் புரிகிறாப்போல் இருக்கிறதே!' என்று எண்ணித் தமது பார்வையைச் சுற்றிலும் ஓட்டினார். அங்கிருந்து நழுவிவிடலாமென்று பிரயத்தனம் செய்துகொண்டிருந்த ஜகதீசன் கண்ணில் பட்டுவிடவே, "மாப்பிள்ளை! உமக்கு இவர் பையனைத் தெரியும் என்று சொல்லவில்லை?" என்று கேட்டார்.

"தெரியும் என்றால்—அதாவது—சுமாராகத் தெரியும், ஆளைத்தெரியும் என்று சொன்னேன்."

"மற்றபடி இந்தச் சமாசாரங்களில் ஒன்றுமே தெரியாதா?"

"தெரியும். ஆனால் அவ்வளவாகத் தெரியாது. அதாவது, ஏதோ ஒரு விதத்திலே ஜானகிக்கு மனத்திலே ஒருவித அதாவது, மங்களத்துக்கு இதுபிடிக்கலைன்னு..."

"உஸ்... உம்மைக் கேட்டு நான் தெரிந்துகொள்ற தற்குள்ளே அச்வமேத யாகம் செய்துவிடலாமே!"

நாகநாதய்யர் குறுக்கிட்டு, "ஜகதீசனுக்கு இதில் ஏதோ உண்டு. ஆமாம்! இல்லாவிட்டால் அன்னைக்கு மங்களத்தின் பெட்டியைக் குடைந்துவிட்டுத் திருட்டு முழி முழிக்கமாட்டான். போகட்டும். கடுதாசிகளைப் போய்க் கொண்டுவரணுமே! நீதான் போயேன், சுப்புரத்தினம்!" என்றார்.

கணபதிசுப்பிரமணியஅய்யர் நிலைமையை மேலும் விஸ்தரிக்க விரும்பாதவராக, "என்னத்துக்குன்னா, அதெல்லாம் விடுங்கள் அதோடு!" என்றார் சமாதானமாக.

"சுத்தபாஷ்! கொண்டுவரட்டும், சொல்கிறேன். இந்த மனுஷன் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு,



தப்பித்துக்கொள்ள முடியாது என்னிடம்!" என்றார் ஹரன்.

சுப்புரத்தினம் மேலும் தயங்கினார். அங்கிருந்து அவர் நகர்ந்தால், நிச்சயம் ஹரன் தம் கைத்தடியால் நாகநாதய்யரை இரண்டு தட்டாவது தட்டாமல் விடமாட்டார் என்று பயந்தார். நம்பகமாக யாரை அனுப்பி அதைக் கொண்டுவரச் சொல்லலாம் என்று யோசித்தபோது, வாசற்படி வழியாக முத்துச்சாமி தனது தலையை நீட்டினான்.

"இங்கே வா, முத்துச்சாமி!" என்றார் சுப்புரத்தினம்.

"என்னையா கூப்பிட்டேள்?"

"நீ சும்மா இரு!" என்று அவரை அடக்கிவிட்டு நாகநாதய்யரே முத்துச்சாமியை, "ஏ செவிட்டுப் பிணமே!" என்று அழைத்தார்.

"ஏன்?"

"இவர் வீட்டிற்குப் போய்விட்டு வாடா, இப்போதே போடா!"

"போகிறேன், ஸார்! ஏன் கத்தறேள்? மெல்லப் பேசுங்கோ!"

நாகநாதய்யர் இடி போன்ற குரலில் சுப்புரத்தினம் ஒளித்து வைத்திருந்த இடத்தை அவனிடம் விவரித்தார். காகிதங்களைக் கொண்டு ஓடிவரச் சொன்னார்.

"அதென்ன, ஊறுகாயா?"

"இல்லை, காகிதக்கட்டு."

"ஓ! காகிதக்கட்டு என்று சொல்கிறீர்களோ என்று நினைத்தேன்."

"அதுவேதான். காகிதக்கட்டு என்றுதான் சொல்றேன்."

"காது கேட்டுவிட்டது."

"எப்படிக் கேட்டது?"

"சரியாகக் கேட்டது. எடுத்துக்கொண்டு நொடியிலே வரேன்" என்று முத்துச்சாமி கிளப்பினான்.

பட்டாபிராமய்யர் ஒரு கனவிலிருந்து விழித்துக் கொண்டவர் போல் தோன்றினார். அடுக்களைப்பக்கம் உறுத்துப் பார்த்து, "ஏ மங்களம்! எங்கே அவள் ஜானகி கூப்பிடு இங்கே என்றார்.

மங்களம் வீடெங்கும் தேடினாள். கிணற்றைறக்கூட எட்டிப்பார்த்தாள். ஜானகியை எங்கே காணோம்!

"எங்கே ஜானகி?" என்று பட்டாபி கேட்ட ஒரு நிமிஷத்துக்குள், மணி வந்தது போலவே சந்தடியின்றி நழுவிவிட்டான். "எங்கே நடராஜன்?" என்று ஹரன் கேட்குமுன் போகவேண்டுமென்றே அவன் அப்படிச் செய்தான். அம்மாதிரியானதொரு நோக்கம் ஹரனுக்கு ஏற்பட்ட சமயம் சந்துரு அட்டகாசமாக அங்கே நுழைந்தான். அவன் நடராஜனைப் பற்றிய ஒரு புதிய—பொல்லாத-தகவல் கொண்டுவந்திருந்தான். அது அவ்வளவு பேரையும் திடுக்கிட வைத்துப் பின் ஒரு நிமிஷம் ஸ்தம்பிக்கவும் செய்தது.

எடுத்ததற்கெல்லாம் 'சுத்த பாஸ்' என்று சொல்லும் ஹரன்கூட அதைக் கேட்டு வாயடைத்துப் போனார்!

# 19

"...இழுப்பும் வலிப்பும் எதிர்ப்பும் வந்தன
அடியும்பிடியும் சுடியுமாயின
மனிதப் பிறவியில் வந்தவராமென்று
எள்ளளவேனுமோர் எண்ணமிலாதவர்
கொண்டை பற்றிச்சண்டை செய்தனர்
மண்டை ரத்தம் வடியவிட்டனர்......"

—கவிமணி ஸ்ரீதேசிக விநாயகம் பிள்ளை



மனிதர்களுக்கு எதிர்பாராத வகையில் செல்வாக்கு உண்டாவது போலவே, சில வீடுகளுக்கும் எதிர்பாராத வகையில் பல பேர் விஜயம் செய்யும் பாக்கியம் ஏற்பட்டுச் சுறுசுறுப்பான நடவடிக்கைகளுக்குக் காரணமாயிருக்கும் கிரஹ நிலை லபிப்பது உண்டு. அம்மாதிரியானதொரு வேளை திருச்செந்தூரில் ஏககாலத்தில் இரு வீடுகளுக்கு ஏற்பட்டிருந்தது. ஒன்று தெருவின் நடுவில் இருந்த பட்டாபிராமய்யர் குடும்பம் எடுத்துக்கொண்டிருந்த ஜாகை; மற்றொன்று, தெருக்கோடியிலே சுந்தரம் தங்கியிருந்த வீடு. இவைகளுக்குள் வித்தியாசம் என்னவென்றால், முதல் குறிப்பிட்டதில் கூட்டம் ஒரு மிக்கக் கூடியிருக்க, இரண்டாவதில் ஒவ்வொருவராக வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவ்வளவே!

காலையில் நடராஜனும் மணியும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற சமயந்தான், நாட்டிய மாது 'பங்காரு'வைக் கண்டார்கள். அப்புறம் ஹரன் சென்றார்; அவர் ஸ்நானத்திற்குக் கிணற்றடிக்குப் போய்த் திரும்புவதற்குள்தான் நாகநாதய்யரும் டைகரும் போட்டி போட்டுக்கொண்டு வந்து போனார்கள். அவர்கள் படலம் முடிந்தபின் ஹரனும் மணியும் அங்கிருந்து வெளியேற, சந்துரு கெட்ட எண்ணத்துடன் வந்தது ஞாபகம் இருக்கலாம். அவன் செய்த காரியத்துக்குச் செந்தில் ஆண்டவனும் மற்றும் நம் கதாபாத்திரங்களில் ஒரே ஒருவருமே சாட்சியாகையால், நாமும் அதைப் பின்னொரு சந்தர்ப்பத்தில் வெளியிட்டுக்கொள்வதே சிலாக்கியம். வந்த காரியம் முடிவு பெற்று வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிடலாம் என்று சந்துரு நினைத்தபோது, நடராஜனே அவனைப் பார்த்துக்கொண்டு கூடத்துக்கு வந்துவிட்டான்.

"அடேடே! என்ன ஆச்சரியம் இது! கூடத்தில் யாருமில்லாத சமயத்தில் இப்படித் தாங்கள் வந்து காத்திருப்பது நம்ப முடியாததாக இருக்கிறதே!" என்றான் நடராஜன் எதற்காக இவன் வந்திருக்க வேண்டும் என்று

அவனால் ஊகிக்க முடியவில்லை. எனவே, நாற்புறமும் பார்த்துவிழித்தான்.

"ஒன்றும் பயப்படவேண்டாம், மிஸ்டர்! அன்றிரவு நீங்கள் பெட்டியை அடித்துக்கொண்டு போக யாருமில்லாத வேளையில் என் வீடு தேடி வந்தீர்களே, அப்படி ஒரு காரியத்துக்காக நான் வரவில்லை; இந்தச் சந்துருவின் காரியங்கள் எல்லாம் வெட்ட வெளிச்சத்தில் நடக்கும்!" என்றான் சந்துரு சவுடாலாக.

"அவருடைய கையாட்கள்தான் இருட்டு வேளையில் வேலை செய்வார்களாக்கும்!" என்றான் நடராஜன்.

"நீர் சொல்வது எனக்குப் புரியவில்லை, மிஸ்டர்! எனக்குக் கையாட்களும் கிடையாது, காலாட்களும் கிடையாது."

"அதெப்படியோ போகட்டும், திருநெல்வேலி ஆஸ்பத்திரியில் என்னைத் தேடாமல் இந்த ஏழையின் வீடு தேடி வந்த காரணம் என்ன?"

"வாஸ்தவம் உங்களுக்குக் கோபம் வருவது நியாயம் தான். நான் இப்போது வந்து உங்களுடன் சண்டை போட்டுக் கொள்வதற்கல்ல. உங்கள் நண்பர் மணி வந்திருந்தார்; அவருடன் சிறிது நேரம் பேசியபின், நான் பழைய சந்துருவே இல்லை; என் மனசு மாறி விட்டது."

"அடேயப்பா! மணியின் சக்தியை நான் எப்படிப் புகழ்வேன்?"

"பரிகாசமே இல்லை! அவரைப்போல் நானும் ஏன் உண்மை நண்பனாக இருக்கக்கூடாது என்று நினைத்து விட்டேன். யோசித்துப் பார்த்தால், நமக்குள் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை! இதில் சண்டையென்ன, சச்சரவென்ன!"

"ஏதோ கதா காலட்சேபத்தைக் கேட்டுவிட்டு வந்து என்னிடம் ஒப்பிக்கிறீர்கள், ஸார்!"



"அப்படித்தான் தோன்றும். ஆனால், என் மனசை வேறெப்படித் திறந்து காட்டுகிறது! வரும்போதே நினைத்தேன், என் வார்த்தையில் நம்பிக்கை விழாதென்று! எப்போது ஜானகிக்கும் உங்கள் பேரில் பாசம் உண்டென்று தெரிந்ததோ, அந்த நிமிஷமே என் விரோத பாவத்தைக் கைவிட்டுவிட்டு, இனிமேல் உங்களுக்கு உதவி செய்கிற தென்று தீர்மானித்துவிட்டேன்!"

"பேஷ்! பேஷ்! எத்தனை அதிர்ஷ்டம் எனக்கு!"

"எப்படிக் கேலி செய்தாலும், என் உறுதியில் நான் தவறப் போகிறதில்லை. இதைச் சொல்லிவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன். ஒன்றுமட்டும் நிச்சயமாக நம்புங்கள். இங்கிருந்து ஒரு பண்டத்தையும் நான் எடுத்துக்கொண்டு போக வரவில்லை!" என்றான். பிறகு நில்லாமல் வேகமாக வெளியேறினான்.

நடராஜனுக்குச் சிறிது நேரம் குழப்பமாக இருந்தது. சந்துரு எதற்காக வந்தான்? அவன் கொண்டுபோக விரும்பும் பண்டம் எதுவும் அந்த வீட்டில் இல்லையே! அவன் சொன்னதெல்லாம் நிஜமாக இருக்குமா? ஒருகால் இருந்தாலும் இருக்கலாம்; இவன் மாதிரி துஷ்டர்கள் எதிர்பாராதபடி நல்ல காரியங்களில் முனைவதும் உண்டு தான்! இப்படியாக மணி போன பிறகு நடராஜன் பலவிதச் சிந்தனைகளில் ஆழ்ந்தான்.

அவனுடைய யோசனைகள் திடீரென்று கலைந்தன. வீட்டிற்குள் இப்போது நுழைந்துகொண்டிருந்த உருவம் அவன் தலையைச் சுற்ற வைத்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். அவன் கனவிலும் எதிர்பாராத அதிசயம் ஆயிற்றே அது? திருச்செந்தூருக்கு வந்து ஒரே முறை ஏற்பட்ட சந்தர்ப்பம் மறுபடி இங்கே ஏற்படுகிறதே, என்ன காரணம்? ஜானகிதான் நுழைந்துகொண்டிருந்தாள், பரபரப்பாக, தன்னையே மறந்துபோய் நின்றான் நடராஜன்.

"உட்கார்ந்து பேச நேரமில்லை. நான் உடனே திரும்பியாக வேண்டும். உங்களிடம் சொல்லாமல் இருக்கக்கூடாதென்று ஓட்டமாக வந்தேன். எங்கள் வீட்டில் பெரிய அமர்க்களம் நடக்கிறது" என்றான். ஜானகி மேல்மூச்சு வாங்க அந்த நிலையிலே அந்தச் சுந்தரியைப் பார்த்த நடராஜன், அவள் சொன்னதைக்கூட காதில் வாங்காமல், சொக்கிப் போனான். இவளுக்காகத் திருச்செந்தூர் வருவது ஒரு பெரிசா குண்டர்கள் கையில் சிக்கி அடிபடுவது ஒரு பிரமாதமா? மோட்டார்-வானில் அடைபடுவது ஒரு லட்சியமா?

"பெரிய அமர்க்களம் நடந்துகொண்டிருக்கிறது!"

"சும்மா நடக்கட்டும் ஜானகி, இப்படிச் சற்று உட்காரலாமா?"

"இது சமயம் இல்லை. உங்கப்பாவைப் பார்த்தேன்; ஏகக் கூச்சல் போடுகிறார். நாகநாதய்யரை இதற்குள் அடித்திருப்பாரோ என்னவோ; பயமாயிருக்கிறது. நீங்கள் அங்கே வாருங்களேன்."

"கொஞ்சம் அடித்தால்கூட நாகநாதய்யருக்கு நல்லது தான். அப்பா இப்படித்தான் முன்னே ஒரு தடவை ஓர் ஊமை ஜோஸ்யனை நொறுக்கித் தள்ளிவிட்டார். நாலு தரம் மரியாதையாகப் பேசினார்; அவன் தூக்கி எறிந்தாப் போல் ஜாடை செய்யவே, ஒரு கழியை முரித்து விட்டார்."

"ஐயையோ! அப்புறம்...?"

"அப்புறம் இன்னொரு தடவை ரயிலடியில் நடந்தது. அப்பா பேரில் பிசகேயில்லை. இந்த நாகநாதய்யர் மாதிரியே ஓர் ஆள், இரண்டு பெண்கள் தனியாக வருகிறார்களென்று ஒரு மாதிரியாகப் பேசிக்கொண்டு வந்தான். அப்பா வாக்குவாதமே வைத்துக்கொள்ள வில்லை. 'பளார் பளார்'னு நிறுத்தாமல் கொடுத்துட்டார். ஆள் அடங்கிவிட்டான்."

"அதனால் இப்போ..."



"நாகநாதய்யர் அவருக்குக் கண்டைக்காய்! அதோடே பூண்போட்ட 'வாக்கிங்-ஸ்டிக்' வேறே கொண்டு போயிருக்கிறாரா?"

"எனக்குப் பயமாயிருக்கிறதே!"

"பயம் ஒன்றுமில்லை. தவிர, மணி என்ற சிநேகிதன் வந்திருக்கிறான். அவனும் கூடப்போயிருக்கிறான். அப்பா வுக்குக் கைவலிக்கும்போல் இருந்தால், அவன் வாங்கிக் கொள்ளுவான் தடியை!"

"நான் அதற்குச் சொல்லவில்லையே! வாக்குவாதம் அதிகமாகப் போய் நம் சமாசாரங்களில் சில வெளியாகி விட்டனவே! இன்னம் என்ன தெரிந்துபோகுமோ. அதல்லவா பயமாக இருக்கிறது!"

"அப்பாவிடம் ஒரு சில விஷயங்களை நாங்களே சொல்லிவிட்டோம்; அதனால் பயம் இல்லை" என்றான் நடராஜன்.

"அப்பா என்றால் உங்கள் அப்பாவைச் சொல் கிறீர்கள்; எங்கப்பாவைப்பற்றி அல்லவா எனக்கு இப்போ பயமாக இருக்கிறது!"

"அதுவும் பயப்பட வேண்டாம்; இப்போதுதான் சத்துரு என்கிறவன் வந்து பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போனான். 'இதுவரையில் நான் செய்ததெல்லாம் பிசகு; அறியாமல் செய்துவிட்டேன். இனிமேல் உங்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைக்கிறதற்கு என்னவெல்லாம் உண்டோ, அவ்வளவையும் நான் செய்கிறேன்,' என்கிறான்."

"நீங்கள் நம்புகிறீர்களா இதை? சத்ருக்கள் வணக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டால் ஆபத்தல்லவா?"

"சத்துருவை நாம் சத்துரு என்று சொல்லிவிட முடியுமா? காலேஜில் நமக்குத் தெரிந்தவன் தானே!"

"என்ன இருந்தாலும், என் அக்கா சும்மா இருக்க வேண்டுமே, அத்திம்பேர் உணராமல் இருக்கவேண்டுமே என்று பயமாக இருக்கிறது."

"கொஞ்சம் கொஞ்சம் விஷயம் வெளிவந்தாலும் கூடப் பயப்பட வேண்டாம்; உதவியாகக்கூட இருக்கும் என்று நினைக்கிறேன். மணி சொன்னதிலிருந்து, எனக்கு ஒரு புதிய விஷயம் தெரிகிறது. எங்கப்பா இங்கே வந்திருப்பதே உங்கப்பாவைக் கண்டு நம் கல்யாண விஷயமாகப் பேசுவதற்குத்தானாம்! ஒருகால் அவர்கள் இப்போதே அதைத்தான் பேசிக்கொண்டிருந்தாலும் இருப்பார்கள். கணபதிசுப்பிரமணியம் வேறு இருக்கிறாரே! கொஞ்சம் இப்படி உட்கார்ந்தால் என் மனசு நிம்மதியாக இருக்கும்!"

ஜானகியுடன் சிறிது நேரம் உட்கார்ந்து பேசவேணும் என்ற ஆதுரத்தைத்தான் நடராஜன் பேச்சு வெளியிட்டதே ஒழிய, அவன் உள்ளத்தின் ஆழத்தில் இருந்த கவலையை அது அம்பலப்படுத்தவில்லை. எல்லாம் நன்றாக முடிய வேண்டுமே என்ற திகில் அவன் நெஞ்சிலும் வாசம் செய்துகொண்டுதான் இருந்தது.

ஜானகி சட்டென்று, "நான் உட்காருகிறதற்கில்லை. உங்களிடம் சொல்லி, அங்கே வரச்சொல்ல வேண்டுமென்று ஓடிவந்தேன். நான் இங்கே வந்த சமாசாரமே யாருக்கும் தெரியாதே! ஒருகால் இப்போதே என்னை அங்கே தேடிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ!" என்றாள் கவலையுடன்.

"ஆமாம்! உங்களைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்! சீக்கிரமாகப் போங்கள்!" என்று கேட்டது ஒரு குரல். இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். மணிதான் வந்திருந்தான்.

"என்ன நடக்கிறது அங்கே?" என்று ஏக காலத்தில் நடராஜனும் ஜானகியும் விசாரித்தார்கள்.



அதற்குப் பதில் சொல்லாமலே, "நீங்கள் இங்கே வந்த சமாசாரம் தெரியவேண்டியதில்லை யாருக்குமே! உடனே போங்கள்!" என்று மணி ஜானகியை முன்னாடி அனுப்பினான். அவள் போன பிறகு, "போடா, முட்டாள்! ஒரு காரியத்தை எவ்வளவு கெடுக்க முடியுமோ அவ்வளவும் கெடுத்துவிட்டாயேடா! ஹூம்!" என்றான்.

"நான் என்ன கெடுத்தேன்?"

"பாக்கி என்ன வைத்திருக்கிறாய்? பார்த்துப் பிடித்து நாகநாத அய்யரைப் பொறுக்கிச் சண்டை போட்டுக் கொண்டாயே; அது ஒன்று போகாதா? அவர் கையில் கடுதாசிகளை வைத்து உன் பெட்டி போய்ச் சேரும்படி செய்து, அங்கேயே ஜானையும் போய்த் தேடினாய் பாரு! வெகு அழகு!"

"இப்போ என்ன ஆய்விட்டது?"

"ஆய்விட்டதென்ன? எல்லாம் அம்பலமாகிறது! ஜானகியின் பெயர் அடிபடுகிறது. உனக்கு அவள் போட்ட கடுதாசிகள் வெளி வரப்போகின்றன."—மணி நடப்பதை விவரமாகச் சொன்னான். நடராஜன் தவித்துத் தண்ணீராக உருகினான்.

"நான் செய்ய வேண்டியது என்ன, சொல்லேன்? மாயவரத்திலிருந்து வந்து நீ வண்ணாத்தை மாதிரி இருந்தால் என் கதி என்னடா ஆகிறது?" என்று கேட்டான்.

"எனக்குத் தோன்றுகிறது. எது நடந்தாலும், அது நடக்கிற இடத்திலே நாமும் இருந்துவிடுகிறதுதான் சிலாக்கியம். தலைக்கு மேல் வெள்ளம் ஓடப் பார்க்கிறது. உன் அப்பாவின் கைத்தடி நாகநாதய்யர் மேல் விழப் போகிறதோ, அல்லது உன்மேலேயே விழப்போகிறதோ, இப்போது சொல்வதற்கில்லை!"

"என்மேலேயே விழட்டும், வா, சொல்கிறேன்! சீக்கிரம் அங்கே போயாவது பார்க்கலாம்!" என்று

துடித்தான் நடராஜன். ஜானகியின் எதிரில் தன் மனக் கலக்கத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டான். என்றாலும், இப்போது முடியவில்லை.

வாசற்படியின் குறுக்கே ஆத்திரர் என்றார்! ஏமி! எக்கட வெள்ளுதாரு! துஷ்டக் கும்பலா! என்று கேட்டார்.

"வழியை விடும்!"

"வழியை விடுகிறேன்! எங்கே என் 'பங்காரு?' ஏன் அவளை இங்கே வைத்திருக்கிறாய்? சொல்லிவிட்டுப் போ அப்பாலே!"

"நான் வைத்திருக்கவில்லை. அவளாத்தான் வந்திருக்கிறாள்; அவள் உம்முடன்கூட எங்கும் வரத் தயாராயில்லை."

"நான்கூடத்தான் அவளை அழைத்துக்கொள்ள தயாராயில்லை!"

"பின் ஏன் இப்படி வழியை மறித்து உபத்திரவப் படுத்துகிறீர்? எங்களுக்கு போகவேண்டும். வெளியே போய் சொல்கிறேன்!"

ஆத்திரர் வெட்டுகிறாப்போல பார்த்தார். "நீ போ! என் மகள் உள்ளே இருக்கிறபோது நீ யார் என்னைப் போகச் சொல்ல? அவள்கூட நாலு வார்த்தை கேட்காமல் போவேனா!" என்று முண்டிக்கொண்டு உள்ளே செல்ல முயன்றார்.

"நடராஜன்! நம் காரியம் மிஞ்சிக்கொண்டு வரும் போது இந்த ஆத்திரரின் குடும்பத் தகராறில் தலையிட அவகாசம் இல்லை. அவராச்சு, அவர் பெண்ணாச்சு! அவர்களுக்குள் சண்டையை— எப்படியோ தீர்த்துக் கொள்ளட்டும் வா. நாம் போய்விட்டு வரலாம்!" என்றான் மணி.

"புறப்பட்டுப் போகிறோம் என்றால், வாசற்கதவை என்ன செய்கிறோம்! இந்த மனிதரும் இவர் பெண்ணும்



ஒன்றுசேர்ந்து கொண்டு திறந்து போட்டுவிட்டு வெளியேறி விட்டால், சுந்தரம் வந்து கேள்வி கேட்கும்போது நான் அல்லவா ஜவாப் சொல்ல வேண்டும்?" என்றான் நடராஜன். கதவை இழுத்துப் பூட்டும் முயற்சியிலும் ஈடுபடலானான்.

அதற்குள் 'பங்காருவே உள்ளிருந்து தலையை நீட்டினாள். "நீங்கள் கவலை இல்லாமலே போங்கள், சொல்கிறேன். அந்த ஆறுமுகனே வந்து போகச் சொன்னாலும் நான் இவர்கூட போகமாட்டேன். நீங்கள் வருகிறவரையில் இங்கேயேதான் இருப்பேன்!" என்றாள்.

"ஹ! இவளை என் வீட்டுக்கு லேநே இனிமேல் அழைத்துக்கொண்டு போவேனா! நாலு வார்த்தை கேட்டுவிட்டு வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொண்டு 'விட்டதுசனியன்' என்று திரும்புவேன்! கைவீசிக்கொண்டு ராஜா மாதிரி போவேன்! ஹ!" என்றார் ஆத்திரர்.

"நீ வா சொல்கிறேன், நடராஜா! இந்தக் கூத்தெல்லாம் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம்!" என்று மணி நடராஜன் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு சென்றான்.

எல்லாம் துரிதப்போக்கில் சென்றுகொண்டிருக்கும் இந்த உலகத்தில் இப்போது நாம் ஒன்று சொல்கிறோம்; மறு நிமிஷமே அது பொய்த்துப் போகிறது. அப்படி ஆகும்போது, 'அப்படிச் சற்று முன்பு சொன்னோமே இப்படி வேறு விதமாக ஆகிறதே' என்று சிந்தித்துப் பார்க்கக்கூட நமக்கு அவகாசம் இருப்பதில்லை. 'பங்காரு'வும் ஆத்திரரும் செய்த சப்தங்கள் அடங்கி மூன்றாவது நிமிஷமே அவர்கள் இருவரும் புழக்கடை வழியாக ஓடும் அவசரம் ஒன்று நேர்ந்துவிட்டது. ஒரு போலீஸ் வான் வீட்டு வாசலில் வந்து நிற்க, அதனின்று ஸர்க்கிள் சிவசங்கரன் பிள்ளையும் சுந்தரமும் இறங்கினார்கள்.

"நடராஜன் உள்ளே இருப்பான், வாருங்கள், வாசற்கதவு திறந்திருக்கிறது" என்றார் சுந்தரம்.

வள்ளிக் குகையிலிருந்து சுந்தரம் ஸர்க்கிளுடனும் தங்கவேலுவுடனும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தபோது, நகைகளைத் திருட்டுக் கொடுத்ததாகச் சொல்லப்படும் மிஸ் ஜகத்தை அங்கே கண்டார். காலையிலிருந்தே அந்த அம்மாள் அங்கேதான் இருப்பதாகவும், குடைந்து குடைந்து போலீஸார் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் கூடியவரை கோவையாகப் பதில்கள் ஜோடித்துத் தந்து கொண்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டார். தங்கவேலுவைக் கண்டதும் மிஸ் ஜகம் துணுக்குற்றாள்.

"என்ன! உங்கள் இருவருக்கும் ஏற்கெனவே பரிசயம் உண்டுபோல் இருக்கிறதே!" என்றார் சுந்தரம்.

"இந்த அம்மாள் என் தங்கைதான்!" என்றான் தங்கவேலு. அதை மறைப்பதால் பிற்பாடு கெடுதல்தான் ஏற்படும் என்று அவன் உள்ளுணர்வு எச்சரித்தது.

"அடா! என்ன ஆச்சரியம்! தங்கை நகைகளைத் திருட்டுக் கொடுத்த அதே இரவில் உங்களுக்குத் திருடர்கள் கையால் அடி விழுகிறது! இப்படி இருவர் ஜாதகமும் ஒத்துக்கொள்வது அபூர்வமாயிற்றே!" என்று கேலி செய்தார் சுந்தரம்.

"ஏன், ஐயா! நீர் வந்து, அந்தத் திருட்டுப் பயல்கள் எதையோ திருடிக்கொண்டு போகும்போது குறுக்கிட்டு விட்டதாகவும் அதற்காகவே அவர்கள் உங்களைத் தாக்கினதாகவும் சொன்னீரே, இந்த நகைகளாக இருக்குமோ அது?"

"நான் அதை எப்படிச் சொல்லமுடியும்?"

"முடியாது, முடியாது!" என்றார் சுந்தரம். அவர் யதார்த்தமாகச் சொல்கிறாரா, கேலி செய்கிறாரா என்பது யாருக்கும் விளங்கவில்லை. இன்னும் இங்கே நின்று பேசிக் காலதாமதம் செய்வதில் உபயோகமில்லை என்ற ஸர்க்கிள் ஸப் இன்ஸ்பெக்டரிடம், "இவர்கள் இங்கே இருக்கட்டும், மிஸ்டர் குமார்! நான் வந்த காரியம்



வேறொரு விஷயமாக இவர்கூடப் போய்விட்டு வருகிறேன்! வந்து சொல்கிறேன்" என்றார். மறுபடி இருவரும் போலீஸ்-வானில் ஏறிக்கொண்டார்கள். எட்டாவது நிமிஷம் இங்கே வந்து சேர்ந்தார்கள். வீட்டு வாசலில் வண்டிக்கு வெளியே நின்றபடி சம்பாஷணை நடத்தினார்கள்.

"அந்த ஆந்திரர் வீட்டுக்கே நேரே போய்விடலாமா? அல்லது, இங்கே சிறிது நேரம் தங்கியிருந்து விசாரித்துக் கொண்டு அப்புறம் போகலாமா என்று யோசிக்கிறேன்" என்றார் ஸர்க்கிள்.

"சிவசங்கரன் பிள்ளை! நான் செய்திருப்பதெல்லாம் ஜோஸ்யந்தான். திருச்செந்தூர் வழியாகத் திருநெல்வேலிக்குச் சில கொழுப்புச் சரக்குகள் போகின்றன என்பது நமக்குத் தெரியும். அந்தச் சாமான்களுக்குச் சுங்கம் கொடுக்காமல் தொழில் நடத்துகிறவன் ஆந்திரன் என்று நான் அநேகமாக நிச்சயமாகச் சொல்கிறேன். அவன் வீட்டுக்கு அடிக்கடி அகாலவேளையில் ஒரு மோட்டார் 'வான்' வருகிறதும் கிளம்புகிறதும் நான் கவனித்துவிட்டேன். அந்த வண்டிக்குள்ளிருந்தே புகையிலைச்சருள் ஒன்றைக்கூட எடுத்துவிட்டேன். கஞ்சா-அபின் வியாபாரமும் உண்டென்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. உள்ளே போய் யோசிப்போமே; முதலில் அவன் எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான் என்று கண்டுபிடிப்போம். நாய் இல்லாத வேளையில் போய்ச் சோதனை போடுவோம்..."

"நாய்க்குப் பயமில்லை, ஸார்! இடக்குப் பண்ணினால் சுட்டுத் தள்ளிவிடுகிறேன். அவன் ஏதானும் வம்பு பண்ணினால், நாய் மாதிரியே..."

"அதற்கெல்லாம் அவசியமே இராது. இங்கே பேசுவானேன்? உள்ளே வாருங்களேன்!" என்று அவசரப்படுத்தினார் சுந்தரம்.

வீட்டினுள்ளிருந்தபடி இந்தச் சம்பாஷணையில் முக்கால் பங்குவரை கேட்ட ஆந்திரரின் உடல் பதறியது. உதட்டைக் கடித்துக்கொண்டு, பங்காருவை விறைக்கப் பார்த்தார். "வந்து விட்டதடி மோசம், செப்புலுகட்டா!" என்று பல்லைக் கடித்துச் சீறினார்.

"என்னால் அல்ல!" என்றாள் 'பங்காரு' திடமாக.

"இப்போ இரண்டு பேரும் ஓடத்தானே வேண்டும்?"

"ஓட வேண்டியிருக்கலாம். ஆனால், நான் உன் பின்னால் எதற்கு ஓட வேண்டும்?" என்று கேட்டு முதல் தரமான அபிநயமும் செய்தாள் 'பங்காரு.'

"அடி பாவி! உன்னை இதற்காகவா சோறு போட்டு வளர்த்தேன்! துரோகி! விசுவாசமுலேனி மிருகமு!"

"கோபிக்கிறதனாலே பலன் ஒன்றும் இல்லை! இப்போ ஓடிக்கொண்டிருக்கிறதனாலே பலன் இருக்கும்!" இதற்கும் இன்னோர் அற்புதமான ஒரு 'பிடி!' 'இவளுக்கு நாட்டியம் சொல்லி வைத்தோமே, நமக்கு இந்தத் தண்டனை போதாது!' என்று ஆந்திரர் எண்ணினார். அதற்குப் பரிகாரமாகப் 'பங்காரு'வின் மென்னியைப் பிடித்து நெரிக்க வேண்டும் என்ற ஆவல் பலமாக ஏற்பட்டது. ஆனால், அப்போது இருந்த சொற்ப அவகாசம் அந்தக் காரியத்திற்குப் போதாதென்று உணர்ந்துகொண்டு, புழக்கடை வழியாக வேகமாக வெளியேறினார். போகும் போது எங்கேயோ மோப்பம் பிடித்துக் கொண்டிருந்த 'டைக'ரும், எஜமான் விசுவாசம் குன்றாத ஒரு ஸத்-சிருஷ்டியாக அவரைப் பின் தொடர்ந்து ஓடியது. ஏனோ சிரமமான நிலைமையில் அவர் இருக்கிறார் என்று ஊகித்து, "ஏன் இப்படி அவசரம்? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறது தானே! எனக்குத் தெரியப்படாதோ?" என்று தன் பாஷையில் சிறுசிறு குரைப்புகளால் கேட்டுக்கொண்டே ஓடியது.



'பங்காரு' இரண்டாங்கட்டில் கதவுக்குப் பின் நின்று கவனித்தாள். உள்ளே நுழைந்த சுந்தரம், "என்ன! யாரையுமே காணோமே! திறந்து போட்டுவிட்டா போய் விட்டான்! ஒருகால் கிணற்றடியில் இருப்பானோ? இருந்தாலும் இப்படி வாசற் கதவைத் திறந்து போட்டுவிட்டா போகிறது?..." என்றார்.

எங்கே புழக்கடையில் வந்து தன்னைக் கண்டு கொள்வாரோ என்ற திகில் பிறந்தது 'பங்காரு'வுக்கு. சுந்தரம்கூட அப்படிச் செய்திருப்பார்; ஆனால், பல பேர்கள் வரவேண்டிய கிரஹ நிலையின் பலன் இன்னும் சிறிது பாக்கியிருந்ததனால் தானோ என்னவோ, கான்ஸ்டபிள் கண்ணாயிரம் உள்ளே நுழைந்தான். சுந்தரத்தைக் கண்டதும் ஒரு பெரிய கும்பிடு போட்டான்; உடனே ஸர்க்கிள் சிவசங்கரன் பிள்ளையைப் பார்த்து விட்டுப் பயபக்தியுடன் பணிச்சென்று ஒரு 'ஸல்யூட்' அடித்தான்.

"என்ன?" என்றார் ஸர்க்கிள்.

"நம்ம வீட்டிலே இருக்கிற நடராஜன் என்கிறவர் பேரிலே ஒரு 'கம்ப்ளெயிண்ட்'. 'நேத்து ராவிலே காணாமப்போன நகைகளை அவர் வைத்திருக்கிறார்னு சந்துரு சொல்றாரு 'கேட்டுப் பார்த்துக்கிட்டு வா' இன்னு நாகநாதய்யர் துரத்துறாரு!" என்றான், தனக்குச் சற்றும் இஷ்டமில்லாத ஒரு காரியத்தைச் செய்கிற கர்மயோகியைப் போல்.

"ஏது! இந்த வருஷம் பெரிய பிரமோஷன் இருக்கிறது நம் கண்ணாயிரத்துக்கு!" என்றார் சுந்தரம்.

"யார் ஐயா அவன் சந்துரு?"

"நாகநாதய்யர் மச்சினி மகன். இந்த வீட்டு நடராஜனும் அங்கேதான் இருக்கிறாரு. அவரு அப்பாரு மாதிரி இருக்கிறாரு ஒருத்தர். சதாய்ச்சுக்கிட்டிருக்காரு."

"நாகநாதய்யரா! திருநெல்வேலி ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ரார்தானே! அவர் ஒரு 'கிராக்' ஆச்சே- இல்லையா?"

"நாலு பேர் சொல்றப்போ, ஐயாவைக் கண்டுக்கினு போகலாம்னு ஓடியாந்தேன். பெரிய தொந்தரையாப் போச்சுங்க!" என்றான் கண்ணாயிரம் வெகு சாதுரியமாக.

"தேடித்தான் பார்த்துவிடேன்! இங்கேயே அகப்பட்டாலும் உனக்கு நல்லதுதானே?" என்று சுந்தரம் கூறி, தாமே பீரோக்களையும் மேஜை டிராயர்களையும் திறந்தார். சிறிது நேரம் மௌனமாகத் தேடினார்கள். சந்துரு சொன்னபடி நகைகள் எதுவுமே இல்லை என்று நிச்சயமான பின், நடந்து கொண்டிருந்த விஷயங்களைக் கண்ணாயிரத்திடம் விசாரித்தார்கள். தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், அன்றுகாலை அவனுக்கு'ட்யூடி' இல்லையென்றும், ராத்திரி திருட்டு விவகாரத்தில் எதையும் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற ஏக்கத்துடன் தெருவோடு வந்து கொண்டிருந்தபோதுதான் பட்டாபிராமய்யர் வீட்டினுள் ஏக தடபுடலாக இருந்ததாகவும், தன்னைக் கண்டதும் சந்துரு உள்ளே அழைத்ததாகவும் சொன்னான்.

"நடராஜனும் அப்போது இருந்தாரோகூட?"

"அப்பத்தான் அவரும் இன்னொரு புது ஆளுமாக அங்கே வந்தார்கள். சந்துரு என்கிட்ட, 'திருட்டு நகைகளை இல்லாத இடமெல்லாம் ஏன்டா தேடறீங்க! இவன் வீட்டிலே பாருங்கடா; இருக்குது!' இன்னாரு. நாகநாதய்யர் என்னை, 'இன்னாடா போலீஸ் நீ! தம்பிடிக்கு உதவாத ஆளு! போய்க் கொண்டேட்டு வா' இன்னாரு. அப்புறம் நடராஜன் சந்துருவைத் திட்டினாரு! சந்துரு நடராஜனைத் திருப்பித் திட்டினாரு. நடராஜன் தகப்பனாரு போலேருக்கு, 'தடிக்கம்பாலே அடிச்சுப் போட்டேன்னா பார், சுத்த பாஷ்' இன்னாரு. நான்



கேட்டுக்குட்டு நிற்கல்லைங்க. நேரே உங்களைக் கண்டுக்கலாம்னு வந்துட்டேனுங்க" என்றான்.

சுந்தரம் இதற்கெல்லாம் கண்ணாயிரத்திடம் பதில் செ. ல்லவில்லை. சிவசங்கரன், "இப்போ ஆந்திரர் சமாசாரத்தை நாம் ஒத்திப் போட்டுவிட்டு, நடராஜன் விஷயத்தைக் கவனித்தாக வேண்டும் போலிருக்கிறது! வாருங்கள், நாம் நடந்தே போகலாம்!" என்று புறப்பட்டார்.

சுப்புரத்தினத்தின் வீட்டிற்குக் கடுதாசிக்கட்டை எடுத்து வரச்சென்ற முத்துச்சாமி திரும்பி வரத் தாமதமாகும் காரணம் என்னவென்று தெரியாமல் நாகநாதய்யர் துடித்தார். நிமிஷத்துக்கொருதரம் தலையை நீட்டி நீட்டி, உள்ளே அவன் வருகிறானா என்று பார்த்தார். ஒருமிக்க நடராஜனை நசுக்கித் தம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள அதுவே தருணம் என்று அவர் உள்ளம் குதித்துக் களிக்கூத்தாடியது.

அந்த வேளையில்தான் சந்துரு வந்து, நடராஜன் பேரில் தனக்குப் பலத்த சந்தேகம் இருப்பதாகவும், முதல் நாள் திருட்டுப்போன நகை அவனிடம் அகப்படும் என்றும், அதற்காகவே அவன் மணியைத் தருவித்திருப்பதாகத் தான் சந்தேகிப்பதாகவும் நிச்சயத்துடன் சொன்னவுடன் அவ்வளவு பேரும் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்தார்கள். பிறகு அவனை அவநம்பிக்கையுடன் பார்த்தார்கள்.

"நான் இல்லாத விஷயத்தைச் சொல்லவில்லை. நேத்து ராத்திரி பதினொரு மணி வேளைக்கு மணி என்பவர், தலையில் ஒரு முண்டாசு கட்டிக்கொண்டு ஒரு கைப்பெட்டியுடன் எதற்காகத் தெருவில் அலைந்தார்? அவர் பதில் சொல்லட்டும்! ஒன்றும் வேண்டாம். இப்போ கான்ஸ்டபிள் கண்ணாயிரத்தை அனுப்பிப் பார்த்து வரச் சொன்னால் போச்சு!" என்று சந்துரு சொல்வதும், அந்தக் கண்ணாயிரமே சமய சஞ்சீவியைப் போல் அங்கே

வருவதும் சரியாக இருந்தன. அதன் மீது கண்ணாயிரம் புறப்பட்டு வந்த விவரங்கள் தெரிந்தவையே!

'யாரோ வருகிறார்கள்' என்று வாசலில் அரவம் கேட்கவே முத்துச்சாமிதான் திரும்பிவிட்டான் என்று துள்ளி எழுந்தார் நாகநாதய்யர். நுழைந்தவர்கள் சுந்தரம் வழிகாட்டி வரச் சிவசங்கரன் பிள்ளையும், கண்ணாயிரமுந்தான்.

"என்ன கண்ணாயிரம், கிடைத்ததா? கொண்டு வந்தாயா?" என்று விசாரித்தான் சந்துரு.

கண்ணாயிரம் பதில் சொல்லவில்லை. மேல் அதிகாரிகளின் எதிரில் சந்துருவைப் போன்றவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பது தன் மதிப்புக்கு உகந்தது இல்லை என்று அவன் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்!

"கொண்டுவந்துவிட்டேன்! நான் கொண்டுவந்து விட்டேன்!" என்று முத்துச்சாமி தீர்க்கமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு அப்போது வந்து சேர்ந்தான். நாகநாதய்யர் அதை வாங்கக் கைநீட்டும் போதே சிவசங்கரன் பிள்ளை அதைப் பற்றிக் கொண்டு பிரித்தார்.

"சுடிதங்களா! இப்படிக் கொடும்!" என்று ஸாரும் கையை நீட்டினார். பட்டாபி நிமிர்ந்து பார்ப்பதுடன் தம் ஆவலை அடக்கிக்கொண்டார்.

ஸார்க்கின் கையில் கிடைத்தது காகிதச்சுருள் அல்ல; ஒரு சிறு மூட்டை. அவர் அதைப் பிரித்துச் சுந்தரத்திடம் கொடுத்தார். "மிஸ் ஜகத்தின் நகையாக இருக்கும்போல் இருக்கிறதே, அவனுக்குச் சொல்லியனுப்பு கான்ஸ்டபின்! நான் சொல்கிறவரை தயவு செய்து இங்கே யாருமே வெளியில் போகக்கூடாது!" என்று ஸார்க்கின் அதிகார தோரணையில் முடித்தார்.



"அடப் பாவி! என்னத்தையடா கொண்டு வந்திருக்கிறாய்!" என்று முத்துச்சாமியைப் பார்த்து நாலைந்து குரல்கள் பல த்வனிகளில் கேட்டன.

"நீங்கள் கொண்டுவரச் சொன்னதைத்தானே கொண்டு வந்தேன்!..." என்று இளித்தான் அந்தச் செவிடன்.

சொன்னதைச் சரியாக வாங்கிக்கொள்ளாமல் போன முத்துச்சாமி, கடுதாசி இல்லாத இடங்களிலெல்லாம் தேடி, கடைசியில் அவர்கள் கேட்டது இதுவாகத்தான் இருக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் திருப்பி விட்டான் வெற்றி வீரனாக!

அதே சமயம் ஒரு மோட்டார் வானில் திருநெல்வேலியை நோக்கி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தார் ஆந்திரர். அவர்கூட இணை பிரியாத நண்பனான 'டைக'ரும் இருந்தது.

# 20

அறிவா லறிந்து இருதா ளிறைஞ்சும்
அடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமானே!

- அருணகிரிநாதர் திருப்புகழ் (திருச்செந்தூர்)

நல்லவர்களே அதிகமாக உள்ள இந்த உலகத்தில், தீங்கிழைக்க முயலும் துஷ்டர்கள் ஏன் வெற்றி பெற்று வருகிறார்கள்; பரம்பொருள் என்று ஒன்று இருக்குமானால் அவர்களை ஏன் தண்டிப்பதில்லை என்று சகஜமாகக் கேட்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். கேட்கப்பட வேண்டிய கேள்வியுந்தான். பழங்கால வழக்கத்தை யொட்டி, 'அரசன் அன்று கொல்லுவான், தெய்வம் நின்று

சொல்லும்" என்று பதில் சொன்னாலுங்கூட. ஒருவனைக் கெடுத்துவிட வேலை செய்து பார்க்கும் எதிரி செல்வமும் செல்வாக்குமாக இருப்பது ஓரளவு உற்சாகத்தை மங்க வைப்பதில் ஆச்சரியம் இல்லைதான். இதே மாதிரியானதொரு மன நிலையை வெளிக்காட்டும் வகையில் தான் பட்டாபிராமய்யர் ஜாகையில் பல பேருடைய மனம் இருந்தது. சந்துருவின் விறைப்பும், உத்தண்டமான பேச்சும், அவன் அடிக்கடி சட்டையின் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டும் கையை வீசிக்கொண்டும் நின்ற நிலையும் ஜானகியின் உள்ளத்தில் ஒரு கோபக்கனலையே எழுப்பின. பார்த்த மாத்திரத்திலேயே பட்டாபிராமய்யருக்கு அவன்மீது ஒரு வெறுப்பு விழுந்து விட்டது. ஹரன் ஒரே கணத்தில் இந்த ஆசாமிதான் தம் மகனுக்கு எதிராக இருப்பவன் என்பதை ஊகித்துக் கொண்டு, கைத்தடியை அவன்பக்கப் நகர்த்தி வைத்தார். அந்த இடத்திலுங்கூட நடராஜன்மீது ஒரு திருட்டுக் குற்றம் சுமத்தும் அளவுக்குச் சந்துருவுக்குத் துணிச்சல் ஏற்பட்டதற்குச் சில காரணங்கள் இருந்தன.

அன்று காலை அவன் எப்படி நயவஞ்சகமாக நடராஜனைக் கவிழ்க்கலாம் என்று யோசனை செய்து கொண்டு இரண்டாங்கட்டில் உலாவி வந்த போதுதான், மண்-சுவரில் ஒரு மூலையில் வழக்கமாக உள்ள ஒரு பொந்து அடைபட்டிருப்பதைக் கவனித்தான். முதல் நாள் இரவு தங்கவேலுவை வழிமறித்த சோமாரி-சோமுவும் கேடி-காளிமுத்துவும் தாங்கள் கொள்ளையடித்த பண்டங்கள் பல ஆயிரங்கள் பெறும் என்பதை அறிந்தவுடனே, அவைகளைப் பத்திரப்படுத்த இடம் தேடலானார்கள். எப்படியும் தங்கள்மீது சந்தேகம் விழும், போலீஸார் உபத்திரவம் இருக்கும் என்று ஊகித்து, நகைகளை இந்த வீட்டின் பின் கட்டிலிருந்த பொந்தில் ஒளித்து, மேலே ஒரு பெரிய பலகையையும் சாத்தினார்கள். சுப்புரத்தினம் அன்று காலையில் எழுந்தவுடன் புளியங் கொட்டைகளைப் 'பாலிஷ்' செய்யும் இயந்திரம் ஒன்று



அமைக்க முயன்றுகொண்டிருந்தபடியால், அதற்குத் தேவையான அந்தப் பலகையை வாசலில் கொண்டு வந்து விட்டார். சந்துருவின் கண்களில் நகைகளை அடக்கம் செய்திருந்த மூட்டை தென்பட்டது. முழு நகைகளையும் எடுத்துக் கொண்டால் 'சோமாரி'யும் 'கேடி'யும் அவனைச் சும்மா விடமாட்டார்கள். ஆகையால், ஒரு பகுதியை மட்டும் நடராஜன் ஜாகையில் வைத்து விட்டு, அவனுடனும் நாஸுக்காகப் பேசிவிட்டு, அதே சுருக்கில் வந்து அபாண்டமானதொரு புகாரும் செய்தான். இந்தப் பெரிய புகாரைக் கேட்டு, நாகநாதய்யர் உள்பட, அவ்வளவு பேரும் ஸ்தம்பித்துப் போனார்கள். கான்ஸ்டபிள் கண்ணாயிரம் அனுப்பப்பட்டதும் நடராஜனுக்கும் சந்துருவுக்கும் வாக்குவாதம் நடந்ததும் அடுத்து நடந்த சம்பவங்கள்.

"சந்துரு! உன்னை இவ்வளவு பெரிய அயோக்கியன் என்று நான் நினைக்கவில்லை! உன்னை நம்பினேன்! நீ என் வீட்டிற்கு வரும்படி நான் கதவைத் திறந்து வைத்தது பிசகு" என்றான் நடராஜன்.

"பேஷ், பேஷ்! அப்புறம் நான்தான் நகைகளைக் கொண்டுவந்து வைத்தேன் என்றுகூடச் சொல்லுவாய் போலிருக்கிறதே!" என்று கேட்டான் சந்துரு.

"அதைத்தான் சொல்கிறேன்! உன்னை ரெண்டு-கால்-ஜந்துவாக இதுவரை நினைத்தேன்! நீ நாலு-கால்-வகையைச் சேர்ந்தவன்!"

மணி குறுக்கிட்டு, "அதிருக்கட்டும், இவனிடம் நகை இருக்கிறதென்று உமக்கெப்படித் தெரியும்?" என்று அழுத்தமாகக் கேட்டான்.

"அதைக் கேளும், சுத்த பாஷ்!" என்று நகர்ந்து உட்கார்ந்தார் ஹரன்.

"அதுவா! உம்மால்தான் தெரியும்! நேத்து ராத்திரி பதினொரு மணிக்குமேல்-திருட்டு நடந்த சற்றைக்

கெல்லாம் ஒரு மூண்டாக கட்டிக்கொண்டு நீர் வரவில்லையா, ஒரு கைப் பெட்டியுடன்?"

"அந்தக் கைப்பெட்டியினுள்ளேதான் இந்த நகை இருந்ததாக்கும்!"

"ஆக்ஷேபம் என்ன? அது இன்று காலையில் நடராஜன் ஜாகையில் பீரோவுக்கு மாறிவிட்டது! நடராஜன் உம்மை இந்த ஊருக்குத் தருவித்ததே அதற்குத்தானே!"

"நடராஜன் நேற்று ஊரிலேயே இல்லை என்பது உமக்குத் தெரியுமா?"

"எனக்கு முந்தி உமக்குத்தானே அது தெரிந்திருக்க நியாயம்!"

"பல்லை உடைப்பேன், ஆமாம்! யார்கிட்ட இந்த வேலை? நம்ம ஊர் மாயவரம்!" என்றான் மணி உஷ்ணமாக முகம் சிவக்க.

"நமக்கும் மோவாய்க்கட்டையைப் பெயர்க்கத் தெரியும்! நமக்குத் திருநெல்வேலி!" என்றான் சந்துரு.

இவர்கள் ஒருவர்மீது ஒருவர் பாய்ந்துகொள்வார்களோ என்று நினைத்த சமயத்தில்தான், சுந்தரம் மற்றவர்களுடன் வந்து சேர்ந்தார்; முத்துச்சாமியும் கப்புரத்தினத்தின் வீட்டிலிருந்து நகைகளைக் கொண்டு வந்துவிட்டான்! சிவசங்கரன் பிள்ளை மிஸ் ஜகத்தை அழைத்து வர ஆள் அனுப்பும்படி உத்தரவும் போட்டு விட்டார்.

"இது யார் வீட்டிலிருந்து வருகிறது?" என்று கேட்டார், ஸர்க்கின் நகை மூட்டையைக் காட்டி.

முத்துச்சாமிக்குத் தான் ஏதோ ஒரு பிசகு செய்து விட்டோமென்ற உணர்வும் நடுக்கலும் ஏற்பட்டுவிட்டன "நான் இதை எடுக்கவே இல்லை, ஸார்!" என்றான்.

"அட! யாரிடமிருந்தய்யா இதை வாங்கிக்கொண்டு வரே?"



"நமக்கொண்ணும் 'தெரியாது ஸார்! கையை விடுங்கள்! கொண்டுவரச் சொன்னாங்க; உடனே போலீஸுலே பிடிச்சுக் கொடுத்தா என்ன நியாயம்! நான் அழுதுடுவேன்!" என்று மிரட்டினான் முத்துச்சாமி.

சுந்தரம் குறுக்கிட்டு, "அவன் செவிடன். பேசிப் பிரயோசனமே இல்லை; ஆனால் ரொம்ப உபயோகமாக இருந்திருக்கிறான். ஆமாம், மிஸ்டர் சந்துரு! நீங்கள் இதையெல்லாம் நம்ம வீட்டில் தேடச் சொல்லிக் கண்ணாயிரத்தை அனுப்பினீராமே! அப்படியிருக்க, உங்கள் வீட்டிலேயே அகப்படுகிறதென்றால், அது எப்படி?" என்று கேட்டார்.

ஹரன் சுந்தரத்தை உற்றுநோக்கிவிட்டு, 'இவர் யார், இவரை எங்கே பார்த்திருக்கிறோம்' என்று மனத்தைத் துழாவிக்கொண்டிருந்தார். கேள்வி அயனான கேள்வி; சந்துரு ஒரு நிமிஷம் தயங்கினான். மறு நிமிஷம் பழைய அட்டகாசப் பார்வை வந்துவிட்டது: "இதோ இருக்கிறாரே, மணி! இவர் ஒரு கைப்பெட்டியுடன் நம் வீட்டில் நேற்றுத் தங்கினாரல்லவா? அப்போது இவர் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்" என்றான்.

கண்ணாயிரம் துடித்தான். கையும் களவுமாகத்தான் மணியைப் பிடித்துங்கூட கைவிட்ட முட்டாள்தனத்தை எண்ணி மனம் வருந்தினான். அதை இப்போது வெளியிட்டுக் கொள்வதில் உபயோகமில்லை, பாதகமே உண்டாகும் என்று அடக்கிக்கொண்டான். ஆனால், நேற்றிரவு மணியோடு தோளோடு தோள் சென்ற சந்துரு இன்று ஏன் பரம வைரியாகிவிட்டான் என்று திகைத்தான். எப்படியும் தன் பெயர் அடிபடாமலிருந்தால் போதும் என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டான்.

"சரிதான், சரிதான்! நடராஜன் மணியைத் தருவித்ததே இந்தத் திருட்டை நடத்தத்தான் என்று ஜோடிக்கிறீரோ?" என்றார் சுந்தரம்.

"சுத்த பாஸ்!"

"அதென்னவோ, யார் கண்டார்கள்! எனக்கு ஜானகியைக் கொடுப்பதாகப் பெரியப்பா ஏற்பாடு செய்வது இவனுக்குப் பிடிக்கவில்லை! என் பேரைக் கெடுக்க..."

"உம்ம பேர் ஏற்கெனவே வேண்டிய அளவு கெட்டுக் கிடக்கிறதே!"

"அது அநாவசியமான பேச்சு! இந்த நகை என் வீட்டில் இருப்பதற்குக் காரணம் நடராஜனும் மணியும் என்று நான் சொல்கிறேன்! இல்லையென்று நிரூபியுங்களேன்!"

வாசலில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. வழிவிட்டார்கள்; மிஸ் ஜகம் உள்ளே வந்தாள் அவளைக் கண்டதுமே நாகநாதய்யர், "எனக்கொன்று ஞாபகம் வரதே! இவளும் இந்த நடராஜனும் ரொம்ப சிநேகிதர்களாச்சே! என்ன மங்களம், நான் கோவிலில் இவர்களைச் சேர்ந்தாப்போல் பார்த்ததாகச் சொல்லவில்லையா? ஞாபகம் இருக்கா? என்ன?" என்று கேட்டார்.

சுக்குக் கஷாயத்தில் விடப்பட்ட விளக்கெண்ணெயை விடியற்கால வேளையில் சிறுவர்கள் நோக்கும் அருவருப்புடன் ஜகம் கிழவரைப் பார்த்தாள். "சீ! நீயும் ஒரு மனுஷனா! இவரு பெட்டியைக் குடைஞ்சு வாசித்த ஆளில்லே நீ! நாலு பெரிய மனுசன் நடுவிலே வந்து குந்திக்கிட்டியோ!" என்று வெடுக்கென்று கேட்டுவிட்டு, சிவசங்கரன் பிள்ளையை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இந்தா! இந்த நகைகளைப் பார்! இதில் உன்னுடையது ஏதாவது இருக்குமா?" என்றார் ஸார்க்கின்.

"அவ்வளவும் என்னதுதானுங்க!" என்று ஆரம்பித்த ஜகம், "ஐயய்ய! சரி பாதிதானே இருக்குது! பாக்கி?" என்று வியந்து போனாள்.



"அப்படி ஒதுங்கி நில்! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்! (நடராஜனைக் காட்டி) இவரை உனக்கு இதற்கு முன் தெரியுமா?"

"தங்கமான மனிசருங்க!"

"அப்படித்தான் இருக்கும்" என்றார் நாகநாதய்யர்.

"அதெல்லாம் இப்போது உன்னைக் கேட்கவில்லை. இவரை எப்போதுமுதல் உனக்குத் தெரியும்?"

ஜகம்தான் சென்னையில் ரயிலேறியது முதல் தொடங்கி, மூக்குத்தியை நடராஜனிடமிருந்து பெற்றுக் கொண்டது வரையில் சொல்லி, "இவர் என் நகையைத் திருட வரமாட்டாருங்க, அது நிச்சயம்!" என்றாள்.

"ஏது, இந்தப் பொம்பிளையே போலீஸ் வேலையெல்லாம் செய்து தீர்ப்புக்கூடச் சொல்லிடுவாள் போலே இருக்கு!" என்று சுப்புரத்தினம் குறுக்கே பேசினார். சிவசங்கரன் அவரை விழித்து, "ஷட் அப்! நீர்தான் முதலில் கடுதாசி திருடின ஆள் அல்லவா? நீரேதான் நகையையும் திருடினீரோ, என்ன எளவோ?" என்றார்.

"நீ பேசாதே, சுப்புரத்தினம்! இங்கே நியாயம் நடக்கல்லே!" என்று நாகநாதய்யர் அடக்கினார்.

"நியாயம் நடக்கும், ஓய்! நடக்கும்!" என்று தடியை ஹாரன் முன்னுக்கு நகர்த்தி வைத்து விறைத்துப்பார்த்தார். பிறகு நடராஜன் பக்கம் திரும்பி, "அட முட்டாள், உனக்கு ஏண்டா இந்த வம்பெல்லாம்! லீவ் விட்டால் பேசாமே நீ மெட்றாஸ்லே இருக்கவேண்டியவன்" என்று கடுமையாக ஆரம்பித்தார்.

சிவசங்கரன் பிள்ளை அதிகாரமாக நிறுத்தி, "அதெல்லாம் அப்புறம் ஆகட்டும். இப்போ கேஸ் முக்கியம்! மிஸ் ஜகம்! உனக்கு இந்த ஆள் எடுப்பான் என்ற சந்தேகமே இல்லை அல்லவா?" என்று கேட்டார்.

"துளிக்கூட இல்லை!"

"வேறென்னத்தைச் சொல்லுவான் அவன்!" என்றார் நாகநாதய்யர்.

"இந்தக் கைத்தடியை முன்னாடி யாராவது வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்" என்று கணபதிசுப்பிரமணியம் ஹாரனின் வாக்கிங்-ஸ்டிக்கை எடுத்துச் சுந்தரத்திடம் கொடுத்து வைத்தார்.

"மறு பாதி நகை எங்கே என்று உமக்குத் தெரியுமா, மிஸ்டர் சந்துரு?" என்று கேட்டார் ஹாரிஸன்.

"உங்கள் போலீஸ் முறையில் பேசி என்னை உளற வைக்கப்பார்க்கிறீர்களோ? எடுத்தவர்களையும் வைத்தவர்களையும் அல்லவா அந்தக் கேள்வி கேட்கவேண்டும்!" என்று சந்துரு திருப்பிக்கொடுத்தான்.

நாகநாதய்யருக்குத் திடீரென்று ஒரு ஞானோதயம் பிறந்தது. "அடடே! இன்னொரு விஷயம் மறந்துட்டேனே! நேற்று ராத்திரி முதல் அடுத்த வீட்டு ஆந்திரப்பெண்ணைக் காணோம் என்கிறார்களே. அவளானால் இவன் வீட்டில் இருக்கிறாள். அந்தப் பெண்ணுக்கும் இந்தப் பயலுக்கும் அத்தியந்த சிநேகம், சந்தேகம் இல்லை!" என்றார்.

"ஏது! நடராஜன் இந்த ஊரில் ஒரு பெண் பாக்கியில்லாமல் நாலே நாளைக்குள் சிநேகம் பிடித்திருக்கிறானே!" என்று சிரித்தார் சுந்தரம். ஜானகி கண்களை அகல விழித்து நடராஜனைப் பார்த்தாள்.

"ஆமாம்! இல்லையென்று சொல்லச் சொல்லும்! இப்போது— இன்றைக்கு— இவன் வீட்டுப் பீரோவுக்குப் பின்னால் அவள் ஒளிந்துகொண்டிருந்தாள்' அவள் அப்பனிடங்கூடச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன், நீங்களே கேட்டுப் பாருங்கள்!"

"அடப்பாவி மனுஷா! அவளை நீரா அனுப்பினீர்?" என்றான் மணி.



"பார்த்துக்கொள்ளுங்கள்! அவன் வாயிலிருந்தே வருகிறது! என்ன?" என்று கர்ஜித்தார் நாகநாதய்யர்.

"சுத்த பாஷ்! வெறும் புளுகு!"

சுந்தரம் ஒரு முறை தமது தலையை அழுத்தித் தடவிக் கொண்டார்: "நாகநாதய்யர்வாள்! நீங்கள் போனபோது என் வீட்டில் ஆந்திர நடிகை இருந்தாள் என்கிறீர் அல்லவா?"

"நான் சொல்கிறதென்ன, இதோ ஒப்புக்கொண்டு விட்டானே அவன்!"

"இதில் இனி ரகசியம் ஒன்றுமே வேண்டாம், நடராஜா! நான் நடந்த விஷயங்களைச் சொல்லி விடுகிறேன்!" என்று ஆரம்பித்தான் மணி; நடராஜன் சொல்லத் தயங்கும் விவரங்களான ஜானகியைக் கண்டு பேசினது, மங்களம் திரும்பி விட்டது, புழக்கடை வழியாக ஓடிவந்து, அடுத்த வீட்டில் குதித்துப் பத்தாயத்துக்குள் ஒளிந்திருந்தது, 'பங்காரு'வுக்கு உதவுவதாக ஒப்புக்கொண்டது— எல்லாவற்றையும் சொன்னான். மங்களம் உதட்டைக் கடித்துக்கொண்டாள். தான் எடுத்து வைத்திருக்கும் கைக்குட்டையைக் கையோடு எடுத்து வீசுவோமா என்றுகூட எண்ணினாள்; ஆனால், அடக்கிக்கொண்டாள். "ஜானகி! காலாந்தகி!" என்று வாய்க்குள் முணுமுணுத்துப் பல்லை நெரித்தாள்.

"எல்லாம் கட்டுக்கதை, என்ன! அடே! கதை எழுதுங்கடா பத்திரிகைக்கு! நல்ல வரும்படி வரும்டா!" என்றார் கிழவர்.

சுந்தரம் அவர் பக்கங்கூடத் திரும்பிப் பாராமல், "அதுதான் நீ உடனே கிளம்ப வேண்டுமென்று நேற்று ராத்திரி அப்படிப் பிடிவாதம் பிடித்தாயோ, நடராஜா!" என்றார்.

மணி தொடர்ந்து, 'பங்காரு'வைப் பீரோவின் பின் ஒளித்ததையும், அவள் வெளிப்பட்டு நாகநாதய்யரை

நாயிடமிருந்து காப்பாற்றினதையும் சொன்னான். "ஸார்! தேள் பொசுங்குகிறதே என்று நெருப்பிலிருந்து எடுத்துப் போட்டால், அது உடனே கொட்டும்! அதே மாதிரி இந்தக் கிழவர்..."

"யாரடா கிழவர்! நானாடா?"

"இல்லை; அதிபால்யம், சுகுமாரன் நீங்கள்! மாப்பிள்ளை!"

சுந்தரம் கையமர்த்தினார். "இப்போ ஒரு விஷயம், நாகநாத அய்யர்வாள்! நீங்கள் போன போது 'பங்காரு' இருந்தாள்; பார்த்தீர்கள்... அப்புறம் அவளை ஹரன் பார்க்கவில்லை; சந்துருவும் பார்க்கவில்லை... மறுபடி நடராஜனும் மணியும் திரும்பும்போது அவள் அங்கேயே தான் இருந்தாள் அல்லவா?"

"ஆமாம்!" இதற்கு நாலு பேர் தலையை ஆட்டினார்கள்.

"சந்துரு போனபோது அவள் எங்கே இருந்திருப்பாள்? பழையபடி பீரோவுக்குப் பின்னால் தானே?"

சந்துருவின் முகம் இவுளுத்தது. கால்கள் அவனை மீறி உதறின.

சுந்தரம் தொடர்ந்து, "இப்போது அவளை விசாரித்தால்..." என்றார்.

"என்ன வேணுமானாலும் சொல்லச் சொல்லலாம்! நான் அங்கே போனதே பிசகு" என்றான் சந்துரு.

"போனதும் சரி, வைத்ததும் சரி, வந்ததும் சரி— எல்லாம் பிசகுதான்! கூப்பிடு அந்தப் பெண்ணை! இப்போ எங்கே இருப்பாள் அவள்?"

"அவள் பெரிய போக்கிரியாச்சே!" என்றார் நாகநாத அய்யர்.

"இங்கேதான் இருக்கிறேன்! வந்து கொண்டே யிருக்கிறேன்!" என்று அடுத்த வீட்டிலிருந்து 'பங்காரு'வின் குரல் வந்தது. அந்த மங்கை, நாட்டியக் கலையில் பயின்றபடி அடி வைத்துக்கொண்டு, ஒரு சிறு மூட்டை யுடன் பிரவேசித்தாள்.



"இந்தாருங்கள், பாக்கி நகை!" என்று கூறிவிட்டு, கடைந்தெடுத்த விக்கிரகம் போல் எதிரில் நின்றாள்.

"பார்த்துக்கொள்ளுங்கள்! திருட்டிலே திருட்டு! நான்தான் சொன்னேனே!" என்று கொக்கரித்தார் நாகநாதய்யர்.

"அவசரம் வேண்டாம்! இது ஏது அம்மா உனக்கு?" என்றார் சுந்தரம்.

"நான் எடுத்தேன்... இதோ இவர் பீரோவிலிருந்து எடுத்தேன்!"

"ஹஹ்ஹா... ஹஹ்ஹா!"— இது நாகநாதய்யர் செய்த கோஷம்.

"சுத்த பாஷ், இதை நான் கொஞ்சங்கூட நம்ப மாட்டேன்!"

"நான்தான் எடுத்தேன்! நடராஜன் கிணற்றங் கரையில் ஸ்நானம் பண்ணினபோது இவர் வந்து இதை ஒளித்து வைத்தார்; அப்புறம் நடராஜனிடம் 'தைனாக'ப் பேசினார். இப்போ இங்கே வந்து புகாரும் பண்ணுகிறார், பாவம்! நம்மைக் காப்பாத்தினவரை நாம் கைவிடப் படாது'ன்னு இதை எடுத்தேன்."

"நல்ல எண்ணம் வேறேயா உனக்கு!" என்றார் நாகநாத அய்யர்.

"சும்மா இரு, கிழவா! உன்னைக் காப்பாத்தினதுக்கு என் நாயனாவை அனுப்பினயே! மிருகமு! மிருகமு!"— 'பங்காரு' இதையொட்டித் தெலுங்கில் மேலும் அவரைத் திட்டியது அவ்வளவாக எழுதும் வகையில் இல்லை.

சந்துரு இதற்கும் பணியவில்லை. "இந்தப் பெண் பேச்சு உங்களுக்குப் பெரிசாப் போச்சா? இவர்கள்

திருடிவிட்டு, ஒரு பாதியை என் வீட்டில் வைத்து, இன்னொரு பாதியை இந்தப் பெண்ணைக்கொண்டு அப்புறப்படுத்தியிருக்கிறார்கள்!" என்றான்.

"அடா! இன்னுமா நீர் அசையமாட்டீர்?"

"சத்தியத்தை யாராலாவது அசைக்க முடியுமா?"

'பங்காரு'வுக்கு உதடு துடித்தது. "ஏ வஞ்சகா! பொய் சொல்லாதே! நீ கொண்டுவந்து வைக்கல்லை?"

"நான் போனது, அங்கே நகை இருக்கிறதா என்று பார்க்கத்தான்! என்னையும் இப்படிக் கட்டி இழுப்பார்கள் என்று நினைக்கவில்லை!"

"ஏய்! போலீசுக்குத் துணை இந்தப் பெண் இருக்கிறது, கேவலம்! தீக்ஷிதர் சொல்றது ரொம்ப சரி... பெண் குலத்தை நிர்மூலம் செய்யணுமடா!" என்றார் நாகநாதய்யர்.

"உன்னைக் கட்டேல வைக்க" என்று கிழவரை வாயோடு திட்டினாள் மங்களம். அவளையும் சேர்த்து அவர் தூஷிப்பதாக எண்ணிக்கொண்டாள். "உன் மாதிரி மனுசங்களை முன்னாடி ஒழிக்கணும்!" என்றாள் ஜகம். அதற்குத் தன் கைகளை நெரித்துச் சொடக்குப் போட்டுக் காட்டி அபிநயம் செய்தாள் 'பங்காரு!'

நிலைமை ஓர் இக்கட்டான இடத்தில் வந்துஇப்போது தயங்கி நின்றது. மேலே யார் என்ன பேசுவது, என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தபோது, நாலு கான்ஸ்டபிள்கள் வந்து நின்றார்கள். 'ஸல்யூட்' அடித்து, "வாசலில் போலீஸ் வான் இருக்கிறது. சோமாரியும் கேடியும் உள்ளே இருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்கள்.

'சோமாரி'யும் 'கேடி'யும் போலீஸாரிடம் சிக்கியது ஒரு பெரிய விஷயம் அல்ல; அதிசயமும் அல்ல. சாதாரணமாகப் போலீஸாரிடம் ரகவாரியாகப் பல ஜாபிதாக்கள்



இருக்கும். திருச்செந்தூரில் ஸ்டேஷனிலுள்ள அத்தனை ஜாபிதாக்களிலும் இவர்கள் இரண்டு பேருடைய நாமதேயங்களும் உண்டு! குறிப்பிட்ட தினம் காலை இவர்கள் இருவரும் ஒரு தண்ணீர்ப் பந்தலில் ஸங்கிரகமாக நாஸ்தா செய்துவிட்டு வெளிவரும் போதுதான், ஆந்திரர் ஏறிச்சென்ற மோட்டார் வண்டி எதிர்ப்பட்டது. ஆந்திரர் இவர்களிடம் ஓடுகிற ஓட்டத்திலே "ஏய்! ஓடுங்கடா! போலீஸான் வர்றான்!" என்று எச்சரித்துவிட்டுப் போனார். அதற்குப் பதினைந்து நிமிஷத்திற்குப் பின் இருவரும் சுப்புரத்தினத்தின் வீட்டுப் புழக்கடையில் நின்று காலியாகக் கிடந்த பொந்தைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்றார்கள்.

முத்துச்சாமி இப்படி வெளியே போயிருக்கிறான் என்றால், அப்படி அவர்கள் வந்திருக்கிறார்கள்! அந்த இடத்திலேயே அவர்களைப் போலீஸ் ஜவான்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். இப்போது வாசலிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

"அடடே! அவர்கள் கிடைத்துவிட்டார்கள் என்றால் தங்கவேலுவைக் கொண்டுவந்து விடலாமே, கண்ணாயிரம்!" என்றார் ஸர்க்கிள்.

"அனுப்பிட்டேனுங்க ஆளு!" என்று கண்ணாயிரம் சொல்லிவிட்டு வாசலுக்கு ஓடி, தலையில் நாலு தட்டுத் தட்டிக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஒரு கான்ஸ்டபிளை விரட்டினான்.

'சோமாரி'யும் 'கேடி'யும் போலீஸ் அடியை ருசி பார்த்தவர்கள். ஸர்க்கிள் 'பெல்ட்'டைக் கழற்றிக் கொள்ளும்வரை காத்திருக்கக்கூடாதென்று, "நாங்க தானுங்க நகையை ஒளிச்சது. ஆனா அங்கிட்டு அது இப்போ இல்லே. சாமி சத்தியமுங்க. நாங்க களவு பண்ணல்லே; ஓர் ஆளை அடிச்சுப் பிடுங்கினோம்; அவ்வளவுதான்!" என்றார்கள்.

"ஆந்திர எஜமான் தொழில் நடத்தினாரே, நீங்க உன்கையாடா?" என்று கேட்டார் சிவசங்கரன்.

அது விஷயம் சொல்லாமல் திருத்திக்கொள்ளலாம் என்று அவர்கள் நினைப்பதற்குள், "எங்களுக்கு எல்லாம் தெரியும்டா! அவர் மகனே சொல்லிவிட்டான்! எங்கே போயிட்டாரு அவருதான்? திருநெல்வேலி தாண்டிடு வாரா? மடக்கிடமாட்டோம்" என்றார் சுந்தரம்.

ஆந்திரர் கொழும்பில் ஓர் ஆசாமியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு இரவுக்கிரவே சரக்கு தருவிப்பதையும், ஒரு மோட்டார்-வான் வைத்துக்கொண்டு கடற்கரைக்கும் வீட்டுக்கும் அதைக்கொண்டு சேர்ப்பதையும் ஒப்புக்கொண்டார்கள். "இந்த ஊரிலேஇருக்கிறதிலே ரெட்டைச் சௌகரியமுங்க அவருக்கு அவருடைய மகன் எவன் கூடவோ ஓடிடும்னு பயந்துக்கிட்டிருந்தாரு..."

"யார் அவன்?"

"அது யாரோ... ஊட்டண்டை யாரையும் நெருங்க விடறதில்லை!"

தங்கவேல் வந்துவிட்டான். "ஆஹா! இவன்தான் நான் தோப்பில் கண்ட ஆள்! என்னைக் கண்டு ஓடின ஆசாமி..." என்று மணி சொல்ல வாயெடுக்குமுன், "என் உயிரே! என் காதலே!" என்று 'பங்காரு' அவனை நோக்கித் தாவி, தழுவிக் கண்ணால் நீரைக் கக்கிவிட்டாள்.

"சுவானம்! சுவானம்! நாம் இருக்கோமேன்னு கொஞ்சமாவது லஜ்ஜை..." என்று நாகநாதய்யர் ஆரம்பித்தார்.

'பங்காரு' தன் காதலன்மீது பிடியை விடாது நாகநாதய்யரைப் பார்த்துப் புலிபோல் சீறினாள். தங்கவேல் சோமாரியையும் கேடியையும் தன்னைத் தாக்கியவர்கள் என்று காட்டிக் கொடுத்துவிட்டான்.

"மிஸ்டர் சந்துரு! நகையை வைத்தவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்! நகையில் ஒரு பகுதியை பீரோவில்



நீர் வைத்ததைக் கண்ணால் பார்த்தவளும் சொல்கிறாள்... இப்போது என்ன சொல்கிறீர்?" என்று அதட்டினார் சிவசங்கரன்.

சந்துரு உதட்டைக் கடித்துக்கொண்டு மௌனமாக நின்றான்.

"அவ்வளவு பேரையும் 'அரெஸ்ட்' பண்ணி ஸ்டேஷனுக்கு இழுத்துப் போறேனுங்க!" என்றான் கண்ணாயிரம். அஞ்சலையிடம் அரைமணியில் திரும்புவதாக அவன் சொல்லி வந்து மணி ஒன்றரை ஆகிவிட்டது.

"முக்கியமாக நீ அரெஸ்ட் செய்ய வேண்டியது இந்த நாகநாத அய்யரை! அத்தனை விஷமத்துக்கும் ஆதிகாரணம் இவர்தான்" என்றார் சுந்தரம்.

"முதலிலேயே அந்த மனுஷனை தொறுக்காமல் விட்டேனே!" என்று வருந்தினார் ஹரன், கைத்தடியை இருபுறமும் தேடிக்கொண்டு.

"ஸார்! உங்களுக்கு வயிற்று வலி என்று சொன்னீர்களே! எப்படி இருக்கிறது?" என்று நடராஜன் சுந்தரத்தைக் கேட்கவும், அவர் கம்பீரமாக காலடி முன்னால் வைத்து, யாரும் எதிர்பார்க்காத சமயம் சந்துருவின் அடி வயிற்றைக் காட்டிப் பலமாக ஓர் உதை கொடுத்தார்! "அப்பா தாயே! என்னை ஆள் வைத்தாடா உதைக்கச் சொன்னாய்! ஹூம்" என்றார். நாகநாதய்யர் தம் கட்சியின் படுதோல்வியை உணர்ந்து, இனிமேல் தாம் அங்கிருப்பது உசிதமில்லை என்று எண்ணியவர்போல் நகரவும், சுந்தரம், "போய்விடும், சொல்கிறேன்! இரண்டாவது உதை உமக்கு!" என்ற தோரணையில் கண்களை உருட்டினார்.

மேலும், தமது கைத்தடியுடன் வரும் சுந்தரராஜ தீக்ஷிதரும் கண்ணில் படவே நாகநாதய்யர், "இந்த ஊரில் தெய்வமே இல்லை!" என்று பொதுவாக உரத்த குரலில் சொல்லிவிட்டு அங்கிருந்து கம்பி நீட்டினார்.

தீக்ஷிதர் தம் வீட்டில் பெருங்கூட்டம் ஒன்று கூடியிருப்பதைத் தொலைவிலேயே கண்டு பிரமித்தார்.

நெருங்கியதும், போலீஸாரைக் கண்டு பயந்தார். "என்ன, என்ன!" என்று பரபரப்பாக விசாரித்தார்.

"அது பெரிய கதை, தீக்ஷிதரே! சற்றுப் பொறுத்து, பக்க வாத்தியங்களுடன் காலட்சேபமாக சொல்கிறோம்!" என்றார் சுந்தரம்.

ஹரனை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்த தீக்ஷிதர் திடீரென்று, "அடே! நீ நம்ம ஜயத்தின் ஆம்படையான் அல்லவோ?" என்று கூவினார்.

ஹரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "ஜயத்தின் அகமுடையான்!"-ஹரிஹரன் என்று சொல்லவில்லை; ஹரன் என்கவுமில்லை; உத்தியோகத்தின் பெயரைக் குறிப்பிட்டும் அழைக்கவில்லை. அன்பரசியாக வாழ்ந்துவிட்டு, என்றோ மறைந்து போன அந்த உத்தமியின் பெயரைச் சொல்லி, 'நீ அவள் புருஷனா?' என்று இப்போது கேட்கிறாரே, இந்த மனிதர் யார்? ஹரன் கண்கள் கலங்க, "ஆமாம்; தாங்கள்...?" என்றார்.

தீக்ஷிதர் கழியை எறிந்தார். மடி-விழுப்பை மறந்தார்; ஹரனைக் கட்டிக்கொண்டு 'ஹோ'வென்று அழுதார். "அடே! ஜயம் என் தங்கை மீனாக்ஷியின் பெண் அல்லவா? ஹரிஹரா! அடே! என்னைப் பார்! என்னைத் தெரியவில்லையா உனக்கு? மறந்து போய்விட்டாயா?" என்றார்.

"மாமா! நான் எப்படி மறப்பேன்?" என்றார் ஹரன்.

"என்னப்பா, எங்கேடா இருக்கே? டெல்லியிலாடா?" சுய உணர்வு பெற்ற தீக்ஷிதர் சற்று ஒதுங்கினார்.

அவர் எப்படி இருக்கிறாரோவென்று தீக்ஷிதர் சங்கைப்படுகிறார் என்று ஊகித்த ஹரன், "ஒன்றும் யோசிக்காதீர்கள்! டெல்லியில் இருக்கும் ஆசாரமும் ஆன்ஹிகமும் இங்கே உண்டா என்று தைரியமாக நான் கேட்பேன்? ஒரு தரம் அங்கே வந்து பாருங்கள்; டெல்லியைப்பற்றித் தெரியாதவர்கள் பேச்சைக் கேட்டு நம்பிவிடாதீர்கள்!" என்றார்.



"இருக்கும்டா, இருக்கும்! ஐயோ, அந்தக் கண்மணி ஜயந்தான் போய்விட்டாளேடா! அவள் பிள்ளை..."

"அதோ இருக்கிறான்!"

"இவனைத் தெரியுமேடா ஐயா எனக்கு!... நம்ம சுந்தரத்துடன் வந்திருந்தானே நேற்று! நல்ல பையன், பார்த்தால் தெரிகிறதே!"

சுந்தரம் திரும்பினார். "என்ன ஹரிஹரன்? என்னைத் தெரியவில்லையா?... நான் திருவையாற்றில் உன்கூட நாலு வருஷம் படிக்கவில்லை?..." என்று கேட்டார் ஹரனை.

"அடேடேடே! சுத்த பாஷ்! நீ நம்ம 'மொட்டைச் சுந்தர' இல்லையாடா! எங்கே பார்த்தோம், எங்கே பார்த்தோம் என்று இத்தனை நாழியாக யோசித்தேனே!"

"இப்பவும் 'தலைதடவி' என்கிறான்களடா நம்ம எதிரிகள்! நடராஜனுடன் பேசின அன்றைக்கே தெரிந்து கொண்டேன், அவன் உன் பையன் என்று கடைசியில் சொல்லலாம் என்று இருந்துவிட்டேன்!"

"இனிமேல் எல்லாம் சொந்த விஷயங்கள்! நான் ஸ்டேஷனுக்குப் போகிறேன், ஸார்!" என்று, 'சோமாறி'யையும் 'கேடி'யையும் சிவசங்கரன் போலீஸ் வண்டியில் ஏற்றச் சொன்னார். சந்துருவையும் தங்கவேலுவையும் தம்முடன் ஸ்டேஷன்வரை வந்து போகும்படி அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். 'பங்காரு' பிடிவாதமாக அவர்களைப் பின்பற்றினான்.

கூடத்தில் கூட்டம் குறைந்தவுடன் சுந்தரம் நடுவில் உட்கார்ந்து ஆரம்பமுதல் எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினார். முதல்முதலாக நடராஜன் சென்னையில் புஸ்தகத்துக்குள் வைத்த கடுதாசியைப்பற்றிப் பிரஸ்தாபித்த போது, மங்களம் திகைத்து, "கடுதாசியா? ஞான வாசிஷ்டத்தில் வைத்திருந்தார்களா? நான் அதைப் பார்க்கவேயில்லையே!" என்று ஆச்சரியப்பட்டாள்.

"நல்ல கூத்து, ஐயா இது! அதை மங்களம் பார்த்துவிட்டதாக அல்லவா இவ்வளவு அமர்க்களமும் நடந்திருக்கிறது!" என்று சுந்தரம் மேலும் சொன்னார். ஜகதீசனைப்

பிரஸ்தாபித்து, 'அவன் புத்திசாலி; சரியான ஒத்தாசை செய்தான்; மாப்பிள்ளையைப் பட்டாபி சரியாக நடத்த வில்லை' என்று குறை கூறினார். மங்களம் பல்லைக் கடித்ததைச் சுந்தரம் பார்த்ததாகவே காட்டிக்கொள்ள வில்லை; ஜகதீசனோ விறைப்பாக அவன் இருந்த பக்கங்கூடத் திரும்ப மறுத்துவிட்டான்.

"நடராஜன் 'பங்காரு'வுக்கு ஒத்தாசை செய்தது ரொம்ப நியாய ! எந்த யோக்கியனும் அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணைக் கைவிடமாட்டான்" என்றார் சுந்தரம்.

"நம்ப பயல் குழந்தை முதலே பெருந்தன்மையாக இருப்பான். சந்துரு கிடக்கிறான், சுத்த பாஷ்!"

தீக்ஷிதர், "எங்க ஜயத்தின் பிள்ளையாச்சேடா அவன்! அவன் முகத்தில் எப்போதும் ஸஹஸ்ர போஜனம் பண்ணிவைச்சவன் தேஜஸ் இருக்குமே-நானும் பெண்களைப் பார்க்கிறேனே! அவ்வளவும் உபயோக மற்றதுகள்! என்னைக்கேட்டால்...!" என்று ஆரம்பித்தார்.

"உங்கள் காலட்சேபம் இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாக நடக்கட்டும். கல்யாணம் எங்கே நடக்கப் போகிறது?" என்றார் சுந்தரம் "அதைக் கேளுங்கள் ஜூன்காடி!" என்றார் கணபதி சுப்பிரமணியம் குஷியாக.

"ஏன் நம்ம வீட்டில்தான்! இரு பக்கத்து வீடுகளுக்கும் நடுவில் வாசற்படி வைத்துவிடுகிறேன்... எத்தனை கூட்டம் வந்தாலும் சமாளித்துக்கொள்ளலாம். இங்கே தான் நடக்கணும்... என்ன ஹரிஹரா! என்னப்பா, எங்க ஜயத்தின் பிள்ளை கல்யாணம்டா! ஏய்! ஒப்புக் கொள்ளடா!" என்றார் தீக்ஷிதர்.

ஹரனுக்குத் தொண்டையடைத்துக்கொண்டு வந்தது "சுத்தபாஷ்!" என்று அவர் அதற்குச் சொல்லவில்லை. "திருச்செந்தூர் ஆண்டவன் கிருபை இருந்தால் அப்படியே நடக்கட்டும்" என்றார்.

"நிச்சயம் நடந்துவிடும்!" என்றார் கணபதி சுப்பிரமணியம்.



"ஜமாய்த்துத் தள்ளிவிடுவோம், உங்கள் ஆசீர்வாதங் களையும் இந்த மூன்று வீடுகளையும் வைத்துக்கொண்டு ஒரு அச்வமேதமே செய்ய முடியாதா?" என்று உத்ஸாகமாகத் தலையை ஆட்டினார் பட்டாபி.

**சில முக்கியமான சமாசாரங்கள் !**

ஜானகியும் நடராஜனும் குடித்தனம் செய்யும் விதரணையை ஹரனும் விசாலமும் கண்டுகொண்டு சென்னையில் ஆனந்தமாயிருக்கிறார்கள். காயத்ரியும் கோபாலனும் வேறு பக்கத்தில் குடித்தனமாக வந்து விட்டது பெரியதொரு விசேஷமாகும்.

பட்டாபி தினம் நூறு அச்வமேதம் 'செய்கி'றார். பாகீரதி தன் பழைய உடல்-நிலை ஜாபிதாவை மறக் காமல், கிழமை வாரியாகச் சொல்லிக்கொண்டு திட மாயிருக்கிறாள்.

ஜகதீசன் தனிக்குடித்தனம் போய்விட்டான். மங்களம் இன்னும் இரண்டு மாசத்தில் தலைச்சன் குழந்தை பெறப் பிறந்தகம் போவாள்.

ஜகமும் தங்கவேலுவும் மிகுந்த சிரமத்துடன்தான் தப்பினார்கள். இதற்குச் சேலம் சர்க்கரைச் செட்டியார் பணம் சிறிது கரைந்தது என்று கேள்வி. தங்க வேலுவுக்கும் 'பங்காரு'வுக்கும் ரிஜிஸ்டர் விவாகம் நடந்துவிட்டது. 'பங்காரு'வின் நாட்டியம் என்றால் இப்போது ஆயிரம் ரூபாயில் வந்து நிற்கிறது.

தீக்ஷிதர் காலட்சேபங்கள் எப்போதும் போல் நடக் கின்றன.

கிராமத்தோடு இருந்துவரும் மணி தங்கத்துடன் அடிக்கடி சென்னைக்கு வருகிறான். தீக்ஷிதருக்கு அவன் எழுதிய ஒரு கடிதத்தில், "எனக்கு ஒரு ஸ்திரீ-பிரஜை பிறந் திருக்கிறது. உங்கள் ஆசீர்வாதங்களைத் எதிர்பார்க் கிறேன்" என்று கேட்டிருக்கிறான்.

சோமாரியும் கேடியும் கல்லுடைக்கிறார்கள்; அபூர்வ மாக ஆந்திரரையும் சந்திக்கிறார்கள். போலீஸாரால் அவர் கைது செய்யப்பட்டபின், 'டைகர்' நிர்க்கதியா யிற்று. திருநெல்வேலி நாய்கள் அதை விடாமல் கடித்துத்

துரத்தலே, அது கொட்டமெல்லாம் அடங்கி, ஏதோ ஒரு கிராமத்தில் இருந்து வருகிறது.

சுந்தரம் ரிடையராகி, திருநெல்வேலி தேவி-உபாஸகருடன் ஸ்திரமாகத் தங்கியிருக்கிறார். சிங்காரவேலுவின் சிபாரிசில் கண்ணாயிரத்துக்குப் 'பிரமோஷன்' ஆகி விட்டது.

நாகநாதய்யர் அடங்கிவிட்டார்; யார் கூப்பிட்டாலும் தலை காட்டுவதில்லை. சந்துருவும் சென்னைக்குத் திரும்ப வில்லை; அந்தப்பக்கத்திலே இருக்க லஜ்ஜைப் பட்டுக் கொண்டு வடக்கே போய்விட்டதாகக் கேள்வி. ஞான வாசிஷ்டத்திலும் கப்புரத்தினத்தின் வீட்டிலும் ஒளிக்கப் பட்ட கடிதங்கள் தேடுவாரின்றி அங்கங்கேயேதான் இருக் கின்றன.

முத்துச்சாமி சௌக்யமாயிருக்கிறான்; ஆனால், தான் ஒருவன் நீங்கலாக உலகத்தில் அவ்வளவு பேரும் செவிடா யிருப்பது ஒன்றே அவன் குறை.

"நான் ஜானகியை காலேஜில் சேர்க்காமலிருந்தால் இந்தக் கல்யாணம் நடந்திருக்குமா?" என்று கேட்கிறார் மாமா விச்வநாதய்யர்.

திருச்செந்தூர் ஷண்முகம் நித்ய கல்யாண மூர்த்தி யாய், சிரித்த முகமும் வேல்பிடித்த கரமுமாக, பன்னீரையும் சந்தனத்தையும் அனவரதமும் அபிஷேகம் செய்து கொண்டும், பக்தர்களுக்குப் பரம ஸாந்நித்யம் கொடுத்துக் கொண்டும் வருகிறான்.

"அஞ்சு முகந்தோன்றில்
ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென
வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கி
னிருகாலுந் தோன்றும்
முருகாஎன்
றோதுவார் முன்"

(முற்றும்)





## தேவன் (ஆர். மகாதேவன்)

8-9-1913ல் திருவிடை மருதூரில் பிறந்தார். அவ்வூரில் உயர் கல்வியும் [illegible] கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் [illegible] பட்டமும் பெற்றார். சிறிது காலம் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய பின், 'ஆனந்த விகட'னில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். பிறகு 1942ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை நிர்வாக ஆசிரியராக இருந்தார். 23 ஆண்டு காலம் அப்பத்திரிகையில் பல்வேறு [illegible] கதைகள், கட்டுரைகள் எழுதி சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கினார். நகைச்சுவை நிறைந்த இவருடைய எழுத்துக்களில் 'துப்பறியும் சாம்பு', 'விச்சுவுக்குக் கடிதங்கள்', 'ராஜாமணி', 'கோமதியின் காதலன்' - போன்ற [illegible] மிகப் பிரபலமானவை.

'தேவன்' தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இரண்டு முறை பதவி வகித்து, சிறந்த தொண்டாற்றினார். பத்திரிகை எழுத்துத் துறையில் அவர் கையாளாத [illegible] இல்லை என்று சொல்லும் முறையில் அவர் எழுதி வந்தார். 1957-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதி 'தேவன்' தம்முடைய 44-வது வயதில் இறைவனடி எய்தினார்.